நாச்சியார் கோயில் கல் கருடனைப் பற்றிய

# க்ஷேமகாரி ஶதகம்



ஸ்ரீமதுபயவே, மஹாவித்வான் வில்லூர் நடாதூர்
ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனாதிபதி வரகவி ஆசுகவி ஸார்வபௌம

## ஸ்ரீநிதி ஸ்வாமி

அருளிச் செய்தது

இப்புத்தகத்தை எங்கள் வலைதளத்தில் வெளியிட அன்புடன் அனுமதி அளித்த ஸ்ரீமதுபயவே, வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனாதிபதி கருணாகராச்சார் ஸ்வாமிக்கு அடியோங்களின் க்ருதக்ஞதயை தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஒப்பிலியப்பன் கோவில் வரதாச்சாரி சடகோபன்.

(www.sadagopan.org)

ஸ்ரீ:

நாச்சியார் கோயில் கல் கருடனைப் பற்றிய

# க்ஷேமகாரி ஶதகம்


ஸ்ரீ மதுபயவே. மஹாவித்வான் வில்லூர் நடாதூர்
ஸ்ரீ பாஷ்யஸிம்ஹாஸனாதிபதி வரகவி ஆசுகவி ஸார்வபௌம

**ஸ்ரீநிதி ஸ்வாமி** அருளிச் செய்தது



**_RNR PRINTERS & PUBLISHERS_**
*19, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.*
*Phone: 044-2844 7071*

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# க்ஷேமகாரி ஶதகம்

# ஒரு "பறவைப் பார்வை"

## (ஸ்ரீமதுபயவே நாச்சியார்கோயில் வைகாச ஆகம விசாரதர் ஜோதிடமணி N.P.**கண்ணன் பட்டாசார்யார் ஸ்வாமி** அளித்த **அணிந்துரை**)

## 1. இந்நூலின் தோற்றம்

**க்ஷே**மகாரீ என்பது கருடனுடைய திருநாமங்களில் ஒன்று. அவரைப் பற்றிய நூற்றியிரண்டு சுலோகங்கள் கொண்ட துதி இது. திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் நூறு பாசுரங்களால் திருநறையூர் என்று போற்றப்படும் திவ்யதேசமான நாச்சியார் கோயிலை மங்களாசாஸனம் செய்தார். இருமடல்களையும் அவ்வெம்பெருமானுக்கு அர்ப்பணித்தார்.

ஆனால் இப்பாசுரங்களில் கருட பகவானைப் பற்றிய குறிப்பு "தூவாய புள்ளூர்ந்து வந்து" என்கின்ற ஓர் இடத்தில் தான் வருகிறது. திருக்கோவலூரில் உள்ள துர்கையைக் கூட குறிப்பிட்டுப் பெருமாளைப் பாடிடும் ஆழ்வார், கல்கருடனைக் குறிப்பிட்டுப் பாடவில்லையே என்ற குறை நம் உள்ளத்தில் எழலாம்.

அக்குறை தீரத், தமிழில் தாம் நாலுகவிப் பெருமாளாக இருந்தது போல, ஸம்ஸ்க்ருதத்திலே ஆசகவி ஸார்வபௌமராக ஸ்ரீமதுபயவே வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம். ஸ்ரீநிவாஸராகவார்ய மஹாதேசிகன் என்கிற ஸ்ரீநிதி ஸ்வாமியாகக் கார்த்திகையில் கார்த்திகை தினத்திலேயே அவதரித்துக் கல்கருடனைப் பற்றி க்ஷேமகாரி சதகம் என்ற இந்த நூற்றியிரண்டு சுலோகங்களை அருளியுள்ளார் எனலாம்.

## 2. இந்நூலின் ஏற்றம்

*1986*-ல் ஸ்வாமியின் திருக்குமாரரான வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் சாஸ்த்ர ஸாஹித்யவல்லப ஸ்ரீமதுபயவே. கருணாகரார்ய மஹாதேசிகன் இரு சக்கரவண்டியினை ஓட்டுகையில் ஏற்பட்ட விபத்தால் கண்ணில் அடிபட்டிருந்தது. அவரது கண்களுக்கு எந்தப் பாதிப்பும் இன்றி நலமடைய வேண்டுமென இந்துதியின் *88, 89* மற்றும் *90* ஆம் சுலோகங்களிலே கல்கருடனை வேண்டினார் ஸ்வாமி.

ஹைதராபாத்திலிருந்த அவரது மூத்த திருக்குமாரரான வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் ஸ்ரீமதுபயவே. சேஷாத்ரி ஸ்வாமிக்கும் அந்த ஸமயத்திலே காலிலே அடிபட்டிருந்தது. அது பேரிடர் ஆகாமல் புண்கள் ஆறிட வேண்டும் என்றும் இத்துதியில் *96* ஆம் சுலோகத்தில் கல்கருடனை வேண்டினார். கல்கருடனும் அப்படியே அருள் செய்து காத்தருளினான். அப்படிப்பட்ட வரம் தரும் துதி இது.

எனவே இதுபோன்ற வியாதிகள், விபத்துகள் உள்ளிட்ட கொடுமைகளில் இருந்து விடுபட இந்த ஸ்தோத்ரத்தை அடியார்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## 3. இந்நூலின் அரங்கேற்றம்

இந்நூலைக் கையெழுத்துப் பிரதியாகவே சில வித்வான்களுக்கு அனுப்பி *1995*-ல் ஸ்வாமியினுடைய *83*-ஆம் திருநக்ஷத்திரத்தில் வடுவூலில் ஒரு வித்வத் ஸதஸ் ஏற்படுத்தி இதை அரங்கேற்றினார்கள் இந்த ஸ்வாமியின் சிஷ்யர்கள். அப்பொழுது இந்த ஸ்வாமியின் தேவியான வஞ்சுளவல்லீ அம்மங்காரின் பிறந்த )))))))))))))))))))) நம் நாச்சியார் கோயில் தீர்த்தகாரர்களுமான தேவனாதி )))))))))) பெரியவண்ணை ஸ்வாமிகள் ப்ரார்த்தனை செய்ததை நேரில் அடியேன் திருத்தமையனார் ஸ்ரீ பக்ஷிராஜபட்டாசார் நாச்சியார்-நம்பி-பக்ஷிராஜன் ப்ரஸாதத்துடன் அன்று அரங்கேற்றத்தை சிறப்பித்திருக்கிறார்.

## 4. இந்நூலின் அமைப்பு

*102* ச்லோகங்கள் கொண்ட இந்த க்ரந்தத்தை விஹாரம் என்று சொல்லப்படும் பகுதிகளாகப் பிரித்து வழங்கியுள்ளார் ஸ்வாமி.

## 5. முதல் விஹாரம் - மஹாப்ராஸ விஹாரம்

*இதில் பன்னிரண்டு ச்லோகங்கள் உள்ளன. சொல்லணியில் ஒவ்வொரு அடியிலும் முகப்பிலுள்ள தொடர்கள் ஒரே மாதிரியாக இருக்கும்படி இந்த ச்லோகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் முதல் ச்லோகம்*

***ஸ்ரீலக்ஷ்மீஸதநே ஸ்திதிம் கலயதே ஸ்ரீபக்ஷிராஜாய தே***
***ஸ்ரீலக்ஷ்மீபகவத் விவாஹவிதயே ஹேதுத்வமாதஸ்துஷே|***
***ஸ்ரீலக்ஷ்மீபகவத் ஸுவாஹமணயே வேதௌகபூர்ணாத்மநே***
***ஸ்ரீலக்ஷ்மீஸதநாதிவாஞ்சிதவராந் ஸத்ய: ப்ரதாத்ரே நம:||***

***இதன் பொருள்:*** *நாச்சியார்கோவிலில் எழுந்தருளி யிருப்பவரும், நாச்சியாருக்கும் நம்பிக்கும் திருக்கல்யாணம் நடக்கக் காரணமானவரும், நாச்சியாருக்கும் நம்பிக்கும் வாஹனமாக விளங்குபவரும், வேதங்களே வடிவெடுத்தவரும், செல்வம், வேத அறிவு, இல்லம் என அடியவர் வேண்டும் அனைத்தையும் உடனே தருபவருமான கருட பகவானுக்கு வணக்கம். இந்த ச்லோகத்தின் எல்லா வரிகளிலும் முகப்புத் தொடர் ஸ்ரீ லக்ஷ்மீ என்று அமைந்திருக்கும் அழகு நோக்கத்தக்கது.*

## 6. இரண்டாம் விஹாரம் - ப்ராஸ விஹாரம்

*இதில் பதினைந்து ச்லோகங்கள் உள்ளன. இவற்றில் ஒவ்வொரு ச்லோகத்திலும் எதுகை அணி அமைந்துள்ளது. இந்த விஹாரத்தின் முதல் ச்லோகம்*

***ரக்ஷஸஸ்தநுபவேந பாதிதம் ரக்ஷதஸ்தவ ததா ரகூத்வஹம்|***
***பக்ஷபாதவிபவோऽஸ்து தாத்ருச: ஸ க்ஷணாய பதகேந்த்ர! மே ஸதா||***

***இதன் பொருள்:*** *கருடபகவானே! ராக்ஷஸனான ராவணன் மகனாலே வீழ்த்தப்பட்ட ராமனைக் காத்த உமது இறக்கைகளின் உடைய கருட பகவானே! அந்த வீச்சு எனக்கு எப்பொழுதும் விழாக்காலமாகவே இருக்கும்படி அருள்வதாகுக.*

*இந்த ச்லோகத்தின் ஒவ்வொரு வரியிலும் இரண்டாம் எழுத்து க்ஷ என்று வந்திருக்கும் அழகு ரஸிக்கத்தக்கது.*

## 7. மூன்றாம் விஹாரம் - அநுப்ராஸ விஹாரம்

இதில் 26 ச்லோகங்கள் உள்ளன. இவற்றில் ஒவ்வொரு அடியிலும் முதல் எழுத்து ஒன்றாகவே - மோனை நயத்தில் அமைந்துள்ளன. இந்த விஹாரத்தின் முதல் ச்லோகம்

**பரஸ்ய பும்ஸ: ப்ரணயைகபாத்ரம் பயோதிஜாபத்தநக்லுப்தவாஸ:|**
**பதோதரப்ராணகணாபஹாரீ பதங்கராஜ: பரிதஸ்ஸ பாது||**

**இதன் பொருள்:** பரமபுருஷனின் அன்புக்குப் பாத்ரமானவரும், திருமகளின் திருநகரான நாச்சியார்கோவிலில் வஸிப்பவரும், வயிறையே காலாக உடைய பாம்புகளின் உயிரை அபஹரிப்பவருமான பக்ஷிராஜன் என்னை எல்லாப் புறத்திலும் இருந்து கொண்டு காக்க வேண்டும்.

இதில் ஒவ்வொரு வரியிலும் ப என்பதே முதல் எழுத்தாக அமைந்துள்ளது காண்க.

## 8. நான்காம் விஹாரம் - சமத்கார விஹாரம்

இதில் உள்ள 34 ச்லோகங்களிலும் பல விதப்பொருள் அணிகள் அமைந்துள்ளன. இதில் முதல் ச்லோகம்

**சக்ஷுச்சருதீனாம் சரமாம் தசாம் யந்-நாஸா நிஜாக்ரேண ஸ்ருஜத்யஜஸ்ரம்|**
**ஸ வைனதேயச்ச்ருதிப்ருந்தரூப:ச்ருதீ ருதைஸ்ஸ்வை: பரித: புனாது||**

**இதன் பொருள்:** கருட பகவான், கண்ணையே காதாக உடைய பாம்புகளுக்கு தனது மூக்கினாலேயே இறுதி நிலையைத் தருகிறார். அவர் வேதமே வடிவெடுத்தவர். எனவே, அவர் நமது காதுகளைத் தனது ஒலிகளாலே புனிதமாக்க வேண்டும். இந்த ச்லோகத்தில் கண், காது, மூக்கு முதலிய உறுப்புகள் பற்றிய குறிப்பு வந்துள்ளது.

இதில் 27 ஆவது ச்லோகம் மிகவும் சிறப்பு வாய்ந்தது எனலாம். திருப்பாவையிலுள்ள "எல்லே இளங்கிளியே!" பாசுரத்தைப் போல, இது வஞ்ஜுளவல்லிக்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் நடைபெறும் உரையாடல் வடிவில் அமைந்துள்ளது.

**"ஸ்வாமின்!" "வஞ்ஜுளவல்லி!" "கேன பவதா**
**நாவிஷ்க்ருதாபாஹவ:**
**சத்வாரோऽத்ர புஜத்வயம் புனரிதம் சங்காய சக்ராய ச?|"**
**"காந்தே! பக்ததமோ மம ப்ரியஸுஹ்ருத்**
**மத்வாஹனேந்த்ரோவரோ**
**பாஹுத்வந்த்வயுதோ மமாபி ததலம்" "ஸ்வாமின்! நமஸ்தே**
**நம:"||**

**இதன் பொருள்:**

*வஞ்ஜுளவல்லி: பகவானே!*

*ஸ்ரீநிவாஸன் : வஞ்ஜுளவல்லி!*

*வஞ்ஜுளவல்லி: நான்கு கரங்களையும் காட்டாமல் சங்கு சக்கரங்களோடு, இரண்டு திருக்கைகளோடு மட்டும் நீர் எழுந்தருளியிருப்பது ஏன்?*

*ஸ்ரீநிவாஸன்: என் மிகச்சிறந்த பக்தனும் நண்பனுமான கருடன் இரண்டு திருக்கைகளோடு தானே இருக்கிறான். எனவே நானும் அவனைப் போலவே இரண்டு கைகளோடு இருக்கிறேன்.*

*வஞ்ஜுளவல்லி: எம்பெருமானே! அடியார்களுக்கு ஏற்றபடி தன்னை அமைத்துக் கொள்ளும் தன்மை உடைய உனக்கு வணக்கம்!*

*நிறம் வெளிது செய்து பசிது கரிது என்ற பேயாழ்வாரின் பாசுரம், அதே கருத்துள்ள திருமழிசைப்பிரான், திருமங்கையாழ்வார் இவர்களுடைய பாசுரங்களில் உள்ளபடி, எம்பெருமான் க்ருத யுகத்தில் வெள்ளை மனத்துடன் இருக்கும் மக்களை ஈர்ப்பதற்காக வெள்ளை நிறத்துடனும், த்ரேதா யுகத்தில் ரஜோகுணம் நிறைந்த மக்களை ஈர்ப்பதற்குச் சிவப்பு நிறத்துடனும், த்வாபர யுகத்தில் தமோகுணம் மிக்க மக்களைக் கவரக் கரும்பச்சை நிறத்துடனும், கலியுகத்திலுள்ள நாமோ எதற்கும் திருந்துவதாகத் தெரியாததாலே, தன் இயற்கையான கறுப்பு நிறத்துடனும் எம்பெருமான் எழுந்தருளியுள்ளான் என்பர். இப்படி அடியார்களைக் கவர்வதற்காக அவர்களுக்கேற்றபடித் தனது திருமேனியை எம்பெருமான் அமைத்துக் கொள்கிறான் என்னும் அவன் கல்யாண குணத்தை இந்த ச்லோகத்தில் ஸ்வாமி மிக அழகாகக் காட்டியுள்ளார்.*

## 9. ஐந்தாம் விஹாரம் - ப்ரார்த்தனா விஹாரம்

*இதில் உள்ள 15 ச்லோகங்களில் பல ப்ரார்த்தனைகளை ஸ்வாமி கல் கருடன் முன் வைக்கிறார். இதன் பதினொன்றாவது ச்லோகம்*

***ஸ்வாமின் பக்ஷீச்வராஸ்மின் குருமயி***
***கருணாமீக்ஷதேதன்மமாலம்|***
***யேன ஸ்யுஸ்தே புஜங்கப்ரமுகவிஷதரா: கோசராநாக்ஷிமார்கே|***
***க்ஷேமோ பூய: குடும்பே ஸ்வயமதிமஹிதோ வர்தமானோ மம ஸ்யாத்***
***ஸ்ரீமந்நாராயணோபி ஸ்வயமதிகுதுகீ ஸ்வைர்மமாத்கே ஸதா ஸ்யாத்||***

***இதன் பொருள்:*** *ஸ்வாமியே! பறவைகளின் தலைவனே! பாம்புகள் போன்ற விஷ ஜந்துக்களும் தீயவர்களும் அடியேனுடைய பார்வையில் படாமலும், அடியேனுடைய குடும்பத்தில் நன்மையும் செல்வச்சிறப்பும் செழிப்பும் ஏற்பட்டு, ஸ்ரீமந்நாராயணன் அவனுடைய ஸமஸ்த பரிவாரங்களோடு வந்து எப்போதும் அடியேனுக்குத் துணையாக இருக்கும்படி நீ கருணைக் கூர்ந்து அநுக்ரஹிக்க வேண்டும். இதுவே போதும்.*

*இதன் பதினான்காவது ச்லோகத்தில் கருடனிடம் சரணாகதி செய்கிறார்.*

***ஸரோஜவாஸாஸதநே வஸந்தம்***
***ஸரோஷமாச்சிந்ந ஸரீஸ்ருபௌகம்|***
***ஸரோகமேதம் ஸுகிநம் விதாதும்***
***ஸரோமஹர்ஷ: சரணம் ப்ரபத்யே||***

***இதன் பொருள்:*** *நாச்சியார் கோவிலில் வசிப்பவரும், சினத்துடன் பாம்புகளை த்வம்ஸம் செய்பவருமான கருடன், வியாதியுடன் கூடிய அடியேன் நலம்பெறும்படி அருள்புரிய வேண்டும் என்று ப்ரார்த்தித்து மயிர்க்கூச்செரிய அவரிடம் சரணாகதி செய்கிறேன். ஸ்வாமி சரணாகதி செய்தவுடன் ஆம் என்று கருடன் கூறியதன் விளைவாக மயிர்க்கூச்செறிந்தார் என நாம் புரிந்து கொள்ளவேண்டும். இதன் பலச்ருதி ச்லோகம்*

**ஸ்ரீநிவாஸகவிதல்லஜக்லுப்தம்**
**ஸ்ரீநிவாஸவஸதே: பதகேந்தோ:|**
**ஸ்ரீநிவாஸசதகம் படிதம் சேத்**
**ஸ்ரீநிவாஸசதகம் ப்ரததாதி||**

இதன் பொருள், ஸ்ரீநிவாஸ (ஸ்ரீநிதி) கவி எழுதிய நாச்சியார் கோவில் கல்கருடன் பற்றிய இந்தச் செல்வம் நிறைந்த துதியைப் படிப்பவர்கள், செல்வம் நிறைந்த நூற்றுக்கணக்கான வீடு, செல்வம் எல்லாம் பெற்று இன்புறுவார்கள்.

இப்படி பக்தர்கள் ப்ரார்த்தனைகளை எல்லாம் நிறைவேற்ற வல்ல இந்த ஸ்தோத்ரத்தைச் சொல்லிக் கருடனிடம் ப்ரார்த்தித்ததன் விளைவாகத் தான் இன்று நம் நாச்சியார் கோவிலில் வில்லூர் ஸ்வாமியின் திருக்குமாரரான வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனம் சாஸ்த்ர ஸாஹிதீ வல்லப ஸ்ரீமதுபயவே. கருணாகரார்ய மஹாதேசிகன் மூலம் நாச்சியார் கோவிலில் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக ஐவர் பணி மணிமாடத்தைத் தெற்கு மட வளாகத்தில் கட்டிடும் பணி நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. நாச்சியார்கோவில் நடாதூர் திருவம்சத்தினருக்கு உரிய அத்யாபகத் திருப்பணியும் தீர்த்த மரியாதையும் ஸ்ரீமதுபயவே. கருணாகராசார்ய ஸ்வாமி மூலம் தொடரும்படி நம்பியும் நாச்சியாரும் பக்ஷிராஜனும் அருள் செய்துள்ளனர்.

இந்தத் துதியின் மூலத்தை மட்டும் தமிழ் பிரிவில் அடியேன் ஷஷ்ட்யப்பூர்த்தி மலரில் அச்சிட்டு பக்தர்களுக்கு வழங்கினோம். இப்போது இந்த சுலோகங்களுக்கு மூன்று மூன்று சுலோகங்களாக வெவ்வேறு வித்வான்கள் உரையும் கொடுத்துள்ளார்கள். பக்ஷிராஜன் அருளைப் பலருக்கும் இப்படி விநியோகித்து தமது ஸப்ததியில் இம்மலரை வெளியிடும் நம் கருணாகராசார் ஸ்வாமி பல்லாண்டு திடகாத்ரத்துடன் திகழ்ந்து நாச்சியார், நம்பி பக்ஷிராஜனுக்கு தீர்த்தகாரியம் அத்யாபகம் முதலிய பணிவிடைகளை செய்துகொண்டு திகழ வேண்டும் என்று நாள்தோறும் அவரைத் தீண்டித் திருவாராதனம் செய்யும் பேறு பெற்ற அடியேன். அந்த ஒரே அடிப்படையில் வாழ்த்தி வணங்குகிறேன்.

ஸ்ரீ:

# க்ஷேமகாரி ஶதகம்

(கமலாலயோபல கருட ஶதகம்)

கவிதாஜில கல்லோலி கந்யகா காந்த வக்ஷஸே|
கருணாதி குணாட்யாய கமலாநிதயே நம:||

## || அத ப்ரதம: மஹா ப்ராஸ விஹார: ||

1. ஸ்ரீ லக்ஷ்மீ ஸதநே ஸ்திதிம்கலயதே ஸ்ரீ பக்ஷிராஜாயதே
ஸ்ரீ லக்ஷ்மீ பகவத் விவாஹ விதயே ஹேதுஸ்த்வ மாதஸ்துஷே|
ஸ்ரீ லக்ஷ்மீ பகவத் ஸுவாஹ மணயே வேதௌக பூர்ணாத்மனே
ஸ்ரீ லக்ஷ்மீ ஸதநாதி வாஞ்சிதவரான் ஸத்ய: ப்ரதாத்ரே நம:||

2. அம்ருத கலச ஸிந்தோ: அந்தரங்கே சயானம்
அம்ருத கலச ஸிந்தோ: கந்யகாம் உத்வஹந்தம்|
அம்ருத கலச ஸிந்தும் கஞ்சி தம்ஸே வஹந்தம்
அம்ருத கலச ஹஸ்தம் பாவயே பக்ஷிராஜம்||

3. பாகசாஸனசிலாமயாக்ருதே !
பாகசாஸனஸஹோதர ப்ரிய|
பாகசாஸன ! திசேஹ பக்ஷிணாம்
பாகமஸ்ய கவிதாஸு கஞ்சன||

4. கலச ஜலதி கந்யாகேஹகேஹே லஸந்தம்
கலச ஜலதி கந்யாகாந்தகாந்தம் வஹந்தம்|
கலச மம்ருதபூர்ணம் ஹஸ்தபத்மே ததானம்
கலச ஜலதி கந்யா வீக்ஷிதம் ஸம்நமாமி||

5. பத்மாலயேऽதிமதுரே க்ருத நித்யவாஸ:
பத்மாபிராம மதுனாசனக்லுப்தசித்த: |
பத்மாபிஜாத சுபவாஹந ஹம்ஸ ஸேவ்ய:
பத்மாஸிதேக்ஷணநிப: பரிபாது பத்ரீ||

6. ஜகன் மாதுர்கேஹே நகர வ்ருஷபே பூர்ண விபவே
ஜகன் மாதுர்கேஹம் புஜயுகள மத்யம் நிஜமயம்|
ஜகன் மாதா க்ருஷ்ணாஜின பிஹிதமாஹோ ! ஸ கலயன்
ஜகன்மானம் த்ருஷ்ட்வா பதகபதி மானந்தமய தே||

7. ஆச்லேஷா தாரதேவான் ஹ்ருதி பயபரிதான் ஸந்ததம் குர்வதஸ்தான்
ஆச்லேஷா தாத்ம தாரத்வயகர கலிதாத் ஆதிமூலஸ்ய பும்ஸ:|
ஆச்லேஷா தூருஜாதாத் அதிகத மஹிதானந்தயோகஸ்ய வீந்தோ:
ஆச்லேஷம் புத்திரேஷா மம ஸமதிகதா மோஹமம்ஹோ ப்ரயாதி||

8. கமலஸ்தித தேவதா க்ருஹே
கமல ஸ்ரீஹரி நேத்ர வாஹநம்|
கமலம் கலயந்த மாச்ரயே
கமல ஸ்ரீகர ஸூத ஸோதரம்||

9. பத்மம் கர்ணே வஹதி ஸ பவான் பத்மநாபம் ததாம்ஸே
பத்மம் கர்ணே பதகந்ருபதே ! தம் மஹாந்தம் பரஸ்மின்|
பத்மாகார ஸ்த்வமிதி யதத: ஸ்வானுரூபே பவித்ரே
பத்மாகாரே நனு புரவரே ஸாதரோ வர்தஸேऽஸ்மின்||

10. கமடம் கரடிம்ச பக்ஷயன்
கமலம் ஹந்த ஸதாம் விவர்த்யன்|
கமலாலய பூஷணம் ஸ மே
கமலா காந்த தர: கரோது சம்||

11. ஸூரஸம் ஸரஸிஜாலய வத்யா
ஸூரஸம்ச தத ஏவ ஜகத்யாம்|
ஸூரஸன்னயன மத்ர வஹந்தம்
ஸூர ஸாரதி ஸஹோதரம் பஜே||

12. பக்ஷீந்த்ர ! ரக்ஷேதி வதந்தி லோகா:
பக்ஷீந்த்ர ! பச்யேதி வதந்தி கேசித்|
பக்ஷீந்த்ரலக்ஷீக்ருத பக்தி பாவ:
பக்ஷீக்ருதோ ரக்ஷஸி பவ்யசப்த:||

## || அத த்விதீய: ப்ராஸவிஹாரா: ||

13. ரக்ஷஸ ஸ்தனுபவேன பாதிதம்
ரக்ஷஸ ஸ்தவததா ரகூத்வஹம்|
பக்ஷபாத விபவோऽஸ்து தாத்ருச:
ஸ க்ஷணாய பதகேந்த்ர ! மே ஸதா||

14. சிலாமயீ தே தனுரத்ர பக்ஷின் !
கலாபிகாந்தா கவசோஜ்ஜ்வலேயம்|
மலானி மன்நேத்ர கதானி நித்யம்
விலாஸ லேசேன வினாகரோது||

15. அம்ஸாச்ரயம் கஞ்சன காளமேகம்
கம்ஸாந்தகம் ரஞ்ஜயதோ நிநாதை:|
சம்ஸாஸ்பதம் விக்ரம வைகரீ ஸா
த்வம்ஸாய பூயாத் அகஸந்ததேர்ந:||

16. பணிதிபி ரமலாபிருத்திதாங்க:
மணிரபி பாதுஸ பக்ஷிணாமயம் ந:|
குணிவர புருஷோத்தமஸ்ய வாஹ:
பணிரமணீ ரமணீயதா நிராஸ:||

17. பக்ஷிராஜ ! பவமேऽக்ஷிகோசர:|
பக்ஷிதோரக ! சுபக்ஷிதாவிஹ|
ரக்ஷிதானக முனீச்வர ! ப்ரபோ !
சிக்ஷிதாமித தனூதிதோத்தம !||

18. வருணாலயஜா க்ருஹே ஸ்திதம்
தருணா ஸ்வர்கஸதாம் ஸமக்ரமம்|
அருணாவரஜம் தமாச்ரயே
கருணா பூரித சுத்த மானஸம்||

19. மருணா பவ நாம தாரிணா
குருணா தப்தமமும் ஜனம் ப்ருசம்|
வருணாலயஜா க்ருஹோऽர்சித:
கருணா நிர்வ்ருதம் ஆதநோது மாம்||

20. பயோதி கந்யா பவனே வஸந்தம்
வயோऽதிகம் கஞ்சன பாவயாமி!
ரயோத்தரம் வேதமயம் யமாஹு:
ஜயோதயம் யேன ஜனா: லபந்தே||

21. நாராயணம் யோ வஹதே ஸராகம்
ஸாராதிகம் யம் ஸுதியோ வதந்தி|
ஆராதிதோய: ஸதநேரமாயா:
பாராயணம் தஸ்ய கரோமி நாம்னாம்||

22. பயோதி கந்யாஸதனே விபாந்தம்
வயோऽதிகம் கஞ்சன பாவயாமி|
அயோதிகோ யேந பவேத் பவேऽஸ்மின்
பயோதய: கோऽபி கதாऽபி நஸ்யாத்||

23. வாதஸ்ய ஜேதுர் விஹகேச்வரஸ்ய
தாதஸ்ய வாசா கரி கூர்ம போக்து:|
யாதஸ்ய நாகம் த்வம்ருதாபஹர்து:
மா தஸ்ய கோऽப்யஸ்திஸமோ ஜகத்யாம்||

24. காராக்ருஹாந்த: கலிதாவதாரம்
வாராணஸீ தாஹக சக்ரபாணிம்|
தாராதரம் கஞ்சன ஸம்வஹந்தம்
ஸாராதிகம் பக்ஷிபதிம் ப்ரபத்யே||

25. காராக்ருஹான்தர்ஜனி மாப்தவந்தம்
தாராதரம் ஸ்வாம்ஸகதம் விதன்வன்|
காராக்ருஹான் மாம் பவநாமதேயாத்
வீ ராஜராட் விஷ்ணுபதே விதத்தாம்||

26. வச்யோ விஷ்ணுர் யஸ்ய குணௌகை:
நச்யத்யம்ஹோ யஸ்ய த்ருசா ந:|
ப்ரச்யன்த்யஸவோ யேனாஹீனாம்
பச்யத்வஸ்மான் ஏஷ: கடாக்ஷை:||

27. வஞ்ஜுள வல்லீநாயக வாஹம்
அஞ்ஜன ஸம்மித விக்ரஹ வர்ணம்|
மஞ்ஜுல ராஜதகவசம் வந்தே
ரஞ்ஜித ஸேவக மானஸ நேத்ரம்||

## || அத த்ருதீய: அநுப்ராஸவிஹார: ||

**28.** பரஸ்ய பும்ஸ: ப்ரணயைக பாத்ரம்
பயோதிஜா பத்தந க்லுப்த வாஸ:|
பதோதர ப்ராண கணாப ஹாரீ
பதங்கராஜ: பரித ஸ் ஸ பாது||

**29.** பதே பயோதே: ப்ரிய கந்யகாயா:
பதாப்ஜ ஸஞ்சார பவித்ரிதேऽஸ்மின்|
பதோதராமோத விஹார ஹாரீ
பதே பதே ஸம்பத மாதநோது||

**30.** பத்மா நிவாஸ ஸதந: பரமஸ்ய வாஹ:
பக்ஷாநில க்ஷபித பன்னகராஜ ராஜி:|
பாகாரி ஸைன்ய பரிபாவுக வீர்யலேச:
பத்யானி மே திசது பத்ர ரதாவதம்ஸ:||

**31.** பாதாலாந்த: ப்ரவிஷ்ட: பயபரமதிகம் வர்தயன் பன்னகானாம்
பத்மா காந்தம் வஹன்தம் பதி ஸதி மருதாம் பச்யதாம் அக்ஷி ஜாதே|
பாதோ மோதாபிஜாதம் கிமபி விகலிதம் க்ஷாலிதாகம் விதந்வன்
பத்மா ஸத்மாபிராம: பதக பரிப்ருட: பாது பாஷாண வர்ஷ்மா||

**32.** பாரம்யஸ்யைக பாத்ரம் ரபஸகதிஜுஷாம் பன்னக ப்ராணஹாரீ
பாராபேதாகமாத்மா ப்ரணதஜன மனச்சிந்திதார்த்த ப்ரதாதா|
பாதோஜாக்ஷஸ்ய வாஹ: பதக பரிப்ருட: பாதுமாம் பாபப்ருந்தாத்
பாராவாராத்மஜாதா ஸதந புர வரச்ரீ க்ருஹே ராஜமான:||

**33.** ஜாதோ வாதோऽநுகந்தும் யமிஹ கதி பதே நோ மனாகப்யலம் ஸ:
ஜாயே ருத்ரா ஸுகீர்தீ கடித விகடிதே ஹ்ருஷ்யதோயேனசீக்ரம்|
ஜாலம் பாபஸ்ய மேऽலம் ஹரது ஸ பகவானண்ட ஜானாம் ப்ரதான:
ஜானக்யா னந்ததச்ரீ ரகுகுலஜ மணே: ஜீவிதஸ்ய ப்ரதாதா||

**34.** உபல வபுஷ மீடே நாயகம் பக்ஷ பாஜாம்
உபலமு பல மஸ்மின் இந்திரா மந்திரே ந:|
உபலலித நிதானம் ச்ரீ பவர்காத்ருதாக்யம்
கமபி பஹு விசித்ரம் ஸ்வாபவர்க ப்ரதம் தம்||

35. விநதாத்மபவோ விந தாதரவான்
விஹ்ருதிம் தத்தே ததிதம் யுக்தம்|
ஸுரஸ ஸ் ஸுதராம் ஸுரஸாத்மபவான்
ஹரதீத்யேதத் பாதி விசித்ரம்||

36. பதங்க ராஜ: பலதோ நதானாம்
பலிஷ்ட தூர்ய: பகவான் மஹாத்மா|
'ப'வர்க ஹ்ருத்யோऽபி விபாபவர்க:
விபாபவர்கோऽபி அபவர்கதாயீ||

37. விநதாநந்தன ! விநதா நந்தன !
ஸுரஸாபூஹர ! ஸுரஸா பூஸுக !
கமலா வேச்மனி கமலா வேச்மச
வஸதா வஹதா பவதாऽஸ்மி ஸுகீ||

38. சம்பா ரமா யஸ்ய ஸ கால மேக:
சம்ஸத்யஜஸ்ரம் யமிமம் வஹன்தம்|
சங்காகுலம் ஸர்பகுலம் ஸ தந்வன்
சத் நச்சகுந்த: பரமஸ் தநோது||

39. சகுந்தலா யத்குல லாலிதா ஸா
சசாங்க தர்பம் முகதோ ஹரந்தீ|
சசாங்க வம்சஸ்ய ததௌ ப்ரகாசம்
சகுந்த ராஜஸ்ஸ: தநோது சம்ந:||

40. ச்ருதி ஸ்வரூபே த்வயி ஸன்நிவிஷ்ட:
ச்ருதீ நிநாதை: ஸுகய த்யுதாரை:|
ச்ருத்யேக கம்யான் கலயன் அராதீன்
ச்ருத்யேக கம்ய: ஸ்வ ஸமான் விதத்தே||

41. அம்ஸே ஸ்திதஸ்ய புருஷஸ்ய பரஸ்ய காந்த்யா
அம்போத வத் கிமிஹ பாஸி சிலாகருத்மன்|
அஸ்யாங்க்ரிஜா ஸரிதுபாவ்ருதவத் கிமேவம்
அத்ராஸி தத் ரஜத கஞ்சுக ஸம்வ்ருதாங்க:||

42. வாராசி கன்யா ஸதனேऽதி மான்யம்
வாஸம் பஜந்தம் விஹகாதி நாதம்|
வாசாம் பரை: 'தேஹி' 'நமாமி' - ஹீனை:
வாஹம் ஹரே ரந்த ரஹம் வஹாமி||

43. சசாங்க ஸஹஜா க்ருஹே சமித ஸர்பலீலா ரஸ:
சடாரி முக ஸூக்திபி: சதச: ஆதராத் கீர்தித:|
சதக்ரது சரேஷ்வஹோ ! சலபதாம் திசன் தேஜஸா
சமத்ர மயி ஸந்நதே சரணமாகதே புஷ்யது||

44. சசிபகினீ சரணகதம் சரணமமும் தமஹ மகாம்|
சமித மஹாபணி லலிதம் சத முக பூ சுபவிஜயம்||

45. சர்வ மௌலிதடினீதட ந்ருத்யத் சர்வரீச பகினீ சரணஸ்தம்|
ஸர்வ வாஞ்சிதகரம் விஹகேந்த்ரம் ஸர்வலோகபதி வாஹ
மாச்ரயே||

46. ஸுபர்ணம் ஸுசாகம் ஸுரௌகாபி நந்த்யம்
ஸுபக்ஷம் ஸுப்ருஷ்டம் ஸுமேரோ ஸ் ஸபக்ஷம்|
ஸுதாயா ஸ் ஸுதாப்தே: ஸு கேஹே வஸந்தம்
ஸுகம் ப்ராப்து மாப்தா: ஸுதம் கச்யபஸ்ய||

47. ஸரஸ்வதீபி: ஸததம் ஸ்திதாபி:
ஸம்பூர்ண ஸர்வாவயவம் ஸுபர்ணம்|
ஸரோஜவாஸா ஸதநே வஸந்தம்
ஸமாச்ரயே ஸாரஸ நேத்ர வாஹம்||

48. ஸுரபதி ப்ருதநாதூனன படுனா
ஸுதநோர் விநதா ஸம்ஞாவத்யா:|
ஸுத இதி ஜகதி ப்ரதிதேனாSஹம்
ஸுகமிஹ நிகிலம் ப்ராப்தஸ்ஸத்யம் !||

49. ஸுராஸுரானந்தித விக்ர மௌகம்
ஸுகீர்திலீலாரஸ நிர்வ்ருதாங்கம்|
ஸுதாப்தி கன்யா ஸதநாங்கணஸ்தம்
ஸுதம் ப்ரபத்யே விநதாங்கனாயா:||

50. ஸுதாம்புதி ஸுதா க்ருஹே ஸுரபதேச்சமூ த்ராஸத:
ஸுதாகலச ஹாரக: ஸுமசரஸ்ய வாஹ: பிது:|
ஸுதீமணிபி ரர்சித: ஸுபக நீலமேக ப்ரப:
ஸுபர்ண இஹ மானஸே ஸுகத ஏது வாஸம் ஸதா||

51. ரமாரமணவாஹனம் ரணஜயச்ரியா ஸேவிதம்
ரவே: ரதக ஸோதரம் ரகுபதே: ரணே ரக்ஷகம்|
ரமாஸதநவாஸினம் ரயஜிதாஞ்ஜனா ரஞ்ஜனம்
ரவேண க்ருத மங்கலம் ரதமனா: அஹம் பாவயே||

52. சததலசரணாயா: ஸத்ம ஸம்பூஷயந்தம்
சததல குஸுமாக்ஷம் சார்ங்க பாணிம் வஹன் ந:|
சதமக மணி நீல: ஸார்வ பௌம: க கானாம்
சதமக ஸஹ ஜாத ச்ரீ ஸுஹ்ருத் பாது பாபாத்||

53. கல்லோலினீகாமுக கன்யகாயா:
காந்தே நிசாந்தே கலயன் நிவாஸம்|
காகோதர த்ராஸத கூஜிதோ ந:
கரோது கம் கச்யப புத்ர ரத்னம்||

## || அத சதுர்த்த: சமத்கார விஹார: ||

54. சக்ஷுச் ச்ருதீனாம் சரமாம் தசாம்யத்-
நாஸா நிஜாக்ரேண ஸ்ருஜத்யஜஸ்ரம்|
ஸவைநதேய: ச்ருதி ப்ருந்தரூப:
ச்ருதீ ருதைஸ் ஸ்வை: பரித: புநாது||

55. வடதரு மஹா சாகா லக்னான் முனீனபிரக்ஷிதும்
கருட! பவதா க்ஷுத் க்ஷுண்ணேனாऽப்யஹோ! யதனுஷ்டிதம்!
ததிஹ பகவத் பக்த ப்ராந்தே மமோதித மாகஸாம்
நிசய மகிலம் தூரீ கர்தும் சரித்ரமலம் ப்ருசம்||

56. உபரோ பகவானிஹ பாதி ஹரி:
கமலா ஸதனே ஸ பவான்ஹி தத்|
உபலாக்ருதிதாம் அதிகத்ய பராம்
உபகார ரதிம் குருதே நிதராம்||

57. ஸௌக்ஷ்ம்யாத் பச்யதி ஸர்வமத்ர பரித: ச்ரீமான் முநி: கச்யப:
தஸ்யாயம் தநயோऽநகோ விநதயா ஸத்யா ஸ்வகுக்ஷௌ த்ருத:|
தஸ்மாத் ஸௌக்ஷ்ம்ய விலோகனேऽதி நிபுண: ச்ரீவாஹகோऽயம் ஹரே:
ஸௌக்ஷ்ம்யம் ஸௌது மனஸ்யமுஷ்ய ஸததம் தர்மஸ்ய பக்ஷீச்வர:||

58. ஆகாசே கிரணைர் நவை: ஸமுதிதை: ஸுர்யஸ்ய ஹேமாயிதே
வ்ருக்ஷாக்ரைர் ம்ருதுனாऽநிலேன சலிதை: ஸம்வீஜிதே சாமரே:|
மேகானாம் சகலை: கதாகதி யுதை: ஸம்பூஷிதே ராஜதை:
அம்ஸாக்ரே கலயன் கனம் கமபி தம் பக்ஷீச்வராக்ரே பவ||

59. யத் பாதால கதாஹி ஸஞ்சய பணாஸம் பேதி நாஸாக்ரத:
நிர்தூதாநத பாபராசி நிகம ஸ்தோ மஸ்ய திவ்யாக்ருதி|
சந்தோ தாம ஸுதாம ஸாரதி மணே: யத் ப்ராத்ருதாமாஸ்திதம்
தல்லக்ஷ்மீ ஸதனே ஸமர்சித பதம் தேஜோ மமாஸ்து ச்ரியை||

60. ஸுகந்த கிரி மஸ்தகே மதுர வஞ்ஜுலா ஸம்யுதம்
விலோசன விநோததம் விநம திஷ்ட ஸந்தாயினம்|
ஸதா மனஸி ஸாதரம் நயனயோச்ச குர்வன் ஸ்ருதௌ
ஸஹஸ்ர நயனோபலாக்ருதிரயம் ஜயத்யண்டஜ:||

61. அம்ஸே கம்ஸரிபும் வஹந்த மம்ருதம் ஹஸ்தே ப்ரசஸ்தாம்ருதம்
நாஸாக்ரேண ஸதா விபின்ன புஜகம் ச்ரீகேஹ கேஹஸ்திதம்|
இஷ்டான் ஆனதஸஞ்சயேஷு ததம் தம் பக்ஷிணா மீச்வரம்
ஸ்வாந்தே ஸந்ததமாதரேண கலயே வேதௌக ஸத்விக்ரஹம்||

62. ஆகாச ஆஸ்தே ஸ யதம்ஸ தேசே
சாகாஸ் ஸமா யஸ்ய வஸந்தி தேஹே|
பக்ஷீச்வரோऽயம் பரமாத் புதாத்மா
கரோது கல்யாண பரம்பராம் ந:||

63. கமலா பவனே கமனீயதமே
மணி முக்தா பித தடினீ தடகே|
மணிராஜநிபம் மஹனீயதமம்
பதக ப்ரவரம் வரதம் வரயே||

64. துரகான் ஸவிதுர் நயதஸ் ஸஹஜம்
உதராதுதிதம் விநதா ஸுதநோ:|
உரகான் உதரே கலயந்த மஹம்
பதகாதிபதிம் ஸததம் கலயே||

65. பக்ஷீ கோऽபி வராக ஏஷ வதது ஸ்வைரம் ருதை: சோபனம்
யத்வாऽ சோபன மத்ர காநு கணனா சிந்தாऽதவா கா மம ?|
லக்ஷ்மீ மந்திர மந்திரே ऽதி மஹிதே ஸம்பூஜிதே ஸந்ததம்
பக்ஷீந்த்ரே த்வயி மங்களைக நிலயே மன்மானஸே ஜாக்ரதி||

66. "ரக்ஷாம் பக்ஷிபதே கஜஸ்ய கலயன் அம்ஸே த்வதீயே ஸ்தித:
தேனே கர்ஷண மத்ர தத்ர பவத: கேதாய கிம் நாऽபவத் ?"|
"மோதாயைவ யதார்த்த ரக்ஷணக்ருதே வேகோऽஸ்ய மான்யோ குண:
தேனைவாஸ்ய பதாம்புஜேऽஸ்மி நிதராம் தாஸ்யம் கதோ நிர்வ்ருத:||"

67. ப்ராலேயாஹார்யகன்யா பரிப்ருட தனுஷி ஜ்யா விமுக்தே ருஜுத்வம்
ப்ராப்தே பாணே த்வயாதோ பததி பகவத: பாதமூலே முராரே:|
பக்தே ஸக்தே ம்ருதங்கே நத சிரஸி ததோ ஹந்த ! கங்காதரऽஸ்மின்
அஸ்மத் ஸ்வாமின் ! கருத்மன் ! த்வமஸி யதுபதே: ஸஸ்மிதப்ரேமபாத்ரம்||

68. ஸ்ரீமான் வஞ்ஜுள வல்லிகா பரிப்ருட: ஸௌகந்திகாத்ரே: பதி:
திஷ்டன் ச்ரீ மணிமௌக்திகா பரிஸரே ரம்யே விசித்ரேऽத்ரவை|
பச்யன் ஸ்த்வாம் சதுரானனேன சதுரோ வேதான் முதாऽதீதினா
தாதும் கிம் யுவயோ: உதீத ஹ்ருதய: பாஹுத்வயம் தத் ததௌ||

69. ஆனீதே பவதா விரோசன கராத் வாஜ்ரே கிரீடே ததா
முக்தம் மௌக் திக மேக மக்ர ஸரிதி ச்ரீ பாஸுரம் மார்கிதும்|
ஹஸ்தௌ த்வௌ ப்ரஸ்ருதௌ விதாயஸபலௌ - ஸம்சாதிதும் தந்மணிம்
ஹஸ்தாவேவ ந ஹீதி கிம்நு கதயன் ஸ்வாமீ த்வி ஹஸ்தோऽ பவத்||

70. உபலாக்ருதிம் உத்பலேன துல்யம்
ரஜதாச்சத பூஷி தாங்கஜாதம்|
நபஸா ஸித மேகஜால பாஜா
ஸமதாமேயுஷம் ஆச்ரயேऽண்ட ஜாதம்||

71. த்ரயீ மூர்தி ஸ்த்வம் மமச ஸ பகவா னம்பர மணி:
த்ரி தாம்னோ தாம த்வம் மமச ஸ ரதீ நாம ஸதனம்|
ததாபி த்வத் ப்ராப்தௌ சகிதசகித: துர்யகுண தீ:
இதி ப்ராத்ரா மந்தஸ்மித மதிகத: பாது ககராட்||

72. சாகா பங்காத் வட பரிஹ்ருதிம் க்லுப்தவான்கிம் த்வ மேதத்
ஜ்ஞாத்வா ருத்ரோ வட தரு தலே நர்தனம் ஸம் விதத் தே|
யத்ராபூவன் உரக நிவஹா: நிர்பயா: அங்க லக்னா:
ந்ருத்தானுரத்யன் மணியுத பணாலோக தூதாந்த காரா:||

73. லக்ஷ்மீ ஸத்மபவான் வஹன் விஹரதி ச்ரீமன் ! பதங்கப்ரபோ
லக்ஷ்மீ ஸத்மச ஸத்த்வதம் வஹதியத் த்வாம் தேன வித்யோததே|
யஸ்ஸ்வம் நாம வஹத்யஹோ புவி ஜன: தம் சாவஹன் யோஜன:
லக்ஷ்மீ ஸத்மஸ ஏவ ஸர்வ புவந ச்லாக்யோ பவேன் மானவ:||

74. புராண பும்ஸோ வஹனம் விதந்வன்
வயோதிகஸ் ஸன் விநதாத்ம ஜாத:|
த்ருஷன் மயோ தண்டதரோ ஸ்த்யஹீனாம்
ஸ்திதிம் கத: க்ஷீரதி பூக்ரஹான்த:||

75. ஸஹோதராயா: ஸதனே ஸுதாம்சோ:
ஸூர்யஸ்ய ஸூதஸ்ய ஸஹோதரோऽயம்|
ஸர்பேந்த்ர ஸந்தான ஸமாப்தி ஸாச:
ஸ மே ஸமாம் ஸம்பத மாதநோது||

76. ருத்ரேண ஸத்யம் பகினீ ஹி தத்தா
நிஜாங்க பூஷாகண ரக்ஷணார்த்தம்|
ருத்ராஹி ஸேயம் தவ நாயிகா யத்
விஹங்க ராஜேதி விதர்கயாமி||

77. புஞ்ஜன் புஜங்கானுபவீத பூதம்
புக்தௌ து தேஷா மபவீத பூதம்|
தம் ப்ரம்ஹ ஸூத்ரம் து ஸமீக்ஷ்ய ஸர்பம்
மந்தான சைல ஸ்மரணம் விதத்ஸே||

78. கார்கோட ஹார: கபளீ க்ருதானாம்
குக்ஷி ஸ்திதானம் புஜகோத்தமானாம்|
ஆச் வாஸ னார்த்தம் தவ நாபி ரந்த்ரம்
விசன் னிவாபாதி ததந்திகாஸ்ய:||

79. சரதி ககனே த்வய்யம்ஸஸ்தம் விதாய ரமாதவம்
தபதி தபனே தச்சத்ரத்வம் கதஸ்தவ பாணித:|
தவ கடகதாம் யாதச் சேஷ: பணாகண விஸ்த்ருத:
தவ ச ஹ்ருதயம்ந ஸ் ஸர்வேஷாம்திநோதி பணீச்வர:||

80. "ஸ்வாமின் !" "வஞ்ஜூல வல்லி !" கேன பவதாநாவிஷ்க்ருதா
பாஹவ:|
சத்வாரோऽத்ர புஜத்வயம் புனரிதம் சக்ராய சங்காயச ?|
"காந்தே ! பக்த தமோ மம ப்ரிய ஸூஹ்ருத் மத்வாஹநேந்த்ரோ வர:
பாஹூ த்வந்த்வயுதோ மமாபி ததலம்" "ஸ்வாமின் ! நமஸ்தே நம:"||

81. புஜகாபரணோ ந தூர்ஜடி:
கமலாவாஸ கதோ ந விச்வஸ்ருக்|
நவ மேக நிபோ ந மாதவ:
க இதீஹாஸ்மி ந வக்து மீச்வர:||

82. கமலாலய மாதநோத்யத:
வஹதே தம் கமலாலயம் நத:|
புஜகாபரண: ப்ரமோததே
புஜகான் ஹந்தி ச கோऽன்வயம் புமான் ?||

83. புஜகாபரண: கமலாலயகோ
நவமேக நிபோ யதயம் ததயம்|
த்ரிபிரபி தேவை: ஸ்வயமுதிதோऽபூத்
த்ரிபிரபி வேதை: கோऽபி புமான் ந:||

84. “கேது வாஹனத யைவ மித்ரதா
ஸாவயோஸ்ததிஹ ஸாப்யஹீனதா|
தேன சேஷ பணிராஜ மித்ரதா
வைநதேய ! தவ பாது ஸந்ததம்||”

85. இத்யவேத்ய பகவன்மதம் ஸ்திதம்
சேஷதாம் வஹதி சேஷவத் பவான்|
சேஷ ஏஷ தவ ஸோऽஹமித்யத:
மாமசேஷ பத கேச்வரோऽவதாத்||

86. புஜாந்தர விபூஷணம் பகவதீ பயோதேஸ் ஸுதா
பவானபிச வாஹனம் பகவதோऽஸ்ய விஷ்ணோரிதி|
வதன் கில பதே பதே வகுல பூஷண ஸ்ஸாதரம்
பஜத்யமித பக்திதை: நிஜவசஸ் ஸுதா ராசிபி:||

87. விஷ்ணும் வஹன் விஷ்ணு பதைக லோல:
ருத்ரானுகூல: கமலாலயேऽபி|
பக்த்யா மஹத்யா ஸததம் நிவிஷ்ட:
த்ரி மூர்த்தி ஹ்ருத்ய: ச்ருதி மூர்த்தி ரிந்தே||

## || அத பஞ்சம: ப்ரார்த்தனா விஹார: ||

88. *பக்ஷிராஜ விநதாத்மஜ ஸேவா
விக்ஷிபத்யக ததிம் விநதானாம்|
ஸுக்ஷிதி ஸ்ஸுக்ருத பூரி பலானாம்
அக்ஷி மத்ஸுத மணே: ஸுகி குர்யாத்||

89. *பக்ஷிராஜ ! புஜகேச்வராலயே
பக்ஷிதாமித புஜங்க ஸந்ததே|
ரக்ஷிதாநக வடஸ்த ஸன்முநே
ஸ்வக்ஷிமத் வரமமும் ஸுதம் குரு||

90. *நேத்ரம் ஹி காயத்ரமுசந்தி யஸ்ய
நேத்ரம் ககானாம் பரமம் யமாஹு:|
காத்ரம் யதீயம் கனகாப த்ருச்யம்
நேத்ரம் ஸ புத்ரஸ்ய ஸுகீகரோது||

91. அக்ஷௌஹிணீ யேன ஹதா ஸுராணாம்
குக்ஷௌ க்ருதே பேச்வர கச்சபேன|
ஸக்ஷேமம ஸம்வீத தனுர் கருத்மான்
அக்ஷௌக மஸ்மாகம் அகாத் புநாது||

92. பக்ஷீந்த்ர ! லக்ஷ்மீ ஸதனோ பலாட்ய !
பக்ஷேண நிர்தூத விபக்ஷ ஜாத !|
பக்ஷம் மதீயம் விஜயேன யுக்தம்
அக்ஷீண தர்மம் தயயா விதேயா:||

93. அதிகுடிலகதிஸ்ஸன் ஆத்மனச் சாதனார்த்தம்
விசதி கிமபி ரந்த்ரம் ஹந்த ! வக்த்ரேண கோரம்|
வமதி விஷமபி ஸ்வம் ஸர்வதா கூட வ்ருத்தி:
விமத இஹ மமாயம் சிக்ஷயே மம் ககேந்த்ர !||

94. பத்மாநிதிம் வஹஸி பத்ம பலாச நேத்ரம்
பத்மா நிதௌ விஹரஸே நகரேऽப்யமுஷ்மின்|
பத்மாநிதௌ மயி விதாய ததா ப்ரஸாதம்
பத்மாப்த ஸுத ! ஸஹஜாவஹ ஸாதரஸ்த்வம்||

95. பத்மாலயே புரவரே பதகேந்த்ர திஷ்டன்
பத்மாலயம் ச்ருதியுகம் ச்ருதிரூப ! தன்வன் !
பத்மாலயம் வஹஸி பத்ம பலாச நேத்ரம்
பத்மாலயே மயிச மந்த மதௌ ப்ரஸீத||

96. *பதந்யாஸக்ராந்த த்ரிபுவன மிமம் வேங்கட பதிம்
பத ந்யாஸம் குர்யா மமகரயுகே சேஷகிரி ராட்|
பதான்யேவம் மந்த்ரே பரி விரசயன் பத்ர ரத ராட்
பதம் சேஷாத்ரேர் மே வ்ரண விரஹிதம் தத் ஸுகயது|

---

* ஸ்வாமியின் குமாரர் கருணாகரனுக்கு ஒரு சாலை விபத்தில் கண்ணில் அடிபட்டிருந்தது. அவர் கண்ணும் பார்வையும் சரியாக வேண்டும் என்று கருடனைப் ப்ரார்த்திக்கும் சுலோகங்கள் **88, 89** மற்றும் **90. 96**ஆம் சுலோகம் ஸ்வாமியின் மூத்த குமாரருடைய காலில் ஏற்பட்ட கட்டி ஆர வேண்டும் என்று ப்ரார்த்திக்கும் சுலோகம். இப்பிரார்த்தனைகளை நாச்சியார் கோயில் கல் கருடன் நிறைவேற்றியருளினான். அதுபோலவே இந்த நூலைப் பாராயணம் செய்யும் அனைவருக்கும் க்ஷேமம் தரும் நூல் இது.

97. ஸ்ரீமன் ! பன்னக ஸார்வபௌம நகரே ஸ்ரீ தேவநாதாந்திகே
நாஸாக்ரேண நதீம் ஹிதாத்ருஶ ரஸாம் யத்வத் பவான் நிர்மமே !
தத்வத் மத்ஸு ஹ்ருதோ ஹ்ருதோ ஹித ரஸாம் வாசம் கரோதூன்னதாம்
யேனோபைதி முதம் மதீய க்ருஹிணீ தத் தாத பாதா அபி||

98. ஸ்வாமின் ! பக்ஷீச்வராஸ்மின் ! குரு மயி கருணாமீஷதேதன் மமாலம்
யேன ஸ்யுஸ்தே புஜங்க ப்ரமுக விஷதரா: கோசரா நாக்ஷி மார்கே !
க்ஷேமோ பூய: குடும்பே ஸ்வய மதி மஹிதோ வர்தமானோமமஸ்யாத்
ஸ்ரீமான் நாராயணோऽபி ஸ்வயமதி குதுகீ ஸ்வைர்ம மாத்கே ஸதாஸ்யாத்||

99. புஜாங்க பாசம் கில மோசயித்வா
புஜாயுகீ பஞ்ஜரக: கராரே:|
புஜா ஸ்வதுண்டேன புஜங்கமானாம்
புஜாதிகம் ரக்ஷது மாமகீனம்||

100. ஸூதஸ்ய வாஹ ஸ் ஸுரநாத ஸூநோ:
ஸூதஸ்ய ஸூரஸ்ய ஸஹோதரோய:
ஸூதஸ்ய கஸ்யாऽபி ஸுதஸ்ய ஸூநு:
ஸூதஸ்ஸ மே பாது மனோரதஸ்ய||

101. ஸரோஜவாஸா ஸதனே வஸந்தம்
ஸரோஷ மாச்சின்ன ஸரீஸ்ருபௌகம்|
ஸரோகமேதம் ஸுகினம் விதாதும்
ஸரோமஹர்ஷ: சரணம் ப்ரபத்யே||

102. ஸ்ரீநிவாஸகவி தல்லஜ க்லுப்தம் ஸ்ரீநிவாஸவஸதே: பதகேந்தோ:|
ஸ்ரீநிவாஸசதகம் படிதம் சேத் ஸ்ரீநிவாஸசதகம் ப்ரததாதி||

|| இதி ஸ்ரீமதாசுகவி ஸார்வபௌமஸ்ய ஸ்ரீநிதே: க்ருதிஷு க்ஷேமகாரி சதகம் ||

கவிதா ஜித கல்லோலி கன்யகா காந்த வக்ஷஸே ||
கருணாதி குணாட்யாய கமலா நிதயே நம: ||

|| ஸ்ரீ நிதயே நம: ||

ஸ்ரீ:

## ஸ்ரீமதுபயவே வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் ஆசுகவிஸார்வபௌம ஸ்ரீநிதிஸ்வாமி அருளிச்செய்த

# க்ஷேமகாரி ஶதகம்

## சுலோகங்கள் 1 முதல் 3 வரை

ஸ்ரீமதுபயவே. வில்லூர் நடாதூர்
ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் **சேஷாத்ரி ஸ்வாமி**

**நா**ச்சியார் கோவிலில் காட்சி தரும் கல்கருடன் விஷயமாக அடியோங்களின் திருத்தகப்பனார் அருளிச் செய்த ஶதகம் இது. க்ஷேமகாரீ என்பது கருடனுடைய பல திருநாமங்களில் ஒன்று. அனைவரின் குடும்பங்களிலும் க்ஷேமம் உண்டாக வேண்டுமென்று க்ஷேமகாரியைப் ப்ரார்த்தித்து இந்த ஸ்துதியைத் திருத்தகப்பனார் அருளிச் செய்தார்.

1986-ல் அடியேனுக்குக் காலில் அடிபட்டபோது, அந்தப் புண் விரைவில் குணமாக வேண்டும் என்று இந்தத் துதியின் 96-வது ச்லோகத்தில் சிறப்பாக ப்ரார்த்தனை செய்துள்ளார். அந்த ச்லோகம்:

**“பதந்யாஸக்ராந்தத்ரிபுவநமிமம் வேங்கடபதிம்**
**பதந்யாஸம் குர்யா மம கரயுகே சேஷகிரிராட்|**
**பதாந்யேவம் மந்த்ரே பரிவிரசயந் பத்ரரதராட்**
**பதம் சேஷாத்ரேர்மே வ்ரணவிரஹிதம் தத் ஸுகயது||”**

அதன் பலனாக, கல்கருடனின் அருளால் அடியேன் காலில் ஏற்பட்டிருந்த காயம் விரைவில் குணமானது. இனி,

**“ப்ரத்யக்ஷானுச்ரவிகமஹிமப்ரார்த்திநீநாம்**
**ப்ரஜாநாம் ச்ரேயோ மூர்த்திம்”**

என்று ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்தபடி அனைத்து மங்களங்களையும் தரவல்லதான இத்துதியின் மங்களகரமான முதல் ச்லோகம்:

***“ஸ்ரீலக்ஷ்மீஸதநே ஸ்திதிம் கலயதே ஸ்ரீபக்ஷிராஜாய தே***
***ஸ்ரீலக்ஷ்மீபகவத்விவாஹவிதயே ஹேதுத்வமாதஸ்துஷே|***
***ஸ்ரீலக்ஷ்மீபகவத்ஸவாஹமணயே வேதௌகபூர்ணாத்மநே***
***ஸ்ரீலக்ஷ்மீஸதநாதிவாஞ்சிதவராந் ஸத்ய: ப்ரதாத்ரே நம:||”***

*ஸ்ரீலக்ஷ்மீஸதநே ஸ்திதிம் கலயதே - நாச்சியார் கோவிலில் எழுந்தருளியிருப்பவர். திருநறையூர் என்று திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இந்த திவ்யதேசம் நாச்சியார் கோவில் என்று வழங்கப்படுகிறது. இங்கே பெருமாளை விடத் தாயாருக்குத் தான் முக்கியத்துவம் அதிகம். கோவில் வாசலிலிருந்து நாம் கர்பக்ருஹத்தை ஸேவித்தால், தாயார் நடுநாயகமாக நடுவிலும், பெருமாள் சற்றே நகர்ந்து பக்கவாட்டிலும் எழுந்தருளியிருப்பதைக் காணலாம். உத்ஸவங்களிலும் தாயார் முன் செல்ல, அவளைப் பின்தொடர்ந்து பெருமாள் செல்வார். கோவில் சாவியும் தாயாரிடமே இருக்கும். அந்த வகையில் ஊருக்கும் ‘நாச்சியார்’ கோவில் என்றே பெயர் அமைந்துள்ளது. அப்படிப்பட்ட திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும்,*

*பக்ஷிராஜாய தே- பறவைகளின் அரசனான உனக்கு,*

*ஸ்ரீலக்ஷ்மீபகவத்விவாஹவிதயே ஹேதுத்வமாதஸ்துஷே - நம்பிக்கை நாச்சியாருக்கும் நறையூர் நம்பிக்கும் திருக்கல்யாணம் நடக்கக் காரணமாக இருந்தவருக்கு. ராமாயணத்தில் திருவடி எப்படி ஸீதையை அசோக வனத்தில் கண்டு, ராமபிரானிடம் சென்று*

செய்தி சொல்லி, திவ்ய தம்பதிகளான அவர்களை இணைத்து வைத்தாரோ, அதுபோல மேதாவி ரிஷியின் மகளாக அவதரித்திருந்த வஞ்ஜுளவல்லியை நாச்சியார்கோவிலில் கண்ட பெரிய திருவடியான கருடன் வைகுந்தத்திலுள்ள எம்பெருமானிடம் சென்று செய்தி சொல்லி, அவரை அழைத்து வந்து இருவருக்கும் திருக்கல்யாணம் செய்து வைத்தார். எனவே, ராமாயணத்தில் ஹநூமானுக்கு உள்ள ஏற்றம் நாச்சியார்கோவிலில் கருடனுக்கு உண்டு.

ஸ்ரீலக்ஷ்மீபகவத்ஸுவாஹமணயே - நாச்சியாருக்கும் நம்பிக்கும் வாகனமாக விளங்குபவருக்கு. கல்கருடன் தாமே மூலவராகவும், உத்ஸவராகவும், வாஹனமாகவும் விளங்குவது நாச்சியார்கோவிலின் தனிச்சிறப்பு.

வேதௌகபூர்ணாதமநே - வேதக் கூட்டங்களின் ஸ்வரூபியாகவே விளங்குபவருக்கு. கருடன் ஸாக்ஷாத் வேதமே வடிவெடுத்தவர். இதை ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில் அழகாக விளக்கியுள்ளார்.

**“நேத்ரம் காயத்ரமூசேத்ரிவ்ருதிதி ச**
**சிரோ நாமதேயம் யஜூம்ஷி**
**சந்தாம்ஸ்யங்காநி திஷ்ண்யாத்மபிரஜநி**
**சபைர்விக்ரஹோ வாமதேவ்யம்|**
**யஸ்ய ஸ்தோமாத்மநோऽஸௌ**
**ப்ருஹதிதரகருத் தாத்ருசாம்நாதபுச்ச:**
**ஸ்வாச்சந்த்யம் ந: ப்ரஸூதாம்**
**ச்ருதிசதசிகராபிஷ்டுதாத்மா கருத்மாந்||”**

என்ற மூன்றாம் ச்லோகத்தில் காயத்ரி மந்த்ரம் கருடனின் கண்களாகவும், த்ரிவ்ருத் தலையாகவும், யஜுர்வேதமே திருநாமமாகவும், சந்தங்களே அங்கங்களாகவும், திஷ்ண்யம்

நகங்களாகவும், வாமதேவ்யமே திருமேனியாகவும், ஸ்தோமம் ஆத்மாவாகவும், ப்ருஹத், ரதந்தரம் இரண்டும் இறக்கைகளாகவும், யஜ்ஞாயஜ்ஞும் வாலாகவும் இருப்பதாக ஸ்வாமி தேசிகன் வர்ணித்துள்ளார் அப்படிப்பட்ட வேத ஸ்வரூபிக்கு,

ஸ்ரீ லக்ஷ்மீஸதநாதிவாஞ்சிவராந் ஸத்ய: ப்ரதாத்ரே நம: - செல்வம், வேத அறிவு, வீடு என அடியவர் வேண்டும் அனைத்தையும் உடனே தருபவனுக்கு வணக்கம்.

**நாச்சியார்கோவிலில் எழுந்தருளியிருப்பவரும், நாச்சியாருக்கும் நம்பிக்கும் திருக்கல்யாணம் நடக்கக் காரணமானவரும், நாச்சியாருக்கும் நம்பிக்கும் வாஹனமாக விளங்குபவரும், வேதங்களே வடிவெடுத்தவரும், செல்வம், வேத அறிவு, வீடு என அடியவர் வேண்டும் அனைத்தையும் உடனே தருபவருமான கருட பகவானுக்கு வணக்கம்.**

இரண்டாம் ச்லோகத்தில் அமுதத்தைக் கவர்ந்து சென்றவரான கருடனை அமுதமயமான வார்த்தைகளால் ஸ்வாமி துதிக்கிறார்.

**“அம்ருதகலசஸிந்தோரந்தரங்கே சயாநம்**
**அம்ருதகலசஸிந்தோ: கந்யகாமுத்வஹந்தம்|**
**அம்ருதகலசஸிந்தும் கஞ்சிதம்ஸே வஹந்தம்**
**அம்ருதகலசஹஸ்தம் பாவயே பக்ஷிராஜம்||”**

அம்ருதகலசஸிந்தோரந்தரங்கே சயாநம் - அமுதமயமான பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவனும், நாச்சியார் கோவிலைப் பற்றிப் பாட வந்த ஸ்வாமி, பாற்கடலுள் பையத் துயின்ற பரமனை இங்கே குறிப்பிடுவது எதற்காக என்ற ஐயம் எழலாம். பாற்கடலில் எப்படி வாஸுதேவன், ப்ரத்யும்நன், அநிருத்தன், ஸங்கர்ஷணன் என்ற நான்கு வ்யூஹ மூர்த்திகளாக எம்பெருமான்

எழுந்தருளியுள்ளாரோ, அதுபோலவே நறையூரிலும் வாஸுதேவன், ப்ரத்யும்நன், அநிருத்தன், புருஷோத்தமன், ஸங்கர்ஷணன் என்ற ஐந்து மூர்த்திகளாக ஸேவை ஸாதிப்பதை நினைவூட்டத்தான் இங்கே பாற்கடலை ஸ்வாமி குறிப்பிடுகிறார்.

அம்ருதகலசஸிந்தோ: கந்யகாமுத்வஹந்தம் - அமுதமயமான பாற்கடலின் மகளும், அமுதில் வரும் பெண்ணமுதுமான மஹாலக்ஷ்மி - வஞ்ஜுளவல்லி நாச்சியாரைத் தன் திருமார்பில் கொண்டவனும், அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறைமார்பனாகத் திருமலையப்பன் விளங்குவது போலவே வக்ஷஸ்தலத்தில் நித்யவாஸம் செய்யும் பிராட்டியோடு நறையூர் நம்பி எழுந்தருளியுள்ளான். அதனால் தான் சனிக்கிழமை அன்று நறையூர் நம்பியை ஸேவித்தால் பதினாறு முறை திருமலையப்பனை ஸேவித்த பலனுண்டு என்ற ஐதிஹ்யம் உள்ளதாக நாச்சியார் கோவில் அர்ச்சகர்கள் கூறுகிறார்கள்.

அமுதமயமான பாற்கடலில் பள்ளி கொண்டவனும், அமுதப் பாற்கடலில் பிறந்த அமுதப் பெண்ணான பிராட்டியைத் திருமார்பில் கொண்டவனும்,

அம்ருதகலசஸிந்தும் கஞ்சிதம்ஸே வஹந்தம் - அம்ருதப் பாற்கடல் போலவே விளங்குபவனுமான எம்பெருமானைத் தன் தோள்களில் சுமப்பவரை.

**"அமுதம் அமரர்கட்கு ஈந்த**
**நிமிர்சுடர் ஆழி நெடுமால்**
**அமுதினும் ஆற்ற இனியன்**
**நிமிர்திரை நீள்கடலானே"**

என்ற நம்மாழ்வாரின் பாசுரத்துக்கேற்ப, பாற்கடலிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட அமுதம் வெறும் உப்புச்சாறு, ஆனால் அதைக்

கடைந்த எம்பெருமானே உண்மையான ஆராவமுதம். இல்லை, இல்லை, அமுதக்கடலே. அந்த அமுதனான எம்பெருமானைத் தன் தோளில் தாங்குபவரும்,

அம்ருதகலசஹஸ்தம் பாவயே பக்ஷிராஜம் - அம்ருத கலசத்தைக் கையில் ஏந்தியவருமான பக்ஷிராஜனை வணங்குகிறேன். தன் தாயை மீட்பதற்காகத் தேவ லோகத்திலிருந்து கருடன் அம்ருத கலசத்தை எடுத்து வந்த சரித்ரம் யாவரும் அறிந்ததே. அந்த அம்ருத கலசத்தை அவர் கையில் ஏந்தியதன் நினைவாக இன்றும் நறையூரில் கல்கருடன் வியாழக்கிழமை தோறும் அம்ருதகலசம் என்று அழைக்கப்படும் ப்ரஸாதத்தை பெருமாளுக்கும் தாயாருக்கும் கண்டருளப் பண்ணச் செய்து தாமும் கண்டருளி அடியவர்களுக்கு அருளிடுகிறார்.

**அமுதமயமான பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவனும் அமுதமயமான பாற்கடலின் மகளான வஞ்ஜுளவல்லி நாச்சியாரைத் தன் திருமார்பில் கொண்டவனும், அம்ருதப் பாற்கடலாக விளங்குபவனுமான எம்பெருமானைத் தன் தோள்களில் சுமப்பவரும், அம்ருத கலசத்தைக் கையில் ஏந்தியவருமான பக்ஷிராஜனை வணங்குகிறேன்.**

இந்த ச்லோகத்தைக் கேட்ட உடனேயே, ''அமுதம் போல உள்ளதே!'' என்று சொல்லி ரசித்தான் போலும் புள்ளரையன். அதனால் ஸ்வாமி அடுத்த ச்லோகமான மூன்றாம் ச்லோகத்தில், ''இது போன்ற அமுதமயமான ச்லோகங்களை மேலும் மேலும் உன்மேல் இயற்ற அருள்புரிய வேண்டும்'' என்று கருடனிடம் ப்ரார்த்திக்கிறார்.

**''பாகசாஸநசிலாமயாக்ருதே!**
**பாகசாஸநஸஹோதரப்ரிய!|**

**பாகசாஸந! திசேஹ பக்ஷிணாம்**
**பாகமஸ்ய கவிதாஸு கஞ்சந||"**

பாகசாஸநசிலாமயாக்ருதே - இந்த்ரநீலக்கல் போன்ற கல் ஆல் ஆன வடிவத்தை உடையவனே! (கல்கருடனே!)

பாகசாஸநஸஹோதரப்ரிய - இந்த்ரனின் ஸஹோதரன் - உபேந்த்ரனாகிய எம்பெருமானின் நண்பனே! இந்திரனுடைய தாயான அதிதியின் மகனாக வாமன மூர்த்தியாக எம்பெருமான் திருவவதரித்தபடியால் இந்திரனின் இளைய ஸஹோதரன் - உபேந்த்ரன் என்று அழைக்கப்படுகிறான். ஸ்தோத்ர ரத்னத்தில் ஆளவந்தார்,

**"தாஸஸ்ஸகா வாஹநமாஸநம் த்வஜ:**
**யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமயய:|**
**உபஸ்திதம் தேந புரோ கருத்மதா**
**த்வதங்க்ரிஸம்மர்தகிணாங்கசோபிநா||"**

என்று எம்பெருமானுக்கு தாஸனாகவும், ஸகாவாகவும், வாஹனமாகவும், ஆஸனமாகவும், கொடியாகவும், பந்தலாகவும், விசிறியாகவும் கருடன் இருக்கிறார் என்று அருளிச் செய்துள்ளார்.

பாகசாஸந பக்ஷிணாம் - பறவைகளின் இந்த்ரனே (தலைவனே)! இன்றும் நாச்சியார் கோவில் வெளிப்ரகாரத்தில் மாலை வேளையில் நாம் அமர்ந்தால், கூட்டமாகப் பறவைகள் எல்லாம் ஒலி எழுப்பிக் கொண்ட அவ்வழியாகச் செல்வதைக் காணலாம். "தங்களின் இந்த்ரனான கருடனைப் பறவைகள் எல்லாம் சேர்ந்து ஸ்தோத்திரம் செய்யும் ஒலி தான் இந்த ஒலி" என்று நாச்சியார் கோவில் ஸ்ரீ உ.வே. கண்ணன் பட்டாச்சார்யார் ஸ்வாமி ஸாதிப்பார்.

*பாகமஸ்ய கவிதாஸு கஞ்சந திசேஹ - அடியேனுடைய கவிதை அனைவரும் அனுபவித்து மகிழும்படியான பாகத்தில் நடையில் இருக்கும்படியாக நீ அருள வேண்டும்! இவ்வாறு மேற்கொண்டு தாம் கருடன் விஷயமாக இயற்றப்போகும் ச்லோகங்கள் சிறப்பாக அமைய கருடனின் அருளை வேண்டி இந்த ச்லோகத்தை நிறைவு செய்கிறார்.*

***இந்த்ரநீலக்கல் போன்ற வடிவத்தை உடையவனே! இந்த்ரனின் ஸஹோதரனாகிய எம்பெருமானின் ஸகாவே! பறவைகளின் இந்த்ரனே (தலைவனே)! அடியேனுடைய கவிதை அனைவரும் அநுபவித்து மகிழும்படி இருப்பதாக நீ அருள வேண்டும்!***



# சுலோகங்கள் 4 முதல் 6 வரை

ஸ்ரீமதுபயவே. வில்லூர் நடாதூர்

ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் பாலகவி ராஷ்ட்ரபதிஸம்மானித

ஸ்ரீமதுபயவே **ஸுந்தரராஜன் ஸ்வாமி,** **IAS (Retd.)**

**ஸு**பர்ணன், தார்க்ஷ்யன், வைநதேயன், வாயுவாஹனன், நாகாந்தகன், ஸுதாஹரன், ககேச்வரன், ககநேச்வரன், பக்ஷிராஜன் என்று பல திருநாமங்களை உடையவரான கருடனுக்கு க்ஷேமகாரீ என்ற திருநாமமும் உண்டு. அடியார்களான நம் அனைவருக்கும் அனைத்து நன்மைகளையும் அருளுவதால் க்ஷேமகாரீ என்று அவர் போற்றப்படுகிறார்.

நாச்சியார்கோவிலில் உலக ப்ரஸித்தி பெற்ற கல்கருடனாக அவர் எழுந்தருளியுள்ளார். பொதுவாகக் கருடனின் திருமேனியில் எட்டுப் பாம்புகள் உண்டு. ஸ்வாமி தேசிகன் கருடபஞ்சாசத்தில்,

**“வாமே வைகுண்டசய்யா பணிபதிகடகோ வாஸுகீ ப்ரஹ்மஸூத்ர:**
**ரக்ஷேந்நஸ்தக்ஷகேண க்ரதித கடிதடச்சாருகார்கோடஹார:|**
**பத்மம் கர்ணேபஸவ்யே ப்ரதிமவதி மஹாபத்மமந்யத்ர பிப்ரத்**
**சூடாயாம் சங்கபாலம் குளிகமபி புஜே தக்ஷிணே பக்ஷிமல்ல:||”**

என்று ஆதிசேஷனை இடக்கையில் கங்கணமாகவும், வாஸுகியை யஜ்ஞோபவீதமாகவும், தக்ஷகனை அரைஞாண் கயிறாகவும், கார்கோடகனை மாலையாகவும், பத்மனை வலக்காதில் தோடாகவும், மஹாபத்மனை இடக்காதில் தோடாகவும், சங்கபாலனை க்ரீடமாகவும், குளிகனை வலக்கையில் கங்கணமாகவும் கருடன் அணிந்துள்ளதாகக் கூறுகிறார்.

ஆனால் நாச்சியார்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கருடனோ, இந்த எட்டுப் பாம்புகளோடு சேர்த்துத் தன் உடைவாளில் ஒரு பாம்பென மொத்தம் ஒன்பது பாம்புகளுடன் ஸேவை ஸாதிப்பது தனிச்சிறப்பு. அதனால் இவர் நவக்ரஹ தோஷங்களையும் போக்குபவராகத் திகழ்கிறார் என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.

இப்படிப்பட்ட வரப்ரஸாதியான கல்கருடன் விஷயமாக கமலாலய உபலகருடசதகம் என்றழைக்கப்படும் இந்த க்ஷேமகாரி சதகத்தை அடியேனுடைய திருத்தகப்பனார் அருளிச் செய்துள்ளார். அதில் முதல் மஹாப்ராஸ விஹாரத்தின் நான்காவது ச்லோகம்:

**"கலசஜலதிகந்யாகேஹகேஹே லஸந்தம்**
**கலசஜலதிகந்யாகாந்தகாந்தம் வஹந்தம்|**
**கலசமம்ருதபூர்ணம் ஹஸ்தபத்மே ததாநம்**
**கலசஜலதிகந்யாவீக்ஷிதம் ஸந்நமாமி||"**

கலசஜலதிகந்யாகேஹகேஹே லஸந்தம் - "ஆவிர்பாவ: கலசஜலதௌ" என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தபடி, பாற்கடலில் தோன்றிய மஹாலக்ஷ்மியின் கோவிலான நாச்சியார்கோவிலில் தனிக்கோயிலில் - ஸந்நிதியில் எழுந்தருளியிருப்பவரை,

கலசஜலதிகந்யாகாந்தகாந்தம் வஹந்தம் - அந்தப் பிராட்டியின் அழகான கணவனான எம்பெருமானைத் தாங்குபவரை. நம்பிக்கை நாச்சியார் - நறையூர் நம்பி திவ்ய தம்பதிகள்,

**"க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா**
**ஸ்யாத் ஐகரஸ்யாத்தயா"**

என்ற ஆழ்வானின் ஸ்ரீஸூக்திக்கேற்ப ஏகரஸத்தில் - made for each other - என்னும்படியாக எழுந்தருளியிருப்பார்கள். வஞ்ஜுளவல்லீ என்னும் கொடியைத் தாங்கும் கொம்பாகவும், அவளது அழகிய கேள்வனாகவும் விளங்கும் எம்பெருமானைத் தன் தோள்களில் தாங்கும் கருடனை ஸ்வாமி தேசிகன் கருட தண்டகத்தில்,

"வைகுண்டபீடீக்ருதஸ்கந்தம்" என்று குறிப்பிடுகிறார். அந்த கருடனை,

கலசமம்ருதபூர்ணம் ஹஸ்தபத்மே ததாநம் - அமுதம் நிறைந்த கலசத்தைத் தன் கரங்களில் ஏந்தியவரை. தோள்களில் ஆராவமுதத்தைத் தாங்கும் கருடன் கைகளில் தேவாம்ருதத்தைத் தாங்கியிருப்பதை இந்த வரியில் ஸ்வாமி குறிப்பிடுகிறார்.

கலசஜலதிகந்யாவீக்ஷிதம் ஸந்நமாமி - பாற்கடலில் தோன்றிய லக்ஷ்மீயின் அவதாரமான வஞ்ஜுளவல்லித் தாயாரின் கடாக்ஷத்துக்கு இலக்கானவரை வணங்குகிறேன். ஸ்ரீபராசரபட்டர் ஸ்ரீகுணரத்ன கோசத்தில்,

**"ஸஹஸ்திரபரித்ரஸவ்ரஜவிரிஞ்சாநாகிஞ் சநை:**
**அநோகஹப்ருஹஸ்பதிப்ரபலவிக்லபப்ரக் ரியம்|**
**இதம் ஸதஸதாத்மநா நிகிலமேவ நிம்நோந்நதம்**
**கடாக்ஷ ததுபேக்ஷயோஸ்தவ ஹி லக்ஷ்மீ தத்தாண்டவம்||"**

என்று அருளிச் செய்துள்ளார். அதாவது, உலகில் அசையும் பொருள்கள் - அசையாத தாவரங்கள், ப்ரஹ்ம தேவர் - பிச்சைக்காரர், ஞானம் நிறைந்த ப்ருஹஸ்பதி போன்றவன் - மரம் போல ஞானமற்றவன், பலம் மிக்கவன் - பலமற்றவன், இப்படிப் பல மேடு - பள்ளம் ஆகிய இத்தனை இரட்டைகள் இருப்பதற்கு யாது

காரணமென்னில், இந்த இரட்டைகளில் முந்தையவை அனைத்தும் பிராட்டியின் கடாக்ஷத்துக்கு இலக்கானவை, பிந்தையவை பிராட்டியின் கடாக்ஷம் பெறாதவை என்பதே என்கிறார் பராசரபட்டர். அந்த வகையில் கல்கருடன் வஞ்ஜுளவல்லியின் கடாக்ஷத்தை முழுமையாகப் பெற்றபடியால் தான் உலகப்ரஸித்தி பெற்றவராக இன்று விளங்குகிறார்.

**பாற்கடலில் தோன்றிய மஹாலக்ஷ்மியின் கோவிலான நாச்சியார்கோவிலில் தனியான ஸன்னிதியில் எழுந்தருளியிருப்பவரும், அந்தப் பிராட்டியின் அழகான கணவனான எம்பெருமானுக்கு வாஹனமாக இருந்து அவனைத் தாங்குபவரும், அமுதம் நிறைந்த கலசத்தைத் தன் கரங்களில் ஏந்தியவரும், பாற்கடலில் தோன்றிய லக்ஷ்மீயின் மறுவடிவமான வஞ்ஜுளவல்லித் தாயாரின் கடாக்ஷத்துக்கு இலக்கானவருமான கருடனை வணங்குகிறேன்.**

ஐந்தாவது ச்லோகம்:

**“பத்மாலயேऽதிமதுரே க்ருதநித்யவாஸ:**
**பத்மாபிராமமதுநாசநக்லுப்தசித்த:|**
**பத்மாபிஜாதசுபவாஹநஹம்ஸஸேவ்ய:**
**பத்மாஸிதேக்ஷணநிப: பரிபாது பத்ரீ||”**

பத்மாலயேऽதிமதுரே க்ருதநித்யவாஸ: - நாச்சியார் கோவிலில் நித்யவாஸம் செய்பவர். ஒரு சிற்பி கருடனின் திருமேனியை ஒரே கல்லில் வடித்தார். தத்ரூபமாக இருந்த அந்த விக்ரஹம் சிற்பி வடித்து முடித்த அளவிலே பறக்கத் தொடங்கியது. உடனே அந்தச் சிற்பி தன் உளியால் அந்த கருடனை அடித்தார். மூக்கில் அடிபட்ட அந்தக் கல்கருடன் நாச்சியார்கோவிலில் விழுந்தாராம். மறையாரும் பெருவேள்விக் கொழும்புகை போய் வளர்ந்தெங்கும் நிறையார வான்மூடும் நீள்செல்வத் திருநறையூரின் எழிலைக் கண்டதும் வேத

ஸ்வரூபியான கருடன் அவ்வூரை விட்டு அகல மனமின்றி அன்று முதல் அங்கேயே நித்யவாஸம் செய்கிறாராம். இப்படியும் ஒரு வரலாறு வழக்கில் உள்ளது.

பத்மாபிராமமதுநாசநக்லுப்தசித்த: - பிராட்டிக்கு ஆனந்தம் தருபவனும், மதுவை வதைத்தவனுமான எம்பெருமானிடத்தில் எப்போதும் சித்தத்தைச் செலுத்தியவர். விஷ்ணுவையே சித்தத்தில் கொண்ட விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வாராகவும் கருடனே அவதரித்தார் என்பது நோக்கத்தக்கது. மதுவை அழித்தவர் ஹயக்ரீவர். அவரையே சித்தத்தில் கொண்டவர் கருடன். அதனாலேயே போலும் இருவருக்குமே வியாழக்கிழமை குருவாரம் உகந்ததாக இருக்கிறது. அதனால் தான் போலும் கருடமந்த்ரம் ஜபித்து அயிந்தையில் அருந்தவம் செய்த ஸ்வாமி தேசிகனுக்குப் ப்ரத்யக்ஷமாக வந்து ஹயக்ரீவ் விக்ரஹத்தை வழிபட அளித்து ஹயக்ரீவ மந்திரத்தையும் கருடன் உபதசித்தருளினார்.

பத்மாபிஜாதசுபவாஹநஹம்ஸஸேவ்ய: - தாமரையில் தோன்றிய ப்ரஹ்மாவின் வாஹனமான அன்னப்பறவையால் வணங்கப்படும் பறவைகளின் அரசனாக விளங்குபவர். அன்னப் பறவை ஏனையனைத்துப் பறவைகளுக்கும் உபலக்ஷணம் (illustrative).

பத்மாஸிதேக்ஷணநிப: பரிபாது பத்ரீ - பிராட்டியின் கரிய நிறமுடைய திருக்கண்களைப் போலக் கருமை நிறம் கொண்ட திருமேனியை உடையவரான கருடன் அடியேனைக் காக்கட்டும். கருடன் பொன் வண்ணத்தவர்தான். ஆனாலும் நாச்சியார் கோவிலில் அவர் கருநிறக் கல்கருடனாகவே காட்சி தருகிறார். ஏன் இப்படி ? மைய கண்ணாள் என்றும் மைத்தடங்கண்ணி என்றும் போற்றப்படும் பிராட்டி எப்போதும் தன் கரியநிறம் கடைத்த கண்களால் எம்பெருமானையே பார்த்துக் கொண்டிருப்பதால் தான்,

அந்தக் கண்களின் ஒளிபட்டு எம்பெருமானின் திருமேனி கரிய நிறமுடையதாகி விட்டது என்று சொல்வதுண்டு அல்லவா ? அது போலவே கருடனின் திருமேனியும் கறுத்துவிட்டது என்று கூறாமல் கூறுகிறார் கவி என்பதை ரஸிக்க வேண்டும்.

**நாச்சியார்கோவிலில் நித்யவாஸம் செய்பவரும், பிராட்டிக்கு ஆனந்தம் தருபவரும், மதுவை வதைத்தவனுமான எம்பெருமானிடத்தில் எப்போதும் சித்தத்தைச் செலுத்தியவரும், தாமரையில் தோன்றிய ப்ரஹ்மாவின் வாஹனமான அன்னப் பறவை முதலிய பறவைகளால் வணங்கப்படும் பறவைகளின் அரசனாக விளங்குபவரும், பிராட்டியின் கரிய நிறமுடைய திருக் கண்களைப் போலக் கருமை நிறம் கொண்ட திருமேனியை உடையவருமான கருடன் அடியேனைக் காக்கட்டும்!**

ஆறாம் ச்லோகம்:

**"ஜகந்மாதுர்கேஹே நகரவ்ருஷபே பூர்ணவிபவே**
**ஜகந்மாதுர்கேஹம் புஜயுகளமத்யம் நிஜமயம்|**
**ஜகந்மாதா க்ருஷ்ணாஜிநபிஹிதமாஹோ ஸ கலயந்**
**ஜகந்மாநம் த்ருஷ்ட்வா பததபதிமாநந்தமயதே||"**

ஜகந்மாதுர்கேஹே நகரவ்ருஷபே பூர்ணவிபவே - அனைத்துலகுக்கும் அன்னையான பிராட்டியின் உயர்ந்த நகரமும், அனைத்து வைபவங்களும் நிறைந்ததுமான நாச்சியார் கோவிலில். நாச்சியார் கோவிலின் வளத்தைத் திருமங்கையாழ்வார்,

**"பொன்முத்தும் அரியுகிரும் புழைக்கைம்மா கரிக்கோடும்**
**மின்னத்தன் திரையுந்தும் வியன்பொன்னித் திருநறையூர்**
**மின்னொத்த நுண்மருங்குல் மெல்லியளைத் திருமார்பில்**
**மன்னத்தான் வைத்துகந்தான் மலரடியே அடைநெஞ்சே"**

என்று அருளியுள்ளார். அந்த திவ்ய தேசத்தில்,

ஜகந்மாதுர்கேஹம் புஜயுகளமத்யம் நிஜமயம் - அனைத்துலகுக்கும் அன்னையான பிராட்டியைத் திருமார்பில் கொண்டவனான எம்பெருமான்,

ஜகந்மாதா க்ருஷ்ணாஜிநபிஹிதமாஹோ ஸ கலயந் - அந்தத் திருமார்பிலுள்ள பிராட்டியை மான் தோலால் மறைத்துக் கொண்டு ப்ரஹ்மசாரி வேடத்தில் வாமனனாக மஹாபலியிடம் சென்று மூவடி நானிலம் வேண்டிய ஈரடியால் மூவுலகையும் அளந்தவன். நறையூர் நம்பியையே மான்தோல் அணிந்து மஹாபலியிடம் யாசகம் கேட்டுச் சென்ற வாமன மூர்த்தியாக அநுபவித்து,

**"மான்கொண்ட தோல்மார்வின் மாணியாய் மாவலிமண்**
**தான்கொண்டு தாளால் அளந்த பெருமானைத்**
**தேன்கொண்ட சாரல் திருவேங்கடத்தானை**
**நான்சென்று நாடி நறையூரில் கண்டேனே"**

என்று திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். அந்த எம்பெருமான்,

ஜகந்மாநம் த்ருஷ்ட்வா பதகபதிமாநந்தமயதே - உலகளவு பெரிய தோற்றத்தோடு விளங்கும் கருடனைப் பார்த்து ஆனந்தப்படுகிறான். விச்வரூபம் எடுத்த கருடனாக நறையூரில் கருடாழ்வார் எழுந்தருளியுள்ளார். ஒவ்வொரு வருடமும் மார்கழி, பங்குனி மாதங்களில் கருட ஸேவை நடக்கும். அப்போது ஸந்நிதியிலிருந்து கருடன் புறப்பட்டு வெளியே வர வர, அவருடைய எடை அதிகரித்துக் கொண்டே போகும் என்று ஒரு நம்பிக்கை பக்தர்கள் இடையில் உள்ளது. முதலில் நான்கு பேர் கருடனை எழுந்தருளப் பண்ணுவார்கள். பின் கருடனின் எடை அதிகரிக்க அதிகரிக்க, எட்டு பேர், பதினாறு பேர், முப்பத்திரண்டு பேர், அறுபத்து நான்கு பேர் என்று அதிகரித்துக் கொண்டே போய், கோவிலுக்கு வெளியே நூற்றிருபத்தெட்டு பேர் என்னும்படிப் பலபலராக எழுந்தருளச் செய்வார்கள். இப்படித் தன் எடையை

அதிகரித்து விச்வரூபம் எடுக்கவல்லராக நம் கல்கருடன் திகழ்கிறார் என்றும் ரஸிக்கலாம்.

அனைத்துலகுக்கும் அன்னையான பிராட்டியின் உயர்ந்த நகரமும், அனைத்து வைபவங்களும் நிறைந்ததுமான நாச்சியார் கோவிலில், அனைத்துலகுக்கும் அன்னையான பிராட்டியைத் திருமார்பில் கொண்டவனும், அந்தப் பிராட்டியை மான்தோலால் மறைத்துக் கொண்டு ப்ரஹ்மசாரி வேடத்தில் வாமனனாக மஹாபலியிடம் யாசகம் கேட்டுச் சென்று மூவுலகையும் அளந்தவனுமான நறையூர் நம்பி, உலகளவு உள்ள பெரிய தோற்றத்தோடு விளங்கும் கருடனைப் பார்த்து ஆனந்தப்படுகிறான்.



# சுலோகங்கள் 7 முதல் 9 வரை

ஸ்ரீமதுபயவே மஹாமஹோபாத்யாய ராஷ்ட்ரபதிஸம்மானித
ஸுரோத்யீயம். பையம்பாடி சேட்டலூர்

**வா.ஸ்ரீவத்ஸாங்காச்சார்ய ஸ்வாமி,** சென்னை

சோழநாட்டுத் திருப்பதிகளில் நாய்ச்சியார் கோவில் என்று இந்நாளில் ப்ரஸித்தமான திவ்யதேசம் ஸ்ரீ திருமங்கை மன்னனால் நூறு பாசுரங்களுக்கு மேல் பாடிப்பரவி கௌரவிக்கப்பட்ட ஸ்தலமாகும். பரகாலனுக்கு ஆச்சார்யராக இவ்வூர் எம்பெருமான் எழுந்தருளியிருந்து நேரில் மற்திர-மந்தரார்தங்களை அருளியவர் என்பது ஸம்ப்ரதாயம்.

இந்த ஊரில் கல்லாலான கருடன் எழுந்தருளியிருக்கிறார். இவரை மூலஸ்தானத்திலிருந்து நான்கு பேர்கள் எழுந்தருளப் பண்ணி வெளியே எழுந்தருளச் செய்வர். வெளியே வந்ததும் எட்டு பேர் இவரைத் தாங்கி வருவர். வாஹனமண்டபத்தில் 16 பேர் தேவை. வாஹனத்தில் எம்பெருமான் எழுந்தருளி ஏகாந்தம் ஸமர்ப்பித்தானதும் புறப்பாடு கண்டருளும் போது 32 பேர்கள் தேவை. இதே நிலை திரும்பகாலிலும். இது இன்றும் நடைபெறும் நிகழ்ச்சி.

ஸ்ரீமத்ராமாயணத்தில் இளைய பெருமாளைப் பற்றிக் கூறும் போது-முதல் போரில் ராவணன் அவரை ப்ரஹ்மதேவன் தனக்குக் கொடுத்திருந்த சக்தியினால்-வேலால் வீழ்த்தினான் பிறகு அவரைத் தம் இருப்பிடத்துக்கு கொண்டு செல்ல முயன்றான். அவனால் அவரை அசக்கவே முடியவில்லை. அதே நேரத்தில் ஆஞ்சநேயர் அனாயசமாக அவரை ஸ்ரீராமனிடம் கொண்டு சேர்த்தார். இவை வால்மீகி பகவான் शत्रणाम् अप्रकम्प्यो ऽपि लघुतम् अगमत् क्पे: என்றருளினார். அதைப் போன்றது இங்கும், கருடன் திருமேனியைத் தொட்டு திருமஞ்சனாதிகள் செய்ய பாக்யம் பெற்ற

பட்டபாசார்யர்கள் மட்டிலுமே செல்லக்கூடிய கர்ப்பக் க்ருஹத்தில் நான்கே பேர் திருக்கையில் உள்ளடங்கியது தகுமே; வரவர இப்படி முடியாதானபடியால் அதிகம் பேர்கள் தேவை. அப்படிப்பட்ட பக்ஷிராஜனைக் குறித்து இந்த சதகம் ஏற்பட்டது.

இதை எழுதி உலகினருக்கு அளித்த மஹான் மிகவும் பாக்யவான், போற்றத்தகக்கவர், ஆசுகவி. ப்ராஸமும் கலந்தது இவரது கவிதைகளில் நக்ஷத்ரேஷ்டியில் आश्लेषा नक्षत्रத்துக்கு ஸர்ப்பங்ளை தேவதையாகக் காட்டியது வேதம். அப்படிப்பட்ட பாம்புகளுக்கு எப்போதுமே கருடனை எண்ணினாலே பயம். कद्रू- கத்ரூ என்பவன் ஸர்ப்பங்களின் தாய் सुपर्णा-विनता-வினதை கருடனின் தாய். இருவரும் காச்யபரையே மணந்தனர். ஸுபர்ணா என்பவள் அழகில் சிறந்தவளாய் இருக்கவே அவளிடம் அதிகம் அன்பைக் காட்டினார் காச்யபர். இது கத்ரூவுக்கு வருத்தமளித்தது. விநதையிடம் காச்யபரின் அன்பு குறைய வழி தேடினாள். இருவருமே ஸோதரிகளானபடியால் - ஒரு நாள் உச்சைரவஸ் என்ற தேவலோகத்து வெள்ளைக் குதிரை மேய்ந்துக் கொண்டிருப்பதைக் காட்டி விநதைதயிடம் கத்ரூ கேட்டாள். இந்த குதிரை உடல் முழுவதும் வெண்மையா ? அல்லது எங்காவது வேறு நிறம் உண்டா ?'' என்று. ''உடல் முழுவதும் வெண்மையே'' என்றாள் விநதை. தமது பிள்ளைகளான பாம்புகளைக் கூப்பிட்டு ''உச்சைவரஸின் வாலில் அது மறையும்படி சுற்றிக் கொண்டிருங்கள்'' என்று முன்னமேயே ஏற்பாடு செய்திருந்தாள் கத்ரூ. ''கிடையாது, வால் பகுதியில் கருப்பு'' என்றாள் கத்ரூ. விளையாட்டாக ஆரம்பித்தது-பந்தகயம் கட்டுவதில் முடிந்தது! குதிரை திரும்பும்போது தொலைவிலிருந்து கண்ட இவர்கள் கண்களுக்கு வால் பகுதி கருப்பாய் தென்படவே- ஒப்பந்தப்படி தோற்றவர் வென்றவருக்கு அடிமையாய் இருந்து அவளைத் தூக்கிச் செல்ல வேண்டும் - என்ற ஏற்பாடாயிற்று.

விநதைக்கு கருடனும், அவரது தமையனான அருணனும் ஒரு முட்டை வடிவில் பிறந்தனர். இது என்ன விசித்ரமாயிருக்கிறதே! இந்த முட்டையில் என்ன உள்ளது என்று காண்போம் என்று எண்ணிய விநதை ஒரு முட்டையை உடைக்க, அதிலிருந்து அருணன் தோன்றினார். முட்டை அடைகாத்து முடிவதற்குள் உடைப்பட்டபடியால் அவர் இடுப்புவரையே வளர்ந்திருந்தார், அவர் தமது தாயிடம், "அம்மா! அடுத்த முட்டைளையாவது அதுவாகவே உடையும் வரையும் பாதுகாத்துவா, உடைத்துவிடாதே" என்றார். அப்படியே செய்யவே கருடன் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் தோன்றினார்.

கருடன் தமது பால்யத்திலேயே தாயிடம் "ஏன் இப்படி கத்ரூவை சுமந்து வருகிறாய்" என்று வினவ, அவள் தமது கதை முழுவதையும் கூறினாள். "இந்த அடிமைத் தனத்துக்கு எப்போது விடிவு?" எனக் கருடன் கேட்க, வினதை கூறினாள் "தேவருலகத்திலுள்ள அமுதத்தை கொணர்ந்து எனக்கும் (கத்ரூவுக்கும்) என் பிள்ளைகளான காத்ரவேயர்கள் - ஸர்ப்பங்கள்-அவர்களுக்குக் கொடுத்தால் உன்னை இந்த அடிமை நிலையிலிருந்து விடுவிக்கிறேன்" என்று கத்ரூ கூறியதாய் சொன்னாள். கருடன் அப்படியே செய்தார். தாயின் பந்தனத்தை மீட்டார்.

கருடனுக்கு ருத்ரா-ஸுகீர்த்தி என இருவர் மனைவிகள். இவர்களைத் தழுவுவதைவிட பகவானைத் தாங்குவதை இநத் பக்ஷிராஜன் சிறந்ததாக எண்ணுகிறார். கருடனும் - ஸ்ரீ மகாவிஷ்ணுவும் ஒருவருக்கு ஒருவர் தாங்கி;க கொள்வதாய் வரம் பெற்றார்களாம். கருடன் பகவானைத் தாங்குவது யாவரும் அறிந்ததே. கருடனின் கழுத்தில் காலைவிட்டுத் தமது துடைகளின் வலுவால் கருடனை இடுக்கி பகவான் தாங்கிவருவதாய் ஆதிபர்வத்தில் காணப்படுகிறது. மேலெழுந்தவாரியாய் பார்த்தால்

கருடன் பகவானைத் தூக்குவது தெரியும். உற்று நோக்கினால் கருடனை தமது தொடைகளால் பகவான் இறுக்கிப்பிடித்துத் தாங்கி வருவது தெரியும். இதை ஆச்சார்யர் "विष्णो सम्प्रीयमाणे वरविनिमयतो विश्रवविरव्यात कीर्ति" என்று காட்டியருளினார். அதை இங்கு ஆச்லேஷதாராவதாரான் என்ற 7-வது சுலோகத்தில் கூறுகிறார்.

இந்த துதியை அருளியவரின் கோத்ரத்தில் ப்ரவரர்களான மஹர்ஷிகளில் ஔர்வர் என்பவர். ஒருவர் அவரைஸயம் பற்றி தெரிவிக்கலாம்படியான நிலையில் சொற்கள் அமைந்திருக்கின்றன. ஆறு அம்சங்களாய் பிரிந்திருக்கும் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் ஒரு அம்சம் முழுவதும் ஔர்வர் அருளிச் செய்த ஸ்ம்ருதி அப்படியே அமைந்துள்ளது. ஸகரனுக்கு ஔர்வர் உபதேசித்த க்ரமம் இது என்று ஏற்படுகிறது, நித்ய-நைமித்திக கர்மங்களையும் ச்ராத்தாதிகளிலும் நாம் உபயோகிக்கும் அநுஷ்டுப் சுலோகங்கள் அவ்வளவும் இதில் உள்ளன यज्ञेश्वरो हव्य समस्तक्व्य - இத்யாதிகள் இங்குள்ளவைகளே. ஆபஸ்தம்பர் இந்த ஔர்வஸ்ம்ருதியை பல இடங்களில் அப்படியே எடுத்துள்ளார். ஆகவே அதுவும் இங்கு திருவுள்ளம் என அடியேன் எண்ணம்.

| | |
|---|---|
| आश्रलेषातारदेवान् | ஆயில்யம் என்ற நக்ஷத்ரத்துக்கு உரிய தேவர்களான (पूर्वदेवர்களான)வர்களை |
| हृदि भयभरितान् | மனதில் பயத்துடன் நிரம்பினவர்களாக |
| सन्ततं कुर्वत: | எப்போதும் செய்பவரும் |
| आदिमूलस्य पुंस: | உலகிற்கெல்லாம் ஆதிகாரணமான பரமபுரஷனான புருஷோத்தமனின் |
| आत्मदारद्वयकलितात् | தமது இரு மனையாளான - தேவிமார்களிருவரின் கைகளால் |
| आश्रलेषात् | தழுவுவதாலும் |

| | |
|---|---|
| ऊरुजातात् | பரமபுருஷன்/தொடையில் இருந்து தோன்றிய ஜந்தவான ஊர்வசியின் அணைப்பைவிட |
| अधिगतम | அடையப்பட்ட பெருமை பொருந்திய ஆனந்த |
| हितानन्दयोगस्य | சேர்க்கையை உடைய |
| वीन्दो: | பக்ஷிகளுக்குத் தலைவனான கருடனின் |
| आश्रलषं | தழுவுதலே |
| समधिगता | அடைந்த |
| मम बुद्धि: | அடியேனது புத்தியானது |
| मोहं प्रयाति | மோஹத்தை அடைகிறது |
| अंहो! | இது பெரிய வியப்பு ! |

என்று சுலோகத்தின் கருத்து.

ஊருஜாதர் என்பதால் ஔர்வர் என்ற மஹர்ஷி (இவர் ஸ்ரீவத்ஸ கோத்ரத்து ப்ரபவரர்களில் ஒரவர்) பற்றியும் சற்று சிரமப்பட்டு பொருள் கொள்ளலாம். அது க்லிஷ்ட கல்பனையாயினும் ச்லேஷத்தில் தகும்.

(8) क्मलसिथतदेवतागृहे क्मलश्रीहरिनेत्रवाहनम्।
क्मलं क्लयन्तमाश्रये क्मलश्रीक्रसूत त्ं सोदरम्।।

தாமரைப் பூவில் எழுந்தருளியிருக்கும் பரதேவதையான பெரிய பிராட்டியாருக்கு உறைவிடமான நாய்ச்சியார்கோவிலில் तस्य यथा क्प्यासं पुण्डरीकं एवम् रक्षिणी என்று ச்ருதியில் காட்டியபடி புண்டரீகாக்ஷனான எம்பெருமானை திருவுள்ளப்பட்ட இடத்துக்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு செல்லும் திருத்தேர் போன்ற வாஹனமானவர் கருடன். எல்லோருக்கும் கமலாந்தமான ஐச்வர்யத்தை அருள்பவர் இந்த கருடன். தாமரையை மலரும்படிச் செய்யும் சூர்யனின் தேரோட்டியான அருணனுக்கு சோதரர். இவரை அடியேன் ஆச்ரயிக்கிறேன்.

कमल स्थित देवता = पद्मालये पद्मदलायताक्षि என்ற ச்ருதி இங்கு திருவுள்ளம்.

कमल श्रीहरिनेत्र वाहनम् – प्रायो देवस्स इत्थं हरि गरुडभिदाकल्पितारोहवाह என்ற ஆசார்யர் ஸ்ரீஸூக்தியை அநுஸந்திப்பது.

कमलम्–कम्–अलम् என்றும் பிரிக்கலாம், எவனோ ஒரவனையும் ''போதும் போதும்'' என்று கூறும்படி இந்த கருடன் செய்வார். ஏன் ? தாமரையிலுள்ள பிராட்டியோடு கூடிய ஸ்ரீஹரியை வஹிப்பவர் அன்றோ ? இங்கு

तेषां भूमे: धनपतिगृहात् अम्बरात् अम्बुधेर्वा
धारा तिर्यान्त्यधिकम् अधिकं वाञ्छितानां वसूनाम्।।

என்று ஸ்ரீஸ்துதியில் ஆசார்யர் அருளியதை அநுஸந்திப்பது. ஸாமான்யமாக உலகில் எவ்வளவு பணக்காரருக்கும் போதும் என்ற எண்ணம் வராது. இங்கு வைராக்ய நிதியும் ஆசார்யாருமான ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஒரு முறைக்கு இரு முறை அதிகம் அதிகம் என்றருள்கிறார் !

कमलश्रीकरसूतसोदरम् - தாமரை विकसति हि पतङ्गस्योदये पुण्डरीकम् என்றபடி ஸூர்யோதமானால் மலரும். அந்த ஸூர்யனுக்குத் தேரோட்டி வினதையின் ரிய குமாரனான அருணன். இவனை ஸோதரவாத்ஸல்யத்தால் தமது தேரைச் செலுத்தும் பாகனாக ஸூர்யன் கொண்டார் - என்பது மஹாபாரதத்தில் கதை. இதை எல்லாம் அடியோங்களின் குல கூடஸ்த்தரான कौशिककुल तिलकम् श्रीभाष्यम्–श्रीनिवासाचार्यர் என்ற மஹான் - (ஏறத்தாழ 6 வருஷங்களுக்கு முன்பு எழுந்தருளியிருந்தவர்) எழுதிய கருட பஞ்சாசத் ஸம்ஸ்க்ருத விஸ்த்ருத வ்யாக்யானத்தில் கண்டு கொள்வது, नैवोदता, नास्तमेता एकल इव मध्येस्थाता என்று ஸூர்யனை ச்ருதி காட்டியதே !

क्लयन्तम् என்ற வர்த்தமான நிர்சேத்தால் இந்த ஸுர்யன் ஒச்சல் ஒழிவு இல்லாமல் எப்போதும் எழுந்தருளியிருப்பதும் காட்டப்பட்டது. नाहो न रात्रि: என்று ஸுர்யனும் இல்லாத காலம் மஹாப்ரளயகாலமே. अवान्तरप्रलयादिகளில் ஸூர்யாதிகள் உண்டு.

9. पद्मं कर्णे वहति स भवान्, पद्मनाभं तथांऽसे
पद्मं कर्णे पतगनृपते! तं महान्तं परास्मिन्।
पद्मागारस्त्वं इति यदत: स्वानुरुपे पवित्रो
पद्मागारे ननु पुरवरे सादरो वर्तसेऽस्मिन्।।

பாம்புகளுக்கும் கருடனுக்கும் பகை மூண்டு - பாம்புகளைப் பூண்டோடு அழிக்க கருடன் முற்பட்டார். இதைக் கண்ட ஸர்ப்பராஜன்-கருடனுடன் ஒரு ஒப்பந்தம்செய்துக் கொண்டாராம் - என்ன என்று "நான் தினமும் ஓர் பாம்பை உமக்கு ஆஹாரமாய் அனுப்பி வைக்கிறேன். வம்சம் முழுவதையும் அழிக்காதீர்" என்று, கருடனும் அதை ஒப்பினாராம். இதை ஆசார்யர் இப்படிக் காட்டியருளினார் ! -

"पायान्न: प्रत्यहं ते क्मपि विषधरं प्रेषयामीति भीते
सन्धित्सौ सर्पराजे सकरुणम् अरुणानान्तरं धाम दिन्यम्"

என்று இப்போது உள்ள ஸர்ப்பங்கள் யாவும் கருடனுக்கு ஆபரணமாக அமைந்த எட்டு பாம்புகளின் ஸந்ததியே. கருடனின் இடது திருக்கையில் சேஷன் என்ற பாம்பும், குளிகன் என்றதை வலது திருக்கையில் கடகமாகவும், வாஸுகியை பூணூலாகவும், கக்ஷகனை அரைநாணாகவும், கார்கோடகனை ஹாரமாகவும், பத்மன் என்பவரை வலக்காதிலும், மகாபத்மனை இடக்காதிலும், சிரசில்சங்கபாலன் என்பவரையிம் என்று எட்டு பாம்புகளைத் தாங்கி வருகிறார் கருடன். மீந்த இந்த பாம்புகளே தமது ஸந்ததியுடன் விளங்குகிறார்கள். இன்று உலகிலுள்ள அத்தனை பாம்புகளும் இந்த எட்டு வகைப் பாம்புகளின் ஸந்ததியே.

தோளில் பத்மநாபனை இவர் தாங்கி வருகிறார். இதற்குத் தக்கபடி पद्मागार: என்னப்பட்ட இந்த பரிசுத்தமான திவ்யதேசத்தில் பெருத்த ஆதரவுடன் தேவரீர் வஸிக்கிறீர் என்று பொருள்.

இப்படி ஸமப்ரதாயார்த்தங்களைக் குறித்து ரஸமாய் துதி ரூபமாய் அருளிய இந்த ஸ்ரீநிதி ஸ்வாமி ப்ராஸமாகவும், விரைவாகவும், ஸாரமாகவும், ப்ரஸித்தமான சொற்களைக் கொண்டும், எளிய முறையிலும் துதிகளை அருளி லோகோபகாரம் பண்ணியருளிய மஹான், அவர் குமாரரான ஸ்ரீ உ.வே. கருணாகராசார்யரும் पितुः शतगुणं पुत्रः என்றக் க்ரமத்தில் எழுந்தருளியிருக்கிறார். இந்த சுவாமியின் ஸப்ததி மஹோத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெறுகிறது என்று அறிந்து மகிழ்கின்றேன். இவர் மேன்மேலும் ஸம்ப்ரதாயத் தொண்டுகளைச் செய்துக் கொண்டு சதமானோத்ஸவாதிகளையிம் கண்டருள - ஸ்ரீ தேவாதி ராஜனைப் ப்ரார்த்திக்கிறேன்.



# ஸ்லோகங்கள் 10 முதல் 12 வரை

ஸ்ரீமதுபயவே ராஷ்ட்ரபதிஸம்மானித வித்வான்

## லக்ஷ்மீ தாத்தாச்சார்ய ஸ்வாமி

***10. கமடம் கரடிம் ச பக்ஷயந்***
***கமலம் ஹந்த ஸதாம் விவர்தயந்|***
***கமலாலயபூஷணம் ஸ மே***
***கமலாகாந்ததர: கரோது சம்||***

***கமடம் கரடிம் ச பக்ஷயந்*** - ஆமையையும் யானையையும் உண்டு.

கருட பஞ்சாசத்தின் 18-வது ச்லோகத்தில் கருடன் ஆமையையும் யானையையும் உண்ட சரிதத்தை ஸ்வாமி தேசிகன் குறிப்பிட்டுள்ளார்.

ஸாந்த்ரக்ரோதாநுபந்தாத் ஸரஸி நகமுகே பாதபே கண்டசைலே துண்டாக்ரே கண்டரந்த்ரே ததநு ச ஜடரே நிர்விசேஷம் யுயுத்ஸூ|

அவ்யாதஸ்மாத் அபவ்யாதவிதித நகர ச்ரேணிதம்ஷ்ட்ராபிகாதௌ ஜீவக்ராஹம் க்ருஹீத்வா கமடகரடிநௌ பக்ஷயந் பக்ஷிமல்ல:||

விபாவஸூ, ஸூப்ரதீகள் என்ற ரிஷிகள் இருவரும் சகோதரர்கள். சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட மனக்கசப்பால் ஒருவரை ஒருவர் ஆமையாகவும் யானையாகவும் ஆகும்படி சபித்துக் கொண்டார்கள். அடுத்தப் பிறவியிலும் அவர்களின் சண்டை தொடர்ந்தது. ஏரிக்கரையில் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டிருந்த அந்த ஆமையையும் யானையையும் தன் நகங்களால் பிடித்து, மரத்தின் மேல் கொண்டு சென்று, பின் ஒரு பாறைக்கு மேலே கொண்டுபோய் வைத்து, தன் அலகால் கொத்தித்

தொண்டைக்குள் விழுங்கி, வயிற்றுக்குள் கொண்டு சேர்த்தார். ஆனால் கருடனின் பற்களாலும் நகங்களாலும் தாங்கள் காயப்பட்டதை அறியாமல் அவர்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் யுத்தம் செய்து கொண்டிருந்தார்களாம். அந்த ஆமையையும் யானையையும் உண்டு,

**கமலம் ஹந்த ஸதாம் விவர்தயந்** - இங்கே கமலம் என்பதை கம் + அலம் என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும், கம் என்றால் ஆனந்தம், கமலம் என்றால் போதுமான அளவு ஆனந்தம் என்று பொருள். ஸத்துக்கள் என்பவர்கள் வைதிக வழியில் எம்பெருமானை அறிந்து அவனை ஆராதிப்பவர்கள். தைத்திரீய உபநிஷத் ஆனந்தவல்லி,

அஸந்நேவ ஸ பவதி அஸத்ப்ரஹ்மேதி வேத சேத்

அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோ விதுரிதி

என்கிறது. ப்ரஹ்மத்தை இருப்பதாக ஏற்பதால் மட்டும் ஒருவரை ஸத் என்று சொல்லி விட முடியாது. ஸத்யம், ஞானம், அனந்தம் ப்ரஹ்ம என வேதம் காட்டிய வழியில் ப்ரஹ்மத்தை ஏற்பவர்களே ஸத்துக்கள் ஆவர். அவ்வாறு ப்ரஹ்மத்தை ஏற்காதவர்கள் அஸத்துக்கள். வைதிகமான மதத்தின்படி எம்பெருமானை ஏற்று, அறிந்து கொண்டு, அவனை வழிபடுபவர்கள் வேத ஸ்வரூபியான கருடனுக்குப் பிரியமானவர்கள் அன்றோ ? எனவே தான் அந்த ஸத்துக்களுக்குப் போதுமான ஆனந்தத்தைப் பக்ஷிராஜன் வளர்த்துக் கொடுக்கிறான்.

**கமலாலயபூஷணம்** - நாச்சியார் கோவில் திவ்யதேசத்துக்கே ஓர் அணிகலனாக விளங்கும் கருடன்,

**ஸ மே கமலாகாந்ததர: கரோது சம்** - எம்பெருமானுக்கு வாகனமாக விளங்கும் கருடாழ்வார் அடியேனுக்கு மங்களத்தை உண்டாக்கட்டும்.

**யானையையும் ஆமையையும் உண்டு, எம்பெருமானை வைதிக வழியில் ஆராதிக்கும் ஸத்துக்களுக்கு வேண்டிய ஆனந்தத்தை அருளுபவரும், நாச்சியார்கோவிலுக்கே அணிகலனாக விளங்குபவரும், எம்பெருமானின் வாகனமுமான கருடன் அடியேனுக்கு மங்கலத்தை உண்டாக்கட்டும்.**

**11. ஸூரஸம் ஸரஸிஜாலயவத்யா**
**ஸூரஸம் ச தத ஏவ ஜகத்யாம்|**
**ஸூரஸந்நயநமத்ர வஹந்தம்**
**ஸூரஸாரதிஸஹோதரம் பஜே||**

***ஸூரஸம் ஸரஸிஜாலயவத்யா*** - *தாமரையாளான வஞ்ஜுளவல்லி நாச்சியாரை ஏந்தியிருப்பதால் ஏற்றம் பெற்ற சிறந்த திருமார்பை உடைய நறையூர் நம்பி.*

*திகழ்கின்ற திருமார்பில், திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமால் என்று திருவாய்மொழியில் நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். ஈட்டில் இப்பாசுரத்துக்கு வ்யாக்யானமிடும் நம்பிள்ளை, வெறும்புறத்திலே விளங்கா நின்றுள்ள திருமார்பிலே எழுந்தருளியிருக்கிற பெரிய பிராட்டியாரோட்டைச் சேர்த்தியழகாலும் விளங்கா நின்றுள்ள ச்ரியப்பதியானவன் என்றருளியுள்ளார். அதாவது, எம்பெருமானின் திருமார்பு ஆபரணங்களே இல்லாவிட்டாலும், சிறப்பாகவே விளங்குமெனினும், அந்தத் திருமார்புக்கு அணிகலனாகப் பிராட்டி எழுந்தருளி அழகு சேர்ப்பதால் தான் அந்தத் திருமார்பு தனி ஏற்றத்தைப் பெறுகிறது என்று அருளிச் செய்கிறார்.*

***ஸூரஸம் ச தத ஏவ ஜகத்யாம்*** - *ஸூரஸம் என்ற பதத்தை ஸு + உ + ரஸம் என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும். பிராட்டியின் நல்ல ரசத்தோடு கூடியவன் என்று பொருள். உ என்ற*

சொல் பிராட்டியைக் குறிக்கும். அகார - உகார - மகார வடிவமான ப்ரணவத்தில் அகாரம் பரமாத்மாவையும், மகாரம் ஜீவாத்மாவையும், உகாரம் பிராட்டியையும் குறிக்கின்றன. (உகாரம் ஜீவாத்மா எம்பெருமானுக்கே சேஷபூதன் என்பதைக் குறிக்கிறது என்ற பொருளும் நம் பூர்வாசார்யர்கள் காட்டியுள்ளார்கள்). ராமபிரான், சீதையோடும் லக்ஷ்மணனோடும் தண்டகாரண்யத்தினுள்ளே நுழைந்தபோது,

அக்ரத: ப்ரயயௌ ராம ஸீதா மத்யே ஸுமத்யமா|
ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணி: லக்ஷ்மணோ ஆஜுஹாவ ஹ||

என்று வால்மீகி பகவான் குறிப்பிடுகிறார். அகார வாச்யனான ராமன் (பரமாத்மா) முன்னே செல்ல, மகார வாச்யனான லக்ஷ்மணன் (ஜீவாத்மா) பின்னே செல்ல, இடையில் உகார வாச்யையான பிராட்டி சென்றாள். அதைக் காணும்போது ப்ரணவமே நடந்து செல்வது போல இருந்ததாம். அந்த உகாரத்தால் காட்டப்படும் பிராட்டியோடு கூடியிருப்பதால், உலகத்திலேயே நல்ல ரஸத்தை உடையவனாக எம்பெருமான் விளங்குகிறான்.

**ஸூரஸந்நயநமத்ர வஹந்தம்** - திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் அங்கண் இரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்கு என்று ஆண்டாள் ப்ரார்த்தித்தபடி, ஸூர எனப்படும் ஸூர்யனையும், ஸத் எனப்படும் சந்த்ரனையும் (ஸத் என்ற சொல் நக்ஷத்ரத்தைக் குறிக்கும். இங்கே நக்ஷத்ரங்களின் தலைவனாகக் கருதப்படும் சந்த்ரனைக் குறிக்கிறது.) தன் கண்களாக உடைய எம்பெருமானுக்கு வாகனமாக இருந்து அவனைத் தாங்குகிறார். கண்ணன் அர்ஜுனனுக்கு விச்வரூபத்தைக் காட்டியபோது, ஸூர்ய - சந்த்ரர்கள் எம்பெருமானின் இருகண்களாக இருந்தார்களாம். அதனால் தான் அவனை ஸ்தோத்ரம் செய்த அர்ஜுனன்,

அநாதிமத்யாந்தமநந்தவீர்யம்
அநந்தபாஹும் **சசிஸூர்யநேத்ரம்**|
பச்யாமி த்வாம் தீப்தஹுதாசவக்த்ரம்
ஸ்வதேஜஸா விச்வமிதம் தபந்தம்||

என்று துதித்தான். இங்கே சசிஸூர்யநேத்ரம் என்ற பதத்துக்கு எம்பெருமானார் கீதா பாஷ்யத்தில்,

“சசிவத் ஸூர்யவத் ச ப்ரஸாத ப்ரதாப யுக்த ஸர்வநேத்ரம். தேவாதீந் அநுகூலாந் நமஸ்காராதி குர்வாந் ப்ரதிப்ரஸாதௌ, தத்விபரீதாந் அஸுரராக்ஷஸாதீந் ப்திப்ரதாபௌ”

என்று அருளிச் செய்துள்ளார். அநுகூலர்களான அடியார்களையும் தேவர்கள் போன்ற நல்ல சக்திகளையும் சந்திரன் போன்ற திருக்கண்களால் எம்பெருமான் குளிர்ந்து கடாக்ஷிக்கிறான் என்றும், எதிரம்பு கோக்கும் அசுரரைச் சூரியன் போன்ற கண்ணால் சுட்டெரிக்கிறான் என்றும் பாஷ்யமிட்டுள்ளார்.

ஒரு சிங்கம் குட்டிக்குப் பாலூட்டிக் கொண்டே மதயானையிடம் யுத்தம் செய்வது போல, நரசிங்கப் பெருமான் ப்ரஹ்லாதனுக்கு அநுக்ரஹம் செய்துகொண்டே ஹிரண்யகசிபுவை ஸம்ஹரித்தான் அல்லவா ? இப்படி நிக்ரஹம் அநுக்ரஹம் என்னும் இரண்டு செயல்களை எம்பெருமான் செய்வதை சூர்ய-சந்திர வடிவிலுள்ள அவனது திருக்கண்கள் காட்டுகின்றன. நரகாஸுரவதம் போன்ற நிக்ரஹமோ, அல்லது கஜேந்த்ர ரக்ஷணம் போன்ற அநுக்ரஹமோ, இவற்றைக் கருட வாஹனத்தில் சென்று தான் எம்பெருமான் நிறைவேற்றுகிறான் என்பதை சூரிய சந்திரர்களைத் திருக்கண்களாக உடைய எம்பெருமானைக் கருடன் வாஹனமாக இருந்து தாங்குகிறான் என்ற இந்த வரியின் மூலம் ஸ்வாமி சூசகமாகக் காட்டியுள்ளார்.

***ஸூரஸாரதிஸஹோதரம் பஜே*** – *ஸூர்யனின் ஸாரதியான அருணனின் ஸஹோதரனான கருடனைப் போற்றுகிறேன்.*

*அகலகில்லேன் இறையும் என்று உறையும் பிராட்டியால் ஏற்றம் பெற்ற திருமார்பை உடையவனும், பிராட்டியின் சம்பந்தத்தால் உலகிலேயே நல்ல ரசத்தை உடையவனாக விளங்குபவனும், சூரிய சந்திரர்களைத் திருக்கண்களாக உடையவனுமான எம்பெருமானை வாகனமாக இருந்து தாங்கும் அருணனின் சகோதரனான கருடனை வணங்குகிறேன்.*

***12. பக்ஷீந்த்ர ரக்ஷேதி வதந்தி லோகா:***
***பக்ஷீந்த்ர பச்யேதி வதந்தி கேசித்|***
***பக்ஷீந்த்ரலக்ஷீக்ருதபக்திபாவ:***
***பக்ஷீக்ருதோ ரக்ஷஸி பவ்யசப்த:||***

***பக்ஷீந்த்ர ரக்ஷேதி வதந்தி லோகா:*** – *உலகில் பல பக்தர்கள், "பக்ஷிராஜா ! எங்களை காப்பாற்று !" என்று கருடனைப் பிரார்த்திக்கிறார்கள்.*

***பக்ஷீந்த்ர பச்யேதி வதந்தி கேசித்*** – *வேறு சிலரோ, "பக்ஷிராஜா ! எங்களை நீ கண் திறந்து கடாக்ஷிக்க வேண்டும் !" என்று வேண்டுகிறார்கள்.*

***பக்ஷீந்த்ரலக்ஷீக்ருதபக்திபாவ:*** – *அத்தகைய அடியார்களின் நல்ல பக்திக்கு இலக்காக விளங்கும் பறவைகளின் அரசனான கருடன்,*

***பக்ஷீக்ருதோ ரக்ஷஸி பவ்யசப்த:*** – *தன்னுடைய மங்களகரமான நல்ல ஒலிகளாலே அவர்களுக்கு அனைத்து மங்களங்களையும் அருளுகிறான். அல்லது, பக்ஷிராஜா என்று நாம் அவரை அழைக்கிறோமே, அந்த மங்களமான ஒலியான அவரது திருநாமமே நமக்கு அனைத்து நன்மைகளையும் வழங்கிவிடும் என்றும் கொள்ளலாம்.*

நம் ஸ்வாமி தம்முடைய வஸுமதீ சதகம் என்னும் நூலில்,

மதுரா தரணி கிரஸ்தே மதுஜிதபி ச்ரோதுமுத்ஸுகோ நிரதாம்|
ச்ரவணே ஜநிமத ஸுரபதநகரீ நாதத்வமப்யாப||

என்றொரு ச்லோகம் அருளியுள்ளார். அதன் பொருள், பூமிதேவியின் பேச்சு தேனைப் போல - மதுவைப் போல, மதுரமாக உள்ளது. அது மதுவை வென்ற எம்பெருமானையே ஈர்த்து விட்டது. அவளுடைய அந்த மதுரமான பேச்சை ச்ரவணம் செய்வதற்காக எம்பெருமான் ச்ரவண நக்ஷத்ரத்தில் வந்து அவதரித்தான். ஆகாசம் ஒலிகளை நன்கு ஊடுசெல்ல விடுவதால், ஆகாச நகரமான திருவிண்ணகரில் வந்து அவதரித்தான்.

அதுபோலவே ‘‘வேதே யோ விஹ்ருதிம் ததங்கமதவா தத்தே ஸ தே ப்ரீதயே’’ என்ற வில்லூர் ஸ்வாமியின் ச்லோகத்துக்கேற்ப, வேத ஸ்வரூபியான கருடனின் மங்கள ஒலிகளைக் கேட்பதற்காகவே நறையூரில் வந்து நம்பி எழுந்தருளியுள்ளான் போலும். அத்தகைய கருடனின் நல்ல ஒலிகள் நம்மைக் காக்கின்றன. நமக்கு அனைத்து மங்களங்களையும் அருளுகின்றன.

‘‘பக்ஷிராஜா ! எங்களைக் காப்பாற்றுவாய் ! பக்ஷிராஜா ! எங்களை ரக்ஷிப்பாய் !’’ என்றெல்லாம் ப்ரார்த்திக்கும் அடியார்களின் பக்திக்கு இலக்கான பக்ஷிராஜர், தம்முடைய மங்கள ஒலிகளால் அந்த அடியார்களுக்கு அனைத்து மங்களங்களையும் அருளுகிறார்.



# சுலோகங்கள் 13 முதல் 15 வரை

ஸ்ரீமதுபயவே மாடபூசி

**Dr.சிலுக்கூர் ஸௌந்தரராஜாசார்ய ஸ்வாமி,**

சிலுக்கூர்

**ஸ்ரீ** கருடாழ்வான் விஷயமாக அடியேன் மாமனாரான ஸ்ரீ ஸ்ரீநிதிஸ்வாமி ஸாதித்த க்ஷேமகாரி சதகத்தில் பகவதநுக்ரஹத்தினால் அடியேனுக்கு இரண்டாவது விஹாரமான ப்ராஸ விஹாரத்திலிருந்து முதல் மூன்று ச்லோகங்களை பக்தியுடன் அநுபவித்து அதன் பொருளை இங்கு விஞ்ஞாபிக்க வாய்ப்பு கிடைத்தது. அதன்படி ஸமர்ப்பிக்க ப்ரயத்தனம் செய்கிறேன்.

ஸ்ரீ ஸ்ரீநிதிஸ்வாமி ஆசுகவியார்வபௌமர். ஸகல காவ்யாலங்கார சாஸ்திரத்திலும் வல்லவர். இவரை மஹாகவி என்று சான்றோர்கள் போற்றினார்கள். இவருடைய க்ரந்தப்ரசாரத்தை பரிச்ரமப்பட்டு நன்கு செய்து வருகிறார். அடியேன் மைத்துனரும் அடியேன் தர்மபத்தினியின் தம்பியுமான இப்பொழுது ஸப்ததி காணும் ஆயுஷ்மான் கருணாகராச்சாரியன்.

ஸ்ரீநிதிஸ்வாமிக்கு எல்லா மஹாகவிகளைப் போல் ப்ராஸம் மிக இஷ்டம். இவர் ச்லோகங்களில் ப்ராஸாலங்காரம் மிகையாக வரும். இந்த ஸ்தோத்திரத்திலும் முதல் விஹாரம் மஹாப்ராஸவிஹாரம். அதில் ப்ரதிச்லோகத்திலும் ஒன்றுக்குமேல் ப்ராஸங்கள் அமைந்துள்ளன. இந்த இரண்டாம் விஹாரத்தில் ப்ரதி ச்லோகத்திலும் ஒரு ப்ராஸம் அமைந்துள்ளது. இதையும் சேர்த்து அனுபவிப்போம். இந்த விஹாரத்தில் முதல் ச்லோகத்தில் க்ஷ எனும் அக்ஷரம் எல்லா பாதத்திலும் இரண்டாம் அக்ஷரமாக அமைந்திருப்பது விசேஷம். அதை கீழ்க்கண்டவாறு ஸேவிப்போம்.

15. रक्षसस्तनुभवेन पातितं रक्षतस्तव तदा रघूद्वहम् ।
पक्षपाताविभवोऽस्तु तादशः स क्षणाय पतगेन्द्र! मे सदा ।।

हे पतगेन्द्र - *ஓ கருட பகவானே,* रक्षसस्तनुभवेन - *ராக்ஷஸனாகிற ராவணனின் மைந்தனான இந்திரஜித்தினால்* पातितं - *விழும்படி செய்த நாகாஸ்திரத்தினால் கட்டுண்ட இளைய பெருமாள் படுத்த நிலையில் இருந்தார்.* रघूद्वहम् - *ரகு குலத்தில் பிறந்த லக்ஷ்மணரை* तदा - *அப்பொழுது* रक्षतः - *ரக்ஷிப்பதர்க்கு* तव - *உன்னுடைய* पक्षपातविभवः - *இரெக்கைகளின் வீசல் ஆகிய லீலை ஏற்பட்டது.* तादृशः - *அது போன்ற லீலை* मे क्षणाय - *என் பாபங்கள் போய் ஸந்தோஷம் வருவதற்கு* सदा अस्तु - *எப்பொழுதும் இருக்கட்டும். இதில் மஹாபக்தரான கவி தம்முள்ளமுருக கருட பகவானை தம்மை ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுவிக்கும்படி ப்ரார்த்தனை செய்கிறார். அதன் பொருள் கீழ் வரும் விதம் அமைந்துள்ளது. அடியேன் (ஜீவாத்மா) அடியேனுடைய மனது ஆகிற பத்து தலை இராவணனின் இடத்திலிருந்து உண்டான புத்தி எனும் இந்திரஜித்தின் நாகபாசத்தால் கட்டுண்ணப்பட்ட லக்ஷ்மணரைப் போல் கொடிய பாபங்களால் இந்த ஸம்ஸார பந்தத்தில் பிணைக்கப் பட்டுள்ளேன். கருடபகவானே ! உன் இறக்கை காற்றினால் என் பாப பாசத்தையும் லக்ஷ்மணரின் நாகபாசத்தை போல சிதறச் செய்.*

*இராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் வால்மீகி பகவான் தம்மனுபவத்தை கீழ்க்கண்டவாறு வருணித்துள்ளார்.*

महता पक्षवातेन सर्वद्वीपमहाद्रुमाः निपेतुर्भिन्नविटपाः समूला लवणाम्भसि।
अभवन्पन्नगास्त्रस्ताः भोगिनस्तत्रवासिनः शीघ्रं सर्वाणि यादांसि जग्मुश्च लवणार्णवम्।।

ततो मुहूर्ताद्गरुडं वैनतेयं महाबलम्। वानरा ददृशुस्सर्वे ज्वलन्तमिव पावकम्।।
तमागतमभिप्रेक्ष्य नागास्ते विप्रदुद्रवुः। यैस्तौ सत्पुरुषौ बद्धौ शरभूतैर्महाबलौ।।

ततःसुपर्णः काकुत्स्थौ दृष्ट्वाप्रत्यभिनन्दितः। विममर्श च पाणिभ्यां मुखे चन्द्रमसप्रभे।।
वैनतेयेन संस्पृष्टाः तयोः संरुरुहुर्व्रणाः। सुवर्णे च तनू स्निग्धे तयोराशु बभूवतुः।।

*கருடபகவான் தம் இறக்கையை வீசியவண்ணம் வந்தார். அவர் இறக்கை காற்றில் நாகபாசம் சிதறிற்று; நாகங்கள் பயந்து ஓடின. அதன் பிறகு கருடபகவான் ராமலக்ஷ்மணர்களை தடவி கொடுக்க விழுப்புண்கள் மறைந்தன. ஸ்வாமி தன் ச்லோகத்தில் இவ்வனுபவத்தை மனதில் கொண்டு* पक्षपातविभवः *என்கிற பதப்ரயோகம் செய்திருக்கிறார். இதை ஸம்ஸ்க்ருத இலக்கியவிதிபடி* पक्षवातविभवः *என்னும் கொள்ளலாம். இராமாயண ச்லோகத்திலிருக்கும் அதே பதப்ரயோகம் விசேஷமாக காண்க. இதிலிருந்து ஸ்வாமியின் இராமாயண அனுபவம் தெள்ளத் தெளிவாகிறது. இது ஸ்வாமி தேசிகன் தமது ரகுவீர கத்யத்தில்* गगनचर–कनकगिरिगरिमधर–निगममय–निजगरुगरुनिल–लवगलित–विषवदन–शरकदन *என்று அநுபவத்தரீதியில் உள்ளது. இதில்* गरुडगरुनिल–लवगलित–विषवदन *என்பதை* पक्षपातविभवः *என்கிற சொல்லால் ஸம்க்ஷிப்தப் படுத்தியுள்ளார் மஹாமேதாவியான ஸ்ரீநிதிஸ்வாமி.*

*இந்த ஸ்வாமி திருக்குமாரரும் அடியேன் மைத்துனனுமான இப்பொழுது ஸப்ததி காணும் ஆயுஷ்மான் வில்லூர் கருணாகராச்சார்யன் தன் உபந்யாஸம் ஒன்றில் கம்பர் தன் கம்பராமாயணத்தில் இந்த நாகபாசவிமோசந கட்டத்தை ம்ருதஸஞ்ஜீவிநியாக பயன்படுத்தி பாம்புக்கடியால் மாண்ட தீக்ஷிதரின் புதல்வனை மீட்டுக் கொடுத்தாகக் கூறினார். அந்த கட்டம் கீழ்க்கண்டவாறு.*

*என்று, இன்ன பன்னி அழிவான், எறிந்த*
*எரி சோதி கீற, இருள் போய்,*
*பொன் துன்னி அன்ன வெயில் வீசுகின்ற*

பொருள் கண்டு, நின்ற புகழோன்
நின்று உன்னி உன்னி, 'இவன் யாவன் ?'
என்று நினைகின்ற எல்லை, நிமிரச்
சென்று, உன்னும்முன்னர், உடன் ஆயினான், இவ்
உலகு ஏழும் மூடு சிறையான்.

வாசம் கலந்த மரை நாள நூலின்
வகை என்பது என்னை ? மழை என்று
ஆசங்கை கொண்ட கொடை மீளி அண்ணல்
சரராமன் வெண்ணெய் அணுகும்,
நேசம் கலந்த மறைவாணர், செஞ்சொல்
அறிவாளர்; என்று இம் முதலோர்
பாசம் கலந்த பசிபோல், அகன்ற-
பதகன் துரந்த உரகம்.

இந்த ச்லோகத்திற்கும் அந்த மகிமை உண்டு என்று அடியேனுக்கு தோன்றுகிறது. அடியேன் ஆராதித்து வரும் சிலுக்கூர் பாலாஜி ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸ்தோத்திரமாக ஸ்வாமி சிலுக்கூர் ஸ்துதியை 1975-ல் ஸாதித்தபொழுது அந்த ச்லோகம் 1 லக்ஷம் ஸம்பாதித்துக் கொடுக்கும் என்று அநுக்ரஹித்தார். அது லக்ஷம் கொடுத்து இப்பொழுது அதற்கு மேலேயும் கொடுத்து விட்டது. அதுபோல் இந்த சுலோகம் ம்ருதஸஞ்சீவிநி மகிமையை உடைய சக்தி வாய்ந்த சுலோகம் போல் தெரிகிறது. पक्षिव्यत्यस्तपक्षद्वितयमुखपुटप्रसेफुटोदारतारं என்று ஸ்வாமி தேசிகன் வருணித்த ரீதியில் இந்த ச்லோகத்தில் क्ष पा क्ष प क्ष पा क्ष प என்று கருடபகவானின் இறக்கையின் வீச்சுப்போல் மந்திராக்ஷரங்கள் சப்தாலங்காரமாக அமைந்திருப்பது இதனை காண்பித்துக் கொடுக்கிறது. இதில் தாமஸ இருட்டை போக்கு என்கிற ப்ரார்த்தனையும் த்வனிக்கிறது. क्षपाक्षप என்றால் இருட்டை

ஒழிப்பவர் என்ற பொருள் கிடைக்கும். क्षपा - இருட்டு, क्षप - ஒழிப்பவர். இச்ச்லோகம் रथोद्धता விருத்தத்தில் அமைந்துள்ளது. அதன் லக்ஷணம் र न र ल ग.

அந்த இறக்கையின் வீச்சையநுபவித்த கவியான நம் ஸ்வாமி கருடபகவானைத் தாம் மேலும் பாபங்கள் செய்யாமல் இருக்க கண்ணில் பட்ட வஸ்துக்கள் மீது ஆசையாகிற மலம் போக வேண்டும் என்று கீழ்வரும் ச்லோகத்தில் ப்ரார்த்திக்கிறார்.

शिलामयी ते तनुरत्र पक्षिन्!
कलापिकान्ता कवचोज्ज्वलेयम्।
मलानि मन्नेत्रगतानि नित्यं
विलासलेशेन विनाकरोतु।।

हे पक्षिन्! - ஓ பக்ஷிராஜநே ते - உம்முடைய इयंतनु - இத்திருமேனி, अत्र-இவ்விடத்திலே, कलापिकान्ता - மயில் போல் காந்தியுடையதாகவும், शिलामयी - கருங்கல் மயமாகவும், कवचोज्ज्वला - பிரகாசமான கவசத்தை தரித்துக் கொண்டும் விளங்குகிறது, नित्यं - எப்பொழுதும், मन्नेत्रगतानि - என்னுடைய கண்ணில் உண்டாகிற, मलानि - அழுக்கை, அதாவது கண்போகும் விஷயங்கள் மீது ஆசை என்கிற அழுக்கை; विलासलेशेन - உம் இறக்கை விலாஸத்தின் துளியால், विनाकरोतु - இல்லாமல் செய்வதாகுக.

இந்த ச்லோகத்தில் ला என்கிற அக்ஷரம் எல்லா பாதங்களிலும் இரண்டாவது எழுத்தாக அமைத்து ஒரு சிறந்த சப்தாலங்காரமாக படைத்திருக்கிறார் நம்மாசுகவி ஸார்வபௌமர். மயில்போல் கருத்தத் திருமேனியுடைய கல்கருடர் ப்ரகாசமான கவசம் அணிந்துள்ளார். நாச்சியார்கோவிலில் இதை தினந்தோறும் ஸேவிக்கலாம். அத்தகைய கருடபகவான் தம் விளையாட்டுனாலே என்னுடைய கண்ணில் உண்டான அழுக்கை போக்கடிக்கட்டும்.

இந்த க்ஷேமகாரி சதகத்தின் நோக்கம் அடியேன் மாமனாரான ஸ்ரீ ஆசுகவி ஸார்வபௌம ஸ்வாமி அடியேன் மைத்துனனாகிய ஆயுஷ்மான் கருணாகரன் மோபெட்டிலிருந்து கீழே விழுந்து கண்ணில் காயம் ஏற்பட்டபொழுது ப்ரார்த்தனையாக அருளிச் செய்த ஸ்தோத்ரம். அதில் கண்ணை காக்க ப்ரார்த்தனை செய்வது போல் அமைந்துள்ள இந்த ச்லோகம் கண்ணை காத்துவிட்டது. இந்த ச்லோகம் उपेन्द्रवज्रा என்னும் வ்ருத்தத்தில் அமைந்துள்ளது. இதன் லக்ஷணம் ज त ज ग ग.

கருடாழ்வானின் திருமேனி அழகை அநுபவித்த பிறகு நம் ஸ்வாமி கருடாரூடரான பகவானுடன் கருடபகவானை கருடசேவையாக அநுபவிக்கிறார். பெரியாழ்வாருக்கு ஸேவை ஸாதித்தாற்போல் ஸ்வாமியின் மனக்கண் முன்னே பகவான் கருடாரூடராக ஸேவை ஸாதித்துள்ளார் போலும்! அப்பொழுது அவர் திருவாய் மலர்ந்து இந்த ச்லோகம் உண்டாயிற்று.

अंसाश्रयं क्ञ्चन कालमेघं
कंसान्तकं रञ्जयतो निनादैः।
शंसास्पदं विक्रमवैखरी सा
ध्वंसाय भूयादघसंततेर्नः॥

अंसाश्रयं - கருடபகவான் தனது முதுகை இருப்பிடமாகக் கொண்ட, क्ञ्चन कालमेघं - ஓர் காளமேகம் போல் விளங்குகின்ற, शंसास्पदं - எப்பொழுதும் ப்ரசம்ஸை செய்துக்கொண்டு வருகின்ற, कंसान्तकं - கம்ஸனை அழித்த பகவான் கண்ணனை, रञ्जयतो निनादैः - தம் சப்தங்களால் ஆனந்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். सा - அந்த, विक्रमवैखरी - பராக்ரம-வீர-தீர செயல், नः - எங்களுடைய, अघसंतते - பாப கூட்டங்களை, ध्वंसाय -அழிப்பதற்கு, भूयात् - விளங்கட்டும்.

இந்த ச்லோகம் इन्द्रवज्रा என்கிற வ்ருத்தத்தில் அமைந்துள்ளது. அதன் லக்ஷணம் त त ज ग ग. இதில் म्सा (ம்ஸா) என்னும் எழுத்துகள் ப்ரதி பாதத்திலும் இரண்டாவது எழுத்தாக அமைந்துள்ளது. இது சிறந்த சப்தாலங்காரமாகும்.

இவ்வளவும் அநுபவிக்கும்படி தன் பரிச்ரமத்தினால் ஆசுகவிஸார்வபௌமரான ஸ்ரீநிதிஸ்வாமியின் க்ரந்தங்களை ரக்ஷித்து அவர் திருக்கரங்களாலே பட்டோலை செய்யப்பட்ட ஹஸ்தலிபிகளை புஸ்தகங்களாக அச்சிட்டு கொடுத்த அடியேன் மைத்துனன் ஆயுஷ்மான் கருணாகரனுக்கு அபிநந்தங்கள். இவன் மேலும் அசீதி, சதமானம் என்றெல்லாம் தன் பிறந்தநாள் உத்ஸவங்களை கொண்டாடிக் கொண்டு நீண்டகாலம் இத்தகைய சிறந்த ஸேவைகள் செய்துக்கொண்டு லோகோஜ்ஜீவனம் நடத்திக் கொண்டிருக்கவேண்டும் என்று க்ஷேமகாரியான கருட வாகனனை ப்ரார்த்திக்கிறேன்.



## ஸ்லோகங்கள் 16 முதல் 18 வரை

*ஸ்ரீமதுபயவே. திருமலை நம்பி, சதுர்வேத சதக்ரது நாவல்பாக்கம்*
*மஹாவித்வான்* **Dr.V.கண்ணன் (யக்ஞம்) ஸ்வாமி,**
*ஹைதராபாத்*

फणितिभिरमलाभिरुत्थिताङ्ग:
मणिरभिपातु स पक्षिणामयं न:।
गुणिवरपुरुषोत्तमस्य वाह:
फणिरमणीरमणीयतानिराम: ।। १६ ।।

पक्षिराज भव मेऽक्षिगोचर:
भक्षितोरग शुभक्षिताविह ।
रक्षितानघमुनीश्वर! प्रभो!
शिक्षितामितदनूदितोत्तम! ।। १७ ।।

वरुणालयजागृहे स्थितम्
तरुणा स्वर्गसदां समक्रमम् ।
अरुणावरजं तमाश्रये
करूणापूरितशुद्धमानसम् ।। १८ ।।

***வேதங்களால் எழுந்த வடிவம் பெற்றவனும், பறவைகளுக்குள் சிறந்தவனும், நற்பண்புகள் நிறைந்த புருஷோத்தமனுக்கு வாஹனம் ஆனவனும், பாம்புகளின் மனைவியரின் ஸௌபாக்யத்தை (அந்தப் பாம்புகளைக் கொல்வதன் மூலம்) நீக்குபவனும் ஆன இவன் (கருடன்) எங்களை ரட்சிக்கட்டும்.***

***பறவைகளின் அரசனே! பாம்புகளைச் சாப்பிடுபவனே! குற்றமற்ற முனி-ச்ரேஷ்டர்களைக் காப்பாற்றியவனே!***

**பிரபுவே! நிறைய அசுரர்களைத் தண்டித்தவனே! உத்தமனே! இந்த மங்களமான பூமியில் என் கண்ணுக்குப் புலப்படு.**

நாச்சியார் கோவிலில் இருப்பவனும், வானவரின் மரத்தோடு ஸமமான முறை கொண்டவனும், அருணனுக்குத் தம்பியும், கருணை நிரம்பிய தூய மனது உள்ளவனும் ஆன அவனை (கருடனை) ஆச்ரயிக்கிறேன்.

இந்த மூன்று ச்லோகங்களில் மூன்று வெவ்வேறு வ்ருத்தங்கள், பத்து உபாக்யானங்கள், அலங்காரங்கள் உட்பட்ட பதினோரு நயங்கள், பனிரண்டு நீதிகள் அடங்கியிருப்பதாக இப்போது அனுபவிக்கப் போகிறோம்.

மூன்று வ்ருத்தங்கள்: பதினாறாம் ச்லோகத்தில் 12-13-12-13 என்ற எழுத்து எண்ணிக்கையில் அர்த்த ஸம வ்ருத்தம் புஷ்பிதாக்ரா என்று பெயர். (அவிதித என்று ஆரம்பிக்கும் மதுரகவியாழ்வார் தனியன் முதலியவற்றில் நமக்கு பரிசிதமானது). பதினேழாம் ச்லோகத்தில் எல்லா அடிகளும் சமமாகப் பதினொன்று எழுத்துகள் கொண்டு, ரதோத்ததா என்கிற வ்ருத்தத்தில் அமைந்தது. (ஆஞ்சநேயம் அதி என்று ஆரம்பிக்கும் ஹனுமத் ஸ்துதி முதலியவற்றில் நமக்குப் பரிசிதமானது). பதினெட்டாம் ச்லோகத்தில் 10-11-10-11 என்ற எழுத்து - எண்ணிக்கையில் அர்த்த-ஸம வ்ருத்தம்; ஸுந்தரீ என்று பெயர். (கோபால விம்சதியில் ஹ்ருதி முக்த என்று ஆரம்பிக்கிற ச்லோகம் முதலியவற்றில் நமக்குப் பரிசிதம்).

பத்து உபாக்யானங்கள்: அருணன் தம்பியாகப் பிறந்த கதை. இது மஹா பாரதத்தில் ஆதி பர்வத்தில் உள்ளது. கச்யப முனிவருக்கு கத்ரு, வினதா என்று இரு மனைவிகள் இருந்தார்கள். இருவரும் மகப்பேறு காலத்தில் முட்டை இட்டார்கள். அந்த முட்டைகள் பல வருஷங்கள் எந்தக் குஞ்சையும் பொரிக்காமலே

இருந்தன. ஐநூறு வருஷங்களுக்குப் பிறகு கத்ருவின் முட்டையிலிருந்து ஆயிரம் பாம்புகள் பிறந்தன. அப்போது வினதை தன் இரு முட்டைகளைக் கவனித்தாள். ஏதும் வெளியே வருவதாகத் தெரியவில்லை. பொறுமை இழந்தாள். அதற்கான காலம் முடிந்து விட்டதாக எண்ணி, ஒரு முட்டையை உடைத்தாள். ஆனால் குறைப் பிரசவம் போல அங்க ஹீனமாக ஒரு குழந்தை வெளிவந்தது. அது தான் தொடையில்லாத அருணன். அவன் பிறந்தவுடனே தாயின் மீது கோபம் கொண்டான். தாய்க்கு ஒரு வரமும் ஒரு அவரமும் (சாபமும்) கொடுத்தான். தனக்குத் தீங்கிழைத்த காரணத்தால், தாயான வினதை தன் சக்களத்தியான கத்ருவுக்கு அடிமை ஆவாள் என்று சாபமும், அடுத்த முட்டையிலிருந்து வெளிவரப் போகிற தம்பி அவளை அடிமைத் தளையிலிருந்து மீட்பான் என்ற வரமும் கொடுத்தான். ஐநூறு வருஷங்கள் அடிமை வாழ்க்கை வாழ்ந்த பிறகு இன்னொரு முட்டையிலிருந்து கருடன் பிறந்தான். இவ்வாறாகக் கருடன் அருணனுக்குத் தம்பி ஆகிறான். அருணனின் வரத்தோடும் அவரத்தோடும் பிறந்த அவன் அருணனுக்குத் தம்பி என்ற அர்த்தத்தில் அருணாவரஜன் ஆனான். பதினெட்டாம் ச்லோகத்தில் இந்த வ்ருத்தாந்தக் குறிப்பு.

இன்னொரு கதை மஹாபாரதத்தில் ஆநுசாஸநிக பர்வத்தில் இருப்பது. கருடன் பாரசாலி என்பதையும் பாரவாஹி என்பதையும் அதே சமயத்தில் காருண்யம் மிக்கவர் என்பதையும் காண்பிக்கிற வ்ருத்தாந்தம். தன் கைகளில் தனது இரையாக ஒரு பெரிய யானையையும் ஆமையையும் தூக்கிக் கொண்டு நைமிசாரண்யத்தில் ஒரு மிகப் பெரிய மரத்தின் கிளையில் அமர்ந்தார் கருடன். அவருடைய பாரத்தைத் தாங்காமல் அந்த மரக்கிளை முறிய ஆரம்பித்தது. அந்த மரத்தின் கீழே வைகானஸர்கள் என்றும் வாலகில்யர்கள் என்றும் வகுப்புப் பெயர்கள் கொண்ட பல முனிவர்கள் யாகம் செய்து

கொண்டிருந்தார்கள். வாலகில்யர்கள் மரக்கிளையில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தார்கள். முறிந்த கிளை விழுந்தால் உயிர்ச்சேதம் பெருமளவில் ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டு சமயோசிதமாகச் செயல்பட்டார் கருடன். எழுந்து கிளம்பினார்; தன் அலகால் அந்த மரக்கிளையை எடுத்துக் கொண்டார். யானையையும் ஆமையையும் தன்னுடைய கால் இடுக்குகளில் பிடித்துக்கொண்டார். வெகுதூரம் பறந்து சென்றார். வேறோர் இடத்தில் கிளையைப் போட்டார். க்ஷேமகாரி சதகத்தில் ரக்ஷிதாநக முநீச்வர என்ற பதத்தில் இந்தக் கதை பற்றிய குறிப்பு இருக்கிறது.

இந்த மூன்றாவது கதை மஹாபாரதத்தில் ஆதிபர்வத்தில் இருப்பது. மஹா பராக்கிரம சாலியான கருடன், அக்னி சக்ரம், காவல் பாம்பு, யந்த்ரம் இவற்றையெல்லாம் த்வம்சம் பண்ணி, புஜபலத்தாலே அம்ருத கலசத்தை தேவலோகத்திலிருந்து அபஹரித்துக் கொண்டு திரும்பி வரும் வழியில் ஆகாசத்தில் விஷ்ணு எதிர்பட்டார். கருடனின் ஸாஹஸத்தையும் வீரத்தையும் மெச்சினார். பாராட்டினார். வரம் தர விழைந்தார். கருடன் கேட்டபடி மூப்பு மரணம் இல்லாமை என்ற வரத்தையும் தந்தார். கருடன் கொடுத்த வரத்தையும் ஏற்றுக்கொண்டார். தானே வேண்டி, தனக்கு வாஹனமாக ஏற்றுக்கொண்டார். பெருமாளுக்கும் மேல் கருடன் இருக்க விரும்பியதால் தன்னுடைய கொடியில் கருடன் இருக்கட்டும் என்று சம்மதித்தார். இது வாஹனமாகவும் த்வஜமாகவும் விஷ்ணுவுக்குக் கருடன் ஆன கதை. க்ஷேமகாரி சதகத்தில் குணிவர புருஷோத்தமஸ்ய வாஹ: என்ற வரியில் இந்தக் கதை பற்றிய குறிப்பு இருக்கிறது. பாராட்டுக்குரியவர்களைத் தானாகவே சென்று பாராட்டும் குணமும், வரம் தரும் குணமும், வரம் பெறும் குணமும் விஷ்ணுவுக்கு இருந்ததால் அவரைக் குணிவரன் என்கிறார்.

நாலாவது கதை பட்சிகளுக்கு இந்த்ரன் ஆக கருடன் ஆன கதை. வாலகில்ய முனிவர்களின் குட்டை உருவத்தை ஏளனம் செய்ததால் அவர்களின் கோபத்துக்கு ஆளானான் தேவேந்திரன். இன்னோர் இந்த்ரனையே ஸ்ருஷ்டி செய்வதற்கான யாகம் பண்ணத் துணிந்துவிட்டார்கள் அந்த ரிஷிகள். விபரீத விளைவை விரும்பாத இந்த்ரன் கச்யப முனிவரின் துணையை நாடினான். அவர் வாலகில்யர்களிடம் சென்று சமரசப் பேச்சு பேசினார். அவர்களைத் தடுக்கவில்லை; ஆனாலும் பிரமனை மதிப்பதற்காகவாவது இந்த்ரனை மன்னிக்க வேண்டும் என்றார். அவர்கள் உண்டுபண்ணும் இன்னோர் இந்திரனுக்கான யாகத்தின் பலனை அவர்கள் கச்யபருக்கே வழங்கிவிட்டார்கள். அவர் தன் மனைவி வினதைக்குப் பிறந்த கருடனைப் பட்சிகளுக்கு இந்த்ரனாக ஆக்குவதற்கு இதைப் பயன்படுத்திக் கொண்டார். கருடன் பக்ஷீந்த்ரன் ஆனார். இதை இந்தக் கவி பக்ஷிராஜா என்றும் பக்ஷிணாம் மணி என்றும் குறிப்பிடுகிறார்.

ஐந்தாவது கதை. கருடனின் அன்னை வினதா என்பவள். அவளுடைய சக்களத்தி கத்ரு என்பவள். அவளுக்குக் குழந்தைகள் பாம்புகள். கத்ருவுக்கும் வினதைக்கும் ஏற்பட்ட ஒரு பந்தயத்தில் அக்கிரமமாக கத்ரு ஜயிப்பதற்கு ஒரு பாம்பு (உச்சைச்ரவஸ் என்ற குதிரையின் வாலில் சுற்றிக்கொண்டு) உதவியது. அதன் விளைவாக வினதை அவளிடம் அடிமைப்பட்டு பல கொடுமைகளுக்கு ஆளானாள். கருடன் தன்னுடைய தாய்க்கு நிகழ்ந்த அநீதிக்குப் பழி வாங்கத் துடித்தார். அதனால் கத்ருவின் சந்ததியான பாம்புகளைத் தனது கோரைப் பல்லால் கிழித்து சித்திரவதை பண்ணி இரையாக்கிக் கொண்டார். இதை இந்தக் கவி பக்ஷிதோரக என்ற பதத்தாலும், பணிரமணீ என்று ஆரம்பிக்கும் வரியாலும் வர்ணிக்கிறார்.

ஆறாவது கதை. தனது மாதுலரான அப்புள்ளாரிடம் கருட மந்த்ரத்தை உபதேசமாகப் பெற்ற வேங்கடநாதன் திருவஹீந்த்ரபுரத்து ஔஷதகிரியில் அதை ஜபித்துத் தவம் புரிந்தார். அதனால் உகப்படைந்த கருடன் அவருக்கு ப்ரத்யக்ஷமாகி ஹயக்ரீவ மந்த்ரத்தை உபதேசித்தார். தேசிகனின் மஹா வைபவத்துக்குக் கருடனின் அனுக்ரஹம் ஹேதுவாயிற்று. இதை இந்தக் கவி நினைவில் கொண்டு, தனக்கும் கருடன் பிரத்யக்ஷமாக வேண்டும் என்று வேண்டுகிறார் "பக்ஷிராஜ பவ மேக்ஷி கோசர:" என்ற வரியில்.

ஏழாவது கதை. நாச்சியார் கோவில் என்பது நூற்றெட்டு திவ்யதேசங்களில் ஒன்று. திருநறையூர் என்றும் வழங்குவர். இங்கே பெருமாளை விடவும் தாயாருக்கு ப்ராதான்யம். தாயார் திருநாமம் வஞ்ஜுளவல்லி. பெருமாள் திருநாமம் நறையூர் நம்பி. இங்கே ஒரு கல்கருடன் தனி சந்நிதியில் எழுந்தருளியிருக்கிறார். அவருடைய எடை பற்றி வியக்கத்தக்க தகவல் ஒன்றுண்டு. அவரை சந்நிதியிலிருந்து உற்சவத்தில் வெளியே ஏள்ளப் பண்ணும்போது ஆரம்பத்தில் நாலே பேரால் தூக்க முடியுமாம். கோபுர வாசலில் எடை கூடுமாம். அறுபத்துநாலு பேர் வரை தேவைப்படுமாம். திரும்புகாலிலும் இதேபோல கூடுதலான எடை சந்நிதிக்கு அருகில் குறைந்து விடுமாம். தேவலோகத்துக்கற்பக மரம் எப்படி நமக்கு வியப்பைத் தருகிறதோ அதே போல இந்தக் கல்கருடனும் வியப்பைத் தருகிறார். "வருணாலயஜா" என்று தொடங்கி இதை இரண்டு வரிகளில் வர்ணிக்கிறார் இந்தக் கவி. கற்பக மரத்துக்கு வியப்புக்குரிய க்ரமம் (முறை) வேறு (விரும்பியதைத் தருவது); கல்கருடனுக்கு வியப்புக்குரிய க்ரமம் (புறப்பட்டு வருகை) வேறு; ஆனாலும் இரண்டு கிரமங்களும் சமம் என்கிறார். கருடனும் அபீஷ்டத்தைத் தருவதாலும் சமம்.

எட்டாவது கதை. ப்ரஹ்லாதனுடைய குமாரனான விரோசனன் என்ற அசுரன் பாற்கடலில் பையத் துயின்ற பரமனின் கிரீடத்தைத் திருடிக்கொண்டு பாதாளத்தில் ஒளிந்து கொண்டானாம். முனிகளின் ஆணைப்படி கருடன் பாதாள லோகத்துக்குப் போய் விரோசனனோடு யுத்தம் செய்து அவனை சிட்சித்து கிரீடத்தைத் திரும்பிக் கொண்டு வந்து வழியில் கிருஷ்ணனுக்கு சமர்ப்பித்தார். இந்தக் கதை யாதவாசல மாஹாத்மியத்தில் இருக்கிறது. இந்த க்ஷேமகாரி சதகத்தில் "சிக்ஷித-அமித-தநூதித-உத்தம" என்ற வரியில் சொன்ன தானவோத்தமன் விரோசனன் என்று கொள்ள இடம் உண்டு.

ஒன்பதாவது கதை. வால்மீகி ராமாயணத்தில் யுத்த காண்டத்தில். இந்த்ரஜித்தின் நாகபாசத்தால் கட்டுண்டு விழுந்து கிடக்கிறார்கள் ராம-லக்ஷ்மணர்கள். இலங்கையில் ஊருக்குள்ளே அரக்கர்கள் வெற்றிக் கும்மாளம் இடுகிறார்கள். அப்போது கருடன் வேகமாக வந்து போர்க்களத்தில் இறங்குகிறார். அவரைக் கண்ட மாத்திரத்தில் பாம்புகள் தலை தெறிக்க ஓடிவிட்டன. ராம-லக்ஷ்மணர்கள் உயிர் பிழைக்கிறார்கள். இருவரையும் கைகளால் தடவுகிறார் கருடன். உடனே அவர்களுக்குத் தெம்பும் பலமும் அதிகமாயிற்று. உற்சாகம் மிகுந்தது. புத்தியும் நினைவாற்றலும் இரட்டித்தது. இவ்வாறு அனகரான (அநகர் என்று சஹஸ்ர நாமத்தில் பெயர் கொண்ட) ராமனை கருடன் ரட்சித்த கதையை "ரக்ஷிதாநக" என்ற பதத்தால் பதினேழாம் ச்லோகம் சொல்கிறது. அனகர்களையும் முநீச்வரர்களையும் ரட்சித்த கதைகள் வெவ்வேறாக இரண்டு.

பத்தாவது கதை. வால்மீகி ராமாயணத்தில் உத்தரகாண்டத்தில். மால்யவான் என்கிற ராக்ஷஸன் விஷ்ணுவை இழுத்துப்போட்டு, கருடனையும் அடித்தான். கொதித்த எழுந்த

வைனதேயன் தனது இறக்கைக் காற்றினாலேயே மால்யவானை ஓடப் பண்ணினான். இதைப் பொறாத அவனுடைய தம்பி மாலீ என்பவன் தனது சேனையுடன் எதிர்த்து தோற்று ஓடிப் போனான். வெட்கத்துடன் இலங்கையில் புகுந்தான். க்ஷேமகாரி சதகத்தில் சிக்ஷித-அமித-தநூதித என்பதில் (தானவர்கள் என்பது ராக்ஷசர்களுக்கும் உபலக்ஷணம் என்று கொள்ளும் வழக்கம் இருப்பதால்) இந்தக் கதையும் அனுஸந்தேயம்.

முதல் நீதி. வேதங்கள் தூயவை. அவற்றுக்குப் பாவம் ஒட்டாது. நாம் அதைக்கொண்டு பாவங்களை நீக்கிக் கொள்ளலாம். அமலாபி: என்ற பதத்தால் இந்த நீதி கிடைக்கிறது.

இரண்டாம் நீதி. கருடன் வேதமயன். ஆகையால் அவன் நம்மைக் காக்க வல்லவன். இவனே பக்ஷிமணி. இவன் தொடர்பு பெற்ற காருத்மத மணியே கூட நம்மைக் காக்கும்.

மூன்றாம் நீதி. கருடன் தென்படுகிற இடமெல்லாம் சுபக்ஷேத்ரம் ஆகும்.

நாலாம் நீதி. ராஜாவாக இருப்பவன் ரக்ஷணம் சிக்ஷணம் என்ற இரண்டையும் பண்ணுவதற்குக் கடமைப்பட்டவன். ஒன்றை மட்டும் பண்ணுவது போதாது.

ஐந்தாம் நீதி. யாரை ஆச்ரயிக்கத் தகும் என்று கேட்டால் மனதில் அருளும் தூய்மையும் கொண்டவரை ஆச்ரயிப்பது தகும். அருளில்லாதவரை ஆச்ரயித்தால் நமக்குப் பலன் கிட்டாது. மனஅழுக்கு கொண்டவரை ஆச்ரயித்தால் நமக்கு அதோகதி நேரும். அருளும் சுத்தியும் மனதில் கொண்டவரை ஆச்ரயித்தால் நாம் உயரலாம்.

ஆறாம் நீதி. பகவானோடு தொடர்பு பெற்றதுக்கெல்லாம் பெருமை அதிகம். கருடன் விஷ்ணுவுக்கு வாஹனம். ஆதலால்

அவனுக்குக் கௌரவம் அதிகம். இன்னுமொன்று; வைணவர்களாகிய நாம் யாரை வணங்குவதானாலும் அவர்களுக்குள்ள விஷ்ணு சம்பந்தத்தை அனுசந்தித்த பிறகே வணங்குவோம். புருஷோத்தமஸ்ய வாஹ: என்றதில் இந்த நீதி.

ஏழாம் நீதி. ரக்ஷையை வேண்டும்போது எங்களுக்கு என்று பன்மை நல்லது. தனியொருவன் இரட்சிக்கப்பட்டு, அவனது சுற்றத்தார் வருந்தினால், விரும்பத்தக்க பலன் கிடைக்காது. ந: என்ற பதத்தில் இந்த நீதி.

எட்டாம் நீதி. காப்பு ஒரு வகையில் ஏற்பட்டால் போதாது. கருட கவசம் நாலா பக்கத்திலும் ரக்ஷை பண்ணுவது போல பண்ண வேண்டும். அபிபாது என்கிற பதத்தில் அபி என்கிற உபஸர்கத்தால் கிடைக்கும் நீதி இது.

ஒன்பதாம் நீதி. கருடனின் பெயர்களைக் கீர்த்தித்தால் நல்லது. பக்ஷிராஜ என்றும் பக்ஷிதோரக என்றும், ப்ரபோ என்றும், உத்தம என்றும், அருணாவரஜ என்றும் கீர்த்தித்து பிறகு நம் வேண்டுகோள்களை வெளியிடலாம்.

பத்தாம் நீதி. ஒருவன் தப்பு பண்ணினால், அவனை சேர்ந்த பிறரும் வருந்த வேண்டி வரும். ஆண் பாம்புகள் தண்டிக்கப்படும் போது பெண் பாம்புகள் சௌபாக்யத்தை இழக்கின்றன. ஆகையால் தான் நல்வழியில் நடந்தால் போதாது. அனுபந்திகளையும் நல்வழியில் நடத்த வேண்டும். பணி ரமணி என்கிற வரியில் இந்த நீதி.

பதினொன்றாம் நீதி. குணங்களால் சிறந்தவனுக்குப் பணிவிடை செய்வது இன்பம் பயக்கும். ராமனுக்கு குண-க்ரீத-தாசன் என்று தன்னை சொல்லிக் கொள்வாராம் லக்ஷ்மணர். அது போல குணிவரனாகப் புருஷோத்தமன் இருப்பதாலே கருடன்

அவர்க்கு வாகனமாகக் கைங்கர்யம் பண்ணுகிறார். நீதிகள் இரண்டு: குணம் கெட்டவனிடம் பணி புரியாதே; குணசாலியான எஜமானனை அடை.

தமது பணியாளர்களிடம் எஜமானர்கள் நற்பண்புகளை வெளிப்படுத்த வேண்டும்.

எதுகை என்கிற சொல்லணி. ஒவ்வொரு பாதத்திலும் இருக்கிற இரண்டாம் எழுத்து ஒன்றேயாகி நாலு தடவை வந்தால் அது பாத அனுப்ராஸத்தில் ஒரு வகை. தமிழில் இதை எதுகை என்பர். நிர்ப்பந்தமாகத் தமிழ் செய்யுள்களில் இது இருந்தே தீரும். வடமொழியில் இந்த நிர்ப்பந்தம் கிடையாது. இருந்தாலும் இந்த மூன்று ச்லோகங்களில் ஒவ்வொன்றிலும் இந்த அணி இருக்கிறது. பணிதி, மணி, குணி, பணி என்று ஒன்றில். பக்ஷி, பக்ஷி, ரக்ஷி, சிக்ஷி என்று இன்னொன்றில். வருண, தருணா, அருண, கருணா என்று இன்னுமொன்றில்.

யமகம் என்கிற மடக்கணி. ஒரே மூன்றெழுத்துக் கோவை இருமுறை அடுத்தடுத்து வந்தால் அது யமகத்தில் ஒரு வகை. ரமணீ ரமணீயதா என்ற இடத்தில் ரமணீயமான மடக்கணி. அடுத்தடுத்து வராமல் சிறிது விலகல் இருந்தாலும் பரவாயில்லை. பக்ஷிதோரககபக்ஷிதாவிஹ என்பதில் பக்ஷித பதம் மடக்கணியைத் தருகிறது.

பத-அனுப்ராசம் என்கிற சொல்லணி ஏற்கெனவே கூறிய பாத-அனுப்ராசம் என்பதிலிருந்து வேறுபட்டது. ஒரே எழுத்து பல முறை வருவதால் கிடைக்கும் அழகு இது. பக்ஷிராஜ என்று ஆரம்பிக்கும் ச்லோகத்தில் க்ஷி என்கிற எழுத்து ஆறு தடவை வந்திருக்கிறது.

சிலேடை என்கிற இரட்டைப் பொருள் அணி. கோசர என்ற பதத்துக்கு (பார்வைக்கு) நிலமான என்றும் வார்த்தையில்

நடமாடுகிற என்றும் இரண்டு அர்த்தங்கள். இதனால் இன்னோர் அழகும் கிடைப்பதை அடுத்த பத்தியில் காணலாம்.

முரண்பாட்டுத் தோற்ற அணி. கருடனே ! நீ பக்ஷிராஜன்; நீ பக்ஷிதோரகன்; நீ சுபக்ஷிதௌ இங்கு வந்தவன்; நீ ரக்ஷிதானகன்; நீ சிக்ஷித தானவன். இந்த ஆறிலேயும் க்ஷி என்கிற எழுத்து இருக்கிறது. ஆகையால் இவை ல-க்ஷி-வார்த்தைகள். கோ என்றால் வாக்கு. இவை ஸ-க்ஷி-கோ. இவற்றில் நீ சரிக்கிறாய் (வார்த்தைகளின் அர்த்தமாக இருக்கிறாய்). ஆகையால் நீ ஸ-க்ஷி-கோ-சரன். இதற்கு எதிர்ப்பதம் அக்ஷி-கோசரன் என்பது. அப்படி ஆகு என்று பிரார்த்திக்கிறேன். விரோதாபாசம். அக்ஷி கோசரன் என்பதற்கு (கண்ணுக்குப் புலப்படுபவன் என்கிற) உண்மை அர்த்தம் புரிந்தவுடன் முரணமைதி.

உவமை அணி. கற்பக மரம் விரும்பியதையெல்லாம் தருகிறது. உன் க்ரமமும் அதன் க்ரமம் போலவே இருக்கிறது. நீயும் விரும்பியதை எல்லாம் தருகிறாய். ஸம என்கிற பதம் உவமையைக் காட்டுகிறது.

பரிகர-அலங்காரம். பதினெட்டாம் ச்லோகத்தில் கருடனுக்கு நாலு அடைமொழிகள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஒரு அபிப்பிராயம் புதைந்திருக்கிறது. இப்படி விசேஷணங்கள் ஸாபிப்ராயமாக இருந்தால் பரிகர அலங்காரம் என்று பெயர். அருணனின் தம்பியான உன்னைப் பணிகிறேன் என்றால், அருணன் வெகு தூரம் விஷ்ணு பதத்தில் (சூரியனை) அழைத்துச் செல்வது போல் நீயும் என்னை விஷ்ணு பதத்தில் அழைத்துப் போக மாட்டாயோ, அண்ணன் போல அல்லவா தம்பியும் இருப்பான் ? என்பது மறைந்துள்ள அபிப்ராயம். கருணை நிரம்பிய சுத்த மனசு கொண்ட உன்னை அடைகிறேன் என்றதால், என் மீது கருணை காட்டி என் மாசுகளை அகற்றுவாய் அல்லவா ? என்ற

அபிப்பிராயம். தேவர்களின் மரம் போன்றவன் என்றதால் நீயும் வேண்டியதை எல்லாம் தருவாய் என்று அபிப்பிராயம். லக்ஷ்மியின் வீட்டில் இருப்பவன் என்றதால் உன் மூலம் எனக்கு செல்வமும் மங்களமும் கிடைக்க வாய்ப்பு உண்டு என்று அபிப்பிராயம்.

அர்த்தபுஷ்டி (பொருள் செறிவு). மணியும் மந்திரமும் இருந்தால் பிணியும் தொந்தரவும் விலகும் என்று மூதுரை. இங்கு பதினாறாம் ச்லோகத்தில் மந்திரம் கொண்ட மணியாகக் கருடனை வர்ணித்து விட்டு இவர் என்னைக் காக்கட்டும் என்றது பொருத்தம். ரக்ஷாமணி, ஸந்த்ராண மந்த்ரம் முதலிய கவிப்ரயோகங்கள் இக்கருத்தை வலுப்படுத்துகின்றன.

வக்ரோக்தி (சுற்றி வளைத்துப் பேசுதல்) என்பது காவியத்தின் உயிர்நாடி என்பார்கள். பாம்புகளைக் கொல்பவன் என்று நேரடியாகப் பேசாமல் பாம்புகளின் மனைவிமாரின் மாங்கல்யத்தைப் போக்கடிப்பவன் என்று சொன்ன இடத்தில் வக்ரோக்தி. நாச்சியார் கோவில் என்று நேரடியாகப் பேசாமல் வருணனின் ஆலயமான சமுத்ரத்தில் உண்டானவள் (அதாவது லக்ஷ்மி) இருக்கிறாளே அவளுடைய இல்லம் என்று சொன்ன இடத்திலும் வக்ரோக்தி.

பதம் பிரிப்பதில் விகல்பத்தால் வந்த நயம். சுபக்ஷிதௌ என்பது ஒரே பதமா, இரண்டு பதங்களா ? ஒரே பதமானால் மங்கள பூமியிலே என்று அர்த்தமாகும். திருநறையூரை அப்படிக் கூறுவது தகும். சுப என்றும் க்ஷிதௌ என்றும் இரண்டு பதங்களாகப் பிரித்தால் சுப என்பது கருடனுக்கு உள்ள மற்ற விளிகளோடு சேர்ந்து, கருடன் மங்களமானவன் என்ற பிரசித்தமான கருத்தைக் கூறும். (சகுன சாஸ்த்ரத்தில் கருடனைப் பார்த்தாலும் மங்களம்; கருடத்வநியைக் கேட்டாலும் மங்களம் என்பார்கள்). இந்த பூமியில் பிரத்யக்ஷமாகு என்று ஒட்டி வருகிறது. இதே போல நாலாம்

வரியிலும். தநூதிதோத்தம என்பது ஒரே பதமா, இரண்டு பதங்களா ? ஒரே பதமானால் அசுரோத்தமனான விரோசனனைக் குறிக்கலாம். இரு பதங்கள் ஆனால், தானவர்களைத் தண்டித்தவனே ! உத்தமனே ! என்று இரண்டு ஸம்போதனங்கள் வரும் கருடனுக்கு. அதுவும் இஷ்டமே.

பூர்வ-ஸூக்திகளை நினைவுப்படுத்தும் நயம். வேதங்களால் என்று சொல்வதற்குப் பதில் "அமல-பணிதிகளால்" என்கிறார். தூய வாக்குகளால் என்று அர்த்தம். தூய வாக்கு என்றாலே வேதம் தானா என்ன ? ஆம். இதைக் காட்டியவர் வேதாந்த தேசிகன். விசுத்தானாம் வாசாம் என்கிறார் தயாசதகத்தில். வேதங்களின் என்று அர்த்தம். வேத மந்த்ரங்களால் கருடனின் அங்கங்கள் உண்டாயின என்கிறார். இது வேதத்திலேயே கூறிய கருத்து. "ஸுபர்ணோஸி கருத்மான் த்ரிவ்ருத் தே சிர: காயத்ரம் சக்ஷு: ஸ்தோம ஆத்மா ஸாம தே தனூ: வாமதேவ்யம் ப்ருஹத் ரதந்தரே பக்ஷௌயஜ்ஞாயஜ்நியம் புச்சம் சந்தாம்சி அங்காநி திஷ்ணியா: சபா யஜூம்ஷி நாம" என்று வேத வாக்கியம். த்ரிவ்ருத் என்றும் காயத்ரம் என்றும் பல வேத மந்த்ரங்களால் ஆன அவயவங்கள் கருடனுக்கு என்று சொன்னாலும் சரி; இந்த வாக்கியத்தில் சந்தாம்ஸி அங்காநி என்று சொன்னதை மட்டும் இங்கு அர்த்தமாக சொன்னாலும் சரி.

ஆளவந்தாரும் வேதாத்மா விஹகேச்வர: என்றார்.

கருடனை மணி என்கிறது க்ஷேமகாரிசதகம். ஜாதௌ ஜாதௌ யத் உத்க்ருஷ்டம் மணிஸ் தத் கீர்த்யதே புதை: என்ற ரீதியில் பக்ஷிகளுக்குள் உயர்ந்தவர் என்று அர்த்தம். வாஸ்தவமான ரத்னம் என்று பொருள் கொள்வதிலும் செறிவு உண்டு. மணி முகுரமிவாக்ரே என்றார் பட்டரும்.

பக்ஷீந்த்ரஸ் த்ராயதாம் ந: பணதரமஹிஷீ பத்ரபங்காபஹாரீ என்று கருட பஞ்சாசத். பாம்புகளின் மனைவிமார்களின் மகரிகாபத்ரம் என்ற அழகு ஒப்பனையை அபஹரிக்கிறவர் கருடன் என்று அர்த்தம். இங்கே க்ஷேமகாரீ சதகத்திலும் கிட்டத்தட்ட இதே கருத்துதான். பாம்புகளின் மனைவிமார்களின் எழிலை நீக்குபவர் என்று.

இவ்வாறாக, வேதம், காந்தா-சதுச்லோகீ, ஸ்ரீரங்கராஜஸ்தவம், தயாசதகம், கருடபஞ்சாசத் முதலிய பூர்வ ஸூக்திகளை க்ஷேமகாரிசதகம் அனுகரிக்கிறது என்பதும் இதன் சிறப்புகளில் ஒன்றாகும்.



## சுலோகங்கள் 19 முதல் 21 வரை

*ஸ்ரீமதுபயவே மஹாவித்வான் சோகத்தூர்*
**Dr.*ராமானுஜாசார்ய ஸ்வாமி,*** *ஆஸ்தான வித்வான்,*
*ஸ்ரீமதஹோபில மடம், பெங்களூர்*

**मरुणा भवनामधारिणागुरुणा तप्तममुं जनं भृशम्।**
**वरुणालयजागृहेऽर्चित:करुणानिर्वृतमातनोतु माम्।।  (वीट्) १९**

*19. (ஸம்ஸாரம்)பவம் என்னும் பெயரை ஏந்திய பெரும் பாலைவனத்தால் வெகுவாகக் கொளுத்தப்பட்டிருக்கும் இந்த அடியேனை (என்னை), கடலின் புதல்வியான திருவின் இல்லத்தில் (நாச்சியார்கோவிலில்) வழிபடப்படும் புள்ளிறையான கருடன், தன் தகவால், வாட்டம் நீங்கி மகிழ்ச்சி பெருகினவனாகச் செய்யட்டும்.*

*இங்கு* **निष्पानीये निरालम्बे निश्छाये निरपाश्रये। द्राघीयस्यशुभे मार्गे यमस्य सदनं प्रति** *என்றும்,* **संसार–मरुकान्तारे दुर्व्याधिव्याघ्रभीषणे। विषयक्षुद्रगुल्माढ्ये तुषापादपशालिनि** *என்றும் சொல்லப்படுகிறபடியே பவம் என்ற பெயரைக் கொண்ட பாலைவனமாக, என்புற்ற நோயுடல் தோறும் பிறந்திறந்து எண்ணரிய துன்புற்று வீயச்செய்யும் ஸம்ஸாரம் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. பெயர் எதிர்மறையாக உள்ளதெனவும் நயமாகக் கூறியுள்ளது. இந்த நெருப்பு போன்ற பவத்தை அணைக்க கடலே தேவைப்படுகிறதென வருணாலயமெனும் சொல் தெரிவிக்கிறது. கரைபுரண்ட கருணைக் கடலான எம்பெருமானால் வாழ்ச்சி பெறுதல் மற்றும் அது நன்கு பரவுதல் சொல்லிற்று.*

**पयोधिकन्याभवने वसन्तं वयोधिकंकञ्चन भावयामि।**
**रयोत्तरं वेदमयं यमाहु: जयोदयं येन जना लभन्ते।।      २०**

**20.** வேகத்தில் நிகரில்லாதவனாகவும், மறைகளின் உருவமாகவும் கூறப்படும் எவனிடமிருந்து மக்கள் வெற்றியையும், எழுச்சியையும் பெறுகின்றனரோ. அப்படிப்பட்ட பாற்கடலின் மைந்தளான திருவின் இல்லத்தில் (நாச்சியார் கோவிலில்) வஸிக்கும் ஓர் உயர்ந்த (மிக மூத்த) பறவையிறையைத் தொழுகிறேன்.

இங்கு கன்யையைக் காக்கும் வயோதிகனென, பஞ்சவடியில் ஸீதையைக் காக்க ஜடாயுவைப் போன்று, க்ஷீராப்தியில் நாச்சியார் கோவிலில் தாயாரைக் காக்க இருப்பைக் குறிக்கலாம். வயஸ் எனும் சொல் வயது (ஆயுள்) மற்றும் பறவை எனும் பொருட்களை உடையதாதலின் பறவைகளுக்கு இறைவனெனவும், வேதமயமாயிருத்தலின் அது **श्रुतीनां जरतीनाम्** என மிகத் தொன்மை வாய்ந்ததால் பழையது. மூத்தது என்றும் வயோதிக பதம் காட்டுகிறது. வாயு மிக வேகமாகச் செல்லுமாதலால் அவனை வழிபட்டு வேகமாகச் செல்வத்தை அடையலாமென்பதை விட மோக்ஷம் உட்பட வெகு எளிதில் அடைவிப்பவன் என்பது ரயோத்தர, ஜயோதய பதங்களால் ஸூசிக்கப்படுகிறது. ஜநங்கள் என்பதால் த்ரைவர்ணிகர்கள் மட்டும் செய்யக்கூடிய யாகத்தைக் காட்டிலும் வேறுபாடு விளங்குகிறது.

**नारायणं यो वहते सरागंसाराधिकं यं सुधियो वदन्ति।**
**आराधितो यस्सदने रमाया: पारायणं तस्य क्रोमि नाग्त्राम्।।** **२१**

**21.** எம்பெருமானான நாராயணனை உகப்புடன் யார் சுமக்கிறானோ, கற்றவர்கள் யாரை மிக வலிமையுடையவனாகக் கூறுகின்றனரோ, மறைப் பொருளான யார் நாச்சியார் கோவிலில் வழிபடப்படுகிறானோ, அந்த கல்கருடனின் பெயர்களை பாராயணம் செய்கிறேன் (எப்பொழுதும் படிக்கிறேன்). ஸாரம் என்ற சொல் வலிமை மற்றும் கருத்து எனப்பொருள் கொண்டது.

இங்கு எம்பெருமானை சுமத்தலை (எழுந்தருளப் பண்ணுதல்) பகவத் பாகவத கைங்கர்யமாக உகந்து செய்வதாகக் குறித்திருக்கிறது. वेदाच्छास्त्रं परं नास्ति என்கிறபடியே ஸாரங்களில் உயர்ந்த மறைப்பொருள் உருவு கொண்டதாக அம்மறையே பணிக்கிறது. सुपर्णोऽसि गरुत्मान् त्रिवृत्ते शिरो गायत्रं चक्षुः स्तोम आत्मा साम ते तनुर्वामदेव्यं बृहद्रथन्तरे पक्षौ यज्ञायज्ञियं पुच्छं छन्दाँस्यङ्गानि धिष्णिया: शफा यजूँषि नाम என்றவிடத்து. ஆக எம்பெருமானைப் போன்றே அவனடியார்களும் போற்றத் தக்கவர்களாதலின் கருட தண்டகம், கருட பஞ்சாத் முதலியவற்றைப் போல் கவியும் கருடாழ்வாரின் திருநாமங்களைப் பயில விழைகிறார். भक्तिज्ञानादिवृद्धिं परिचरणगुणान् सत्समृद्धिं च युक्तां नित्यं याचेदनन्यस्तदपि भगवतस्तस्य यद्वाऽऽप्तवर्गात् என்றாரிறே ஆசார்யஸார்வபௌமரும்.

மறையோனும் மறைப்பொருளும் மறையுருவனும் உகந்தருள்வார்களாக.

எழுபது நிறைவு காணும் இந்த ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டுகள் க்ஷேமகாரிதார்க்ஷ்யகல்பராக எழுந்தருளியிருந்து கருணாகரராக தாஸவர்க்கங்களை அனுக்ரஹித்திடும்படி ஸ்ரீ மாலோலன் க்ருபை செய்திடப் ப்ரார்த்திக்கிறேன்.



# சுலோகங்கள் 22 முதல் 24 வரை

*ஸ்ரீமதுபயவே மஹாவித்வான் மன்னார்குடி*
*உபயமீமாம்ஸாவல்லப* **S.ராஜகோபாலாசார்ய ஸ்வாமி,**
*ஆஸ்தான வித்வான், ஸ்ரீமதஹோபில மடம்*

**22. பயோதிகந்யாஸதநே விபாந்தம்**
**வயோதிகம் கஞ்சந பாவயாமி|**
**அயோதிகோ யேந பவேத்பவேஸ்மிந்**
**பயோதய: கோபி கதாபி ந ஸ்யாத்||**

**பயோதிகந்யாஸதநே விபாந்தம்** - *பாற்கடலில் தோன்றியவளான நாச்சியாரின் இருப்பிடமாகிய நாச்சியார் கோவிலில் பொலிவுடன் திகழும் கல்கருடன்.*

*திருமங்கையாழ்வார் நாச்சியார்கோவிலை மங்களாசாசனம் செய்கையில்,*

**“மலங்கும் வராலும் வாளையும் பாய்வயல் சூழ்தரு**
**நலங்கொள் வாய்மை அந்தணர் வாழும் நறையூரே”**

*என்றருளிச் செய்துள்ளார். இப்பாசுர வ்யாக்யானத்தில் பெரியவாச்சான் பிள்ளை, நாச்சியார்கோவிலில் உள்ள நீர்நிலைகளில் வாழும் மீன்கள் இன்னது பெற்றிலோம் என்ற சோகமில்லாமல், எப்போதும் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிறார். நாச்சியாரின் அருளால் அந்த க்ஷேத்ரத்திலுள்ள திர்யக்குகள் முதல் மனிதர்கள் வரை அனைவரும் செழிப்போடு விளங்குகிறார்கள் என்பது தாத்பர்யம். அப்படிப்பட்ட க்ஷேத்ரத்திலே நாச்சியாரின் கடாக்ஷத்துக்குப் பரிபூர்ணமாகப் பாத்ரமானவராக வைனதேயன் விளங்குகிறார்.*

***வயோதிகம் கஞ்சந பாவயாமி* - *'வய'*** என்ற சொல் பறவைகளைக் குறிக்கும். அனைத்துப் பறவைகளைக் காட்டிலும் மேம்பட்டவராகவும், அந்தப் பறவைகளின் தலைவனாகவும் விளங்கும் அந்த கருடனைத் தியானித்துப் போற்றுவோம்.

***அயோதிகோ யேந பவேத்பவேஸ்மிந்*** - யாருடைய அருளால் நமக்கு உயர்ந்த மங்களங்கள் அனைத்தும் உண்டாகின்றனவோ,

***பயோதய: கோபி கதாபி ந ஸ்யாத்*** - யாருடைய திருவருளால் நமக்கு எந்தப் பயமும் ஏற்படுவதில்லையோ,

கருட பஞ்சாசத்தின் பல ச்ருதியில் ஸ்வாமி தேசிகன்,

''தாமேதாம் சீலயந்தச்சமித விஷதரவ்யாதிதைவாதிபீடா:
காங்க்ஷா பௌரஸ்த்யலாபா: க்ருதமிதர பலைஸ்தார்க்ஷ்யகல்பா
பவந்தி''

என்று அருளிச் செய்கிறார். கருடனைத் தியானித்துக் கருட பஞ்சாசத்தை அநுஸந்தானம் செய்பவர்களுக்கு பாம்புகள், வியாதிகள் உள்ளிட்டவற்றால் ஏற்படும் அனைத்துப் பயங்களும் நீங்கிவிடும் என்றும் அவர்கள் விரும்பும் அனைத்து மங்களங்களும் அவர்களுக்குக் கிட்டுமென்றும் ஸாதித்துள்ளார். அதை அடியொற்றி நம் ஸ்வாமியும் இந்த ச்லோகத்தின் இரண்டாவது பாதியில் யாரை வணங்கினால் அனைத்து பயங்களும் நீங்கி, எல்லா மங்களங்களும் உண்டாகுமோ அந்த கருடனைப் போற்றுவோம் என்று அருளிச் செய்கிறார்.

***யாருடைய திருவருளால் நமக்கு உயர்ந்த மங்களங்கள் உண்டாகுமோ, எந்தப் பயமும் எப்போதும் ஏற்படாதோ, அத்தகைய மேன்மை பொருந்தியவரும் அனைத்துப் பறவைகளை விட உயர்ந்தவருமான நாச்சியார்கோவில் கல்கருடனைத் தியானிப்போம்.***

**23. வாதஸ்ய ஜேதுர்விஹகேச்வரஸ்ய**
**தாதஸ்ய வாசா கரிகூர்மபோக்து:|**
**யாதஸ்ய நாகம் த்வம்ருதாபஹர்து:**
**மா தஸ்ய கோப்யஸ்தி ஸமோ ஜகத்யாம்||**

**வாதஸ்ய ஜேது:** - தம்முடைய வேகத்தில் காற்றை வென்றவர்.

ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில் கருடனின் வேகத்தைப் புகழும்போது,

"சைலீம் நஸ்ஸப்தசைலீ லகிமத ரபஸஸ்ஸௌது ஸாத்வீம் ஸுபர்ண" என்றருளிச் செய்துள்ளார். கருடன் பறந்து சென்ற வேகத்தில் மலைகளின் எடைகளே குறைந்து விட்டன. அதாவது அசையாத மலைகள் கூட நகர்ந்து விட்டன என்பது பொருள். காற்று எவ்வளவு வேகமாக வீசினாலும் மரங்களை வேண்டுமானால் சாய்க்கலாமே ஒழிய மலையை நகர்த்த முடியாது. ஆனால் மலைகளையே நகர்த்தும் அளவு வேகத்தை உடையவராக கருடன் விளங்குவதால் வேகத்தில் காற்றை வென்றவர் என்று நம் ஸ்வாமி குறிப்பிடுகிறார்.

**விஹகேச்வரஸ்ய** - பறவைகளின் அரசனான கருடன்

**தாதஸ்ய வாசா கரிகூர்மபோக்து** - தன் தந்தையின் கூற்றை ஏற்று, யானையையும் ஆமையையும் உண்டவர்.

அமுதத்தை அபஹரிப்பதற்காக தேவலோகத்தை நோக்கிக் கருடன் சென்றபோது, தன் பசியைத் தீர்த்துக் கொள்வதற்காக ஒரு வேடர் கூட்டத்தை அப்படியே விழுங்கினார். அதை விழுங்கிய பின்னும் தன் பசி தீரவில்லை என்று தன் தந்தையான கச்யபரிடம் சென்றார். கச்யபரின் ஆலோசனைப்படி ஓர் யானையையும் ஆமையையும் உண்டு பசியாறினார்.

*ஜீவக்ராஹம் க்ருஹீத்வா கமடம் கரடிம் ச பக்ஷயந் பக்ஷிமல்ல:* என்று ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில் இதைத் தெரிவித்துள்ளார்.

***யாதஸ்ய நாகம் த்வம்ருதாபஹர்து:*** – தன் தாய் வினதையை மீட்கும் பொருட்டு ஸ்வர்கத்தை நோக்கிச் சென்று அமுதத்தை அபஹரித்து வந்தவர்.

செற்றார் திறலழிய சென்று செருச்செய்யும் என்றபடி தேவர்களின் இருப்பிடமாகிய தேவலோகத்துக்கே சென்று யுத்தம் செய்து அவர்களை வீழ்த்தி, தேவாம்ருதத்தை அபஹரித்தவர் கருடன். கருடன் தேவாம்ருதத்தை எடுத்து வரும்போது, அது ஹரித்வார், ப்ரயாகை, நாசிக், உஜ்ஜைன் ஆகிய நான்கு இடங்களில் சிந்தியதாகவும், அதன் காரணமாகவே வட இந்தியாவில் இவ்விடங்களில் கும்பமேளா கொண்டாடப்படுவதாகவும் ஐதிஹ்யம் உள்ளது.

***மா தஸ்ய கோப்யஸ்தி ஸமோ ஜகத்யாம்*** – ந கச்சித் ஸமஸ்தே என்று கருட தண்டகத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்தபடி கருடனுக்கு நிகரானவர் இந்த உலகில் யாவருமில்லை.

**தம்முடைய வேகத்தில் காற்றை வென்றவரும், பறவைகளின் அரசராகத் திகழ்பவரும், தம் தந்தையின் கூற்றின்படி யானையையும் ஆமையையும் உண்டவரும், ஸ்வர்கத்துக்குச் சென்று அமுதத்தை அபஹரித்தவருமான கருடனுக்கு நிகரானவர் இவ்வுலகில் யாருமில்லை.**

**24. காராக்ருஹாந்த: கலிதாவதாரம்**
**வாராணஸீதாஹகசக்ரபாணிம்|**
**தாராதரம் கஞ்சந ஸம்வஹந்தம்**
**ஸாராதிகம் பக்ஷிபதிம் ப்ரபத்யே||**

***காராக்ருஹாந்த: கலிதாவதாரம்*** - *சிறைச்சாலையில் திருவவதாரம் செய்த கண்ணபிரான்.*

*ஸம்ஸாரம் என்னும் சிறையில் சிக்கிக் கிடக்கும் நம்மை விடுவிக்க எம்பெருமான் கண்ணனாகச் சிறைச்சாலையில் வந்து பிறந்தான். நம்முடைய ஸம்ஸாரக் கட்டுக்களை உடைப்பதற்காக அவன் உரலோடு கட்டுண்டான்.*

***வாராணஸீதாஹகசக்ரபாணிம்*** - *தன்னுடைய சக்ராயுதத்தாலே காசி நகரத்தையே எரித்தவன்.*

*காசிராஜன் கண்ணனால் யுத்தத்தில் வதைக்கப்பட்டதால், அவனது மகனான ஸுதக்ஷிணன் சிவபெருமானைக் குறித்து தாந்த்ரிக முறையில் யாகம் செய்து, தீயைக் கக்கும் ஒரு பூதத்தைத் துவாரகையை நோக்கி ஏவினான். அதைக் கண்ட எம்பெருமான் தன்னுடைய சக்கராயுதத்தை அதை எதிர்த்துச் செலுத்தியவாறே, பயந்து போன அந்த பூதம் ஸுதக்ஷிணனையே போய் தாக்கியது. அதைத் துரத்திச் சென்ற சக்கரத்தாழ்வார் காசி நகரத்தையே எரித்துச் சாம்பலாக்கினார்.*

*ஸ்ரீ நடாதூர் அம்மாள் சக்கரத்தாழ்வார் விஷயமாக அருளிச் செய்த ஹேதிபுங்கவஸ்தவத்தில் "நிர்தக்த காசீபுர" என்று இச்சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார்.*

*ஸ்வாமி தேசிகன் யாதவாப்யுதயத்தில் சாம்பலைத் தரிக்கும் பரமசிவனுக்கு ஒருபோதும் பஞ்சமே ஏற்படாதபடி அவர் வசிக்கும் ஊரான காசியையே எரித்துச் சாம்பலாக்கிக் கொடுத்துப் பேருதவி புரிந்துள்ளார் சக்கரத்தாழ்வார் என்று ஸாதித்துள்ளார்:*

*"ஸ்யந்தநத்விரதவாஜிபதாதிப்ராஜ்யஸௌதபரிபாடிஸம்ருத்யா|*
*சக்ரவஹ்நிவிபவேந ததாபூத் சந்த்ரசேகரவிலேபநபூமா||"*

**தாராதரம் கஞ்சந ஸம்வஹந்தம்** - கார்மேகங்களைப் போல கரிய நிறத்தை உடைய அவ்வெம்பெருமானை வாகனமாக இருந்து தாங்குபவர்.

**ஸாராதிகம் பக்ஷிபதிம் ப்ரபத்யே** - பலம் நிறைந்தவரான பக்ஷிராஜரை சரணடைகிறேன்.

அகில உலகையும் தாங்குபவன் எம்பெருமான். முண்டகோபநிஷத், ‘‘யஸ்மிந் த்யௌ: ப்ருத்வீ ச அந்தரிக்ஷம் ஓதம் மநஸ்ஸஹ ப்ராணைச்ச ஸர்வை:’’ என்கிறது.

மேலுலகம், கீழுலகம், நடுவிலுள்ள உலகுகள், மனம், பிராணன் என அனைத்தையும் எம்பெருமான் தாங்குகிறான். ஆனால் அவனருளால் பலம் பெற்றவராக விளங்கும் கருடன் அந்த எம்பெருமானையே தம் தோள்களில் தாங்கி அவனுக்குத் தொண்டு செய்கிறார். அந்தப் பலசாலியான கருடனிடம் நம் ஸ்வாமி சரணாகதி செய்கிறார் இந்த ச்லோகத்தால்.

***சிறைச்சாலையில் அவதரித்தவரும், காசியைத் தன் சக்கரத்தால் எரித்தவரும் கார்முகில் வண்ணனுமான கண்ணபிரானைத் தாங்கும் பலம் நிறைந்தவரான பக்ஷிராஜரைச் சரணடைகிறேன்.***



# சுலோகங்கள் 25 முதல் 27 வரை

ப்ருஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய வேதபாஷ்யரத்னம்
சாஸ்த்ரரத்னாகரம் முல்லைவாஸல்
**Dr.R.க்ருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள், M.A., Ph.D.**

**25.** காராக்ருஹத்தினுள் (ஜெயிலுக்குள்) பிறப்பை அடைந்த மேகத்தை (ஒத்த) ஸ்ரீக்ருஷ்ணனைத் தனது முதுகில் சுமந்து செல்லும் பக்ஷிகளின் ராஜாவாக விளங்கும் ஸ்ரீ கருடனானவர் என்னை ஸம்ஸாரம் என்கிற பெயரை உடைய காரா க்ருஹத்திலிருந்து எடுத்து சென்று விஷ்ணுபதத்தில்-வைகுண்டத்தில்-மோக்ஷ உலகில் வைக்கட்டும்.

இந்த சுலோகத்தில் **कारा, धारा, कारा, वीरा** என்று ஒவ்வொரு பாதத்தின் ஆரம்பத்திலும் ப்ராஸம் ரமணீயமாக அமைந்து கேட்போருக்கு ஆனந்தம் தருகிறது. எனவே தான் **प्रासाविहार:** என்ற துணைத்தலைப்பின் கீழ் இது வந்திருக்கிறது.

**26.** அதே ஸ்ரீ கருடாழ்வாரை அடுத்த சுலோகத்திலும் வர்ணிக்கிறார் கவி - 'எவருடைய குணகூட்டங்களால் ஸ்ரீ விஷ்ணுவானவர் வச்யப்பட்டுள்ளாரோ, எவருடைய கடாக்ஷப் பார்வையினால் நமது பாபங்கள் நசிக்கின்றனவோ மேலும் பாம்புகளின் உயிர்கள் எவரால் பிரிந்து செல்கின்றனவோ, அப்பேற்ப்பட்ட இநத் கருடாழ்வார் நம்மை எல்லாம் கடாக்ஷத்தினால் பார்த்து அருளட்டும்.

போன சுலோகம் போலவே இதிலும் நான்கு வரிகளின் தொடக்கத்தில் **वश्य, नश्य, भ्रश्य, पश्य** என்றவாறு **प्रासं** மிகவும் அழகாக ஒலிக்கிறது பாபம் பாம்பின் விஷம் போல சித்தரிக்கப்பட்டுள்ளது மிக அழகு.

**27.** நாச்சியார் கோவிலிலுள்ள தாயாருக்கு வஞ்ஜுலவல்லி என்று திருநாமம். வஞ்சுலம் என்ற கொடியின் நடுவே ஆவிர்ப்பவித்ததால் யோக ரூடரூமான பெயர் என்று பொரியோர்கள் கூறுகின்றனர். ஸ்ரீ வஞ்ஜுலவல்லீ நாயகரான எம்பெருமானுக்கு வாஹனமானவரும், கல்லால் ஆன விக்ரஹமானபடியால் கவசத்தினால் அலங்கரிக்கப்பட்டவரும், ஸேவார்த்திகளின் மனதையும் கண்ணையும் ஸந்தோஷப் படுத்துபவருமான ஸ்ரீ கருடாழ்வாரை வணங்குகின்றேன்.

இந்த சுலோகத்திலும் **वञ्जुल, अञ्जन, मञ्जुल, रञ्जित –** என்றவாறு முதல் சொற்களின் மஞ்ஜுவான **ञ्ज** கமானது மிக ரஞ்ஜகமாகவே விளங்குகின்றது. கருடனின் திருமேனி குங்குமாங்கித வர்ணமாக இருப்பினும் இந்த க்ஷேத்திரத்தில் கற்கருடனான படியால் கருப்பான திருமேனி என்று கவி கூறுகிறார். எம்பெருமானின் வாகனத்திற்கும் எம்பெருமானது றிம் இருப்பது பொருந்தும் தானே !



## சுலோகங்கள் 28 முதல் 30 வரை

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் மேதாவிமணி Dr.மண்டயம்
அனந்தாண்பிள்ளை **வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமி,**
திருவல்லிக்கேணி

ஐந்து விஹாரங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள க்ஷேமகாரி சதகம் எனப்படும் இந்த க்ரந்தத்தின் மூன்றாம் விஹாரமான அநுப்ராஸ விஹாரத்தில் ஒவ்வொரு அடியிலும் முதல் எழுத்துக்கள் ஒன்றாக - மோனை நயத்தில் அமைந்துள்ளன. 26 ச்லோகங்களை உடையதான இந்த விஹாரத்தின் முதல் ச்லோகம்

**28. பரஸ்ய பும்ஸ: ப்ரணயைகபாத்ரம்**
**பயோதிஜாபத்தநக்லுப்தவாஸ:|**
**பதோதரப்ராணகணாபஹாரீ**
**பதங்கராஜ: பரிதஸ்ஸ பாது||**

**பரஸ்ய பும்ஸ: ப்ரணயைகபாத்ரம்** - பரமபுருஷனான நறையூர் நம்பியின் அன்புக்குப் பாத்ரமானவர். எம்பெருமானின் அன்பையும் அருளையும் பெற்ற ஸம்ப்ரஸாதனாக விளங்கும் கருடன், அவனுக்கு ஸர்வகாலத்திலும் ஸர்வாவஸ்தைகளிலும் கைங்கர்யம் செய்யும் பேறு பெற்றுத் திகழ்கிறார். ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில் **(46).**

வேகோத்தாநம் விதாநம் - எம்பெருமான் சென்றால் விரைவாகப் பரவும் மேல்கட்டாகவும்,

வ்யஜநம் அநுகுணம் - களைத்திருக்கையில் புத்துணர்ச்சி தரும் விசிறியாகவும்,

வைஜயந்தீ ஜயந்தீ - வெற்றிக் கொடியாகவும்,

மித்ரம் நித்யாப்யமித்ரம் யுதி - பகைவருடன் போர் புரிகையில் உடனிருக்கும் உற்ற நண்பனாகவும்,

*விஜயரதோ யுக்யயோகாநபேக்ஷ:* - போருக்குச் செல்லும் போது வெற்றித் தேராகவும்,

*நிஷ்பர்யுதாஸோ தாஸ:* - தன்னுடைய மற்ற தொண்டர்களை விட்டாலும், கருடனை மட்டும் எம்பெருமான் நீங்குவதேயில்லை என்னும்படி தொண்டு செய்யும் தொண்டனாகவும்,

*நிஸ்ஸஹாயஸ்ஸஹாய:* - தான் பிறர் உதவியை நாடாமல் எம்பெருமானுக்கு எப்போதும் உதவி புரிபவனாகவும்

கருடன் விளங்குவதாகக் காட்டியுள்ளார். இதிலிருந்து தனக்குக் குடை (மேல்கட்டி), விசிறி, கொடி, நண்பன், வாகனம், தொண்டன் என அனைத்துமாக இருக்கும் பேற்றைத் தன் அன்பனாகிய கருடனுக்கு அருளியுள்ளான் என்பது தெளிவு. பெரிய முதலியார் தாஸஸ்ஸகா வாஹனம் ஆஸனம்... என்று அருளியதன் விளக்கமே ஸ்வாமி தேசிகனின் ச்லோகம்.

***பயோதிஜாபத்தநக்லுப்தவாஸ:*** - பாற்கடலில் தோன்றிய பெரிய பிராட்டியாரின் ஊரான நாச்சியார்கோவிலில் வசிப்பவர். உப்புச்சாறாகிய அமுதத்தைத் தேவர்களுக்குப் பெற்றுத் தருவதற்காக ஆராவமுதமாகிய எம்பெருமான் பாற்கடலைக் கடைந்தவாறே, அமுதில் வரும் பெண்ணமுதாகிய மஹாலக்ஷ்மி அங்கே தோன்றினாள். அந்தப் பிராட்டி நம்மைக் கடாக்ஷிப்பதற்காக நாச்சியார்கோவிலில் எழுந்தருளியுள்ளாள். அவளது அருளை நமக்கு வெகுவிரைவில் முழுமையாகப் பெற்றுத் தரவல்ல கருடனும் நறையூரில் நாச்சியார் - நம்பியோடு கூட எழுந்தருளியுள்ளார்.

***பதோதரப்ராணகணாபஹாரீ*** - வயிறையே காலாக உடைய பாம்புகளின் உயிரை அபஹரிப்பவர்,

**பதங்கராஜ: பரிதஸ்ஸ பாது** - பறவைகளின் அரசரான அந்த கருடன் அடியேனை எல்லாப் புறத்திலும் இருந்து கொண்டு

காக்க வேண்டும். எம்பெருமான் தன் அடியார்களை நாற்புறத்திலும் இருந்து கொண்டு ரக்ஷிப்பதற்காக வாஸுதேவன், ப்ரத்யும்நன், அநிருத்தன், ஸங்கர்ஷணன் புருஷோத்தமன் என்று ஐந்து உருவங்களுடன் நாச்சியார் கோயில் கருவறையில் காட்சி தருகிறான். அதுபோல, கருடனுக்கும் ஸத்யன், ஸுபர்ணன், கருடன், தார்க்ஷ்யன், விஹகேச்வரன் என்று போற்றப்படும் ஐந்து வடிவங்கள் ஆகமங்களில் கூறப்படுகின்றன. அவைகளுடன் கருடன் வந்து அனைத்துத் திசைகளிலும் இருந்து கொண்டு அடியேனைக் காக்க வேண்டுமென்று இந்த ச்லோகத்தில் ஸ்வாமி ப்ரார்த்திக்கிறார்.

**பரமபுருஷனின் அன்புக்குப் பாத்ரமானவரும், திருமகளின் திருநகரான நாச்சியார்கோவிலில் வசிப்பவரும், வயிறையே காலாக உடைய பாம்புகளின் உயிரை அபஹரிப்பவருமான பக்ஷிராஜன் என்னை எல்லாப் புறத்திலும் இருந்துகொண்டு காக்க வேண்டும்.**

**29. பதே பயோதே: ப்ரியகந்யகாயா**
**பதாப்ஜஸஞ்சாரபவித்ரிதேऽஸ்மிந்|**
**பதோதராமோதவிஹாரஹாரி**
**பதே பதே ஸம்பதமாதநோது||**

**பதே பயோதே: ப்ரியகந்யகாயா** - பாற்கடலின் அன்பு மகளான மஹாலக்ஷ்மியின் ஊரான நாச்சியார்கோவிலில். பிராட்டி பாற்கடலினின்று அவதரிக்கையில்,

**"ரதிர்மதி ஸரஸ்வதீ த்ருதி ஸம்ருத்தி ஸித்தி ச்ரிய:**
**ஸுதாஸகி யதோமுகம் சிசலிஷேத் தவ ப்ரூலதா"**

என்னும்படியான அவளது திருக்கண் கடாக்ஷம் தேவர்களுக்கு மட்டுமே கிட்டியது, பூமியில் வாழும் ஸாதாரண மனிதர்களுக்குக்

கிட்டவில்லை. ஆனால் அவளுடைய திருநாமமிட்டே விசேஷமாக வழங்கப்படும் நாச்சியார் கோவிலாகிய திருநறையூரில் மேதாவியின் தவப்புதல்வியாக, வஞ்ஜுளவல்லியாகப் பிராட்டி அவதரித்த அளவிலே அவளது கடாக்ஷம் நம் போன்ற ஸாமானியர் அனைவருக்கும் கிட்டியது. அதனால் தான் பாற்கடலை விடத் திருநறையூரே விசேஷித்து நாச்சியாரின் இருப்பிடமாகக் கொண்டாடப்படுகிறது.

**பதாப்ஜஸஞ்சாரபவித்ரிதேऽஸ்மிந்** - வஞ்ஜுளவல்லீ நாச்சியாரின் திருவடி பட்டதால் புனிதமடைந்த இந்த க்ஷேத்ரத்தில், பிராட்டியின் திருவடிகளின் மேன்மையை ஸ்ரீகுணரத்னகோசத்தில்,

**ஸுரபிதநிகமாந்தம் வந்திஷீயேந்திராயா:**
**தவ கமலபலாசப்ரக்ரியம் பாதயுக்மம்|**
**வஹதி யதுபமர்தைர்வைஜயந்தீ ஹிமாம்ப:**
**ப்லுதிபிரிவ நவத்வம் காந்தபாஹூந்தராளே||**

என்ற ச்லோகத்தில் வெகு அழகாக ஸ்ரீபராசர பட்டர் வர்ணிக்கிறார். ஸ்ரீரங்கநாயகியே! வேதாந்தங்கள் உன் திருவடிகளின் ஏற்றத்தையே பாடி, அத்திருவடிகளையே தங்கள் தலையால் சுமக்கின்றன. அதனால் தான் உன் திருவடிகளின் மணம் வேதமணங்களில் கமழ்கின்றது. எம்பெருமானின் திருமார்பில் அமர்ந்தபடி நீ உன் பிஞ்சுத் தாமரை போன்ற திருவடிகளால் அவனது வைஜயந்தி மாலையை தீண்டுவதால் தான் பனிப்பெட்டியில் வைத்தது போல அது வாடாமல் வாசனையோடு இருக்கிறது என்பது இந்த ச்லோகத்தின் பொருள்.

அப்படிப்பட்ட திருவடிகளாலே ஏற்றமும் புனிதமும் பெற்ற நறையூரில்,

***பதோதராமோதவிஹாரஹாரி*** - *வயிறையே காலாக உடைய பாம்புகளின் உத்ஸாஹ விளையாட்டுக்களை அபஹரித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கும் கருடன்.*

***பதே பதே ஸம்பதமாதநோது*** - *நம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் வளங்களை அருளட்டும்.*

***ஸமுத்திர ராஜனின் ப்ரியமான மகளான பிராட்டியின் இருப்பிடமும், அவள் திருவடிகளின் ஸ்பரிசத்தாலே புனிதமாக்கப்பட்ட க்ஷேத்ரமுமான திருநறையூரில், பாம்புகளின் ஆனந்த விளையாட்டுக்களை அபகரித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கும் கருடன், நம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் வளங்களை அருளட்டும்.***

***30. பத்மாநிவாஸஸதந: பரமஸ்ய வாஹ:***
***பக்ஷாநிலக்ஷபிதபந்நகராஜராஜி:|***
***பாகாரிஸைந்யபரிபாவுகவீர்யலேச:***
***பத்யாநி மே திசது பத்ரரதாவதம்ஸ:||***

***பத்மாநிவாஸஸதந:*** - *பிராட்டியின் இருப்பிடமான நாச்சியார் கோவிலில் எழுந்தருளியிருப்பவர்.*

*எம்பெருமானின் அருளை நமக்குப் பெற்றுத் தரக்கூடியதான புருஷகாரம் என்னும் ஸ்தானத்தில் பிராட்டியிருக்கிறாள். அவள் எம்பெருமானின் கல்யாண குணங்களைக் கிளர்ந்தெழச் செய்து, அவனது அருளை நமக்குப் பெற்றுத் தருவது போலவே கருடனும் அவனது அருளை நமக்குப் பெற்றுத் தரும் புருஷகார ஸ்தானத்தில் விளங்குவதால், பிராட்டியின் இடத்தில் - ஸ்தானத்தில் - அவரும் இருப்பதாக ஸ்வாமி குறிப்பிடுகிறார். ஸ்வாமி தேசிகன் கருட மந்திரத்தை ஜபித்து, கருடனை முதலில் ஸேவித்துப் பின் கருடனின் புருஷகாரத்தால் ஹயக்ரீவரின் லாலாம்ருதத்தைப் பெறும்பேறு பெற்றாரன்றோ ?*

***பரமஸ்ய வாஹ:*** - பரம புருஷனான நறையூர் நம்பிக்கு வாஹனமாக விளங்குகிறார்.

***பக்ஷாநிலக்ஷபிதபந்நகராஜராஜி:*** - தன் இறக்கைகளின் காற்றினாலேயே பாம்புகளின் கூட்டங்களை எல்லாம் வென்றவராக விளங்குகிறார். நம்மாழ்வார் கருடனின் சிறகொலியில் மிகவும் ஈடுபட்டுப் பண்கொண்ட புள்ளின் சிறகொலி எனக் குறிப்பிடுகிறார். அதாவது கருடன் தன் சிறகுகளை அசைத்துக் கொண்டு பறக்கையில் அந்தச் சிறகுகளிலிருந்து சாமகானம் கேட்குமாம். அந்தச் சிறகுகளின் காற்றைக் கொண்டே பாம்புக் கூட்டங்களை வெல்கிறார் கருடன்.

***பாகாரிஸைந்யபரிபாவுகவீர்யலேச:*** - இந்திரனின் ஸேனையைத் தன் வீரத்தின் லவலேசத்தாலேயே வென்றவர். ஸ்தம்பிதே ஜம்பசத்ரௌ என்கிறார் ஸ்வாமி தேசிகன்.

***பத்யாநி மே திசது பத்ரரதாவதம்ஸ:*** - அந்தப் பறவைகளின் அரசன் அடியேனுக்கு நன்மைகளைக் காட்டியருளட்டும்.

***பிராட்டியின் இருப்பிடமான நாச்சியார் கோவிலில் எழுந்தருளியிருப்பவரும், பரம புருஷனான நறையூர் நம்பிக்கு வாஹனமாக விளங்குபவரும், தன் இறக்கைகளின் காற்றினாலேயே பாம்புகளின் கூட்டங்களை எல்லாம் அழிப்பவரும், இந்திரனின் ஸேனையைத் தன் வீரத்தின் லவலேசத்தாலேயே வென்றவருமான பறவைகளின் அரசன் அடியேனுக்கு நன்மைகளை அருளட்டும்.***

# ஸ்லோகங்கள் 31 முதல் 33 வரை

ப்ரஹ்ம ஸ்ரீ வித்வான் பாலவேதவ்யாஸ **B.ஸுந்தரகுமார்**

***ச்லோகம் 31***

***பத்மாஸத்மாபிராம:*** - மஹாலக்ஷ்மீ தாயாரின் வாசஸ்தானமாகிய நாச்சியார் கோவிலை தனது வாஸத்தால் இனியதாக ஆக்குபவரும்

***பதகபரிப்ருட:*** - பக்ஷிகளுக்கு தலைவரும்

***பாஷாணவர்ஷ்மா-*** கல்லாலான அல்லது கல்லைப் போன்ற திருமேனியுடையவரும்

***பாதாளாந்த:*** - பாதாளத்தின் முடிவில் (எல்லையில்)

***ப்ரவிஷ்ட:*** - ப்ரவேசித்து

***பந்நகாநாம்*** - பாம்புகளின்

***பயபரம்*** - பயத்தின் பாரத்தை

***அதிகம்*** - அதிகமாக

***வர்தயன்*** - வளர்ப்பவரும்

***தம்*** - அந்த (அத்தகைய பெருமை பெற்ற)

***பத்மாகாந்தம்*** - லக்ஷ்மீகாந்தனான எம்பெருமானை

***பதி*** - வழியில்

***வஹந்தம்*** - தாங்கிக்கொண்டு செல்பவரும்

***ஸதி*** - நல்ல

***பச்யதாம்*** - (அதனைப்) பார்க்கும்

***மருதாம்*** - தேவர்களுடைய

***அக்ஷிஜாதே ஸதி*** - கண்களின் கூட்டத்தில்

***மோதாபிஜாதம்*** - ஸந்தோஷத்தால் ஏற்பட்டதும்

***கிமபி*** - ஒப்பற்றதும்

***க்ஷாலிதாதம்*** - பாபத்தை நீக்கிய

***பாத:*** - ஆனந்தக் கண்ணீரை

***விகலிதம்*** - விழுந்த

***விதன்வன்*** - செய்பவருமான (பெரிய திருவடி)

***பாது*** - காக்கட்டும்

***பாப விசேஷங்கள்***

*1. பெரும்பாலான பதங்கள் பகாரத்தில் வரும் ப்ராஸத்தின் அழகை அனுபவிக்க வேண்டும்.*

*2. பத்மாத்மாபிராம: என்ற பதத்துக்கு அன்மொழித் தொகையில் அர்த்தம் பண்ணியுள்ளது. மூன்றாம் வேற்றுமைத் தொகையில் (பத்ஸத்மனா அபிராம:) என்று அர்த்தம் செய்தால் “எம்பெருமானின் திவ்ய ஸம்பந்தத்தால் அழகடைந்தவர்” என்ற அர்த்தத்தையும் கொடுக்கும். ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தை ஸ்ரீமத் பாகவதத்தில் வர்ணிக்கும்பொழுது கலசோபிகௌஸ்துபம்* गलशोभिकौस्तुभं *என்ற பதத்தை “கழுத்தில் ப்ரகாசிக்கும் கௌஸ்துபம்” என்றும் “கழுத்தால் ப்ரகாசிக்கும் கௌஸ்துபம்” என்றும் வ்யாக்யானம் செய்வது போல்.*

*3. பாதோ மோதாபிஜாதம்* पाथोमोदाभिजातः *– ஆனந்தக் கண்ணீர். அதாவது ஆனந்தத்தினால் உண்டாகிய கண்ணீர். கரு ஸேவையைக் கண்டு தேவர்கள் கண்ணிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறதாம்.*

*4.* க்ஷாலிதாதம் क्षालिताधं - அவ்வானந்தக் கண்ணீர் பாவங்களை கழுவி அகற்றுகின்றன.

*5.* பத்மகாந்தம் வஹந்தம் पद्मकान्तं वहन्तं पश्यतां என்ற தொடருடன் அக்ஷிஜாதே अक्षिजाते என்பதை அன்வயித்தால்: "நாம் அம்ருதபானம் செய்தும் பெருமாளைத் தாங்கும் பாக்யத்தை அடையவில்லையே! அம்ருதப்ராசனம் செய்யாத பெரிய திருவடியோ இந்த பாக்யத்தை அடைந்திருக்கிறாரே! த்யாகத்தால் தானே எம்பெருமானை அடைய வேண்டும் (த்யகேநைகே நாம்ருதத்வமானஷு त्यागोनैके नामृतत्वमानशु:)" என்று தேவர்கள் எல்லோரும் திருவடியை வியந்து நோக்கினர் என்ற பொருளைக் கொடுக்கும்.

*6.* நாச்சியார் கோவிலில் கல்லாலான கருடவாஹனத்தை மனதில் கொண்டு பாஷாணவர்ஷ்மா என்ற பதப்ரயோகம்.

*7.* கல்லைப்போல் நிச்சலமான பக்தியுடன் பெருமாளைத் தாங்குவதாலும் பாஷாணவர்ஷ்மா பாடி.

*8.* வஜ்ராதபி கடோராணி ம்ருதூநி குஸுமாதபி वज्रादपि कठोराणि मृदूनि कुसुमादपि என்ற வசனத்துக்கு ஏற்ப, உடல் கல்லானாலும், உள்ளம் மிகுந்த கருணையுடன் கூடியிருப்பதால் (விசேஷமாக நாச்சியார் கோவிலில் எழுந்தருளியிருக்கும் கருடாழ்வார் சிறந்த வரப்ராஸாதியாக ப்ரகாசிக்கிறார்) பாது पातु - அவர்தான் பக்தர்கள் அனைவரையும் ரக்ஷிக்க வேண்டும்.

**ச்லோகம் 32**

**பஸகதிஜுஷாம்** - மிகுந்த வேகமுடையவர்களுள்

**பாரம்யதைகபாத்ரம்** - முதல் ஸ்தானம் வஹிப்பவரும்

**பந்நகாப்ராணஹாரீ** - பாம்புகளின் ப்ராணனை அபஹரிப்பவரும்

**பாராபேதாகமாத்மா** - கரையில்லா (முடிவில்லா அனந்தமான) வேத வடிவமானவரும்

**ப்ரனத ஜனமன ஸ்சிசிந்திதார்த்த ப்ரதாதா** - தன்னை வணங்கும் ஜனங்களின் மனதால் நினைக்கப்பெற்ற பொருளனைத்தையும் வழங்குபவரும்

**பாதோஜாக்ஷஸ்ய** - தாமரைக் கண்ணனின்

**வாஹ:** - வாஹனமானவரும்

**பதகபரிப்ருட:** - பக்ஷிகளின் தலைவரும்

**பாராவாராத்மஜாதாஸதனபூர்வர ஸ்ரீக்ருஹே** - ஸமுத்ர கன்னிகையாயுதித்த தாயாரின் திவ்ய க்ஷேத்ரமான நாச்சியார் கோவிலில்

**ராஜமான:** ப்ரகாசிப்பவருமான (கல்கருடாழ்வான்)

**மாம்** - என்னை

**பாபப்ருந்தாத்** - பாபக்கூட்டத்திலிருந்து

**பாது** - ரக்ஷிக்கட்டும்

**பாவ விசேஷங்கள்**

**1.** இந்த சுலோகத்திலும் பெரும்பாலான பதங்கள் பகாரத்தில் துவங்கும் ப்ராஸாலங்காரம் கவனிக்கத்தக்கது.

2. பாராபேதாகமாத்மா - சந்தோமயேன கருடேன छन्दोमयेन गरुडेन என்று ஸ்ரீமத்பாகவதத்திலும், ச்ருதி சிந்துஸு₃தோத் பாதமந்தராய श्रुतिसिन्धुसुधोत्पादमन्दराय என்றும் ச்ருதிசதசிகராபிஷ்டு தாத்மா கருத்மான் श्रुतिशताशीखशाभिष्टुतात्मा गरुत्मान् என்றும் ஸ்வாமி தேசிகனும் அருளிய வாக்யங்களை நினைவூட்டும் பதம். இப்படி கூறினதால் எம்பெருமானின் மூச்சுக் காற்றே கருடாழ்வார்தான்

என்பதும் ஸித்தமாகிறது. (யஸ்ய நி: ச்ரவசிதம் வேதா: यस्य नि: श्वसितं वेदा:).

**ச்லோகம் 33**

**யம்** - எவரை

**அனுகந்தும்** - பின் தொடர்ந்து

**ஜாத:** - தோன்றிய

**வாத: ச** - காற்றும் கூட

**இஹ** - இங்கு

**கதிபதே** - வேக விஷயத்தில்

**மனாகபி** - லவலேசங்கூட

**நோ அலம்** - ஈடுகொடுக்க முடியவில்லையோ

**யேன** - எவரால்

**விகடிதகடிதே** - பிரிந்து சேர்ந்தால்

**ருத்ராஸுகீர்த்தி** - ருத்ரா, ஸுகீர்த்தி எனும்

**ஜாயே** - அவருடைய இரு பத்னீகளும்

**சீக்ரம்** - சீக்ரமாக

**ஹ்ருயத:** - ஸந்தோஷப்படுகிறார்களோ

**ஜானக்யானந்தத ஸ்ரீரகுகுலஜமணே:** - ஜானகீ தேவிக்கு ஆனந்தத்தைக் கொடுப்பவன் ரகு குலத்தில் உதித்த மணியான (எம்பெருமான் ராகவனுக்கு)

**ஜீவிதஸ்ய ப்ரதாதா** - உயிரைக் கொடுத்தவரும்

**அண்டஜானம் ப்ரதான:** - பக்ஷிகளில் முக்யமானவரும் ஆன

**ஸ பகவான்** - அந்த பெரிய திருவடி

**மே** - என்னுடைய

**பாபஸ்ய** - பாபத்தின்

**அலம்** - என்னைத் தாக்குவதற்குத் தேவையான கூட்டமான

**ஜாலம்** - வலையை

**ஹரது** - அபஹரிக்கட்டும்.

**பாவ விசேஷங்கள்**

**1.** பெருமாளுடைய கைங்கர்யத்துக்காக, அடிக்கடி பெருமாளின் திருவுள்ளத்துக்கு இசைந்து வெகுதூரம் சஞ்சாரம் செய்யும் பொழுது விரஹதாபத்தையனுபவிக்கும் திருவடியின் தேவிகள், அவர் சீக்கிரமாக திரும்பும்பொழுது ஸந்தோஷிக்கின்றார்கள்.

**2.** கடிதவிகடிதே घटितविघटिते என்ற பாடத்தை ஏற்றால், பெருமாள் கைங்கர்யத்துக்காக கிளம்பும் முன்பே, தேவிகளோடு ஸந்தோஷமாக இருக்கும் திருவடியின் வாஞ்சையை நினைத்து நினைத்து அவரது தேவிகள் ஸந்தோஷிக்கிறார்கள் என்ற அர்த்தம் த்வனிக்கும்.

**3.** ஸ்ரீமத் ராமாயணத்தில் நாகபாசத்தால் பாதிக்கப்பட்ட எம்பெருமானைத் திருவடி விடுவித்த விவரம் யுத்த காண்டத்தில் 50-வது ஸர்க்கத்தில் கவனிக்கத்தக்கது. இவ்விஷயத்தில், ஸ்வாமி தேசிகன் அருளிய கருடபஞ்சாத்தின் வேகோத்வேல: சுவேல: वेगोद्वल: सुवेल: என்று ஆரம்பிக்கும் 48-வது சுலோகத்தையும் காண்க.

**4.** நிற்க, ஸீதைக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் ஸ்ரீராமனுக்கும் திருவடி தர்சனத்தால் மிகுந்த ஆனந்தம் என்பது த்வனி. இதற்கு ஸ்ரீமத்ராமாயணத்தின் கீழ்க்கண்ட ச்லோகமே ப்ரமாணம்.

**யதா தாதம் தசரதம் யதாஜம் ச பிதாமஹம்|**
**ததா பவந்தமாஸாத் ஹ்ருதயம் மே ப்ரசிததி||**

*(யுத்தகாண்டம், 50-வது ஸர்கம், 43-வது ச்லோகம்)*

5. பெரிய திருவடியைப் பின்பற்றி எழுந்த வாயுவின் வேகத்தை ''மாயிதா பக்ஷவரதேன'' என்பார் வால்மீகி. அதனால் கருடனுக்கு அடுத்தபடி அவருடைய இறக்கைகளினால் உண்டான காற்றினால் வாயுவின் வேகத்தை சொல்வது போல் வர்ணிக்க வேண்டுமென்பதற்கு ப்ரமாணமான ச்லோகங்கள் வருமாறு:

ஸ்ரீராமபிரான் கூற்று:

**ந ஹி தம் பரிபச்யாமி யஸ்தரேத மஹோததிம்|**
**அன்யத்ர கருடாத்வாயோரன்யத்ர ச ஹனுமத:||**

*(யுத்தகாண்டம் 1-ம் ஸதகம், 3-வது ச்லோகம்)*

ஸ்ரீஸீதாபிராட்டியின் கூற்றும்:-

**த்ரயாணாமேவ பூதாநாம் சங்ரஸ்யாஸ்ய லங்கனே|**
**சக்தி: ஸ்யாத்வைநதேயஸ்ய தவ வா மாருதஸ்ய வா||**

*(ஸுந்தரகாண்டம் 68-வது ஸர்கம், 9-வது ச்லோகம்)*

இவ்விரு ச்லோகங்களிலும், பெரிய திருவடிக்கே முதல் ஸ்தானம் கொடுக்கப்பட்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

7. ஹரது हरतु என்ற பதம் மிக ரஸமானது. அனைத்து தேவர்களையும், வஜ்ராயுதத்தையும் மீறி அம்ருதத்தை க்ரஹித்த கருடாழ்வாருக்கு நம் பாபங்களைத் திருடுவது ஒரு பொருட்டா? நிற்க, அம்ருதத்தை ப்ராசனம் செய்யாதது போல், திருடப்பட்ட நம் பாபங்கள் அவரைச் சேராவென்பது த்வனி. மேலும் யதா ராஜா ததாப்ரஜா என்ற ந்யாயத்தை அனுஸரித்து, ஜாரச்சோர சிகாமணியாகக் கொண்டாடப்படும் எம்பெருமானுடைய திவ்ய ஸங்கத்தை நீண்ட காலம் அடைந்ததால், திருவடிக்கும் அடியார்களுடைய பாபக் கூட்டத்தினைத் திருடுவது ஒரு பொருட்டேயல்ல என்பதையும் உணரவேண்டும்.

# சுலோகங்கள் 34 முதல் 36 வரை

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காணியம்பாக்கம் இளையவல்லி
**Dr.தரணீதராசார்யஸ்வாமி,** புதுச்சேரி

வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் ஆசுகவிஸார்வ பௌம மஹாவித்வான் ஸ்ரீமதுபயவே. ஸ்ரீநிதி (எ) ஸ்ரீநிவாஸராகவார்ய மஹாதேசிக ஸ்வாமி நாச்சியார் கோவிலில் எழுந்தருளியிருக்கும் கல்கருடன் விஷயமாகத் தாம் அருளிச் செய்த க்ஷேமகாரி சதகம் என்ற அற்புதமான ஸ்தோத்திரத்தின் 34, 35, 36 ஆகிய மூன்று ச்லோகங்களில் வார்த்தை விளையாட்டுகளாலும், சமத்காரத்தாலும் ரஸிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்கிறார்.

ஸம்ஸ்கிருத வார்த்தைகளைக் கொண்டு விளையாடுவதில் வல்லவரான நம் ஸ்வாமி தமது வஸுமதீ சதகத்திலும் ம என்ற ஓர் எழுத்தையே பதினெட்டு முறை பயன்படுத்தி அற்புதமான ஒரு ச்லோகத்தை அருளியுள்ளார்.

**மாந்யே மாநிதி மாரகேலிதயிதே மாராரிமாநப்ரதே**
**மாயாவாரிணீ மதுரிபோஸ்ஸம்மோஹிநீ ஸ்வாமிநீ|**
**மாலாலாலிதமூர்தஜாதமஹிதே மந்தாரவாஸைர்நதே**
**மாதர்மாதவி! மஞ்ஜுளாதரதலே மந்தம் தயேதா மயி||**

அதுபோல ஒவ்வொரு விஹாரத்திலும் ஒவ்வொரு விதமான வார்த்தை விளையாட்டை உடையதான க்ஷேமகாரி சதகத்தின் 34-வது ச்லோகம் வருமாறு:

**34. உபலவபுஷமீடே நாயகம் பக்ஷபாஜாம்**
**உபலமுபலமஸ்மிந் இந்திராமந்திரே ந:|**
**உபலலிதநிதாநம் ஸ்ரீபவர்காத்ருதாக்யம்**
**கமபி பஹுவிசித்ரம் ஸ்வாபவர்கப்ரதம் தம்||**

**உபலவபுஷமீடே நாயகம் பக்ஷபாஜாம்** - அழகிய கல்லாலான திருமேனியோடு விளங்கும் பறவைகளின் அரசனான கல்கருடனை வணங்குகிறேன்.

**உபலமுபலமஸ்மிந் இந்திராமந்திரே ந:** - நாச்சியார் கோவிலில் எழுந்தருளியிருந்து நமக்கு நற்பலன்களை உறுதியாகத் தருபவரும் (உ என்பது ஏவ என்ற பொருளில் வருகிறது. உபாஸகர்களுக்கு இவர் பலம் தருவது உறுதி என்ற அடிப்படையில் இவரை உபலர் என்கிறார் கவி). நாச்சியாரைத் தனக்குப் பலமாகக் கொண்டவரும் (உ என்பது நாச்சியாரைக் குறிக்கும். அவரே யாருக்கு பலமோ அவர் உபலர் என்றபடி)

**உபலலிதநிதாநம்** - உ என்னும் சொல் சந்திரனையும் குறிக்கும். வாசஸ்பத்யம் என்னும் ஸம்ஸ்க்ருத கலைக்களஞ்சியத்தில் "ஷோடசகலாத்கமக - சந்த்ர மண்டல ரூபேணே உகாரஸ்ய த்யேயத்வோக்த்யா அபேதோபசாராத் ஷோடசகலாத்மகே சந்த்ரே..." என்று உள்ள விளக்கத்தின்படி உ என்பது பூர்ண சந்த்ரனைச் சொல்லும். பா என்னும் சொல் ஒளியைக் குறிக்கும். இதனால் சந்திரனுக்கு யாரால் ஒளியோ அவர் உபர் ஆகிறார். அதாவது சந்திரமண்டலத்தில் கோயில் கொண்டு அவன ஒளிரச் செய்யும் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனே உபர் ஆகிறார். அவருடைய லலிதம் லீலை. அதற்குக் காரணமானவர் உப லலித நிதானம். அதாவது ஸ்வாமி தேசிகனுக்கு ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்து அதனால் அவர் மூலம் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனின் லீலையாகப் பல துறைகளில் ப்ரபந்தங்கள் வரக் காரணமாக இருந்தவர் கருடன் என்பதனால் கருடனை உபலலிதநிதானம் என்றபடி.

ஏன் இவ்வளவு தூரம் சுற்ற வேண்டும்? உப என்ற சொல் இரண்டு என்ற பொருளில் ப்ரஸித்தமானது தானே. நித்ய விபூதி, லீலா விபூதி என்னும் இரண்டு விபூதிகளிலும் பகவான் பல லீலைகள் புரிந்து விளையாட அவருக்கு வாஹனமான இவர்

துணையாக இருந்து காரணம் ஆகிறார். எனவே இவரை உபலலிதநிதானம் என்று ஸ்வாமி கொள்கிறார் என்று ஏன் புரிந்து கொள்ளக் கூடாது? என்ன வேண்டா. உப என்கிற சொல் ஸமாஸங்களில் உபய என்கிற வடிவத்தில் தான் வரும். **"வ்ருத்திமாத்ரே நித்யம் வ்யவச்"** என்ற இலக்கண நெறியின்படி இது தான் முறை. இதனால் தான் உபவேதாந்தம் உபவிபூதி என்னாது உபயவேதந்தம் உபயவிபூதி என்றே கூறும் மரபு உள்ளது.

**ஸ்ரீபவர்காத்ருதாக்யம் -** இப்படி உப$_1$ல, உப$_2$ல, உப$_3$ல, உப$_4$ல எனப் ப - வர்கத்தை - ப வரிசையிலுள்ள நான்கு எழுத்துக்களையும் உடைய சொற்களால் போற்றப்படுபவர்.

**கமபி பஹுவிசித்ரம் ஸ்வாபவர்கப்ரதம் தம் -** பவர்கத்தால் போற்றப்படுபவராக இருந்தாலும், மக்களுக்கு உடமையான அபவர்கம் என்றழைக்கப்படும் மோக்ஷத்தையும் தரவல்லவராக அவர் விளங்குகிறார். அப்படிப் புகழ் பெற்ற அந்த ஒப்பற்ற ஒருவரை மிகவும் ஆச்சர்யமான ஒருவரை ஈடே - வணங்கிடுகின்றேன்!

இந்த ச்லோகத்தில் ஸ்வாமியின் கவிதா சாதுர்யம் மிகவும் நன்றாக வெளிப்படுகின்றது. உப$_1$ல, உப$_2$ல, உப$_3$ல, உப$_4$ல என்று ப வரிசையில், அதாவது ப - வர்கத்தில் உள்ள சொற்களால் கருடனைப் போற்றிப் பவர்கத்தால் போற்றப்படும் கருடன் அபவர்கம் எனப்படும் முக்தியை (எம்பெருமான் அருளைத் தூண்டி)ப் பெற்று அளிப்பவனாகவும் விளங்குகிறான் என்று நயம் காட்டுகிறார்.

**கல்லாலான திருமேனியை உடையவரும் (உப$_1$லவபுஷம்), உறுதியாக நற்பலன்களைத் தருபவரும் (உப$_2$லம்), நாச்சியாரைத் தனக்குப் பலமாகக் கொண்டவரும் (உப$_3$லம்), சந்திர மண்டலத்துக்குள் இருந்து அதற்கு ஒளி அளிக்கும் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனுடைய லீலைகளான தேசிகஸூக்திகள் வரக் காரணமானவரும் (உப$_4$லலிதநிதாநம்), ஆன நாச்சியார்**

**கோவிலில் எழுந்தருளியிருக்கும் பக்ஷிராஜனை வணங்குகிறேன். இப்படி உப$_1$ல - உப$_2$ல - உப$_3$ல - உப$_4$ல என 'ப' வர்கத்தால் போற்றப்படுபவராக இருந்தாலும், 'அபவர்கம்' எனப்படும் மோக்ஷத்தையும் பெற்றுத் தரவல்லவராகவும் அவர் விளங்குவது மிகவும் ஆச்சரியமானதன்றோ !**

**35. விநதாத்மபவோ விநதாதரவாந்**
**விஹ்ருதிம் தத்தே ததிதம் யுக்தம்|**
**ஸுரஸஸ்ஸுதராம் ஸுரஸாத்மபவாந்**
**ஹரதீத்யேதத் பாதி விசித்ரம்||**

**விநதாத்மபவோ விநதாதரவாந் விஹ்ருதிம் தத்தே ததிதம் யுக்தம்** - *வினதை என்றால் வினயத்தோடு வணங்கியவள் என்று பொருள். அந்த வினதையின் மகனான கருடன் வணக்கத்துடன் வந்து அவன் அடிபணியும் வினதர்களிடம் ஆதரம் காட்டிப் பல லீலைகளும் புரிவது சரியானதே.*

**ஸுரஸஸ்ஸுதராம் ஸுரஸாத்மபவாந் ஹரதீத்யேதத் பாதி விசித்ரம்** - *ஆனால், பல ரஸங்களை மிகுதியாக உடையவனாகச் - ஸுரஸனாகச் - சுவையன் திருவின் மணாளன் என்று நம்மாழ்வார் அருளியது போலச் சுவையனாக விளங்கும் திருமாலுக்கு அந்தரங்கனாக இருப்பதால் ஸுரஸனாக இருந்த போதும், நாகமாதாவாகிய ஸுரஸாவின் பிள்ளைகளான பாம்புகளை வதைக்கிறாரே, இது மிகவும் விசித்திரமாக அன்றோ உள்ளது ?*

*இதே போன்ற சமத்காரத்தை நம் ஸ்வாமி கஜேந்த்ர மோக்ஷம் விஷயமாக அருளிச் செய்த குஞ்ஜர ரஞ்ஜனத்தின் பல்லாயிரம் ச்லோகங்களில் சிலவற்றிலும் கையாண்டுள்ளார். அதிலிருந்து ஓர் எடுத்துக்காட்டு.*

**விபதா ஸ்வபதாவலம்பயா**
**விநதந்நார்த்தமநாஸ்ஸரோகத:|**
**விபதம் புநராஜுஹாவ ஹா**
**விரஜாதீரபுவோ கஜாதிப:||**

என்ற ச்லோகத்தில், கஜேந்திரன் என்ற யானை, தனது காலை முதலை கவ்வியதால் விபத்து ஏற்பட்டவுடன், அந்த விபத்தில் இருந்து தன்னை விடுவிப்பதற்காக வேண்டி, விபத்தாகிய எம்பெருமானை அழைத்தது. 'வி' எனப்படும் கருடனைத் திருவடியாக கொண்டு விளங்குவதால் 'விபத்' என எம்பெருமான் குறிக்கப்படுகிறான். விபத்திலே மாட்டிக் கொண்ட வேழம் விபத்தான எம்பெருமானையே உதவிக்கு அழைத்தது என்கிற சமத்காரத்தைச் சுவைக்கவும்.

ஆண்டாளும் நாச்சியார் திருமொழியில், "குண்டு நீருரை கோளரீ! மதயானை கோள்விடுத்தாய்!" என்றாள். யானையைக் காத்த சிங்கமே! என்று இப்பாசுரத்தில் எம்பெருமானை அழைக்கிறாள். பொதுவாக யானையைத் தன் பகையாகத் தான் சிங்கம் கருதும். ஆனால் சிங்கப்பிரானோ, கஜேந்திரனைத் தன் பகையாகக் கருதாமல் ஓடிப் போய் காக்கிறானே, இதென்ன வியப்பு என்கிறாள்.

விபத்தே விபத்தைப் போக்கியது போல, தன் பகைவனான யானையைச் சிங்கமே காத்தது போல, இங்கு ஸுரஸனாக விளங்கும் கருடனே ஸுரஸாவின் பிள்ளைகளைக் கொல்கிறானே என்று கவிநயத்துடன் முரண்பாடு காட்டுகிறார் ஸ்வாமி.

**வினதையின் மகனான கருடன் வினதர்களிடம் (அடிபணியும் அடியார்களிடம்) அன்பு காட்டிப் பல லீலைகள் புரிவது பொருத்தமே. ஆனால், ஸுரஸனாக (சுவையனாக) விளங்கும் அவன் ஸுரஸாவின் பிள்ளைகளான பாம்புகளை வதைப்பது தான் விசித்திரமாக உள்ளது.**

**36. பதங்கராஜ: பலதோ நதாநாம்
பலிஷ்டதுர்யோ பகவாந் மஹாத்மா|
பவர்கஹ்ருத்யோபி விபாபவர்க:
விபாபவர்கோऽப்யபவர்கதாயீ||**

***$ப_1$தங்கராஜ: $ப_2$லதோ நதாநாம்*** - *தன் அடிபணியும் அடியார்களுக்கு வேண்டிய வரங்களை எல்லாம் தரும் பக்ஷிராஜன். தொடர்ந்து ஏழு வியாழக்கிழமைகள் நாச்சியார்கோவில் கல்கருடனுக்கு அர்ச்சனை செய்யும் அன்பர்களுக்கு, அவர்கள் வேண்டும் அனைத்து வரங்களையும் தந்தருளும் வரப்ரஸாதியாகவே அவர் எழுந்தருளியிருக்கிறார்.*

***$ப_3$லிஷ்டதுர்யோ $ப_4$கவாந் மஹாத்மா*** - *பலசாலிகளுள் தலைசிறந்தவராகவும், "ஷாட்குண்ய ஸ்மேர" என்று ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில் குறிப்பிடுவது போல, எம்பெருமானுக்குரிய ஞான-பல-வீர்ய-சக்தி-ஐச்வர்ய-தேஜஸ் ஆகிய ஆறு குணங்களை உடையவராக - பகவானாக விளங்குபவரும், மஹாத்மாவானவரும்*

***பவர்கஹ்ருத்யோऽபி விபாபவர்க:*** - *இப்படி $ப_1$, $ப_2$, $ப_3$, $ப_4$, ம என ப-வரிசையில் - ப வர்கத்தில் தொடங்கும் வார்த்தைகளால் போற்றப்பட்டாலும், பாபவர்கங்கள் - அதாவது பாபக் கூட்டங்களால் தீண்டப்படாதவராக, தூய்மையானவராக, அபஹதபாப்மாவாக விளங்குகிறார்.*

***விபாபவர்கோऽப்யபவர்கதாயீ*** - *பாப வர்கங்களால் தான் தீண்டப் படாதவராக இருப்பினும் அபவர்கம் எனப்படும் மோக்ஷத்தை அளிக்க வல்லவராக அவர் விளங்குகிறார்.*

***தன் அடிபணியும் அடியார்கள் வேண்டும் வரங்களைத் தருபவரும், பலசாலிகளுள் தலைசிறந்தவரும், எம்பெருமானைப் போல ஆறுகுணங்களை உடைய மஹாத்மாவுமான பக்ஷிராஜர், பவர்கத்தில் - ப வரிசையிலுள்ள வார்த்தைகளால் போற்றப்பட்டாலும் பாப வர்கங்களால் தீண்டப்படாதவராக விளங்குகிறார். பாப (ப + அப) வர்கங்கள் அவரைத் தீண்டாத போதும், அபவர்கமாகிய முக்தியை (எம்பெருமானிடமிருந்து பெற்று)த் தரவல்லவராக விளங்குகிறார்.***

## சுலோகங்கள் 37 முதல் 39 வரை

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காணியம்பாக்கம் கோமாண்டூர்
இளையவல்லி **தேவநாதாசார்ய ஸ்வாமி,** திருப்பதி

विनतानन्दन! विनतानन्दन! सुरसाभूहर! सुरसाभूसुख!।
क्मलावेश्मनि क्मलावेश्मच वसतावहता भवतास्मि सुखी।। (९०)

இந்த ச்லோகத்தில் ஸ்ரீமத் ஆஸுகவிஸார்வபௌம ஸ்வாமி நாச்சியார்கோவில் கருடாழ்வாரின் ஸந்நிதியில் அவருடைய அநுக்ரஹத்தால் தான் ஸுகமாக இருப்பதாக கூறுகிறார்.

அன்வயம் - विनतानन्दन - வினதையின் மைந்தனே ! विनतानन्दन - வணங்குபவருக்கு மகிழ்ச்சியை அளிப்பவனே ! सुरसाभूहर - நாகங்களை அழிப்பவனே ! सुरसाभूसुख - சிறந்த ஆனந்தத்தை அளிக்கும் பூமிப்பிராட்டிக்கும் ஆனந்தமானனே ! क्मलावेश्मनि - நாச்சியார் திருக்கோவிலில் वसता - வசிப்பவனும், क्मलावेश्म वहता च - பெரிய பிராட்டியாரின் இருப்பிடமான எம்பெருமானை தாங்குபவனும் ஆன भवता - உன்னால் सुखी - ஆனந்தமுடையவனாக अस्मि - இருக்கிறேன்.

**கருத்து :** நாச்சியார் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கருடாழ்வார் வினதையின் மைந்தன் என ப்ரஸித்தம். ஸௌபர்ணேயர் என்று வேதத்தில் ப்ரஸித்தர். தைத்திரிநீய ஸம்ஹிதையில் 4-ம் காண்டத்தில் கருடமந்த்ரமும், 6-ம் காண்டத்தில் கருடனின் பிறப்பு மற்றும் செயலும் கூறப்படுகின்றன. கருடாழ்வார் விசேஷமாக தன்னை வணங்குபவருக்கு ஆனந்தத்தை கொடுப்பவர். மோக்ஷார்த்திகளான பரமபாகவதற்கு ஜ்ஞானத்தை பெறுவதில் மஹோபகாரம் செய்பவர் அவர். நாகர்களின் தாயார் सुरसा, அவருடைய மக்களான நாகங்களை அழிப்பவர் அவர். பூமிக்கு

रसा என்று பெயர். அமரகோலத்தில் உள்ள பெயர் இது. ஆயினும் காரணப் பெயராகக் கொண்டால் எம்பெருமானுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதால் रस: என்று பெயர் உள்ளது போல் இருக்கும் रसा என்ற பெயர் பொருந்தும். பெரிய பிராட்டியாரின் அவதாரம் அல்லவா இவர். सुरसा எனில் சிறந்த ஆனந்தத்தை கொடுப்பவர். அப்படிப்பட்ட பூமிபிராட்டிக்கும் ஸுகமானவர் கருடாழ்வார் என்று பொருள். सुरसा - பூமி, भू - அதில் உண்டான மக்கள் அவர்களுக்கு ஆனந்தமானவர் என்ற பொருளும் கொள்ளப்படலாம். இந்த பொருளே உசிதம் என அடியேன் கருத்து. நாச்சியார் திருக்கோவிலில் வசித்துக்கொண்டு நாச்சியாரின் நாயகனான எம்பெருமானை தாங்கும் உம்மால் அடியேன் ஸுகமாக உள்ளேன் என்று கூறுகிறார் ஸ்வாமி. விரிவுக்கு அஞ்சி இந்த ச்லோகத்தின் உரையை அடியேன் வளர்த்தவில்லை.

शम्पा रमा यस्य स कालमेघः शंसत्यजसं यभिमं वहन्तम्।
शङ्काकुलं सर्पकुलं स तन्वन् शन्नः शकुन्तः परम स्तनोतु।। (९१)

இச்த ச்லோகத்தில் பக்ஷிராஜனிடம் தனக்கும், தன்னை சார்ந்த அனைத்து பாகவதர்களுக்கும் மங்களத்தை ஸ்வாமி கோருகிறார்.

**அன்வயம்:** यस्य - எவனுக்கு, रमा - பிராட்டியார், शम्पा - மின்னல் போன்றவளோ, कालमेघः - நீருண்ட மேகம் ஆன, सः - அந்த பகவான், वहन्तः - தன்னை எழுந்தருளப்பண்ணும் यम् इमं - எந்த இப்பக்ஷிராஜனை अजस्त्रं - எப்போதும் शंसति - பெருமையாகக் கூறுகிறானோ सः परमः शकुन्तः - அந்த பக்ஷிராஜன் सर्पकुलं - பாம்புகளின் சமூகத்தை शङ्काकुलं - ஸம்ஶயித்தினால் கலங்கியதாக तन्वन् - செய்துக் கொண்டு नः - நமக்கு शं - மங்களத்தை तनोतु - பரவச் செய்யட்டும்.

**கருத்து :** பகவான் நீருண்டமேகம் போன்றவன். பிராட்டி மின்னல் போன்று ஒளியும், அழகும் கொண்டவள். அழகான மனைவியுடன் கூடிய பெருமான் தன்னை தாங்கும் கருடாழ்வானை எப்போதும் பெருமையாகப் பேசுவான். அவனுடைய குணங்களைக் கூறுவான். அப்படிப்பட்ட பக்ஷிராஜன் நம்மை ஸர்ப்பங்களிடமிருந்து காப்பாற்றி மங்களத்தை அருளவேண்டும் என்று ஸ்வாமி ப்ரார்த்திக்கிறார். கருடாழ்வாருடைய தர்ஶனத்தால் பாம்புகள் பயந்தோடும். கருடாழ்வார் அங்கிங்கு உள்ளாரா என்று கலங்கி விடும். அவ்வாறு அவற்றினை செய்து நம்மை ரக்ஷிப்பவர் கருடாழ்வார். அழுத்தத்தைக் கொண்டு வந்து தேவரை காத்த பெரிய திருவடியார் பாம்புகளிடமிருந்து காப்பதற்கு சிரமப்பட வேண்டியதில்லை. இந்த ச்லோகத்தில் மின்னல், மேகம் என்று திவ்ய தம்பதிகளை கூறி அவர்களை தாங்குபவர் கருடாழ்வார் என்று கூறப்பட்டபடியால் ஸர்பங்களுக்கு பயம் ஏற்படக் காரணமும் கூறப்பட்டதாயிற்று. இந்த ச்லோகத்தில் உள்ள அலங்கார விஶேஷங்களை விவரித்தால் உரை விரிந்து போகும்.

शकुन्तला यत्कुललालितासा शशाङ्कदर्प मुश्वतो हरन्ती।
शशाङ्कवंशस्य ददौ प्रकाशं शकुन्तराजः सतनोतु शंनः।। (९२)

சகுந்தலையின் நிகழ்ச்சியை குறிப்பிட்டு கருடனை துதித்து ஸ்வாமி மங்களத்தை பக்ஷிராஜனிடம் ப்ரார்த்திக்கிறார் இந்த ச்லோகத்தில்

**அன்வயம் :** शशाङ्कदर्प - சந்திரனின் கொழுப்பினை मुखतः - முகத்தின் வாயிலாக हरन्ती - போக்குவளான (या) शकुन्तला - எந்த சகுந்தலை शशाङ्कवंशस्य - சந்திர வம்சத்தின் प्रकाशं - ஒளியை ददौ - கொடுத்தாளோ सा - அவள் यत्कुललालिता - எந்த பக்ஷிராஜனின் குலத்தினால் பேணப்பட்டாளோ सः - அந்த शकुन्तराजः - பக்ஷிராஜன் नः - நமக்கு शं - மங்களத்தை तनोतु - கொடுக்கட்டும்.

**கருத்து :** சகுந்தலை முகத்தின் அழகால் சந்திரனை வென்றவள். அவள் அந்த ப்ரகாஶத்தால் சந்திர வம்ஶத்திற்கு ஒளியை கொடுத்தாள். தன்னிடம் ஒளியில்லை எனில் பிறருக்கு கொடுக்க முடியாதல்லவா. சகுந்தலையின் மகன் பரதன். அவன் மூலமாக சந்திர வம்சத்திற்கு காரணமானவள் சகுந்தலை. காரணத்தின் குணம் காரியத்தில் வரும் "कार्यं निदानाद्धि गुणान् अधीते" என்பது கவியின் வாக்கு. அதனை நினைவுப்படுத்தும் விதமாக மூன்றாவது பாதம் அமைந்தது. சகுந்தலை பக்ஷிகளால் போஷிக்கப்பட்டாள் என்னும் வ்ருத்தாந்தம் முதல் பாதத்தில் கூறப்பட்டது. மங்களத்தை செய்யட்டும் என ஸ்வாமி ப்ரார்த்திக்கவில்லை. तनोतु என்னும் சொல்லால் அதனை பரவச் செய்யட்டும் என்று குறிப்பிடுகிறார். உலகின் க்ஷேமத்தையே கோருகிறார்.

இம்மூன்று ச்லோகங்களின் பொருட்சுவையை அநுபவித்தோம். क्लेशेऽल्पापि वाग्वृत्तिः विद्वत्कर्णावतंसति। नायके यदिवर्ण्येत लोकोत्तरगुणोत्तरः என்றபடி வித்வான்களுக்கு பேரமுதாகும் பத்யங்களிவை. அலங்காரம், வ்யாகரணம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களை அநுஸந்தானம் செய்து பொருள் கூற முற்பட்டால் மிகவும் விரிவாகும். அடியேனுக்கு ஶந்தியில்லை. அழகான ஶ்லோகங்களுக்கு உரை எழுத வாய்ப்புக்கு நன்றியை விண்ணப்பிக்கிறேன்.

# ஸுலோகங்கள் 40 முதல் 42 வரை

ஸ்ரீமதுபயவே வித்வான் வடுவூர் நடாதூர்
ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் **வீரராகவாசார்ய ஸ்வாமி**
ஸ்ரீகார்யம் மற்றும் ஆஸ்தான வித்வான் ஸ்ரீரங்கம்
ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்

## 40-வது ஸுலோகம் அவதாரிகை

*கண்ணன் தோன்றிப் பெருமை சேர்த்த சந்த்ரகுலத்திற்கு, முந்துற முன்னமே, தம் ப்ரஜைகளான பக்ஷிகளால் போக்ஷிக்கப்பட்ட சகுந்தலை மூலம் பெருமை சேர்த்தவன் பக்ஷிராஜன் என்றார் **39**வது ஸுலோகத்தில். **40**வது ஸ்லோகத்திலோ, பள்ளரையனாகவே எம்பெருமான் அவதாரப் பயன் பெறுகிறான். கருடபகவான் அவனுக்கு உறுதுணையாக நல்லோரைக் காப்பதிலும், தீயோரை அழிப்பதிலும் தம் பங்கைச் செவ்வனே செய்கிறான் என்கிறார். விதத்தே செய்கிறார்.*

*40.* श्लोकः क्षेमकारि शतकम

| | |
|---|---|
| उदारैः | *தாராளமான* |
| निनादैः | *ஒலிகளால்* |
| श्रुती | *(கேட்போரின்) இரு காதுக(ளையும்)னிலும்* |
| मुखयति | *இன்பம் பெருக்குமவரான* |
| श्रुतिस्वरूपे | *வேதத்தையே சரீரமாகக் கொண்ட/வேதாத்மாவான* |
| तवमि | *உம்மிடத்தில்/உம்மை* |
| सन्निविष्टः | *எழுந்தருளியிருப்பவராக/ஏறி அலங்கரிப்பவராக* |
| श्रुत्येकारमः | *வேதத்தால் மட்டுமே அறியப்படுபவலான க்ருத்யேககம்யரான (எம்பெருமான்)* |

अरातीन्  விரோதிகளை(யும்)

स्व समान  தனக்கு ஸமமாக

श्रत्येगगम्यान्  ச்ருத்யேககம்யர்களாக,காதால் மட்டுமே கேட்கப்படும் முடிவெய்தியவர்களாக

வேதசப்தங்கள் ஆஸ்திகர் செவிகட்கு இனிமையாய் நிற்கும். வேதவடிவான சுருத்மானது த்வனியும் பக்தர் செவிகட்கு இனிமையாயும் எம்பெருமான் பிரிவால் வாடும் பக்தர்கட்கு அவன் வரவைப் பறை சாற்றும் உயிர்க் காப்பாகவும் இருக்கும்.

**"கண்களால் காண வருங்கொலென்றாசையால்,**
**மண்கொண்ட வாமனன் ஏற மகிழ்ந்துசெல்,**
**பண்கொண்ட புள்ளின் சிறகொலி பாவித்துத்**
**திண்கொள் ஓர்க்கும் கிடந்தென் செவிகளே."**

புள்ளரசனின் சிறகொலி பாவித்துத் தெம்பு கொள்ளும் பக்தர்க்கு பக்ஷிராஜனின் கோஷம் உயிர்காப்பாகும் என்பது மிகையில்லை.

"ச்ருதி ஸ்வரூபே" -

வேதவடிவானவன் - "வேதாத்மா விஹகேச்வர: என்பதைக் காட்டுகிறார்.

ஸன்னிவிஷ்டர் - நன்குறைந்தவன் த்ருட ப்ரமாண ஸித்தியுள்ளவன். மறைப் பொருள்.

"வேதத்தின் சவைப் பயனை" எனும் தமிழ்மறை குறிப்பிடப்பட்டுள்ளது.

க்ருத்யேக கம்ய: உள்ளபடி அறிய விழைபவர்க்கு மறை கொண்டே அறியப்படுபவன்.

(2) வேதங்களில் ஓதப்பட்ட முடிவாய் அடையப்படும் பொருள்.

*(3)* கேட்பதினாலேயே அறியப்படுபவன், உபதேசமின்றி அறிய முடியாது. எம்பெருமாள் தனக்குப் ப்ரியமான பக்தர்களைத் தனக்கு நிகரான போகமுள்ளவர்களாக - அதாவது ஸாயுஜ்யம் அளிக்கிறான் என்பது ஸம்ப்ரதாயம்.

தனது விரோதிகளையும் தனக்கு நிகராக ஆக்குகிறான் என சிலேடை உரைக்கிறார் கவி. ச்ருத்யேச கம்யன் எம்பெருமாள், ச்ருத்யேக கம்யர்களாக விரோதிகளைச் செய்கிறான் ஏனிலை தனக்கு நிகராகச் செய்கிறான் என ஆகிறது. உண்மையில் எம்பெருமான் விஷயத்தில் வேதத்தால் அறியப்படுபவன் எனப் பொருள். அவனது விரோதிகள் "ச்ருத்யேக கம்யர்" எனும் போது கேட்கப் படுபவர்களாகவே ஆகின்றனர். வாழ்விழக்கின்றனர் எனப் பொருள்.

**சுருக்கம்:**

*1.* பக்ஷிராஜன் ஒலியால் பக்தரை மகிழ்விப்பவன்.

*2.* எம்பெருமானுக்க உகந்த வாஹனம்.

*3.* எம்பெருமாளை பக்தர் முன் கொணர்பவன்.

*4.* துஷ்டர்களை அழிக்கையிலும் உபகரிப்பவன்.

"பாதுகாதேவியே ! அரங்கனிடமிருந்து ரக்ஷித்தலை நோக்கி றிங்கும் ஜனங்கள் விஷயத்தில் "அப்படியே ஆகட்டும்" எனச் சொல்வது போல நன்கொலிப்பவளாக உன்னை அறிகறேன்" என அருளிச் செய்தார் ஸ்வாமியான தூப்புல் குலமணி.

ஆசுகவியோ மகிழ்விக்கும் த்வனியை உரக்கச் செய்பவராக பக்ஷிராஜனை எண்ணுகிறார். "ச்ருதி" என்ற சொல்லானது மறை எனும் பொருளில் முதல், கடைசி வரிகளிலும், காது எனும் பொருளில் இரண்டாம் அடியிலும், கேட்டல் எனும் பொருளில் மூன்றாம் அடியிலும் ப்ரயோகிக்கப்பட்டுள்ளது.

## 41-வது சுலோக அவதாரிகை:

கல் கருடனது திருமேனி காந்தியிலும் திருமேனிக்கு அமைந்த வெள்ளி கவசத்திலும் ஈடுபடுகிறார்.

| | |
|---|---|
| **शिलागरुत्मन्!** | ஓ ! கல்கருட ஸ்வாமியே ! |
| **इह** | இந்த (திருநறையூர்) தேசத்தில் |
| **अंसे** | தோளில் |
| **स्थितस्य** | இருக்கிற |
| **परस्य पुरुषस्य** | புருஷோத்தமனான விஷ்ணுவினுடைய |
| **कान्त्या** | (திருமேனியின்) கறுத்த ஒளியினால் |
| **अम्भोदवत्** | கார்மேகம் போலே (கறுத்தவனாக) |
| **भासि किम्** | ஒளிர்கிறீரோ ! |
| **अस्य** | இவனுடைய/எம்பெருமானுடைய |
| **अङ्घ्रिजा** | திருவடியில் தோன்றிய நதியினால் (கங்கையினால்) |
| **उपावृतवत्** | சுற்றப்பட்டவர் போல/மறைக்கப்பட்டவர் போல |
| एवं | இவ்வாறு |
| तद्रजत कञ्चुक | அப்படிப்பட்ட வெள்ளிச்சட்டையால்/வெள்ளிக் கவசத்தினால் |
| संवृता ङ्गः | சாற்றப்பபட்ட திருமேனியுடையவராக வெண்மையாக |
| अत्र | இங்கே |
| असि किं? | இருக்கிறீரோ ! |

கருட பகவானது தோளில் அமர்ந்துள்ளான் கார்மேக வண்ணனான எம்பெருமான். அவன் திதுரமேனி காந்தியினால்

கல் கருடனும் கார் மேக நிறத்தவன் ஆனானோ ? எனத் தோன்றுகிறது. நாச்சியார் கோவில் சிலா கருத்தமான் வெள்ளிக்கவசம் சாற்றிக் கொண்டுள்ளது.

எம்பெருமானது திருவடியிலிருந்து தோன்றிய வெண்மையான கங்கா நதியே கருடனைச் சுற்றியணியப்பட்ட சட்டை (அங்கி)யாக ஆனாளோ ? எனத் தோன்றுகிறது.

## உட்பொருள்

(1) எம்பெருமானது பக்தர்கள் பகவானைப் போன்ற உருவுடன் போலிவர் ''कृष्णसारूपुय सौम्यान्''

(2) எம்பெருமான் தமர்க்கு தேவதைகளும் ஸேவை புரிவர்.

## 42வது ச்லோக அவதாரிகை

நாச்சியார் கோவில் என்றாலே நினைவில் வரும் 'கல் கருடன்' விஷயத்தில் தன் ஈடுபாட்டை ஆங்காங்கு நினைவுருத்தும் ஆசுகவி ஸ்வாமி இங்குமதைப் பகர்கிறார்.

மிக உயர்ந் நாச்சியார் கோயிலில் வஸிக்கும் பக்ஷிராஜனை 'ஸேவிக்கிறேன் கொடுப்பாயாக' எனும் ப்ரார்த்தனையற்ற ஸ்தோத்ரங்களால் பஜித்து த்யானிக்கிறேன்.

| | |
|---|---|
| अहं | அடியேன் (நான்) |
| अतिमान्ये | மிகவும் கொண்டாடத்தக்க |
| वाराशि कन्यासदने | நாச்சியார் கோயில் எனும் க்ஷேத்திரத்தில் |
| वासं | இருப்பை |
| भजन्तं | கொண்டுள்ளவரும் |
| विहगाधिराजं | பக்ஷிகளுக்குத் தலைவரும் |
| हरे: वाहं | விஷ்ணுவின் வாஹனமுமான (கருடனை) |

"देहि–नमामि" हीनैः: 'கொடு-சேவிக்கிறேன் எனும் எண்ணமற்ற, வேறு ப்ரயோஜனம் எதிர்நோக்காமல்

वाचां भरैः: சொற்களின் சுமைகளால்/ஸ்துதிகளால்

अन्तः: மனதுள்ளே

वहामि: த்யானிக்கிறேன்

நாச்சியாரின் அதிகாரத்தால் பெருமை பெற்று மிகவும் கொண்டாடப்படுவது, நாச்சியார் கோயில் எனும் க்ஷேத்ரம். எவரும் சிறந்த இடத்திலேயே வசிக்க விரும்புவர். கருட பகவானும் அதற்கு விலக்கல்ல. உயர்ந்த க்ஷேத்திரத்தில் வாஸத்தை அடைந்தான். பக்ஷிராஜனாய் எப்போதும் விஹாரத்தை பறத்தலை - ஆசைப்படுபவனும் இங்கே இருக்க விழைந்தான். அப்படிப் பட்டவனை நான் உள்ளே இருத்தினேன், எப்படி ? 'கொடு கொடு' எனத் தொந்தரவு செய்தால் எவரும் ஓடிவிடுவர். நான் அவ்வாறு கேட்காமல் துதித்தேன். அவன் இனிதமர்ந்தான். நான் உள்ளே வஹிக்கிறேன் என்கிறார். எம்பெருமானது வாஹனத்தை உள்ளே இருத்தியதால் எம்பெருமானும் அகல வழியின்றி என்னுள்ளே இருப்பான் என்பது உட்பொருள்.

"கருடத்வஜ தோஷாய கீதோ கருட தண்டக:"

கருடவாஹனனாகிய எம்பெருமான் திருவுள்ளம் மகிழவே கருட தண்டகம் எனும் துதி அருளப்பட்டது என்றார் சுவாமி நிகமாந்த தேசிகன். ஹரியின் வாஹநத்தை நான் வஹிக்கிறேன் என்கிறார் ஆசுகவி.

## உட்பொருள்:

1. அனன்யப் ப்ரயோஜனனாகத்துதிக்கிறேன்.

2. பகவத்க்ஷேத்ரங்களுக்கு அடையாளம் கருடன் சன்னிதி.

3. தமக்கு தொண்டு செய்தால் எம்பெருமான் மிகவும் உகப்பன்.

## சுலோகங்கள் 43 முதல் 45 வரை

*ஸ்ரீமதுபயவே வித்வான் வேளியநல்லூர் உபயமீமாம்ஸாவல்லப*

**Dr.நாராயணாசார்ய ஸ்வாமி,** *பத்ராதிபர்,*

*ஸ்ரீரங்கநாதபாதுகா மற்றும் ஆஸ்தான வித்வான் ஸ்ரீரங்கம்*

*ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்*

*43. ஸ்ரீ நாச்சியார்கோவிலில் எழுந்தருளியிருக்கும் பெரிய திருவடி என்றும் வேதாத்மா என்றெல்லாம் அழைக்கப்படும் கருடாழ்வாரைப் பற்றி ஸ்தோத்ரம் செய்கின்றார் ஸ்வாமி.*

எம்பெருமாட்டியான பெரிய பிராட்டியார் ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கருடாழ்வார், நாகங்களின் விளையாட்டுக்களை (சேஷ்டிதங்களை) அடக்கியவர். ப்ரபன்னஜன ஸந்தான கூடஸ்தரான ஸ்ரீ நம்மாழ்வாரால் கொண்டாடப்பட்டவர்; தேவேந்திரனின் ஆயுதங்களை விட்டிற் பூச்சிகளாக்கியவர், அவரை நமஸ்கரித்து சரணாகதியடைந்ததை தம்மிடத்தில் நன்றாக அவர் அனுக்ரஹத்தை செய்தருளிடுகிறார் என்பது பாவமாகும்.

இதில் ஸ்வாரஸ்யம்: (1) சந்திரனின் பிறப்பிடமும் பெரிய பிராட்டியின் பிறப்பிடமும் ஸமுத்ரமே; ஸமுத்ரம் சீதளமானது; சந்திரனும் சீதளமான ஆஹ்லாதகரமான குணத்தையுடையவன்; பெரிய பிராட்டியாரோ 'அனுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாத நிக்ரஹாம்' என்னும்படி ஹிதத்தையே செய்பவர்; இப்படிக் குளிர்ந்த பார்வை, குளிர்ந்த குணம், குளிர்ந்த அருளையும் உடைய சந்திரனும், பெரிய பிராட்டியும் உடன் பிறந்தவர்களாவார்கள்; பெரிய பிராட்டியின் ஊரான நாச்சியார் கோவிலிலேயே குடி இருக்கும் அவள் அடியவரான கருடாழ்வாரின் குணமும் அப்படிப்பட்டதேயாகும்; நம்மை அருள்வதிலேயே

கருடாழ்வாருக்கும் நோக்கு இருக்கும்; ஆகையால் அப்படிப்பட்ட பெரிய திருவடியை சரணமடைவதால் நமக்கும் நன்மையே என்றும் கிடைக்கும் என்பதை ஸ்வாமி பறைசாற்றுகிறார் இங்கு.

(2) கருடாழ்வான் நாகங்களின் கர்வத்தை அடக்கியவர்; அதுவும் தம் தாயாரான வினதையின் பொருட்டு நாகங்களின் கொட்டத்தை அடக்கித் தம் தாயாரை அடிமைத்தனத்திலிருந்து மீட்டவர், அப்படிப்பட்டவர், நாம் கர்மாக்களுக்கு அடிமைப்பட்டிருப்பதை ஸஹிக்காதவர், அதிலிருந்து நம்மையும் மீட்டருள்வார்.

(3) ஸ்ரீ பாதுகாசஹஸ்ரத்தில் நம்மாழ்வாரை ஸ்வாமி தேசிகன் 'ஆம்னாயானாம் ப்ரக்ருதிமபராம்ஸம்ஹிதாம் த்ருஷ்டவந்தம்' என்று வடமொழி வேதத்தைப் போல் தீந்தமிழில் வேதத்தின் ஸம்ஹிதையை கண்டருளிய ரிஷி என்று கொண்டாடுகிறார். அப்படிப்பட்ட நம்மாழ்வார் ஸ்ரீ கருடாழ்வாரை பலவாறாக புகழ்கிறார். திருவாய்மொழியின் முதல் பத்து முழுவதும் நூறு பாடல்களிலும் நம்மாழ்வார் தேவப்பெருமாளை மங்களாசாஸனம் செய்கிறார் என்பதை ''ப்ரதம சதகே வீக்ஷ்ய வரதம்'' என்று ஸ்வாமி தேசிகன் அருளியுள்ளார். அப்பத்தில் ஆங்காங்கு 'அருளாழிப் புட்கடவீர் அவர் வீதி ஒரு நாள்'' என்றும் ''ஓடும் புள் ஏறி சூடும் தண்துழாய் நீடு நின்றவை ஆடும் அம்மானே'' என்றும் கருடாரூடனாக வரதன் தனக்கு அருள் செய்வதை அருள்கிறார். இன்றும் பெரும்பாலும் வைகாசி விசாகத்தன்று கருடவாஹன ஸேவை வந்துவிடும். அவ்வமயம் தேவப்பெருமாள் கருடாரூடனாய் நம்மாழ்வாரை திவ்யமாக அருள்வதைக் காணலாம். அதையொட்டியே ''ஓடும் புள் ஏறி சூடும் தண்துழாய்'' என திருவாய் மலர்ந்தருளினார் நம்மாழ்வார் என்று பெரியோர்கள் அருள்வர். இதே மாதிரி பல இடங்களில் நம்மாழ்வார் கருடாழ்வாரின் ஸம்பந்தத்தை

கொண்டாடுவதால் அவர் தம் பெருமை எல்லையற்றது என்பது தெளிவு.

(4) தேவேந்திரன் மகாபராக்ரமசாலி; அவன் வஜ்ராயுதத்தை கண்டு பலரும் அஞ்சுவர். ஆனால் யுத்தத்தில் அவனையும் தோற்கடித்தவர் இவர்; அவன் விட்ட பாணங்களையெல்லாம் விட்டிற்பூச்சிகளாக ஆக்கியவர் தம் தேஜஸ்ஸால். அப்படிப்பட்ட மேன்மையை உடையவர் இவர்; நம் எதிரிகளை அடக்குவதில் அவருக்கு சிறிதும் கஷ்டம் இருக்காது என்பதை தெளிவுப்படுத்துகிறார்.

இப்படிப்பட்ட மேன்மையையுடையவரை சரணமடைவதால் தமக்கு அனைத்து அருளும் கிட்டும் என்பதை இந்த ச்லோகத்தால் உணர்த்தியருள்கிறார் ஆசுகவி ஸார்வபௌம ஸ்வாமி. இந்த ச்லோகத்தில் அனைத்து பாதங்களிலும் 'ச'காரத்தை முதலெழுத்தாக ப்ரயோகித்ததை ரஸிக்க வேண்டும்.

44. இந்த ச்லோகத்திலும் முன் சொன்ன விஷயத்தையே வேறு சொற்களைக் கொண்டு வர்ணித்துத் தாம் கருடனைச் சரணடைவதை அருள்கிறார் ஸ்ரீ ஸ்வாமி.

சந்திரனுடைய ஸஹோதரி பெரிய பிராட்டியார்; அவருடைய சரணம் - இருப்பிடம் நாச்சியார்கோவில் திவ்யதேசம்; அத்திவ்ய தேசத்தை அடைந்து அங்கு வீற்றிருப்பவர் ஸ்ரீ கருடாழ்வார்; அவர் பெரும் ஸர்ப்பங்களுடைய கொட்டங்களையெல்லாம் அடக்கியவராவார்; மேலும் இந்திரன் வாழும் தேவலோகத்தை வென்றவர்; அப்படிப்பட்ட பராக்ரமத்துடனும், ஆச்ரிதர்களிடத்தில் கருணையுடனும் இருப்பவருமான பெரிய திருவடி என்று போற்றப்படும் ஸ்ரீ கருடாழ்வாரை சரணடைந்தேன் என்கிறார்.

இந்த ச்லோகத்தில் சரணம் என்னும் சொல் இருமுறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. முதல் சரண சொல்லால் இருப்பிடம்

என்னும் பொருள் கொள்ளப்படுகிறது. ஆக எம்பெருமனாட்டி யுனுடைய இருப்பிடத்தை அடைந்தவர் என்று பொருள் தேறும். ‘தாஸ: ஸகாவாஹனம்’ என்னும்படியே திவ்ய தம்பதிகளுக்கு அனைத்து விதமாகவும் கைங்கர்யம் செய்பவர். அப்படிப்பட்ட ஸ்ரீ கருடாழ்வாரை சரணடைகின்றேன் என்பதை காட்டுவதற்காக இரண்டாவது சரணம் என்னும் சொல் அடைக்கலம் என்னும் பொருளில் இங்கு உபயோகப்படுத்தப்பட்டது.

இங்கும் அனைத்து பாதங்களிலும் ‘ச’காரம் முதலெழுத்தாக ப்ரயோகப்படுத்திய ஸ்வாரஸ்யத்தை ரசிக்க வேண்டும்.

**45.** முன் ஸ்லோகங்களைப் போலவே இந்த சுலோகத்திலும் வர்ணிக்கிறார். இதில் சந்திரனுக்கு உள்ள வேறு ஒரு விசேஷத்தை அருளிடுகிறார்.

சிவனின் முடியில் கங்கை வீற்றிருந்து நடனமாடுவதைப் போல் இருக்கிறாள் கங்கை; அவள் பக்கத்திலேயே சந்திரன் இருக்கிறான். ‘பிறைசூடி’ என்று சிவனுக்குப் பெயருண்டல்லவா ! அந்த சந்திரன் இரவின் தலைவன் ஆவான்; அவனுடன் பிறந்தவள் பிராட்டி. அவளுடைய கோயிலில் இருப்பவன் ஸ்ரீ கருடாழ்வார்.

இங்கு சந்திரன் கங்கைக் கரையில் நடனமாடுவதுபோல் இருப்பதைக் கூறுகிறார் ஸ்வாமி; இதில் ஒரு ஸ்வாரஸ்யம் - ஸ்ரீதேசிகன் ‘பாதோதகேன வித்ருதேன சிவாபவந்தி’ என்றருளினார். எம்பெருமான் திருவடி ஸ்பர்சமடைந்தன்றோ கங்கை உர்ப்பத்தியானாள். அப்படி எம்பெருமான் திருவடி தீர்த்தத்தை தரிப்பதால் ருத்ரன் சிவன் ஆனான், அத்தடத்தில் (அதனருகில்) இருப்பதால் சிவன் எப்படி மங்களத்தை அடைந்தானோ அதைப்போல் சந்திரனும் மங்களத்தை அடைந்தான். அது மட்டுமல்ல - ‘மங்களம் மங்களானாம்’ என்று

பெயர் பெற்ற திருமாலுக்கும் மங்களமான பெரிய பிராட்டியாருக்கு உடன் பிறந்தவனாதலால் சந்திரன் இன்னும் மேன்மையை அடைந்தான். ஆனால் பெரிய திருவடியான ஸ்ரீ கருடாழ்வாரோ என்றும் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் வாஹனமாக இருப்பவர். அவர் எப்படிப்பட்ட மேன்மையை உடையவராயிருப்பார்! ஆதலினால், அவர் நாம் எதை வேண்டுவோமோ அவை அனைத்தையும் செய்யத் தரவல்லவர். ஏனெனில், ஸர்வலோகத்துக்கும் அதிபதியாயிருக்கும் பகவானுக்கு வாஹனமாக எழுந்தருளியிருப்பவர் அன்றோ அவர்! ஆகவே, அவரை தாம் ஆச்ரயிப்பதாக இங்கு ஆசுகவி ஸார்வபௌம ஸ்வாமி அருள்கின்றார்.

அதாவது 'அருளாழிப் புட்கடவீர் அவர் வீதியொருநாள் என்று' நம்மாழ்வார் அருளுவது போல் ஸ்ரீ கருடாழ்வார் எம்பெருமானை எழுந்தருளிப் பண்ணிக் கொண்டு வரும் பொழுது ஆனந்த பாஷ்பர்களாய் அனைவரும் இரு கை கூப்பிச் சரணடைகின்றனர்; அது போல் தாமும் பகவானை எழுந்தருளப் பண்ணிவரும் கருடாழ்வாரை பெருமாளின் தயையின் பொருட்டு சரணமடைவதாக கூறியருள்கிறார் ஸ்ரீஸ்வாமி.

## சுலோகங்கள் 46 முதல் 48 வரை

*ஸ்ரீமதுபயவே வித்வான் பாலவாகம்ருதவர்ஷீ*

## வேளுக்குடி க்ருஷ்ணன் ஸ்வாமி

46. सुपर्णं सुशाखं सुरौघाभिनन्द्यं
सुपक्षं सुपृष्टं सुमेरोस्सपक्षम्।
सुतायास्सुधाब्धेः सुगेहे वसन्तं
सुखं प्राप्तमाप्तास्सुतं कश्यपस्य।।

*சிறந்த இறகுகளை உடையவனும் - பக்தர்களை நோக்கி பகவானை அழைத்து வரும்போது கருடனை அழகிய குளிர்ந்த சிறகுகளை உடையவனாக "அஞ்சிறைப்புள்" என்றும், பக்தர்களிடமிருந்து விலகி அழைத்துச் செல்லும்போது கொதிக்கும் சிறகுகளை உடையவனாக "வெஞ்சிறைப்புள்" என்றும் ஆழ்வார்களை கூறுவர்.*

*சிறந்த கை கால்களை உடையவனும் "தன்னை வணங்க வைத்த கரணமிவை" என்று அமுதனார் பாடியபடி, இறைவனுக்கு தொண்டு செய்வதற்கே படைக்கப்பட்ட நம் புலன்களை வேறெதற்கோ பயன்படுத்தாமல் அப்பயனுக்கே ஈடுபடுத்தும் சிறந்த கை கால்களை உடையவர்.*

*ஸூரர்கள் எனப்படும் தேவர்களின் பெரும் கூட்டங்களால் பாராட்டப்படுபவனும் - "கொற்றப்புள் ஒன்றேறி மன்னூடே வருகின்றான்" என்று கலியன் பாடியபடி, போரில் வெற்றியே பெறும் கருடன் மேல் ஏறி பவனி வருகிறார் எம்பெருமான். தங்கள் கார்யத்தை நடத்துகிறபடியால் தேவர்கள் திரளாக கருடனைப் புகழ்வர்.*

சிறந்த சிறகுகளை உடையவனும் - "பொருசிறைப்புள் உவந்து ஏறும்" என்று நம்மாழ்வார் அருளியபடி சேஷியான பகவான் கைங்கர்யம் கொள்வதில் மகிழ்ச்சியோடு கருடன் மேல் ஏறுகிறார்; சேஷனான கருடன் தன் சிறகுகளை வீசி கைங்கர்யம் செய்வதில் தனக்குள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

சிறந்த பின்புறத்தை உடையவனம் - "தாஸஸ்ஸகா ஆஸனம் வாஹனம்" என்ற பரமாசார்யரான ஸ்வாமி ஆளவந்தாரின் ஸ்தோத்ர ரத்னத்தின்படி கருடன் திருமாலுக்கு அமரும் ஆஸனமாகவும், பயணிக்கம் வாஹனமாகவும் உள்ளபடியால் அதற்கேற்ற திருமேனி அமைப்பைப் பெற்றவர்.

மேருமலையின் தோழனும் - மேரு மலை போன்ற திருமேனி அளவும் அழகும் பொன்னிறமும் உடையவர். ஸ்வாமி நம்மாழ்வார் "பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல்" என்று கருடன் மேல் எழுந்தருளும் பெருமானை, பொன்னிற மேருமலையின் மேல் படிந்த கருமேகம் போன்றவன் என்று பாடுகிறார்.

பாற்கடலின் புதல்வியான ஸ்ரீமஹாலக்ஷ்மியின் சிறந்த இல்லத்தில் வசிப்பவனும் - "அமுதில் வரும் பெண்ணமுது" பெரிய பிராட்டி; எவ்வுயிர்க்கும் தாயான அவள் அமுதத்தோடு உடன் பிறந்தவள்; ஆனால் கருடனோ அமுதத்தைக் கொணர்ந்து தன் தாயை ரக்ஷித்தவர்.

கச்யபமஹர்ஷியின் மைந்தனுமான - கச்யப ப்ரஜாபதி செய்த பல கைங்கர்யங்களுள் பெருமானுக்கு ஒரு அணுக்கத் தொண்டனை பெற்றதே சிறந்தது.

இப்படிப்பட்ட பெருமைகளை உடைய கருடாழ்வானை ஸுகத்தை அடைவதற்காக நாங்கள் பற்றினோம்.

47. सरस्वतीभिस्सततं स्थिताभि:
संपूर्णसर्वावयवं सुपर्णम्।
सरोजवासासदने वसन्तं
समाश्रये सारसनेत्रवाहम्॥

என்றும் இருக்கக்கூடிய வாக்குகளாகிய வேதங்களாலே நிறைந்த அங்கங்களைக் கொண்டவனும் - அதாவது வேதத்தின் வடிவமாகவே இருப்பவனும் - "வேதாத்மா விஹகேச்வர:" என்ற வாக்கின்படி கருடன் வேதமயமாகவே இருப்பவர். 'ஸ்ரீமந் நாராயணன் தன் பெருமைகளை எல்லாம் வேதமாகிற கண்ணாடியில் பார்த்து மகிழ்வார். கோயில்களில் பெருமான் முன் ஸந்நிதி கருடன் எழுந்தருளியிருப்பார். அவர் வேதத்தின் உரு. ஆகவே கருடனிடமே தன் பெருமைகளைக் கண்டுகொள்வார்.

சிறந்த சிறகுகளை உடையவனும் - "ஸுபர்ணோஸி கருத்மான்" என்கிறபடி அழகிய சிறகுகளை உடையவர். "வெயில் காப்பான் விநதை சிறுவன் சிறகென்னும் மேலாப்பின் கீழ் வருவான்" என்று ஆண்டாள் அருளியபடி, கண்ணன் விருந்தாவனத்தே மாடு மேய்க்கப் போகும்போது, வெய்யில் படாமல் இருக்க, கருடன் மேலே பறந்து தன் சிறகுகளை குடையாகப் பிடிப்பாராம். குளத்தில் தோன்றிய தாமரை மலரை இருப்பிடமாகக் கொண்ட ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் இல்லத்தில் வசிப்பவனும் - பெருமானும் பிராட்டியுமாகிய மிதுனமே சேஷிகள் என்று உணர்த்த எப்போதும் பிராட்டியின் நிழலிலே ஒதுங்கி அவள் கைங்கர்யங்களை உவகையோடு செய்பவர். ஸாரஸம் எனப்படும் தாமரையை ஒத்த திருக்கண்களை உடைய திருமாலை தாங்குபவனுமான - "தாமரைக் கண்ணன் என் நெஞ்சினூடே புள்ளைக் கடாகின்றவாற்றைக் காணீர்" என்று வேதம் தமிழ் செய்த மாறன் அருளிய பாடலில், திருமால் கருடன் மேல் ஏறி, ஆழ்வார்

உள்ளத்தே ஏசல் கண்டருளி, அதனால் மலர்ந்த தாமரைகளை ஒத்த திருக்கண்களோடே விளங்குகிறார். இவ்வண்ணமான கருடனைப் புகலாகப் பற்றுகிறேன்.

48. सुरपतिपृतना धूननपटुना
सुतनोर्विनतासंज्ञामत्याः।
सुत इति जगति प्रथितेनाहं
सुखमिह निखिलं प्राप्तस्सत्यम्।।

தேவர்களின் தலைவனான இந்த்ரனின் படைகளை ஆட்டி வைக்க வல்லவனும் - “கொடியாவடு புள்ளுயர்த்தான்” என்றும் “கருடப்புட்கொடி சக்கரப்படை வானநாட” என்றும் ஆழ்வார் பாடியபடி பகைவர்கள் எதிர்த்தபோதும், அல்லது அடியார்களே அஹங்காரத்தால் எதிர்த்தபோதும், அவர்களுக்கு தகுந்து வ்யாபரித்துத் திருத்துபவர்.

அழகிய உடலைக் கொண்ட விநதை என்று பெயர் பெற்றவளின் மைந்தன் என்று உலகத்தில் ப்ரஸித்தனுமான - ஸ்ரீராமன் காட்டுக்கு எழுந்தருளியபோது மாதா கௌஸல்யா அவருக்கு மங்களங்களை ஆசாஸனம் செய்தாள். வால்மீகி பகவான் அதற்கு எடுத்துக்காட்டாக “யந்மங்களம் ஸுபர்ணஸ்ய விநதா கல்பயத் புரா” என்று அமுதத்தை தேடிப்போன கருடனுக்கு தாய் விநதை மங்களாசாஸனம் செய்ததைக் குறிப்பிடுகிறார். இப்பெருமைகளை உடைய கருடாழ்வானால் நான் இவ்வுலகிலேயே நித்யமான ஸுகமாகிய மோக்ஷாநந்தத்தை முழுமையாக அடைந்துள்ளேன். வைகுந்தத்தை அடைந்து செய்ய வேண்டிய கைங்கர்யத்தை இவ்வுலகிலேயே பெற்றால், “வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்” என்னும்படி இவ்வுலகிலேயே மோக்ஷம் பெற்றதாகச் சொன்னால் குறையென் ?

# சுலோகங்கள் 49 முதல் 51 வரை

ஸ்ரீமதுபயவே பருத்திப்பட்டு தேவனார்விளாகம் வங்கீபுரம்

## S.சாரநாதாசார்யார் ஸ்வாமி

இந்நூல் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீகருடபஞ்சாசத்தைப் போல எல்லா க்ஷேமங்களையும் அருளும் ஸ்ரீகருட பகவானை ப்ரார்திப்பதாக ஸ்ரீஆசுகவி ஸார்வபௌம ஸ்ரீநிதி ஸ்வாமியால் அருளப்பட்டது. இந்த ஸ்தோத்திரம் ஸ்ரீ கருட பஞ்சாசத்தைப் போல ஐந்து பாகங்களாக பிரித்து ஒவ்வொரு சுலோகத்திலும் க்ரியா பதங்களை ப்ரார்தனா ரூபமாக அமைத்து அருளியுள்ளார். ஆனால் இது அந்த ஸ்தோத்திரத்தை (51)விட இரண்டு மடங்கு (102) சுலோகங்கள் அடங்கியது. ஒவ்வொரு சுலோகத்திலும் ஸ்வாமியின் கற்பனை திறனும், கவிதை நயமும் மிகவும் ரஸிக்கும்படியாகவும் செவிக்கு அமுதூட்டவும் செய்கின்றதாக இருக்கிறது. இதில் அடியேனுக்கு 49-51 சுலோகங்களுக்கு வ்யாஸம் எழுத அளித்த நியமனத்தை சிரமேல் ஏற்று அடியேனுடைய மந்த மதியைக் கொண்டு முயற்சிக்கிறேன். பெரியோர்கள் குற்றம் குறைகளை க்ஷமித்து அனுக்ரஹிக்க வேண்டுகிறேன்.

இந்த கட்டுரையில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் காட்டிய வழியையொட்டி ஸ்ரீநிதி ஸ்வாமியின் சுலோகங்கள் அமைந்திருக்கிற அழகை ரஸிக்கலாம்.

### சுலோகம் 49

सुरासुरानन्दितविक्रमौघं
सुकीर्तिलीलारसनिर्वृताङ्गम्।
सुधाब्धिक न्यासदनाङ्गणस्थं
सुतं प्रपद्य विनताङ्ग नाया:।।

सुरासुरानन्दितविक्रमौघं - தேவர்களும் அஸுரர்களும் வணங்கும் பராக்கிரமத்தை உடையவர். ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸ்ரீகருட பஞ்சாசத்தில் 51வது ஸ்லோகத்தில் त्रातानेक .. स्त्रिदशरिपुचमूमोहन: பலரைக் காத்து, அஸுரர்களின் சேனையை மயக்கியனவர் என்று கூறுவதை நினைவு கூறுகிறது.

सुकीर्तिलीलारसनिर्वृताङ्गम् - ஸுகீர்த்தியுடன் சேர்ந்த லீலா ரஸத்தினால் மிகவும் ஸந்தோஷத்தை அடைந்தவர். இது ஸ்ரீஸ்வாமி தேசிகனின் ஸ்ரீகருட தண்டகத்தில் रुद्रासुकीर्तिस्तनाभोगगाढोपगूढ स्फुरत्कण्टकव्रात - ருத்ரை ஸுகீர்தி என்னும் இரு மனைவியரின் கொங்கைகளின் பரப்பைக் கொண்டு இறுக அணைதலால் உண்டான மயிர் கூச்சங்களின் கூட்டங்களை பற்றி கூறுவதை ஒப்பிடலாம்.

सुधाब्धिकन्यासदनाङ्गणस्थं - அம்ருதமர்தனத்தின் போது திருபாற்கடலில் உண்டான ஸ்ரீமஹாலக்ஷ்மியின் வீடான திருநறையூரில் அவளின் ஸன்னதியின் அருகிலேயே அமர்ந்திருப்பவர்.

सुतं प्रपद्य विनताङ्ग नाया: - வினதையின் குமாரனான தலைவனாக கருடனை வணங்குகிறேன்.

## சுலோகம் 50

सुधाम्बुधि सुतागृहे सुरपतेशचमूत्रासद:<br>
सुधाक्लशहारक: सुमशरस्य वाह: पितु।<br>
सुधीमणिभिरर्चित: सुभगनीलमेघप्रभ:<br>
सुपर्ण इह मानसे सुखद एतु वासं सदा।।

सुधाम्बुधि सुतागृहे – திருமகளின் வீடான திருநறையூரில் வசிப்பவர்.

सुरपतेशचमूत्रासदः – தேவர்களின் தலைவனான இந்திரனின் சேனையை வென்றவர்.

सुधाकलशहारकः - அம்ருதகலசத்தை பலாத்காரமாக எடுத்து வந்தவர்.

सुमशरस्य वाहः पितुः – மன்மதனின் தந்தையின் வாஹனமானவர்.

सुधीमणिभिरर्चितः – சான்றோர்களால் போற்றப்படுபவர்.

सुभगनीलमेघप्रभः – மிக்க தேஜஸையுடையவர்.

सुपर्ण इह मानसे सुखद एतु वासं सदा – அந்த கருடன் என் மனதில் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் வசிக்கட்டும்.

இந்த சுலோகம் ஸ்ரீகருடபஞ்சாசத்தின் 24, 25 சுலோகங்களை தழுவி இருப்பதை பார்க்கலாம். அதில் இந்திரனுடன் போர் புரிதல் (सुरपातिपृतनाद्वन्द्वयुद्ध), அம்ருதகலசத்தை கொணர்தல் (अमृतमयपणप्राप्तदर्प), வாலகில்யர் மஹரிஷி போற்றுதல் (वालखिल्यद्विजवरतपसां कोऽपि मूर्तः), எம்பெருமானுக்கு வாஹனமாதல் (हरेरौपवाह्यः) சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு சுலோக விஷயங்களை ஸ்வாமி ஒரே சுலோகத்தில் அருளியுள்ள சிறப்பு போற்றுதற்குரியது.

## சுலோகம் 51

रमारमणवाहनं रणजयश्रिया सेवितं
रवेः रथगसादरं रघुपतेः रणे रक्षकम्।
रमासदनवासिनं रयजिताञ्जनारञ्जनं
रवेण कृतमङ्गलं रतमना अहं भावये।।

रमारमणवाहनं – ரமா என்னும் திருமகளின் ப்ரியநாயகனான ஸ்ரீய:பதியினுடைய வாஹனமானவர். ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ஸ்ரீ கருட பஞ்சாசத்தில் 46வது சுலோகத்தில் ஸ்ரீ கருடபகவான் பகவானுக்கு பல்வகை தொண்டு புரிதலை விவரித்திருக்கிறார். அதில் विजयरथो युग्ययोगानपेक्ष: என்று குதிரை பூட்டுதலை அபேக்ஷிக்காத வெற்றி தரும் தேராக வர்ணிக்கிறார்.

रणजयश्रिया सेवितं - வெற்றித் திருமகளால் அருளப்பட்டவர்.

रवे: रथगसादरं - சூரியனின் ரதத்தை செலுத்தும் அருணனுக்கு சகோதரர். ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸ்ரீகருடபஞ்சாசத்தில் 27வது சுலோகத்தில் ஸ்ரீ கருடன் பாம்புகளை அழிக்க தொடங்கிய உடன் சூரியன் தன்னுடைய தேரின் குதிரைகளை பூட்டுவதற்கு பூட்டான் கயிறாக பாம்புகள் இருப்பதினால் அச்சங்கொண்டபடியால் அவனுடைய தேரோட்டியான ஸ்ரீகருடனுடைய அண்ணனான அருணனுடைய ஸம்பந்தத்தால் ஸமாதானம் செய்யப்பட்டதாக ஸாதித்திருப்பதை நினைத்து சொல்லுகிறார் போலும்.

रघुपते: रणे रक्षक्म् - ஸ்ரீரகுபதியின் (ஸ்ரீராமனின்) போரில் அவரை காப்பாற்ற உதவியவர். ஸ்ரீராமனுக்கு ஸ்ரீகருடபகவான் உதவியதை ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ஸ்ரீ கருடபஞ்சாசத்தில் 48வது சுலோகத்தில் விவரித்திருக்கிறார்.

रमासदनवासिनं - ரமா என்னும் திருமகள் விரும்பி உறையும் திருநறையூரில் வஸிப்பவர்

रयजिताञ्जनारञ्जनं - காற்றின் கடியனாய் செல்லும் வாயு புத்திரனான அனுமாரின் வேகத்திற்கு காரணமானவர். ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸமுத்ரத்தை தாண்டும்பொழுது ஸ்ரீஹனுமான் தன்னை வேகமாக செல்ல ஸ்ரீகருடபனைப் போல (सुवर्णमिव)

நினைத்தார் என்று ஸ்ரீவால்மீகி பகவான் சொன்னதை நினைவில் கொண்டு ஸாதிக்கிறார் ஸ்வாமி. கருடனுடைய வேகத்தை பற்றி ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ஸ்ரீகருடபஞ்சாசத்தில் 47வது சுலோகத்தில் விவரித்திருக்கிறார்.

रवेण कृतमङ्गलं – பக்ஷிகளால் மங்களம் பாடப்பட்டவர். பக்ஷிகளின் நாயகனானபடியால் அவைகள் அவருக்கு மங்களம் பாடுவதாக அழகான கற்பனை.

रतमना अहं भावये - அந்த கருட பகவானை மகிழ்ச்சியுடன் என் மனதால் வணங்குகிறேன்.

“வெஞ்சிறை புள்” என்றும் “அருளாழி புள்” என்றும் ஸ்ரீநம்மாழ்வாரால் அழைக்கப்படும் ஸ்ரீகருடபகவான் அவரை துதிப்பவர்களுக்கு அநிஷ்ட நிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் அருளுவாராகையால் ஸ்வாமி ஸ்ரீதேசிகன் ஸ்ரீகருடபஞ்சாசத்தில் அநிஷ்ட நிவ்ருத்தியை கூறி தலைக்கட்டியிருப்பதை பார்த்ததனால் போலும் ஸ்ரீநிதி ஸ்வாமி இஷ்டப்ராப்தியை கூறி தலைக் கட்டியிருக்கிறார்.

கவி ஸிம்ஹத்தின் சுலோகங்களுக்கு நிகராக இருக்கும் இந்த க்ஷேமகாரி சதகத்தை அப்யஸித்தால் நமக்கு ஸ்ரீகருடபகவானின் அருள் கிடைப்பதில் யாதொரு ஐயமும் இல்லை. அடியேனுடைய அத்தான் ஸ்ரீகருணாகர மஹாதேசிகரின் ஸப்ததியில் இந்த வ்யாஸ்ம் எழுத கிடைத்த வாய்ப்பிற்கு அவருக்கு அடியேனிடம் உள்ள வாத்ஸல்யமே காரணமாகும் என்று கூறி சிறிய ஞானத்தனான அடியேன் அவருடைய திருவடிக்கு பல்லாண்டு பாடுகிறேன்.

# ஸுலோகங்கள் 52 முதல் 54 வரை

ஸ்ரீமதுபயவே வித்வான் பருத்திப்பட்டு தேவனார்விளாகம்
**Dr.S.பத்மநாபாசார்ய ஸ்வாமி,** ஆஸ்தான வித்வான்,
ஸ்ரீகார்யம், ஸ்ரீமதஹோபில மடம், சென்னை

**52. சததலசரணாயா: ஸத்மஸம்பூஷயந்தம்
சததலகுஸுமாக்ஷம் சார்ங்கபாணிம் வஹந்:|
சதமகமணிநீல: ஸார்வபௌம: ககாநாம்
சதமகஸஹஜாதஸ்ரீ ஸுஹ்ருத் பாது பாபாத்||**

***சததலசரணாயா: ஸத்மஸம்பூஷயந்தம்*** - பத்மப்ரியே பத்மினீ பத்மஹஸ்தே பத்மாலயே பத்மதலாயதாக்ஷீ என்பதற்கேற்பத் தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் பூமன்னு மாதான வஞ்ஜுளவல்லித் தாயாரின் இல்லமாகிய திருநறையூர் - நாச்சியார்கோவிலுக்கு ஓர் அணிகலனாக எழுந்தருளியிருப்பவர். இன்றும் நாச்சியார்கோவில் என்ற ஊரின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில், நாச்சியாருக்கும் நம்பிக்கும் முன்னால் கல் கருடன் தானே நம் கண் முன் வந்து நிற்கிறார்.

***சததலகுஸுமாக்ஷம் சார்ங்கபாணிம் வஹந்:*** - தாமரைப் போன்ற திருக்கண்களை உடையவனும், சார்ங்கமென்னும் வில் ஏந்தியவனுமாகிய எம்பெருமானை வாகனமாக இருந்து தாங்குபவர். பராசரபட்டர் ஸ்ரீ குணரத்னகோசத்தில்,

**நித்யம் த்வந்மதுபாநமத்தமதுப ஸ்ரீநிர்பராப்யாம் பதிம்
த்ருக்ப்யாம் ஏவ ஹி புண்டரீகநயநம் வேதோவிதாமாஸ தே**

என்று, தாமரையாளாகிய பிராட்டியின் திருமேனி அழகென்னும் மதுவை பருகிப் பருகித் திருவரங்கநாதனின் கண்களாகிய கருவண்டுகள் சிவந்துவிட்டன. அதனால் தான் வேதங்களும் அவனைத் தாமரை போல சிவந்த கண்களை

உடையவன் - புண்டரீகாக்ஷன் என்று அடையாளம் காட்டுகின்றன போலும் என்றருளிச் செய்துள்ளார்.

**சதமகமணிநீல: ஸார்வபௌம: ககாநாம்** - இந்திர நீலக்கல் போன்ற அழகிய திருமேனியை உடைய பக்ஷிராஜர். கண்ணன் என்னும் கருந்தெய்வத்தையே எப்போதும் எண்ணியிருந்த ஆண்டாள், ''சதமகமணிநீலா'' என்று ஸ்வாமி தேசிகன் சாதித்தபடி, அந்த மணிவண்ணனைப் போலவே தானும் கருநீலக்கல் போன்ற நிறத்தவள் ஆனாள். அவ்வாறே ''மன்னு மரக குன்று'' என்று திருமங்கையாழ்வாரால் குறிக்கப்படும் இந்திர நீலக்கல் போன்ற திருமேனியை உடைய நறையூர் நம்பியையே எப்போதும் சிந்தித்த கருடன், அதன் விளைவாகத் தாமும் அந்த நீலநாயகக் கல் போன்ற நிறத்தை எய்திவிட்டார் போலும்!

**சதமகஸஹஜாதஸ்ரீ ஸுஹ்ருத் பாது பாபாத்** - இந்திரனின் சகோதரனாகிய வாமன மூர்த்தியாக அவதரித்த எம்பெருமானுக்கு மிகவும் நெருங்கிய தோழராக விளங்கும் கருடன், நம்மை அனைத்துப் பாபங்களிலிருந்தும் காத்தருளட்டும். வாமன மூர்த்தி எப்படி தன் உடைமையை எப்படியேனும் பெற்றே தீரவேண்டும் என்ற உறுதியுடன் மஹாபலியிடம் யாசகம் கேட்டுச் சென்றானோ, அதுபோலத் தன் சொத்தாகிய ஜீவாத்மாக்களையும் இரந்தாவது பெற்றே தீர வேண்டும் என்ற நோக்கில் கருடன் மேல் ஏறி அடிக்கடி யாத்திரை மேற்கொள்கிறானாம் எம்பெருமான். அதனால்தான் வாமனமூர்த்திக்குப் பிரியமானவர் என்று கருடனை இங்கே ஸ்வாமி குறிப்பிடுகிறார். எம்பெருமானை நம் அருகில் கொண்டு வந்து சேர்த்து, அவன் கடாக்ஷத்தை நமக்குப் பெற்றுத் தந்து நம் பாபங்களைப் போக்குபவர் கருடனல்லவா?

**பூமன்னுமாதான வஞ்ஜுளவல்லியின் இல்லமாகிய நாச்சியார் கோவிலுக்கு அணிகலனாகத் திகழ்பவரும், செந்தாமரைக் கண்ணனும் சார்ங்கவில்லை ஏந்தியவனுமான எம்பெருமானை வாகனமாக இருந்து**

**தாங்குபவரும், இந்திர நீலக்கல் போன்ற அழகிய சாளக்ராமத் திருமேனியை உடையவரும், பறவைகளின் அரசரும், இந்திரனின் சகோதரனான எம்பெருமானுக்கு உற்ற நண்பனுமான கருடன் பாபங்களில் இருந்து அடியேனைக் காத்தருளட்டும்.**

**53. கல்லோலிநீகாமுககந்யகாயா:**
**காந்தே நிசாந்தே கலயந்நிவாஸம்|**
**காகோதரத்ராஸதகூஜிதோ ந:**
**கரோது கம் கச்யபபுத்ரரத்நம்||**

**கல்லோலிநீகாமுககந்யகாயா:** - சமுத்திர ராஜனின் மகளான பிராட்டி வஞ்ஜுளவல்லியுடைய,

பாற்கடல் கடையப்பட்ட போது வெளியமுது, உள்ளமுது என இருவகை அமுதங்கள் வந்தனவாம். வெளியமுது தேவர்கள் விரும்பிய உப்புச்சாறான அமுதம். உள்ளமுதோ அமுதில் வரும் பெண்ணமுதான பிராட்டி. அதனால் தான் பெரியாழ்வார் சீதக்கடலுள்ளமுது என்று பிராட்டியைக் குறிப்பிடுகிறார். அந்த உள்ளமுதான பிராட்டியுடைய,

**காந்தே நிசாந்தே கலயந்நிவாஸம்** - அந்தப்புரமாக விளங்கும் நாச்சியார்கோவிலில் நித்யவாசம் செய்பவர். நாச்சியார் கோவிலில் ஸ்ரீதேவியும், திருவிண்ணகராகிய ஒப்பிலியப்பன் கோவிலில் பூதேவியும், நாச்சியார் திருமாளிகையாகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் கோதாதேவியும் அந்தப்புரத்தில் மனைவி கணவனை விட்டுப் பிரியாதிருப்பது போல, தனிச்சன்னிதியில் இல்லாமல், பெருமாளோடு ஒரே சன்னிதியிலேயே எழுந்தருளியுள்ளார்கள் என்று நாச்சியார் கோவில் ஸ்ரீமதுபயவே. கண்ணன் பட்டாச்சார்யார் ஸ்வாமி ரசமாக சாதிப்பார்.

**காகோதரத்ராஸதகூஜிதோ ந:** - தன்னுடைய திருமேனி ஒளியால் பாம்புகளுக்கு அச்சத்தை உண்டாக்குபவர். கருடனின்

திருமேனி ஒளியைக் கண்டாலே பாம்புகள் அஞ்சி ஓடிவிடுமாம். ராம-லக்ஷ்மணர்களும் வானர ஸைந்யமும் யுத்த களத்தில் நாகபாசத்தால் கட்டுண்டு கிடந்த சமயத்தில்,

**ததோ முஹூர்த்தாத் கருடம் வைநதேயம் மஹாபலம்|**
**வாநரா தத்ருசு: ஸர்வே ஜ்வலந்தமிவ பாவகம்||**
**தமாகதமபிப்ரேக்ஷ்ய நாகாஸ்தே விப்ரதுத்ருவு:|**

என்னும்படி கருடன் அங்கே தோன்றியதும், அவருடைய திருமேனி ஒளியைக் கண்டதுமே, அவர்களைப் பீடித்திருந்த நாகங்களெல்லாம் அஞ்சி ஓடிவிட்டன.

**கரோது கம் கச்யபபுத்ரரத்நம்** - கச்யபர் பெற்றெடுத்த ரத்தினம் போன்ற பிள்ளையாகிய அந்தக் கருடன் அடியேனுக்கு சுகத்தை உண்டாக்கட்டும். இங்கே கம் என்ற சொல் ஆனந்தத்தைக் குறிக்கிறது. "கம் ப்ரஹ்ம க$_2$ம் ப்ரஹ்ம" என்ற சாந்தோக்ய உபநிஷத் வாக்கியம் எம்பெருமானை கம் - சுகம், க$_2$ம் - ஆகாசம் என்று குறிப்பிடுகிறது. எனவே கம் என்ற சொல் சுகத்தைக் குறிக்கிறது.

சமுத்திர ராஜனுடைய மகளான பிராட்டியின் அழகான அந்தப் புறமாகிய நாச்சியார் கோவிலைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டவரும், தன் திருமேனி ஒளியால் பாம்புகளுக்குப் பயத்தை உண்டாக்குபவரும் கச்யப மகரிஷி பெற்றெடுத்த ரத்தினமுமாகிய கருடன் அடியேனுக்கு ஆனந்தத்தை அருளட்டும்.

**54. சக்ஷுச்ச்ருதீநாம் சரமாம் தசாம் ய-**
**ந்நாஸா நிஜாக்ரேண ஸ்ருஜத்யஜஸ்ரம்|**
**ஸ வைநதேய: ச்ருதிப்ருந்தரூப:**
**ச்ருதீ ருதைஸ்ஸ்வை: பரித: புநாது||**

**சக்ஷுச்ச்ருதீநாம் சரமாம் தசாம் யந்நாஸா நிஜாக்ரேண ஸ்ருஜத்யஜஸ்ரம்** - யாருடைய மூக்கு நுனியானது, பாம்புகளுக்கெல்லாம் முடிவை ஏற்படுத்துகிறதோ,

கருடனின் பாம்புகளை வெல்லும் திறமையைக் குறித்து ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில், தத்வீகராரி, நாகஹந்தா, ஆசீவிஷாரி, ஸர்பஸந்தானஹந்தா, காத்ரவேயாந்தகன், புஜககுலரிபு, வ்யாலாஹாரன் என்றெல்லாம் திருநாமங்களை இட்டு அழைக்கிறார்.

**ஸ வைநதேய: ச்ருதிப்ருந்தரூப:** - வேத ஸ்வரூபியான அந்த வைநதேயன்,

**ச்ருதீ ருதைஸ்ஸ்வை: பரித: புநாது** - தன்னுடைய ஒலிகளால் என் காதுகளை எல்லாத் திசைகளிலிருந்தும் புனிதமாக்கட்டும். கண்களால் முன்னே இருக்கும் பொருள்களை மட்டுமே பார்க்க இயலும். ஆனால் காதுகளோ அனைத்து திசைகளிலிருந்தும் வரக்கூடிய ஒலி அலைகளைக் கிரஹிக்க வல்லவை.

நம்மாழ்வார்,

முடியானே மூவுலகும் தொழுதேத்தும் சீர்
அடியானே ஆழ்கடலைக் கடைந்தாய் புள்ளூர்
கொடியானே கொண்டல் வண்ணா அண்டத்தும்பரில்
நெடியானே என்று கிடக்குமென் நெஞ்சமே.

என்று தொடங்கும் திருவாய்மொழியில், எம்பெருமானை அநுபவிக்க வேண்டுமென்ற பசியின் மிகுதியால், எம்பெருமானைக் கண்களால் கண்டு, காதுகளால் கேட்டு, மூக்கால் முகர்ந்து, நாவால் சுவைத்து, கைகளால் தீண்டுவதை விட, இந்த ஒவ்வொரு இந்திரியத்தாலும் கண்டு, கேட்டு, முகர்ந்து, சுவைத்து, தீண்டி அநுபவிக்க வேண்டுமென்று தாபம் கொண்டார். பாம்புகளுக்குக் கண்களே செவிகளாகவும் செயல்படுகின்றனவே.

நீண்ட நாள் பசியால் வாடும் ஒரு குடும்பத்தின் தலைவன், உணவு கிடைத்த அளவிலே, தன் உணவைத் தன் குடும்பத்தார்க்கும் குடும்பத்தாரின் உணவைத் தனக்கும் என்று

மாறி மாறி உண்பது போலே, இந்திரியங்களுக்கும் எம்பெருமானாகிய உணவைப் பகிர்ந்தளிக்க விழைந்தார் ஆழ்வார். கண்களுக்குக் காணும் சக்தியும் அவன் கொடுத்தது தானே. அவனே அந்தக் கண்களுக்குக் கேட்டு, முகர்ந்து, சுவைத்து, தீண்டும் சக்தியைத் தந்தால் அது நமக்குத் தட்டென்ன ? என்று ஆழ்வார் திருவுள்ளம்.

கூரத்தாழ்வானும் வரதராஜ ஸ்தவத்தில்,

**த்வக் ச த்ருக் ச நிபிபாஸதி ஜிஹ்வா விஹ்வலா ச்ரவணவத் பரவ்ருத்தௌ|**
**நாஸிகா த்வயி கரீச ததேதி ப்ராப்நுயாம் கதமிமாம் ஸ்விதவஸ்தாம்||**

என்று "ஹஸ்திகிரிநாதனே ! என் உடலும் கண்களும் உன்னைப் பருக விழைகின்றன. என் நா உன்னைக் கேட்க வேண்டுமென விரும்புகிறது. என் மூக்கோ உன்னை அணைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறது. இவையெல்லாம் முக்தாத்மாக்களுக்கன்றோ சாத்தியம். இந்த விபூதியில் இந்த அநுபவத்தை நான் எப்படி அடைந்திடுவேன் ?" என்று அருளிச் செய்துள்ளார்.

அவ்வாறே நம் ஸ்வாமியும் கருடனின் மங்களகரமான ஒலிகள் தம் செவிகளுள் நுழைந்து, அதனால் தம் அனைத்து இந்த்ரியங்களும் தூய்மையடைய வேண்டுமெனப் ப்ரார்த்திக்கிறார்.

**கண்களையே செவிகளாக உடைய பாம்புகளுக்கு மீண்டும் மீண்டும் முடிவைத் தரக் கூடிய மூக்கு நுனியை உடையவரும், வேதக்கூடங்களின் வடிவாக விளங்குபவருமாகிய வைநதேயன், புனிதமாக்கட்டும்.**

# சுலோகங்கள் 55 முதல் 57 வரை

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் நம்பி சதுர்வேதசதக்ரது
க்ரந்த சதுஷ்டய இந்து
**Dr.V.வாஸுதேவாசார்ய ஸ்வாமி,** திருவனந்தபுரம்

ஸ்ரீமத் ஆசுகவி ஸார்வபௌம ஸ்வாமியின் கவிதைகள் ரஸிகர்களுக்கு நல்ல விருந்தாகவும் வித்வத்-ஔஷதம் என்னும்படி மருந்தாகவும் உள்ளன. ஸ்வாமியின் சில ச்லோகங்களை அனுபவிக்க வாய்ப்பு அமைந்ததை பாக்யமாக கருதி அடியேன் சிற்றறிவுக்கு எட்டியவரை அர்த்தம் எழுதுகிறேன்.

நாச்சியார் கோவில் கல்கருட பகவான் விஷயமான இந்த ‘க்ஷேமகாரி சதகம்’ எனும் ஸ்தோத்ரத்தை ஐந்து பாகங்களாக பிரித்து ஸ்வாமி அமைத்துள்ளார். ஒவ்வொரு பாகத்துக்கும் ஒவ்வொரு விஹாரம் என்று பெயர் வைத்தருளினார்; விஹாரம் என்றால் ஸஞ்சாரம் என்று அர்த்தம்.

ஸ்ரீதேசிகன் பாதுகாஸஹஸ்ரத்தில் பாதுகையின் நடையைக் குறிக்குமுகமாக பத்ததி என்று பெயர் வைத்தது போல், ஸ்ரீகருத்மான் அற்புதமாக ஆகாரத்தில் ஸஞ்சாரம் செய்வதைக் குறிக்குமுகமாக விஹாரம் என்று பெயர் வைத்தருள்கிறார்.

அதே சமயம், ஸ்ரீகருத்மான் ஆகாசத்தில் சஞ்சாரம் செய்வது போல் அற்புதமாக இந்த காவ்யத்தின் கவிதை நடை அமையும் என்பதையும் குறிக்கிறது.

அதுபோலவே, விஹாரம் என்றால், லீலை வேடிக்கை என்றும் ஒரு அர்த்தம் ஆவதால், கவிதையில் பலவிதமான வேடிக்கைகள் மூலம் ரஸம் அனுபவிக்க முடியும் என்பதும் குறிப்பு.

ப்ராஸம், அனுப்ராஸம், மஹாப்ராஸம் ஆகிய மூன்று விதமான காவ்ய-நடையழகுடன் மூன்று விஹாரங்கள்; சமத்காரம் எனும் பொருட்சுவை பதிந்த ஒரு விஹாரம்; ப்ரார்த்தனை எனும் பக்தி-பாவம் ததும்பும் பாகமும் சேர்த்து ஐந்து விஹாரங்கள் உள்ளன.

இதில் நான்காவது சமத்கார விஹாரம்; காவ்யங்களில் விசேஷமான அர்த்தங்களை காவ்ய-நடையில் அழகாக சொல்லும் முறையை அனுபவிக்கும் போது ஒரு தனிப்பட்ட விளக்க முடியாத ஆனந்தம் ரசிகர்களின் மனதில் உண்டாகும். அதற்கு சமத்காரம் என்று பெயர். அப்படி ரஸிக்கும்படியான அர்த்தம் இருப்பதால் இதற்கு சமத்கார விஹாரம் என்று பெயர். இதில் மூன்று ச்லோகங்கள் பார்க்கலாம்.

**55.வடதருமஹாசாலாலக்னான் முநீன் அபிரக்ஷிதும்**
**கருட !பவதா க்ஷுத்க்ஷுண்ணேநாப்யஹோ யதனுஷ்டிதம்|**
**ததிஹ பகவத்பக்தப்ராந்தே மமோதிதம் ஆகஸாம்**
**நிசயம் அகிலம் தூரீகர்த்தும் சரித்ரம் அலம் ப்ருசம்||**

**பொருள்:** கருடனே !, பசியால் பீடிக்கப்பட்ட நிலையிலும் உம்மால், ஆலமரத்தின் பெருங்கிளையில் தொங்கிய மஹாமுனிவர்களை காப்பதற்காக எது செய்யப்பட்டதோ, அந்த ஆச்சர்யமான சரிதமே, பாகவதர் திறத்தில் எனக்கு விளைந்திருக்கும் பாபக் கூட்டம் முழுவதையும் போக்க போதுமானது.

அல்லது, பாகவதகோஷ்டியில் சொல்லப்படும் அந்த சரிதமே என் பாபக் கூட்டத்தை போக்க போதுமானது என்று அர்த்தம். ஸ்ரீமஹாபாரதத்தில் கருத்மானது இந்த சரித்ரத்தின் முடிவில், ‘‘படேத வா த்விஜகணமுக்யஸம்ஸதி’’ என்றுள்ளது. பாகவதர் திரளில் இந்த சரிதத்தைப் படித்தால் நல்ல பலன் சொல்லியுள்ளது.

அதை அடியொற்றி இந்த அர்த்தம் (த்விஜகணமுக்யஸம்ஸதி என்றால் கருத்மான் ஸந்நிதியில் என்றும் அர்த்தம் ஆகலாம்).

பொதுவாகப் பிற உயிரினங்களை விட பறவைகளுக்குப் பசி அதிகம்; அப்படி தீவிரமான பசியில் இருந்த கருத்மான் உணவாக ஒரு யானையும் பெரிய ஆமையும் எடுத்துக்கொண்டு அவற்றை உண்பதற்காக மரக்கிளையில் அமர்ந்தார். அந்த கிளை முறிய ஆரம்பித்தது. பொதுவாகப் பறவை உட்கார்ந்தால் கிளை முறியாது; பறவைகளுக்கு உடல் பாரம் மிகக் குறைவு; பறக்கும்படியாகவும் கிளை நுனியில் அமரும் படியாகவும் ஏற்ற இலேசான உடல்தான்; ஆனால், கருடனது காலில் உள்ள ஆமையையும் ஆனையையும் கிளை தாங்காது. கிளை முறிய ஆரம்பிக்க கிளையில் தொங்கிக் கொண்டு தபஸ் செய்து கொண்டிருந்த வாலகில்யமுனிவர்களுக்கு ஆபத்து வந்தது; அது பாகவத-அபசாரம் ஆகிவிடும் என்று கருடனைத் தகப்பனார் கச்யபர் எச்சரித்தார். கருடனும் பொறுப்புடன் அந்த கிளையை அப்படியே தன் மூக்கின் நுனியினால் கொத்திக்கொண்டு கால்களில் ஆனையையும் ஆமையையும் இடுக்கிக்கொண்டு பரந்து சென்று ஒரு இடத்தில் பத்திரமாக கிளையை இறக்கி முனிவர்களைக் காப்பாற்றினார்.

பெரும் பசியிலும் பட்டினி கிடந்தும், பொறுப்புடன் செயல்பட்டு பாகவத - அபசாரத்தைத் தவிர்த்த கருத்மானது சரிதம் நமக்கு ஒரு பாடம்; பட்டினி, பணத்தேவை, அல்லது பிற காரணம் ஏதாவது சொல்லி பாகவதர்களிடம் உதாஸீனத் தன்மையால் காட்டக்கூடாது என்பது பாடம்.

**56. உபரோ பகவான் இஹ பாதி ஹரி:**
**கமலாஸதநே ஸ பவான் ஹி தத்|**
**உபலாக்ருதிதாம் அதிக்ருத்ய பராம்**
**உபகாரரதிம்குருதே நிதராம்||**

**பொருள் :** கருடனே! இங்கு நாச்சியார் கோவிலில் பெருமான் உபரன் என்னும்படி விளங்குகிறான்; அதற்கேற்ப தேவரீரும் உபரனாக இங்கே எழுந்தருளி இருந்து கொண்டு நன்கு உபகாரம் செய்கிறீர்.

பெருமான் இங்கே உபரன்; அதாவது உ எனப்படும் லக்ஷ்மியை தனக்கு மேல் பெருமையுடையவராக ஆக்கிக் கொண்டு எழுந்தருளி இருக்கிறான். இது நாச்சியார் கோவில் அன்றோ !

அதற்கேற்பத் தானும் இருக்க வேண்டும் என கருத்மான் நினைத்தார்; தானும் உபரன் ஆகிவிட்டார்; அதாவது உபலமாக கல்லாக இருக்கிறார் என்று அர்த்தம். ஸம்ஸ்க்ருதத்தில் 'ர'வும், 'ல'வும் ஸமானமாக ஆகும். 'ர'வுக்கு பதில் 'ல' வரலாம். அதன்படி உபரன் என்பதும் உபலன் என்பதும் ஒன்றே; பெருமான் உபரன் ஆக இருப்பதால் அதற்கேற்ப இங்கே கருடனும் உபரனாக (உபலனாக) இருக்கிறார்.

இப்படியாக இருவருக்கும் 'உ'காரம், மற்றும் 'ப'காரம் பொதுவாக இருக்கிறது; இரண்டையும் சேர்த்துச் சொன்னால் 'உ', 'ப' காரம் பொதுவாக உள்ளது. அதனால் பெருமாள் போல கருத்மானும் இங்கு உபகாரம் செய்பவராக வரங்கள் அளிப்பவராக எழுந்தருளியுள்ளார்.

இந்த ச்லோகம் 'கமலா-குசகூ' என்கிற ச்லோக முறையில் இனிமையாக சொல்ல ஏற்றது.

**57. ஸௌக்ஷ்ம்யாத் பச்யதி ஸர்வமத்ர பரித:**
**ஶ்ரீமான் முனி: கச்யப:**
**தஸ்யாயம் தனயோऽநகோ வினதயா**
**ஸத்யா ஸ்வகுக்ஷௌ த்ருத:|**
**தஸ்மாத் ஸௌக்ஷ்ம்யவிலோகனேऽதிநிபுண:**

***ஸ்ரீவாஹகோயம் ஹரே:***
***ஸௌக்ஷ்ம்யம் ஸௌது மனஸ்யமுஷ்ய***
***ஸததம் தர்மஸ்ய பக்ஷீச்வர:||***

***பொருள்:*** *விநதை எனும் நல்லாளின் திருவயிறு வாய்த்த இந்த வைநதேய-கருத்மான், கச்யபரது புதல்வர்; ஸ்ரீகச்யப முனிவர் சுற்றிலும் எல்லாம் பார்க்க வல்லவர்; அதனால் இவரும் ஸூக்ஷ்மமாக எல்லாம் காண்பதில் மிகவல்லவர் ஆகிறார்; ஹரி பகவானின் திருவாகனமாக ஆகும் இந்த பக்ஷிராஜர் இந்த எமது மனதில் என்றும் தர்மத்தின் ஸூக்ஷ்மத்தை அருளட்டும்.*

*“கச்யப: பச்யகோ பவதி| யத் ஸர்வம் பரிபச்யதீதி ஸௌக்ஷ்ம்யாத்” என்று கச்யப முனிவரைப் பற்றி வேதம் கொண்டாடுகிறது. இந்த முனிவர் எல்லாவற்றையும் சுற்றிலுமாக ஸூக்ஷ்மமாக பார்க்க வல்லவர்; அதனால் இவர் பச்யகர்; பச்யகர் என்றால் பார்க்க வல்லவர் என்று அர்த்தம். பச்யகர் என்பதுதான் சற்றே மாறி கச்யபர் என்ற பெயர் ஆகிவிட்டது; ஹிம்ஸம் என்பது மாறி ஸிம்ஹம் என்று ஆனதுபோல இது. இப்படி வேதம் விளக்குவதை அடியொற்றி இந்த அற்புதமான கருத்துடைய ச்லோகம் அமைகிறது.*

*அப்படிப்பட்ட கச்யபரின் புதல்வர்தான் இந்த வைனதேயர்; அதனால் தந்தை போலவே இவரும் ஸூக்ஷ்மமாக எல்லாம் காண வல்லவர் ஆகிறார்; பறவைகளில் கழுகுப்பார்வை என்பது ப்ரசித்தம் தானே! அந்த கழுகை விட கருடப் பார்வை இன்னும் ஸூக்ஷ்மமானது; கழுகை விட மிக உயரத்தில் பறப்பவர் கருடன்; இதை ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸம்பாதி எனும் கழுகு-அரசன் சொல்கிறார். “வைனதேயகதி: பரா” என்கிறார். மிக உயரத்தில் பறந்து கொண்டே மண்ணில் உள்ள சிறு புழுக்களையும் கூட காண வல்லவர்.*

அப்படிப்பட்ட கருத்மான் அடியேனுக்கும் ஸூக்ஷ்மமான-பார்வையை அளிக்கட்டும். நான் ஸூக்ஷ்மமாக தர்மங்களை அறிய வேண்டும்; அதற்கான மன-ஆற்றலை அருளட்டும் என்று ப்ரார்த்தனை செய்கிறார். கச்யபர் முதலிய முனிவர்கள் ஸூக்ஷ்மமாக எல்லாம் பார்ப்பர்; பறவைகள் ஸூக்ஷ்மமாக தேவையான உணவை பார்க்கும்; மனிதர்களான நாம் ஸூக்ஷ்மமாக பார்க்க வேண்டியது தர்ம-அனுஷ்டானத்தை: அதை அருளட்டும் என்கிறார்.

"த்ருச்யதே த்வக்ர்யா புத்த்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்மதர்சிபி:" எனும்படி ஸூக்ஷ்மமான ஸித்த தர்மமான பகவானைக் காணும் ஸூக்ஷ்மஜ்ஞானம் அருளட்டும் என்றும் அர்த்தம் ஆகலாம்.

கச்யபர் போலவே அவரது மனைவியான விநதா என்பவரும் ஸுபர்ணீ என்ற பெயரில் வேதப் புகழ் பெற்றவர்; இருவரும் மகனைப் பெற்று வளர்த்ததையும் வேதம் சொல்கிறது. "அஸ்மை வை பிதரௌ புத்ரான் பிப்ருத:" என்று அவர்கள் வளர்த்ததனால் பயன் பெற்ற கதையையும் சொல்கிறது.

அது எல்லாமே இந்த ச்லோகத்தில் குறிப்பாக உள்ளதை கவனிக்கலாம்.

"அஹோ பாரோ மஹான் கவே:" என்றான் ஒரு கவி; கவிகளின் பொறுப்பு மிக மிக அதிகம்; வேதம், சாஸ்திரம் முதலிய எல்லாம் நன்கு தெரிந்திருக்க வேண்டும்; புதுப்புது எண்ணங்களைப் படைத்து, கோர்வையாக கவிதையில் வடித்து சொல்லும் திறமை வேண்டும். மஹாகவிகளான காளிதாஸன், ஸ்ரீஹர்ஷன் முதல் ஸ்வாமி தேசிகன், வேங்கடாத்வரி கவி வரை எல்லாரும் வேதமும் சாஸ்திரமும் மற்ற பல கல்விகளும் கைதேர்ந்த மஹான்கள். அவர்களுக்கு ஸமமாக கவியுலகில் இடம் பெறும் நம் ஆசுகவி ஸ்வாமியும் தம் கவிதைகள் மூலம் நம்மை அனுக்ரஹம்

செய்து கொண்டு எழுந்தருளியுள்ளார். அதனால்தானே க்ஷேமகாரி சதகம் என்று எல்லாருக்கும் க்ஷேமம் அளிப்பதான இத்துதியை அமைத்துள்ளார். பல தலைமுறைகளாக தொடரும் கவிகுலப் பெருமை இனியும் தொடரும் என்பதற்கு அவரது திருக்குமாரர்கள் சன்றாக உள்ளனர். அவர்கள் இட்ட பணியை நிறைவேற்றி, ஸ்ரீ உ.வே. கருணாகரார்ய மஹாதேசிகனின் ஸப்ததி திருநக்ஷத்ர வைபவத்தில் பங்கு பெற்று தன்யன் ஆகிறேன்.

அடியேனுக்குச் சிறு வயதில் இந்த ஸ்வாமியை அடையாளம் காட்டியவர் அடியேனது வ்யாகரண ஆசார்யனான ஸ்ரீ உ.வே. உத்தரமேரூர் வாஸுதேவாசார்யார் ஸ்வாமி; அடியேனிடம், "நீ பிற்காலத்தில் கருணாகராசார் போல ஆகவேண்டும்" என்று அடிக்கடி சொல்வார்; அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் சொன்னார்; அவர் சொற்படி பல ஸ்தோத்ரங்கள் முதலியன பயின்றேன்; இன்றுவரை இந்த ஸ்வாமி போல ஆக முயன்று கொண்டுதான் இருக்கிறேன்.

இந்த ஸ்வாமிக்கும் அடியேனிடம் ஒரு தனிப்பட்ட அனுக்ரஹம் உண்டு. இவரது திருத்தகப்பனாரது ஸப்ததி திருநக்ஷத்ர பாராயணத்துக்கு அடியேன் போயிருந்தேன். அந்த ஸ்வாமியும் விசேஷகடாக்ஷம் செய்தருளினார். தர்க்கத்தில் சில கேள்விகள் கேட்டு பதில் சொல்ல வைத்து ஊக்கப்படுத்தி அருளினார். அதே போல இந்த ஸ்வாமியின் அனுக்ரஹமும் தொடர்கிறது என்பதே அடியேனுக்குப் பெருமை. ப்ரணாமங்கள் மூலம் தன்யன் ஆகிறேன்.

# சுலோகங்கள் 58 முதல் 60 வரை

*ஸ்ரீமதுபயவே நாவல்பாக்கம் )))))) வலையபேட்டை*

**Dr.ராமாசார்ய ஸ்வாமி**

*58.* आकाशो किरणै: नवैस्समुदितै: सूर्यस्य हेमायिते
वृक्षाग्रै: मृदुनानिलेन चलितै: संवीजिते चामरै।
मेधानां शकलै: गतागतियुतै: संभूषिते राजतै:
अंसाग्रे कलयन् धनं कमपि तं पक्षिश्वराग्रे भव॥

*இந்த ச்லோகத்தில் ஸ்வாமி பெரிய திருவடியாம் கருத்மான் தமது முன் ஆவிர்பவித்து சேவை ஸாதித்தருள வேண்டும் என்று ப்ரார்த்திக்கின்றார்.*

*தினமும் காலையில் கருத்மானையும், கருட வாஹனனான எம்பெருமானையும் த்யானம் செய்ய வேண்டும் என்பது பெரியோர்களின் திருவுள்ளம். ஆஹ்நிகத்தில் காலையில் அநுஸந்தானம் செய்ய வேண்டிய ச்லோகங்களில் கருட வாஹனனான எம்பெருமான் விஷயமான ச்லோகங்கள் உள்ளன.*

आकाशो किरणै: ... चामरै: *ஸூர்யோதய காலத்தில் காலையில் மரம் செடிகளுடன் கூடி இயற்கை அழகு மிளிர்கின்ற ஒரு இடத்தில் ஸ்வாமியின் அநுபவம். அப்பொழுது தான் உதித்த ஸூர்யன். அந்த ஸமயத்தில் ஸ்வர்ணமயமான கிரணங்கள் மரங்களின் நுனியில் விழுகின்றன. மரங்களும் கூட தங்கமயமாகக் காட்சி அளிக்கின்றன. ஸூர்யோதய காலத்தில் பொதுவாகப் பெருங்காற்று இருக்காது. காற்று மெல்ல வீசுகின்றது. இதனால் மரங்களின் நுனிகள் மெதுவாக, மெதுவாக அசைந்து தங்க ஸாமரம் வீசுவது போல் காட்சி அளிக்கின்றன. கருடன் தனது தோளில் எம்பெருமானை எழுந்தருளிக் கொண்டு செல்லும்போது நடக்கும் நிகழ்ச்சி.*

இங்கு சில விஷயங்களை கவனிக்க வேண்டும். ஸ்ரீநிதி ஸ்வாமியின் கவிதைகளை ஸேவித்தோமானால் எத்தனையோ விஷயங்கள் நமக்குத் தோன்றும். அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன்.

1. ஸ்ரீநிதி ஸ்வாமியின் திருவுள்ளத்தை அறிந்து கொள்ள வைதிக ஸம்ப்ரயதாயத்தில் ஆழ்ந்த ஞானம் வேண்டும்.

2. ஆழ்வார் ஆச்சார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளையும், திருவுள்ளங்களையும் நமக்குக் காண்பிப்பதாக அமைந்திருக்கும்.

3. மஹாகவிகளின் ப்ரயோகமும், சாஸ்த்திரிய முறையிலான ஸம்ப்ரதாய விருத்தமில்லாததான அநுபவம் நம்மைத் திகைக்க வைக்கும்.

இங்கு தங்க சாமரம் வீசுகின்ற நிகழ்ச்சி சொல்லப்படுகின்றது. இயற்கை சாமரம் வீசுவது கருத்மானுக்கு.

தங்க ஸாமரம் வீசுவது என்பது மிகப்பெரிய உத்ஸவங்களில் மட்டுமே நடக்கும் நிகழ்ச்சி.

கருத்மான் எப்பொழுதும் எம்பெருமானை மனதில் தரித்துக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், அவரது திவ்ய மங்கள விக்ரஹத்தையும் தன திருமேனியால் தரித்துக் கொண்டுள்ளார். பிராட்டி இல்லாமல் பெருமாள் கிடையாது. திவ்ய தம்பதிகளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டுள்ளார்.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ ஸ்துதியில் "ச்ரேயஸ்காமா:" என்கிற ச்லோகத்தில் பிராட்டியார் திருவடிகளை மனதில் தாங்குபவர்கள் குடை, சாமரம் முதலியவைகளுடன் பெருமையுடன் ஸஞ்சரிப்பவர்கள் என்கிறார். திவ்ய தம்பதிகளை ஏந்தும் கருத்மானுக்கு தங்க சாமரம் (இயற்கை) வீசுவது மிகவும் பொருந்தும்.

ஸ்ரீ க்ருஷ்ணாவதார காலத்தில் வஸுதேவர் கண்ணனை திருவாயற்பாடிக்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போகும் பொழுது கருத்மான் தமது இறக்கைகளால் வீசி ராக்ஷஸர்கள் அணுக முடியாதபடி செய்தார் என்று ஸ்வாமி தேசிகன் யாதவாப்யுதத்தில் "श्रुथिमयो विहग:" என்கிற ச்லோகத்தில் அநுபவிக்கின்றார்.

ஸ்வாமி தேசிகனின் திருவுள்ளத்தை மனதில் கொண்டு ஆசுகவி ஸ்வாமி ஆதித்ய மண்டலாந்தர்வர்தியான எம்பெருமான் கருத்மானுக்கு தங்க சாமரம் வீசும்படி செய்து அழகு பார்க்கின்றார் என்றும் அநுபவிக்கலாம்.

मेधानां शक्लैः ... राजतैः - இதுவும் காலையில் நாம் பார்க்கும் இயற்கை காட்சி. ஸாதாரணமான நாட்களில் காலையில் மேகங்கள் வெள்ளை வெளேர் என்று இருக்கும். மேகங்கள் துண்டு துண்டாக பிரிந்து நகர்ந்து கொண்டிருக்கும். இவை (राजतैः शक्लैः) கருத்மானின் தோளுக்கு அலங்காரமாக இருக்கின்றன. இவை வெளுப்பாக இருப்பதால் வெள்ளி துண்டுகள் போல் கருத்மானின் தோளை அலங்கரிக்கின்றன.

பட்டர் "आवाहन परिष्कृतं" என்று அருளிச் செய்கின்றார். எம்பெருமான் எழுந்தருளும் வாஹனமாம் கருத்மானுக்கு எந்த பரிஷ்காரமும் செய்யாமல் அப்படியே கருத்மானின் தோள்மேல் எழுந்தருளினார்.

ஆனால் ஆசுகவி ஸ்வாமியோ அப்படிச் சொல்ல விரும்பவில்லை. எம்பெருமான் எழுந்தருளும் இடமாம் கருத்மானின் தோலும் வெள்ளியால் அலங்கரிக்கப்பட்டதாக ஆகிறது இயற்கையினால்.

अंसाग्रे क्लयन् धनं... ஒரு மேகத் துண்டு கருத்மானின் தோளுக்கு அலங்காரமாக உள்ளது. இதை ஒருவாறு

வர்ணிக்கலாம். ஆனால் கருத்மானின் தோள் நுனியில் அவரால் தாங்கப்படும் மேகத்தை எப்படிச் சொல்வது என்றே தெரியாமல் திகைத்து "क्वापि" என்கிறார். அவன்தான் நீலமேக ச்யாமளனான எம்பெருமான். மனதிற்கும் வாக்கிற்கும் அப்பாற்பட்ட விவரிக்க இயலாத கரு ச்யாமனாம் எம்பெருமாள்.

இப்படிப்பட்ட எம்பெருமானை எழுந்தருளப் பண்ணிக் கொண்டுள்ள கருத்மான் தமக்கு ஸேவை ஸாதிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார்.

**59.** यत् पातालगताहिसंचयफणासंभेदि नासाग्रत:
निर्धुतानतपापराशि निगमस्तोमस्य दिव्याकृति।
चन्दोधाम सुधामसारथिममणे: यत् भ्रातृतामास्थितं
तल्लक्ष्मीसदने समर्चितपदं तेजो ममास्तु श्रियै।।

இந்த ச்லோகத்தில் கருத்மானை தேஜோ ராசியாக அநுபவிக்கின்றார் ஸ்ரீநிதி ஸ்வாமி.

यत् नासाग्रत: पातालगताहि ... संभेदि - கருத்மான் தன்னுடைய தாயான விநதையை அடிமைத்தனத்தில் இருந்து மீட்க பல ஸாக்ஷியங்களைச் செய்தார். கருத்மான் தன்னுடைய அலகினால் (அலகின் நுனியினால்) பாதாள லோகத்தில் படம் எடுத்து அட்டஹாசம் செய்யும் பாம்புக் கூட்டங்களின் படங்களை பிளந்து சிதறடித்த ஆச்சர்யமான சக்தி வாய்ந்த தேஜஸ் ஆகத் திகழ்பவர். ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில் ஸாதித்த "आयाताक्षर्यनाहिनां" என்றும் ச்லோகத்தின் கருத்தை மனதில் கொண்டு இந்த விசேஷணத்தை ஆசுகவி ஸ்வாமி அருளிச் செய்துள்ளார்.

निगमस्तोमस्य दिव्याकृत इந்த அசாதாரணமான தேஜஸ்ஸின் தோற்றம் என்னவென்றால் எல்லா வேதங்களுடையவும் ஆகாரம் தான். अखिलवेद निडाधि रुढं என்பது ஸ்வாமி தேசிகனின் திருவாக்கு.

डन्दो धाम - சந்தஸ்ஸுக்களின் இருப்பிடமாகத் திகழ்வது. "ஸுபர்ணோஸி கருத்மாந்" என்று துவங்கும் வேத வாக்யத்தின் பொருளை இவ்வாறு நமக்குக் கொடுத்துள்ளார்.

सुधामसारथिममणे: ... स्थितं - ஸூர்யனுக்கு ஸாரதியாகத் திகழும் அருணனை சகோதரனாகப் பெற்றது.

"लक्ष्मीसदने समर्चितपदं" நாச்சியார் கோவிலில் நன்கு பூஜிக்கப் பட்டதாகவும் திகழும் ஒரு தேஜஸ் (கருத்மான்) என்னுடைய நன்மையின் பொருட்டு ஆகட்டும் என்கிறார் ஆசுகவி ஸ்வாமி.

இங்கு சில விஷயங்கள். கருடனை தேஜஸ்ஸாக அநுபாவித்திருப்பது பற்றி.

*1.* வேதம் எம்பெருமானை "ஜ்யோதிஷாம் ஜ்யோதிஸ்" என்று சொல்கிறது.

*2.* ஸ்வாமி தேசிகன் रङ्गधुर्य मह:, परं मह: என்றெல்லாம் எம்பெருமானை ஜ்யோதிஸ்ஸாக அநுபவிக்கின்றார்.

*3.* கருத்மான் அவதரித்த பொழுதே அவருடைய தேஜஸ்ஸால் உலகமே சுட்டெரிக்கப்பட்டது. இது என்னது என்று தெரியாமல் இந்திரன், ஸூர்யன் அக்னி முதலியவர்களைக் கூப்பிட்டு கேட்டபோது இது எங்களுடைய தேஜஸ் இல்லை. எங்களுக்கு இப்படிப்பட்ட சக்தி இல்லை என்றனராம். பிறகு தான் கருத்மானின் தேஜஸ் என்று தெரிந்து கொண்டு அவரையே வேண்டினர் என்பது புராணம்.

*4.* எம்பெருமானை தேஜோரூபமாக அநுபாவிப்பது போல் கருத்மானையும் அநுபவிக்கலாமா என்றால் கருத்மானும் வ்யூஹ ஸங்கர்ஷணன் தான். எனவே எம்பெருமானை போல் கருத்மானையும் அநுபாவிக்கலாம்.

*5. கருத்மான் ஆவணி மாதம் ஸ்வாதி நக்ஷத்ரத்தில் அவதரித்தவர். ஸ்வாதி நக்ஷத்ரத்தின் ஏற்றத்தாலும் இந்த அநுபவம் கவிக்கு ஏற்பட்டது என்று கூறலாம்.*

*60.* सुगन्धगिरिमस्तके मधुरवञ्जुलासंयुतं
विलोचनविनोददं विनमदिष्टसंदायिनम्।
सदा मनसि सादरं नयनयोश्च कुर्वन सृतौ
सहस्रनयनोपलाकृतिरयं जयत्यण्डज:।।

*இந்த ச்லோகத்தில் நாச்சியார் கோவிலில் கல்கருடனாக எழுந்தருளியுள்ள கருத்மானுக்கு மங்களாசாசனம் செய்கிறார்.*

सुगन्धगिरिमस्तके ... *நாச்சியார் கோவிலில் எம்பெருமான் எழுந்தருளியுள்ள இடம் ஸுகந்த கிரி என்று சொல்லப்படுகிறது. அதன் நுனியில் இனிமையான வஞ்சுளவல்லித் தாயாருடன் எம்பெருமான் எழுந்தருளியுள்ளான்.* "विलोचनविनोददं" *கண்ணுக்கு விரோதத்தைக் கொடுத்து கண்படைத்த பயனைப் பெறும்படிச் செய்து, மகிழ்ச்சி அடையச் செய்கிறான் அங்குள்ள எம்பெருமான். அது மட்டுமல்ல அவரை வணங்குபவர்களின் இஷ்டத்தைக் கொடுப்பவராகத் திகழ்கின்றார்.* अथितार्थ–परियानदीक्षितं *என்று அத்திகிரி மலையில் எழுந்தருளியுள்ள தேவப்பெருமாளை ஆழ்வான் மங்களாசாசனம் செய்த ××××××× இந்த விசேஷணம் அமைந்துள்ளது.*

सदा मनसि ... सृतौ - *அப்படிப்பட்ட எம்பெருமானை தன் மனதிலும் கண்களின் வழியிலும் மிகவும் ஆதாரத்துடன் வைத்து அவன் முன்னே அமர்ந்து எம்பெருமானை சேவித்து கொண்டிருக்கும் கருத்மானின் திருமேனி இந்த்ர நீலக்கல்லினால் ஆனது போலுள்ளது (கல்கருடன்). அப்பேற்பட்ட கருத்மானுக்கு மங்களாசாசனம் செய்து இந்த ச்லோகத்தை நிறைவு செய்கிறார்.*

# ஸ்லோகங்கள் 61 முதல் 63 வரை

ஸ்ரீமதுபயவே வித்வான் Dr. காளியம்பாக்கம் இளையவள்ளி
**மதுசூதனாச்சார்ய ஸ்வாமி,** ச்ருங்கேரி

***61. அம்ஸே கம்ஸரிபும் வஹந்தம் அம்ருதம் ஹஸ்தே ப்ரசஸ்தாம்ருதம்***
***நாஸாக்ரேண ஸதா விபிந்நபுஜகம் ஸ்ரீகேஹகேஹஸ்திதம்|***
***இஷ்டாநாநதஸஞ்சயேஷு ததம் தம் பக்ஷிணாமீச்வரம்***
***ஸ்வாந்தே ஸந்ததமாதரேண கலயே வேதௌகஸத்விக்ரஹம்||***

**அம்ஸே கம்ஸரிபும் வஹந்தம் அம்ருதம்** - தன்னுடைய திருத்தோள்களில் கம்ஸனை வதைத்த ஆராவமுதனாகிய எம்பெருமானை ஏந்தியவர். கம்ஸன் போன்ற அசுர சக்திகளுக்கு விஷமாகவும், கருடன் போன்ற அடியார்களுக்கு அமுதமாகவும் விளங்குகிறான் எம்பெருமான். அதனால் தான் திருவாய்மொழியில் (8-1-4) நம்மாழ்வார், ''அமரர்தம் அமுதே! அசுரர்கள் நெஞ்சே!'' என்று அருளிச் செய்துள்ளார்.

கம்ஸ என்ற சொல் கொள்கலனையும் குறிக்கும். கொள்கலனுக்கு விரோதியான அமுதமாக எம்பெருமான் விளங்குகிறான். ஆராவமுதாகிய அவனை ஒரு பாத்திரத்தினுள் அடக்க முடியாதல்லவா. எனவே கொள்கலனுக்கு எதிரியான அமுதமாக அவன் விளங்குவதால் கம்ஸரிபுவாகிய அமுதமென்று அவனைக் குறிப்பிடுவதாகவும் கொள்ளலாம்.

கம்ஸ என்ற சொல் வெங்கலத்தையும் குறிக்கும். வெங்கலத்துக்கு விரோதியான - கம்ஸரிபுவான எம்பெருமானைக் கருடன் நாச்சியார்கோவிலில் தாங்கியிருந்தாலும், அதே நாச்சியார் கோவில் வெங்கலப் பாத்திரங்களுக்குப் புகழ்பெற்று விளங்குவது ஆச்சரியமே.

நறையூரில் செண்பகப்பூவின் வாசனையைக் கூட வண்டு பருகுவதாகத் திருமங்கை ஆழ்வார் பாடியதும் நோக்கத்தக்கது.

**ஹஸ்தே ப்ரசஸ்தாம்ருதம்** - ஆராவமுதான எம்பெருமானுக்கு நிகராகாதபடியால் காயப்பட்ட அமுதமாக இருக்கும் தேவாம்ருதத்தைத் திருக்கையில் ஏந்தியுள்ளார்.

தன் தாயை மீட்பதற்காகத் தேவ லோகத்திலிருந்து அமுதத்தைக் கவர்ந்து வந்த கருடன், வரும் வழியில் அந்த அமுதம் எப்படி இருக்கிறது என்றறியும் ஆர்வத்தில் அதைச் சுவைத்துப் பார்த்தாராம். ஆனால் அது வெறும் உப்புச்சாறாகவே இருந்தது. இந்த உப்புச்சாற்றுக்காகவா இவ்வளவு யுத்தம் செய்து இவ்வளவு சிரமப்பட்டோம் என வருந்திய கருடன், திருக்குடந்தைக்கு வந்து, யுத்தமோ ப்ரயத்னமோ இன்றி எளிதில் கிட்டும் ஆராவமுதனான எம்பெருமானின் வடிவழகைக் கண்ணால் பருகி மகிழ்ந்து இன்றும் அவர் முன்னே த்வாதசாக்ஷர மண்டபத்தில் ஆதர்ச கருடனாக விளங்குகிறார் என நம் ஸ்வாமியே தம் அம்ருத சார்தூலத்தில் அருளிச் செய்துள்ளார். அந்த ச்லோகம்,

**ஸ்வர்கே பாத்யம்ருதம் யதர்த்தம் யதபவம் யோத்தும் ச யத்நாந்வித:**
**திங்மாம் யத் ரஸநாகதம் விதநுதே கிஞ்சித் ருசிம் சாருஜ:|**
**நிர்யுத்தம் ச நியத்நம் அத்ர நகரே பீதம் மயா ஸர்வதம்**
**தத்பாதீதி க்ருதாஞ்ஜலிர்யதம்ருதம் பக்ஷிச்வரஸ்ஸேவதே||**

**நாஸாக்ரேண ஸதா விபிந்நபுஜகம்** - தன் அலகின் நுனியால் எப்போதும் பாம்புகளைத் துண்டாக்குகிறவரை,

**ஸ்ரீகேஹகேஹஸ்திதம்** - நாச்சியார்கோவிலில் கோவில் கொண்டுள்ளவரை,

**இஷ்டாநாநதஸஞ்சயேஷு ததம் தம் பக்ஷிணாமீச்வரம்** - தன் அடிபணியும் அடியார்களின் ஆசைகளை நிறைவேற்றும் பக்ஷிராஜரை,

**ஸ்வாந்தே ஸந்ததமாதரேண கலயே வேதௌகஸத் விக்ரஹம்** - வேத ஸ்வரூபியாய் விளங்கும் கருடனை என்றும் என் உள்ளத்தில் ஆதரத்துடன் வைத்துப் போற்றுகிறேன்.

இந்த ச்லோகத்திலுள்ள சமத்காரம் தோள்கள், கைகள், மூக்கு, இதயம் உள்ளிட்ட அவயவங்கள் இடம் பெற்றிருப்பதிலும், சாதாரண அமுதத்துக்கும் ஆராவமுதனான எம்பெருமானுக்குமுள்ள ஒப்பீட்டிலும் விளங்குகின்றது.

**தன்னுடைய தோள்களில் கம்ஸனை வதைத்த அமுதனாகிய எம்பெருமானையும், திருக்கைகளில் காயப்பட்ட அமுதாகிய தேவாம்ருதத்தையும், மூக்கு நுனியால் எப்போதும் பாம்புகளைத் துண்டாக்குபவரும், நாச்சியார் கோவிலில் கோவில் கொண்டிருப்பவரும், தன் அடிபணியும் அடியார்களின் ஆசைகளை எல்லாம் நிறைவேற்றுபவரும் வேதத்தின் வடிவமாக விளங்குபவருமாகிய பக்ஷிராஜரை என்றும் அடியேனுடைய உள்ளத்தில் வைத்து ஆதரத்துடன் போற்றுகிறேன்.**

**62. ஆகாச ஆஸ்தே ஸ யதம்ஸதேசே**
**சாகாஸ்ஸமா யஸ்ய வஸந்தி தேஹே|**
**பக்ஷீச்வரோயம் பரமாத்புதாத்மா**
**கரோது கல்யாணபரம்பராம் ந:||**

**ஆகாச ஆஸ்தே ஸ யதம்ஸதேசே** - ஆகாசம் என்ற சொல் எம்பெருமானைக் குறிக்கும். "அஸ்ய லோகஸ்ய கா கதிரித்யாகாச:" என்று சாந்தோக்ய உபநிஷத் அகில உலகுக்கும் ஆதாரமான எம்பெருமானை 'ஆகாசம்' என்று குறிப்பிடுகிறது.

“ஆகாசஸ்தல்லிங்காத்” என்ற ஸூத்ரத்துக்கான பாஷ்யத்தில் இக்கருத்தை எம்பெருமானார் தெரிவித்துள்ளார். அந்த ஆகாசமாகிய எம்பெருமானைத் தன் தோள்களில் யார் தாங்குகிறாரோ,

**சாகாஸ்ஸமா யஸ்ய வஸந்தி தேயே** - யாருடைய திருமேனியில் வேதத்தின் அனைத்து சாகைகளும் வசிக்கின்றனவோ, நேத்ரம் காயத்ரமூசே என்ற கருட பஞ்சாசத் ச்லோகத்தில் ஸ்வாமி தேசிகன் கருடனின் திருமேனியில் ஒவ்வொரு வேத சாகையும் ஒவ்வொரு அவயவமாக இருப்பதாகக் காட்டியருளியுள்ளார்.

| **வேதப்பகுதி** | **கருடனின் அவயவம்** |
|---|---|
| காயத்ரி | கண் |
| த்ரிவ்ருத் | தலை |
| யஜுர் வேதம் | திருநாமம் |
| சந்தஸ் | அங்கங்கள் |
| திஷ்ண்யம் | நகங்கள் |
| வாமதேவ்யம் | திருமேனி |
| ஸ்தோமம் | ஆத்மா |
| யஜ்ஞாயஜ்ஞம் | வால் |
| ப்ருஹ்த், ரதந்தரம் | இறக்கைகள் |

**பக்ஷீச்வரோயம் பரமாத்புதாத்மா** - அத்தகைய அற்புதமான திருமேனியை உடைய பக்ஷிராஜர்,

**கரோது கல்யாண பரம்பராம் ந:** - அடியேனுக்கு அனைத்து மங்கள வரிசைகளையும் அருளட்டும்.

இதில் உள்ள சமத்காரம் பறவை வாலில் இருக்கும். ஆகாசத்தில் இருக்கும். இங்கு ஆகாசம் பறவை வாலில் உள்ளது.

*பறவை சாகையில் இருக்கும். இங்கு சாகைகள் பறவையின் உடலில் உள்ளது.*

**தன்னுடைய திருத்தோள்களில் ஆகாசம் எனப்படும் எம்பெருமானையும், தன் திருமேனியில் வேத சாகைகளையும் கொண்டவராக, அத்புதமான திருமேனியோடு விளங்கும் பக்ஷிராஜர், அடியேனுக்கு மங்களங்களை வரிசையாக உண்டாக்கட்டும்.**

**63. கமலாபவநே கமநீயதமே**
**மணிமுக்தாபிததடிநீதடகே|**
**மணிராஜநிபம் மஹநீயதமம்**
**பதகப்ரவரம் வரதம் வரயே||**

***கமலாபவநே கமநீயதமே*** - *அழகான ஊரான நாச்சியார் கோவிலில்,*

***மணிமுக்தாபிததடிநீதடகே*** - *மணிமுக்தா நதிக்கரையில், ஒரு சமயம் எம்பெருமான் பாற்கடலில் பையத் துயின்றபோது, விரோசனன் என்ற அசுரன் எம்பெருமான் அணிந்திருந்த வைரக் கிரீடத்தைத் திருடிச் சென்றான். அவனைப் பாதாள லோகம் வரை பின்தொடர்ந்து சென்ற கருடன், அவனுடன் யுத்தம் செய்து, அவனை வீழ்த்தி எம்பெருமானின் வைர முடியை மீட்டு வந்தார். அப்படி அவர் பாற்கடல் நோக்கித் திரும்ப வருகையில், அந்தக் கிரீடத்திலிருந்து ஒரு ரத்தினக்கல் நாச்சியார்கோவிலில் நதிபோலச் செவ்வக வடிவில் இருந்த திருக்குளத்தில் விழுந்து விட்டது. அந்த மணி அந்தப் புஷ்கரிணியில் விழுந்ததால், அது மணிமுக்தா நதி என்றே அழைக்கப்பட்டது. திருமங்கை ஆழ்வாரும் வாவித் தடஞ்சூழ் மணமுத்தாற்று நறையூர் நெடுமாலை என்று அந்தப் புஷ்கரிணியையும் மங்களாசாசனம் செய்துள்ளார்.*

***மரணிராஜநிபம் மஹநீயதமம்*** – மணிகளில் தலையாயதான இந்திர நீலக்கல் போன்ற அழகிய திருமேனியை உடையவர்,

**பதகப்ரவரம் வரதம் வரயே** - வேண்டும் வரங்களை எல்லாம் அருளும் வரப்ரஸாதியான பக்ஷிராஜரை சரணமாக வரிக்கிறேன்.

**அழகான க்ஷேத்ரமான நாச்சியார்கோவிலில், மணிமுக்தா நதியின் கரையருகில், இந்திர நீலக்கல் போன்ற அழகான திருமேனியோடு கூடியவராக விளங்கும் வேண்டும் வரங்களைத் தரும் வரப்ரஸாதியான பக்ஷிராஜரைச் சரணமாக வரிக்கிறேன்.**

# சுலோகங்கள் 64 முதல் 66 வரை

*ஸ்ரீமதுபயவே வித்வன்மணி ஏதிலகோ*

## Dr.T.N. ஆராவமுதாசார்ய ஸ்வாமி

**64. துரகாந் ஸவிதுர்நயதஸ்ஸஹஜம்**
**உதராதுதிதம் விநதாஸுதநோ:|**
**உரகாநுதரே கலயந்தமஹம்**
**பதகாதிபதிம் ஸததம் கலயே||**

***பொருளுரை :*** *சூரியனின் குதிரைகளை எளிதாக ஓட்டிச் செல்லும் அருணனின் உடன்பிறப்பே! அழகிய வினதையின் வயிற்றில் உதித்தவனே! ஸர்பங்களை விழுங்கி வயிற்றில் வைத்திருப்பவனே! பக்ஷிகளின் அதிபதியே! கருடனே! உன்னை எப்போதும் நினைக்கிறேன்.*

***விளக்கவுரை : துரகாந் ஸவிதுர்நயதஸ்ஸஹஜம் -*** *சூரியனின் தேரில் ஏழு சந்தஸ்ஸுகள் ஏழு குதிரைகளாகப் பூட்டப்பட்டிருக்கும். அந்தத் தேரைக் கருடனின் சகோதரரான அருணன் ஓட்டுகிறார்.*

*ராகு தன்னை விழுங்கிய போது, உலகில் யாரும் வந்து தன்னைக் காப்பாற்ற வரவில்லை என்ற கோபத்தால் சூரியன் உலகையே சுட்டெரிக்க வேண்டுமென முடிவு செய்தார். அவரது வெப்பத்திலிருந்து உலகைக் காக்கவேண்டும் என்று எண்ணிய பிரம்மா, அருணனை சூரியனின் தேரோட்டியாக அவன் முன் அமர்த்தினார். புத்திமானான அருணன் கவசம் போல் சூரியனின் வெப்பத்திலிருந்து உலகைக் காத்தார்.*

*அதுபோல அந்த அருணனின் இளவலான கருடன், ஸம்ஸாரத்திலுள்ள தாபங்களிலிருந்து நம்மைக் காப்பவராக விளங்குகிறார்.*

**உதராஹுதிதம் விநதாஸூதநோ:** - "என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்" என்று புகழத்தக்கவனான வினதையின் கர்பத்தில் தோன்றியவர் கருடன்.

கச்யபரின் அருளால் வினதை இரண்டு முட்டைகளை ஈன்றாள். அவை நீண்ட நாட்கள் ஆகியும் குஞ்சு பொரிக்காததால், முதல் முட்டையை வினதை தானே உடைத்து விட்டாள். அதிலிருந்து முழு வளர்ச்சி அடையாத குழந்தையாக அருணன் பிறந்து, அவசரத்தால் தன்னை முடவனாக்கிய தன் தாய் பிறர்க்கு அடிமையாக இருக்க வேண்டுமெனச் சபித்து விட்டுச் சென்றார்.

ஆனால் அடுத்த முட்டையை உடைக்காமல் அவள் பொறுமை காக்க, அந்த முட்டையில் இருந்து தோன்றிய கருடன் தன் தாயை அடிமைத் தளையிலிருந்து மீட்டார். நம்மையும் இந்த ஸம்ஸாரச் சிறையினின்றும் விடுவித்து எம்பெருமான் திருவடிகளை நமக்குப் பெற்றுத் தரவல்லவராக அவர் விளங்குகிறார்.

**உரகாநுதரே கலயந்தமஹம்** - பாம்புகளை விழுங்கித் தன் வயிற்றில் வைத்துக் கொண்டிருப்பவர்.

அதுபோல நம்முடைய பாபங்களையும் பயத்தையும் வேதனைகளையும் விழுங்க வல்லவராக அவர் திகழ்கிறார்.

**பதகாதிபதிம் ஸததம் கலயே** - அத்தகைய பக்ஷிராஜரான கருடனை எப்போதும் வணங்குகிறேன்.

**சூரியனின் குதிரைகளை ஓட்டிச் செல்லும் அருணனின் சகோதரரும், ஈடிணையற்றவளான வினதையின் கருவில் உதித்தவரும், பாம்புகளை விழுங்கித் தன் வயிற்றில் வைத்துக் கொண்டிருப்பவருமான பக்ஷிராஜனை எப்போதும் வணங்குகிறேன்.**

**65. பக்ஷீகோபி வராத ஏஷ வதது ஸ்வைரம் ருதைச்சோபநம்**

**யத்வாசோபநமத்ர காநு கணநாசிந்தாதவா காமம|**
**லக்ஷ்மீமந்திரமந்திரேதிமஹிதே ஸம்பூஜிதே ஸந்ததம்**
**பக்ஷீந்த்ரே த்வயி மங்கலைகநிலயே மந்மாநஸே ஜாக்ரதி||**

**பொருள் :** மிகவும் பூஜிக்கத் தக்க பிராட்டியின் கமலாலயத்தில் இருப்பவனும், எப்பொழுதும் மங்கலத்தின் உறைவிடமாகப் போற்றப்படுபவனுமான நீ என் மனக்கடலில் உறைவதால், பறவைகளின் குரல் மங்கலமோ, அமங்கலமோ என்பதில் எனக்குச் சிறிதும் சிந்தையில்லை.

**விளக்கவுரை : பக்ஷீ கோபி வராக ஏஷ வதது ஸ்வைரம் ருதைச்சோபநம் யத்வாசோபநமத்ர கா நு கணநா சிந்தாதவா கா மம** – சகுன சாஸ்த்ரத்தில் வல்லவர்கள் வெவ்வேறு பறவைகள் எழுப்பும் ஒலிகளுக்கு ஏற்றபடி, சுபம் அல்லது அசுபம் என்று பலன்களைச் சொல்கிறார்கள்.

ஜ்யோதிஷ சாஸ்திரத்தில், "ஸம்ஹிதா ஸ்கந்தம்" என்று ஒரு பிரிவில் ஜலம் எங்கே ஓடுகிறது ? பூமிக்குள் நதி அடி நீரோட்டமாக எங்கெங்கே போகிறது ? உள்ளே ஜலம் இருப்பதற்கு மேலே என்ன அடையாளம் ? என்பவைகளைப் போன்ற பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வாசனைத் திரவியங்கள் செய்யும் விதம், வீடு கட்டும் அளவு, சகுன சாஸ்திரம், நிமித்த சாஸ்திரம் முதலிய எல்லாம் இந்த ஸம்ஹிதையில் உள்ளன.

அவற்றுள் நிமித்தம் என்பது வரப்போவதை ஏதோ ஒரு வகையில் அடையாளம் காட்டுவதற்குப் பொதுப் பெயர். அதில் ஒரு வகையே சகுனம். பக்ஷிகளால் ஏற்படும் நிமித்தங்களுக்கு சகுனம் என்று பெயர். சகுனம் என்றாலே 'பக்ஷி' என்று பொருள். ஒரு பக்ஷி

வலமிருந்து இடம் போனால் இன்ன பலன், இன்ன பக்ஷி கத்தினால் இன்ன விளைவு ஏற்படும் என்று சகுன சாஸ்திரம் கூறுகிறது.

ஆனால் அத்தகைய சகுனங்களைப் பற்றித் தாம் அஞ்சுவதில்லை என்று நம் ஸ்வாமி இந்த ச்லோகத்தில் தெரிவிக்கிறார். ஏன் ?

**லக்ஷ்மீ மந்திரமந்திரேதிமஹிதே ஸம்பூஜிதே ஸந்ததம் பக்ஷிந்த்ரே த்வயி மங்கலைகநிலயே மந்மாநஸே ஜாக்ரதி** - மிகவும் போற்றுதற்குரியதான நாச்சியார்கோவிலில் தனிச் சன்னிதியில் சேவை சாதிப்பவனும், அனைத்து மங்களங்களுக்கும் இருப்பிடமாக விளங்குபவனும் பறவைகளின் அரசனுமான நீ என் உள்ளத்தில் உறைகிறாய். பறவைகளின் அரசனான நீயே என் உள்ளத்தில் இருக்கும்போது, பறவைகளால் ஏற்படும் சகுனங்களைக் குறித்து நான் ஏன் அஞ்சவேண்டும் ?

தொண்டரடிப் பொடியாழ்வார் தென் திசை நோக்கிப் பார்க்கவே மாட்டாராம். அந்த அளவுக்கு யமனிடத்தில் அச்சம் கொண்டிருந்தார். எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லத் தொடங்கிய பின், அதே யம பட்டர்கள் தலையில் நாவலோ நாவல் என முழங்கியபடி வெற்றி நடை போடுவேன் என்று புதிய உத்வேகத்துடன் கூறுகிறார் திருமாலையின் முதல் பாசுரத்தில்:

காவலில் புலனை வைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே
மூவுல குண்டு மிழ்ந்த முதல்வநின் நாமங் கற்ற
ஆவலிப் புடமை கண்டாய் அரங்கமா நகரு ளானே.

எம்பெருமானின் திருநாமங்கள் வாயில் இருந்தால் யமனைக் கண்டு அஞ்ச வேண்டாம் என்பது போல, கருடாழ்வார் நம் உள்ளத்தில் இருந்தால் பறவைகளின் ஒலிகளால் ஏற்படும்

சகுனங்களைக் குறித்து அஞ்ச வேண்டாம் என்பது இந்த ச்லோகத்தின் கருத்து.

**போற்றுதற்குரிய க்ஷேத்ரமான நாச்சியார்கோவிலில் தனிச் சன்னிதியில் எழுந்தருளியிருப்பவரும், மங்களங்களுக் கெல்லாம் இருப்பிடமானவருமான பக்ஷிராஜன், அடியேனுடைய உள்ளத்தில் குடிகொண்டிருப்பதால், பக்ஷிகளின் ஒலிகள் மங்களமா அமங்களமா (சகுன சாஸ்திரத்தின்படி) என்பதைப் பற்றி அடியேன் சிந்திப்பதில்லை.**

**66. ரக்ஷாம் பக்ஷிபதே கஜஸ்ய கலயந் அம்ஸே த்வதீயே ஸ்தித:**
**தேநே கர்ஷணமத்ர தத்ரபவத: கோதாய கிம் நாபவத்|**
**மோதாயைவ யதார்தரக்ஷணக்ருதே வேகோஸ்ய மாந்யோ குண:**
**தேநைவாஸ்ய பதாம்புஜேஸ்மி நிதராம் தாஸ்யம் கதோ நிவ்ருத:||**

**பொருள் :** பக்ஷிகளின் தலைவனே! கஜேந்திரனைக் காப்பாற்ற ஆதிநாதன் உன் தோள்களில் அமர்ந்து அங்கும் இங்கும் விரட்டியபோது உனக்குச் சிறிதுகூட அயர்வு தோன்றவில்லையா ? என்று நம் ஸ்வாமி கருடனிடம் வினவுகிறார்.

அதற்குக் கருடன், "வருந்துவோரைக் காப்பாற்றச் செல்லும் போது எம்பெருமான் கொள்ளும் வேகம் போற்றத்தக்கதல்லவா ? அயர்வைப் பாராது அடியாரின் துயரை நீக்கும் எம்பெருமானின் திருவடிகளைத் தஞ்சமடைந்து நான் மனத்துயர் நீங்கியவனாக உள்ளேன் என்று விடையளிக்கிறார்.

**விரிவுரை :** என் குற்றமே என்று சொல்லவும் வேண்டாகாண் என்னை நான் மண்ணுண்டேனாக அன்புற்று நோக்கி அடித்தும் பிடித்தும் அனைவர்க்கும் காட்டிற்றிலையே!

வன்புற்றரவின் பகைக்கொடி வாமனநம்பீ ! உன் காதுகள் தூறும் துன்புற்றன எல்லாம் தீர்ப்பாய் ! பிரானே ! திரியிட்டுச் சொல்லுகேன் மெய்யே ! என்ற பெரியாழ்வார் திருமொழி பாசுரத்தில் முதல் இரண்டு அடிகள் கண்ணனின் கூற்றாகவும், அடுத்த இரண்டு அடிகள் யசோதையின் பதிலாகவும் - இப்படி உரையாடல் வடிவில் அமைந்துள்ளது போல, இந்த ச்லோகத்திலும் முதல் இரண்டு அடிகள் ஸ்வாமி புள்ளரையனை நோக்கித் தொடுக்கும் கேள்வியாகவும், அடுத்த இரண்டு அடிகள் கருடன் ஸ்வாமிக்கு அளிக்கும் விடையாகவும் அமைந்துள்ளது.

**ஸ்வாமியின் கேள்வி : ரக்ஷாம் பக்ஷிபதே கஜஸ்ய கலயந் அம்ஸே த்வதீயே ஸ்தித: தேநே கர்ஷணமத்ர தத்ரபவத: கோதாய கிம் நாபவத்** - பக்ஷிராஜனே ! ஆதிமூலமே என்று முதலையால் பீடிக்கப்பட்ட யானை எம்பெருமானை அழைத்த அளவிலே, விரைவாக அந்த யானையைக் காக்க வேண்டும் என்று எண்ணிய எம்பெருமான் உன் தோள்களின் மீது ஏறி அமர்ந்து உன்னை விரைந்து செல்லும்படி பணித்தான் அல்லவா ?

கருட பஞ்சாசத்தின் 47-வது ச்லோகத்தில்,

உக்ஷா தக்ஷாந்தகஸ்ய ஸ்கலதி வலஜித: குஞ்ஜர: கஞ்ஜரீதி:
க்லாந்தோ தாதுச்சகுந்தோநுக இதி தயயா ஸாமி ருத்தஸ்யதோபி|
க்ராஹக்ரஸ்தத்வி பேந்த்ரக்ஷதிபயசகிதா குண்ட வைகுண்டசிந்தா
நாஸீரோதார மூர்த்திர் நரகவிஹதயே ஸ்தாத்விஹங்கேச்வரோ ந:||

என்று அருளிச் செய்துள்ளார். கஜேந்திரனுக்கு எம்பெருமான் அருள்புரிவதைக் காணப் பரமசிவனும், பிரம்மாவும், இந்திரனும் தங்கள் வாகனங்களில் வந்தார்கள். அந்த ரிஷபத்தாலும், அன்னத்தாலும், ஐராவதத்தாலும் கருடனின் வேகத்துக்கு ஈடாகச்

செல்ல முடியாததால், அவர்களுக்காகத் தன் வேகத்தைக் கருடன் பாதியாகக் குறைத்துக் கொண்டார். ஆனால் இந்த வேகம் போதாது என்று கருதிய எம்பெருமான், கருடனை மேலும் வேகமாகப் பறக்கும்படிப் பணித்தான்.

இப்படி எம்பெருமான் மிகுந்த வேகத்துடன் செல்ல வேண்டுமென விரட்டியபோது, உனக்கு அயர்வு ஏற்படவில்லையா ?

**கருடனின் பதில் : மோதாயைவ யதார்தரக்ஷணக்ருதே வேகோஸ்ய மாந்யோ குண: தேநைவாஸ்ய பதாம்புஜேஸ்மி நிதராம் தாஸ்யம் கதோ நிவ்ருத** – நிச்சயமாக இல்லை. ஆச்ரித வத்ஸலனான எம்பெருமான், துன்பப்படும் தன் அடியார்களின் துயரைத் துடைப்பதற்காக விரைந்து செல்லும்போது, அந்த வேகம் போற்றுதற்குரியதல்லவா ?

தன் பக்தனைக் காக்க வேண்டும் என்ற ஆர்வ மிகுதியால், கருடனைத் தன் தோளில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு எம்பெருமான் கஜேந்திரன் இருந்த குளத்தை நோக்கி மிகுந்த வேகத்துடன் பறக்கத் தொடங்கினானாம். அந்த வேகத்துக்கு வணக்கம் என்கிறார் பராசர பட்டர்.

கரிப்ரவரப்ரும்ஹிதே பகவதஸ்த்வராய நம:

எனவே அடியார்களின் துயர் துடைக்கும் பொருட்டு அவன் மேற்கொள்ளும் வேகம் போற்றத்தக்கது. எனவே அதில் எனக்கு ஆனந்தம் தானே தவிர துயரமில்லை.

அயர்வு பாராமல் அடியார்களை ரக்ஷிக்கும் காக்கும் இயல்வினனான கண்ணபிரானின் திருவடிகளைத் தஞ்சமடைந்து தொண்டு செய்வதால் நானும் எப்போதும் களைப்பும் மனத்துயரும் நீங்கியவனாக உள்ளேன்.

***ஸ்வாமி : பக்ஷிராஜா! ‘ஆதிமூலமே’ என்று கஜேந்திரன் அழைத்தவுடன் உன் தோள்களில் ஏறி அமர்ந்த எம்பெருமான், உடனடியாக யானையைக் காக்க வேண்டுமென்ற பதற்றத்தில் உன்னை மிகவும் வேகமாகச் செல்லும்படி பணித்தானே! அதனால் உமக்கு அயர்வு ஏற்படவில்லையா?***

***கருடன் : அடியார்களின் துயரை விரைந்து நீக்கும் பொருட்டு அவன் கொள்ளும் வேகம் போற்றுதற்குரியது. அது எனக்கு ஆனந்தமே தருகிறது. அயர்வின்றி அடியார்களை ரக்ஷிக்கும் எம்பெருமானின் திருவடிகளைத் தஞ்சமெனப் பற்றித் தொண்டு செய்து நான் மனத்துயரற்றவனாக விளங்குகிறேன்.***

# ஸ்லோகங்கள் 67 முதல் 69 வரை

*ஸ்ரீமதுபயவே ஸாங்க-வேத-வேதபாஷ்ய-வேதாந்த வித்வான்*

## Dr.ஸௌரிராஜாசார்ய ஸ்வாமி

## ஸ்லோகம் 67 ஸம்ஸ்க்ருதத்தில் அன்வயமும் உரையும்

हे गरुत्मन्! अस्मत्स्वामिन्! प्रालेयाहार्यकन्यापरिब्रृढधनुषि = प्रालेयं–हिमं, तेन आहार्यः– आवृतः– हिमवान् इति यावत्, तस्य कन्या – पार्वती, तस्याः परिबृढः– प्रभुः– शिवः तस्य धनुषि, त्वया – त्वया – (स्ववाहनेत गरुडेन त्वया), ज्या–विमुक्ते= ज्यास्थानी वासुकी नाम सर्पः, तस्मिन् विमुक्ते– त्वद्दर्शनतः भीत्या पलायिते सति, धनुषि कोटिद्वयनम्रतारूपवक्रतायाः विमुक्त्या, ऋजुत्वं प्राप्ते सति, अथो–तस्मादेव कारणात्, भगवतः मुरारेः पादमूले बाणे पतति–शरे (धनुषि न्यस्ते) बाणनामके असुरे च इति श्लेषः। ततो हन्त! अस्मिन् मृदङ्गे सक्ते = नर्तनकाले मृदङ्गवादनतः भजने सक्ते, भक्ते-स्वकीयभक्ते, – सति ततः च नतशिरसि अस्मिन् गङ्गाधरे–शिवे च इत्यनुक्तसमुच्चयः त्वम् यदुपतेः प्रमपापात्रं = सस्मितं दर्शितस्य प्रेम्णः पात्रं असि – खलु इति यावत्।।

## தமிழில் பொழிப்புரை

*நங்கள் தலைவனே! கருடனே! யது நாதனாக அவதரித்திருந்த பெருமான் தங்கள் மீது ஏறிச் சென்று பாணாஸுரனுடன் போர் புரிகையில் யுத்தத்தில் அவனுக்கு உதவிட வந்த சிவபெருமானின் வில்லின் நாண் ஆன வாசுகி என்னும் பாம்பு, கருடனாகிய தங்களைக் கண்டவுடனேயே அஞ்சி ஓடிவிட்டது. எனவே நாணற்றதான அந்த வில் நேராக - வளைவு அற்றதாய் ஆகிவிட்டது. அதிலே சிவபெருமான் தொடுத்திருந்த பாணம் அம்பு பகவானின் திருவடித் தாமரைகளில் போய்ச் சரண் அடைவது போல விழுந்தது. பாணாஸுரனும் பகவானின் திருவடித் தாமரைகளில் போய்ச் சரண் அடைவது போல விழுந்தான். (இங்கு பாணன் என்ற ஒரே சொல்லுக்கு உள்ள அம்பு*

அஸுரன் என்ற இரு பொருள்களையும் ஸ்ரீமதாசுகவி - ஸார்வபௌம ஸ்வாமி பயன்படுத்தும் நயத்தை ரஸித்திட வேண்டும்.) அப்போது தனது நடனங்களில் ம்ருதங்கம் வாசிக்கும் பணியில் ஈடுபடுபவனான தனது பக்தன் பாணன் தலைகுனிந்து நிற்பது கண்டு கங்காதரனாகிற சிவபெருமானும் தலைகுனிந்து நின்றான். அந்நிலையில் யதுபதியான கண்ணனுடைய அன்புக்கு இலக்காக (சிவபெருமானை நீர் ஆயுதமற்றவராகச் செய்து வெற்றியை எளிதாகப் பெறச் செய்தவர் என்பதால்) நீர் அல்லவோ திகழ்ந்தீர் !

## தமிழில் சிறப்புரை

கருடபகவானுக்கும் பாம்புகளுக்கும் உள்ள பகையினை அடிப்படையாகக் கொண்டு பல கவிஞர்கள் கவிதை நயத்துடன் பல கவிதைகளை இயற்றியுள்ளார்கள். அவைகளில் ஒருவரின் கவிதை ஒரு சுவையான நிகழ்ச்சியை வருணிக்கின்றது. எம்பெருமான் சிவபெருமானை அனுக்ரஹித்தருள கைலாஸம் எழுந்தருளினாராம். பெருமான் எழுந்தருளியது கேட்டுப் பரவசப் பட்டார் பரமசிவன். என்றாலும் அவர் நக்கபிரான் அல்லவா ? அதாவது நக்னர் - ஆடையற்று திகம்பரராகத் திரிபவர் ஆயிற்றே. அப்படி இருந்தும் அவர் பெருமானை ஸேவிக்கையில் ஒரு கோவணமாவது கட்டி இருக்க வேண்டும் என்று எண்ணினார். எனவே அவஸர அவஸரமாகத் தனது அணிகளில் ஒன்றான ஒரு பாம்பை அரை நாணாகக் கட்டிக்கொண்டார். அதில் கஜாஸுரனின் தோலை - ஆனைத் தோலைக் கோவணமாகச் சொருகிக் கொண்டார். பரபரப்புடன் பெருமாளை வரவேற்க வந்தார். பெருமாள் கருட வாஹனத்திலிருந்து இறங்கும் தருணம். கருடனைக் கண்ட அரைஞாண் ஆன பாம்பு அஞ்சி நடுங்கித் தலை தெறிக்கப் பிய்த்துக் கொண்டு ஓடிவிட்டது. கோவணம் நழுவி

விழுந்தது. நக்கபிரான் நிர்வாணமாக நின்றான். இப்படி ஒரு கற்பனை செய்தார் அக்கவி. அவர் யாரென்று பெயர் தெரியவில்லை. ஆனால் அவருடைய சுலோகம் ஸு³பாஷிதரத்ன பாண்டாகாரத் தொகுப்பிலே இடம் பெற்றுள்ளது. ச்லோகத்தின் முழுவடிவம்

**விஷ்ணோராகமனம் நிசம்ய ஸஹஸா க்ருத்வா பணீந்த்ரம் குணம்**

**கௌபீனம் பரிதாய சர்ம கரிண: சம்பௌ புரோ தாவதி|**

**த்ருஷ்ட்வா விஷ்ணுரதம் ஸகம்பஹ்ருதயஸ் ஸர்ப்போ஽பதத் பூதலே**

**க்ருத்திர்விஸ்கலிதா ஹ்ரியாநதமுகோ நக்னோ ஹர:பாது வ:||**

என்பது. அந்தக் கவிதை காட்டும் நிகழ்ச்சியில் ஒரு மாதிரி ஆபாஸம் இருப்பதாகச் சிலர் கருதிடலாம். ஆனால் இங்கு ஆசுகவி ஸார்வபௌம ஸ்வாமியின் கவிதை காட்டும் நிகழ்ச்சியில் அப்படி ஒரு குறை கூடச் சொல்ல வாய்ப்பு இல்லை.

## சுலோகம் 68 ஸம்ஸ்க்ருதத்தில் அன்வயமும் உரையும்

सौगन्धिकाद्रिः तस्मिन् क्षेत्रे विराजमानः पर्वतः (पर्वतस्य नाम सुगन्धगिरिः) यस्मात् पर्वतात् उपरि भगवान् श्रीमान् वन्जुलवल्लिका परिबृढः वञ्जुलवल्लिकापतिः तिष्ठन्, श्रीमणिमौक्तिकापरिसरे, मणिमौक्तिका इति पुष्करिण्याःनाम।तस्याः परिसरे।। अत्र रम्ये विचित्रे–विविधं चित्रिते स्थले तिष्ठन्–आरूढस्सन्–व्यष्टिसृष्टिकर्त्रा चतुराननेन चतुरो वेदान् मुदा अधितिना युवयोः दातुं उदीतहृदयः तत् बाहुद्वयं दधौ किम् इति उत्प्रेक्षा।।

## தமிழில் பொழிப்புரை

கருடபகவானே! இங்கே-அழகான விசித்திரமான நாச்சியார் கோயிலில் ஸௌகந்திகா என்னும் ஸு³கந்த மலையில் மணிமுத்தா நதீ என்கின்ற புஷ்கரிணீயின் கரையில் பகவான் வஞ்ஜு³ளவல்லீ

மணாளன் ஸேவை ஸாதிக்கிறார். ஆனால் மூலவரான வாஸுதேவர் உம்மையே பார்த்துக் கொண்டு இத்தலத்தில் இரு திருக்கரங்களை கொண்ட அர்ச்சா விக்ரஹத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். மீதமுள்ள இரு கரங்கள் எங்கே ? இரு கரங்களுடன் திகழும் தாங்களுக்கோ அல்லது வஞ்சுளவல்லீக்கோ நான்கு வேதங்களையும் ஆனந்தத்துடன் பயின்று வருவதால் தன்னருள் பெற்று அதன் மூலம் படைக்கும் ஆற்றல் பெற்ற பிரமன் ஆகின்ற கருவியின் மூலம், தந்தருள எண்ணி இரு கரங்களை மட்டும் வைத்துக் கொண்டு இருக்கிறானோ என்று தோன்றுகிறது.

**69.** विरोचनस्य करात् भवता आनीते वज्रकिरीटे विराजमानं मौक्तिकं एकं सरिति मुक्तंभासुरं मार्गितुम् द्वौ हस्तौ, तन्मणिं संछादितुं च द्वौ हस्तौ विधाय (एवं करणे सति हस्तद्वयमेव दृष्टिपदमागछति इति हस्तावेव नहीति कथयन् अत्र दिव्यदेशे भगवान् द्विहस्तो भूत्वा विराजते इति।।

இங்கே மணிமுக்தா ஸரஸ் என்ற குளத்தில் விழுந்த மணியைத் தேடுவதாகவோ, அல்லது கிடைத்த மணியைத் தன் கைகளால் மறைத்து உள்ளவன் போலப் பெருமாள் காட்சியளிக்கிறான். தன்னிடம் கைகள் இரண்டு மட்டும் தானே உள்ளது. அதிலேயும் சங்கமும் சக்கரமும் உள்ளன. என்னிடம் மணி எங்கே இருக்க முடியும் ? கைகளே இரண்டுதான். அதையும் நன்கு பார்த்துக்கொள் என்று கையை விரித்து (என்னிடம் இல்லையே) என்று காண்பிக்கிறார் போல் உள்ளது.

# ஸ்லோகங்கள் 70 முதல் 72 வரை

ஸ்ரீமதுபயவே

**Dr.**உஷப்பாக்கம் ***விஜயராகவாசார்ய ஸ்வாமி***

### *ஸ்லோகம் 70*

उपलाकृतिमुत्पलेनतुल्यं राजताच्छादान भुषिताङ्गजातम्।
नभसा सितमेघजालभाजा समतामेयुष्माश्रयेऽण्डजातम्।।

*உபலாக்ருதிம் - கல்லிலான சரீரத்தை உடையவரை*

*உத்பலேன துல்யம் - (அதனாலேயே) கருநெய்தல் பூவினை ஒத்தவரை*

*ராஜதாச்சாதனபூஷிதாங்கஜாதம் - வெள்ளியிலான கவசத்தால் அலங்கரிக்கப்பட்ட அவயவங்களை உடையவரை*

*சிதமேகஜாலபாஜா - (அதனாலேயே) வெளுத்த மேகக்கூட்டங்களோடு கூடிய*

*நபஸா - ஆகாயத்தினோடு*

*ஸமதாம் ஏயுஷம் - ஒப்புமையை அடைந்தவரை*

*அண்டஜாதம் - பறவையான (முட்டையிலிருந்து பிறந்தவரான) கருடனை*

*ஆச்ரையே - சரணமடைகிறேன்.*

***தெளிவுரை :*** *கருடன் சிலா திருமேனியாக இருப்பதால் கரு நெய்தல் பூவினைப் போன்று இருப்பவர். அவர் வெள்ளியிலான கவசத்தை சார்த்திக் கொண்டிருக்கிறார். அது வெளுத்த மேகங்களோடு கூடிய நீல ஆகாயம் போன்று தோன்றுகிறது இந்த ஆகாயம் பூமியில் அல்ல. அண்டத்தில் தோன்றுவது... கருடனும்*

அண்டத்தில்-முட்டையில் தோன்றியவர். அவரை சரணடைகிறேன். ஸுந்தரீ வ்ருத்தத்தில் அமைந்துள்ளது இந்த ச்லோகம்.

**சுலோகம் 71**

**71.** त्रयी मूर्तिस्त्वं मेऽपिच स भगवानंबरमणि:
त्रिधाम्नो धामत्वं मम च स रथी नाम भगवान्।
तथापि त्वत्प्राप्तौ चक्तिचक्तो धुर्यगुणधी:
इति भ्रात्रा मन्दस्मितमधिगत: पातु खगराट्।।

த்வம் - நீ

த்ரயீமூர்த்தி: - வேதவுருவானவன்

மேஅபி ச - எனக்கும்

ஸ: - அந்த வேதவுருவான

அம்பரமணி: - ஸூர்யனே

பகவான் - ஸ்வாமி (எஜமானன்) ஆனவன்

த்வம் - நீ

த்ரிதாம்ன: - பரமபதம் ஸூர்ய மண்டலம் திருப்பாற்கடல் என்று மூன்று இடங்களை தன் சிறப்பிடமாகக் கொண்ட விஷ்ணுவிற்கு (மூவுலகங்களையும் இருப்பிடமாக உள்ள விஷ்ணுவிற்கு)

தாம - இருப்பிடமானவன் (வாஹனமானவன்).

மம ச - என்னுடையவரான

ஸ - அந்த ஸூர்யனும்

ரதீ - தேருக்கு உரிமையாளரான

ஸதனம் நாம - விஷ்ணுவிற்கு இருப்பிடம் ஆனவரே

ததாऽபி - ஆயினும்

துர்யகுணதீ - தேர்க் குதிரைகளின் கடிவாளத்தில் புத்தியை உடையவராக அவர்

சகித சகித: - (நீ என்னை பார்க்க வரும் போதெல்லாம்) மிகவும் பயந்தவராக இருக்கிறார்.

இதி - இவ்வாறு

ப்ராத்ரா - ஸஹோதரனான அருணனாலே

மந்தஸ்மிதம் - புன்சிரிப்போடு

அதிகத: - நெருங்கப்பட்ட

ககராட் - பறவைகளின் தலைவனான கருத்மான்

பாது - (நம்மைக்) காப்பாற்றட்டும்

**தெளிவுரை :** அருணன் தன் தம்பியான கருடனை நெருங்கி உரையாடுகையில் ஒரு கருத்தைச் சொல்லிப் புன்முறுவல் பூப்பதாக ஓர் அழகான நிகழ்ச்சியை இந்த ச்லோகத்திலே சித்தரித்தருளுகிறார் ஸ்வாமி.

பொதுவாகவே பணியாளர்கள் தங்களை விரட்டும் தலைவர்கள் யாரையேனும் கண்டு பயப்பட்டால் அப்படிப் பயம் தருபவரை எண்ணி நகைத்து இன்புறுவது உண்டு. அதுவும் அப்படித் தம் உரிமையாளர் தன் தம்பியையே கண்டு அச்சப்பட்டால் அந்தப் பணியாளர் அது பற்றித் தம்பியிடம் கூறிப் புன்னகை புரிவது இயற்கையே.

இந்நிலைதானாம் கருடன் விஷயத்திலே, அவன் அண்ணனான அருணனுக்கு. அவன் கருடனிடம் சொல்கிறான், "நீ த்ரயீமூர்த்தி வேதாத்மா. என் ஸ்வாமியான ஸூர்யனும் த்ரயீமூர்த்தி. பரமபதம் பாற்கடல் பகலோன் என மூன்று

இடங்களை சிறப்பான இருப்பிடமாகக் கொண்டதால் த்ரிதாமா எனப் பெயர் பெற்ற விஷ்ணுவிற்கு நீ இருப்பிடம். என் ஸ்வாமியான ஸூர்யனும் அதாவது பகலோனும் விஷ்ணுவின் இருப்பிடம். இவ்வாறு ஸூர்யனுக்கும், உனக்கும் பல ஒப்புமைகள் உள்ளன. ஆயினும் நீ என்னைப் பார்க்க வரும் போதெல்லாம் அவர் நடுங்கிடுகிறார். ஏன் நடுங்க வேண்டும்? தமது தேர்க்குதிரைகளின் கடிவாளத்தைப் பற்றிய கவலையாலே தான் நடுங்குகிறார். (கடிவாளத்தைப் பற்றிய கவலை ஏன்? பாம்புகள் தானே அவனுடைய தேர்க் கடிவாளங்கள். "கருடன் அவைகளைக் கொத்திக் குதறிவிட்டால் என்ன செய்வது?" என்ற கவலைதான்!)

ஸ்ரீ கருடபஞ்சாசத்தில் **"அர்யம்ணா துர்ய்யோக்த்ரக்ரஹண பயப்ருதா ஸாந்த்விதோ ऽநூருபந்தாத்"** என்று தொடங்கும் சுலோகத்திலே முதல் பாதத்திலே ஸ்வாமி தேசிகன் சித்தரித்த சிறு காட்சியை ஸ்வாமீ இந்த ச்லோகத்திலே மிக விரிவுப்படுத்தி நாடகமாகவே ஆக்கியுள்ள அழகு ரஸிக்கத்தக்கது.

இந்தச் சுலோகம் சிகரிணீ வ்ருத்தத்தில் அமைந்துள்ளது.

**சுலோகம் 72**

शाखाभङ्गात् वटपरिहृतिं क्लुप्तवान् किं त्वमेतत्
ज्ञात्वा रुद्रो वटतरुतले नर्तनं संविधत्ते।
यत्राभूवन्नरगनिवहा निर्भया अङ्गलग्नाः
नृत्तानूद्यन्मणियुतफणालोकधूतान्धकाराः॥

சாகாபங்காத் - கிளையின் முறிவாலே

வடபரிஹ்ருதிம் - ஆலமரத்தை விடுகையை

த்வம் - நீ

க்லுப்தவான் - செய்தனை

எதத் - இதை

ஞாத்வா கிம் - அறிந்தபடியால்தானோ

வடதருதலே - ஆலமரத்தினடியில்

ருத்ரன் - பரமசிவன்

நர்த்தனம் - நாட்டியத்தை

ஸம்விதத்தே - செய்கிறான்

யத்ர - எங்கு

ந்ருத்தாநூத்யன் - நாட்டியத்தை அனுவதித்துக் கொண்டு

மணியுதபணாலோகதூதாந்தகாரா: - மணியோடு சேர்ந்த படங்களினுடைய பிரகாசத்தினாலே இருட்டை போக்கடிக்கும்.

அங்கலக்னா: - (ருத்ரனின்) சரீரத்தோடு சேர்ந்திருக்கின்ற

உரகநிவஹா: - பாம்புகளின் கூட்டங்கள்

நிர்பயா: - பயமற்றவையாய்

அபூவன் - ஆயின

**தெளிவுரை :** கிளை ஒடிந்ததால் ஆலமரத்தை விட்டுப் பறந்து போயினான் கருடன். இதை அறிந்த பரமசிவன் ஆலமரத்தின் கீழே நடனம் ஆடுகிறான். அவன் சரீரத்தோடு சேர்ந்து இருக்கின்ற பாம்புகள் தன்படத்தில் இருக்கும் மணிகளின் ஒளியாலே இருட்டை நீக்கிக்கொண்டு கருடன் இனி வரமாட்டான் என்ற எண்ணத்தில் பயமற்றவையாய் இருக்கின்றன. மஹாபாரதத்தில் ஆதிபர்வாவிலும் ஆனுசாஸநிகபர்வாவிலும் சொல்லப்படும் வரலாற்றின் அடிப்படையில் இந்த சுலோகம் அமைகிறது. கருடன் தன் இரையான யானை ஒன்றையும் ஆமை ஒன்றையும் தனது

அலகாலே கொத்திக் கொண்டு அவற்றை உண்ண ஓர் ஆலமரத்தின் கிளையில் அமர்ந்தான். அது முறிந்து வீழத் தொடங்கியது. அதிலே தொங்கிக் கொண்டு வாலகில்ய முனிவர்கள் தவம் புரிவதை அறிந்த கருடன் அந்தக் கிளையைக் காலினாலே கவ்விக்கொண்டு இருமலை முகட்டுக்கிடையில் அக்கிளையை வைத்து முனிவர்கள் தவத்துக்கு இடையூறு வராதபடிச் செய்தான். பிறகு வேறு இடம் சென்று அவைகளை உண்டான். இப்படி ஆலமரத்தின் கிளை முறிந்ததால் அந்த மரம் தனக்கு ராசியில்லை என்று ஆலமரத்தை அதன் பிறகு கருடன் நெருங்கிடுவதையே விட்டுவிட்டான்.

ஆடலரசனான சிவபெருமான் நாகாபரணங்களை அணிந்து நடனம் ஆடுபவன் அல்லவா ? கருடன் இங்கே வந்து விடுவானோ என்ற அச்சத்தில் அவைகள் வெளிறியிருந்தால் நடனம் சிறப்பாக இருக்காதே. எனவே கருடன் வராத இடத்திலே நடனம் ஆடிடத் தீர்மானித்தான் நடராஜப்பெருமான். கருடன் நெருங்காத மரமான ஆலமரத்தைத் தேர்ந்தெடுத்து அதன் அடியிலே நடனம் ஆடத் தொடங்கிவிட்டான். அவனுடைய அணிகளான பாம்புகள் அச்சம் இன்றி ஒளிர்ந்திட நடனம் சிறப்புடன் திகழத் தொடங்கியது.

இப்படிச் சிவபெருமான் நடனமாட ஆலமரத்தடியினைத் தேர்ந்தெடுத்ததின் பின்னணியைக் கவிதை நயத்துடன் ஸ்வாமி விளக்கியருளும் உத்ப்ரேக்ஷாலங்காரத்தின் அழகு சுவைக்கத் தக்கது.

இந்த சுலோகம் மந்தாக்ராந்தா வ்ருத்தத்திலே அமைந்துள்ளது.

## சுலோகங்கள் 73 முதல் 75 வரை

*ஸ்ரீமதுபயவே வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாசனம் சாஸ்த்ர ஸாஹித்யவல்லப கருணாகராசார்ய ஸ்வாமி திருவடி*

*ப்ரவசனதிலகம்* Dr.**உப்பிலி வேங்கடேஷ்,** MBBS, CCEBDM, MBA, *திருக்குடந்தை*

***73. லக்ஷ்மீஸத்ம பவாந் வஹந் விஹரதி ஸ்ரீமந் பதங்கப்ரபோ***
***லக்ஷ்மீஸத்ம ச ஸத்த்வதம் வஹதி யத் த்வாம் தேந வித்யோததே|***
***யஸ்ஸ்வம் நாம வஹத்யஹோ புவிஜநஸ்தம் சாவஹந்யோஜந:***
***லக்ஷ்மீஸத்ம ஸ ஏவ ஸர்வபுவநச்லாக்யோ பவேந்மாநவ:||***

***லக்ஷ்மீஸத்ம பவாந் வஹந் விஹரதி ஸ்ரீமந் பதங்கப்ரபோ-*** இந்த ச்லோகத்தின் முதல் பாதத்தில் “அகலகில்லேன் இறையும்” என்று நாச்சியார் விட்டுப் பிரியாது எழுந்தருளியிருக்கும் திருமார்பை உடைய நறையூர் நம்பியை ‘லக்ஷ்மீஸத்மன்’ என்று ஸ்வாமி குறிப்பிடுகிறார்.

ஸ்ரீமானான பக்ஷிராஜனே! லக்ஷ்மியைத் தாங்கும் அந்த எம்பெருமானுக்கு வாகனமாக இருந்து அவனைத் தாங்கியபடி பல விளையாட்டுகளை நீங்கள் விளையாடுகிறீர்! தான் பயணத்துக்குப் புறப்படும் போது எம்பெருமான், “கருடா, வா!” என்று கருடனை அழைப்பானாம். அந்தக் குரலைக் கேட்ட அளவிலே, ஆனந்தத்தின் மிகுதியால் கருடன் தன் சிறகுகளை நன்கு விரிப்பாராம். இப்படிப்பட்ட அடியவன் நமக்குக் கிட்டினானே என்ற ஆனந்தத்துடன் கருடன் மேல் எம்பெருமான் ஆரோகணிப்பானாம். இதைத்தான் “பொருசிறைப் புள்ளுவந்தேறும் பூமகளார் தனிக்கேள்வன்” என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். இவ்வாறு தாம் ஆனந்தத்தோடு பூமகளார் தனிக்கேள்வனைத் தாங்கி அவனுக்கும் ஆனந்தத்தைத் தருகிறார் கருடன்.

***லக்ஷ்மீஸத்ம ச ஸத்த்வதம் வஹதி யத் த்வாம் தேந வித்யோததே*** – இரண்டாம் பாதத்தில் நாச்சியாரின் இருப்பிடமான நாச்சியார்கோவிலை 'லக்ஷ்மீஸத்மம்' என்று குறிப்பிடுகிறார். பக்ஷிராஜனே ! ஸத்வ குணத்தை வளர்க்கக்கூடிய க்ஷேத்ரமாகிய நாச்சியார்கோவில் தங்களைத் தாங்கி அதனால் சிறப்பு பெற்று விளங்குகின்றது.

வேதஸ்வரூபியான கருடனைத் தாங்கியிருப்பதால் தான் "வேள்வும் விழவும் வீதியில் என்றும் அறாத ஊர் நாளும் நறையூர்" - நாச்சியார்கோவிலில் சன்னிதியில் வேதபாராயணத்தோடு கூடிய உத்ஸவ கோஷங்களும், திருமாளிகைகளில் வைதிகமான யஜ்ஞகோஷங்களும் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருப்பதாகத் திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ளார்.

***யஸ்ஸ்வம் நாம வஹத்யஹோ புவி ஜநஸ்தம் சாவஹந் யோ ஜந: லக்ஷ்மீஸத்ம ஸ ஏவ ஸர்வபுவநச்லாக்யோ பவேந்மாநவ:*** – லக்ஷ்மீஸத்மனைத் தாங்கும் உம்மை லக்ஷ்மீஸத்மம் தாங்குவதிலிருந்தே, தம்மைத் தாங்குபவரைப் பிரதியாகத் தாமும் தாங்குபவர்கள் லக்ஷ்மீஸத்மர்களாக விளங்குவார்கள் என்பது புரிகிறது. அதாவது, அவர்களிடம் மஹாலக்ஷ்மீ எப்போதும் விட்டுப் பிரியாதிருப்பாள்.

நம்மைத் தாங்குபவரை நாமும் தாங்கினால், பிராட்டி நம்மோடு எப்போதும் இருப்பாள் என்ற தத்துவத்தை இந்த ச்லோகத்தில் ஸ்வாமி காட்டியருளியுள்ளார்.

நம்மாழ்வார் எம்பெருமானைப் பார்த்து கேட்டார், "நீ பெரியவனா ? அல்லது நான் பெரியவனா ?" என்று.

எம்பெருமான், "ஆழ்வீர் ! இதிலென்ன சந்தேகம் ? மண்ணையும் விண்ணையும் தாங்கும் நானே பெரியவன் !" என்றான்.

*ஆழ்வார் பதிலளித்தார், "நீயோ மண்ணையும் விண்ணையும் தாங்குகிறாய். ஆனால் நானோ உன்னையே என் உள்ளத்தில் தாங்கிக் கொண்டிருக்கிறேனே! எனவே நான்தான் உன்னைவிடப் பெரியவன்!"*

*அந்தப் பாசுரம்:*

**"புவியும் இருவிசும்பும் நின்னகத்த நீயென்**
**செவிவழி உள்புகுந்து என்னுள்ளாய் - அவிவின்றி**
**யான்பெரியன் நீபெரியை என்பதனை யாரறிவார்**
**ஊன்பருகு நேமியாய் உள்ளு."**

*இப்படி ஆழ்வார் தன்னை உள்ளத்தில் தாங்கியதால், எம்பெருமானும் ஆழ்வாருக்குத் தாரக - போஷக - போக்யங்களாக (உண்ணும்சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலையாக) இருந்து அவரைத் தாங்கினான். தன்னைத் தாங்கிய ஆழ்வாரைத் தானும் தாங்கியதால் எம்பெருமான் லக்ஷ்மீஸதனனாக விளங்குகிறான்.*

***ஸ்ரீமானான பக்ஷிராஜனே! லக்ஷ்மீஸதனனாக விளங்கும் எம்பெருமானுக்கு வாகனமாக இருந்து அவனைத் தாங்கியபடி பல விளையாட்டுகளைப் புரிகிறீர்! ஸத்வ குணத்தை வளர்க்கக்கூடிய க்ஷேத்ரமாகிய லக்ஷ்மீஸதனம் (நாச்சியார்கோவில்) தங்களைத் தாங்கி அதனால் சிறப்பு பெற்று விளங்குகின்றது! இதிலிருந்தே, தம்மைத் தாங்குபவரைப் பிரதியாகத் தாமும் தாங்கினால், மஹாலக்ஷ்மீ எப்போதும் அவர்களிடம் இருப்பாள் என்பது புரிகிறது.***

**74. புராணபும்ஸோ வஹநம் விதந்வந்**
**வயோதிகஸ்ஸந் விநதாத்மஜாத:|**
**த்ருஷந்மயோ தண்டதரோஸ்த்யஹீநாம்**
**ஸ்திதிம் கத: க்ஷீரதிபூக்ருஹாந்த:||**

**புராணபும்ஸோ வஹநம் விதந்வந்** - தங்களுடைய முன்னோர்களை யார் தாங்குகிறார்களோ,

**வயோதிகஸ்ஸந் விநதாத்மஜாத:** - அவர்களின் வயதான காலத்திலும் கூட அவருடைய பிள்ளைகள் அவர்களிடம் பணிவுடன் இருந்து பணிவிடை செய்வார்கள்.

**த்ருஷந்மயோ** - அவர்கள் கல் போல இருக்கலாம், அதாவது ஓடி ஆடி வேலைகள் செய்யாமல் நிம்மதியாக ஓய்வெடுக்கலாம்.

**தண்டதரோஸ்த்யஹீநாம்** - அவர்கள் கையில் தண்டம் ஏந்தியிருப்பார்கள். தண்டத்தைப் போல அவருடைய வாரிசுகள் அவர்களை உடனிருந்து தாங்குவார்கள்.

**ஸ்திதிம் கத: க்ஷீரதிபூக்ருஹாந்த:** - அவர்கள் கடல் போன்ற வீட்டில் பால் பொங்கப் பொங்க வாழ்வார்கள்.

இந்த ச்லோகத்தில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் அப்படியே கருடனுக்கும் பொருந்தும்படி ச்லேஷாலங்காரத்தில் ஸ்வாமி அமைத்துள்ள விதம் ஸ்வாமியின் கவித்திறமைக்கு ஓர் சான்று.

**புராணபும்ஸோ வஹநம் விதந்வந்** - புராண புருஷன் என்ற சொல் முன்னோர்களை மட்டுமின்றி ஊழி முதல்வனான எம்பெருமானையும் குறிக்கும். அந்தப் புராண புருஷனைத் தாங்கும் கருடன்,

**வயோதிகஸ்ஸந் விநதாத்மஜாத:** - சிரஞ்சீவியாக நீண்ட ஆயுள் கொண்ட வயோதிகராக விளங்குகிறார். அல்லது, வயம் எனப்படும் பறவைகளின் தலைவராக விளங்குகிறார். அவர் விநதையின் மகன் - விநதாத்மஜாதன்.

**த்ருஷந்மயோ** - கல்லால் ஆன திருமேனியுடன் கல்கருடனாக விளங்குகிறார்.

**தண்டதரோஸ்த்யஹீநாம்** - பாம்புகளைத் தண்டிக்கும் தண்டத்தைத் தம் திருக்கையில் ஏந்தியுள்ளார்.

**ஸ்திதிம் கத: க்ஷீரதிபூக்ருஹாந்த:** - பாற்கடலின் மகளான பிராட்டியின் ஊராகிய நாச்சியார்கோவிலில் சீரோடும் சிறப்போடும் எழுந்தருளியுள்ளார்.

| ச்லோகத்திலுள்ள பதங்கள் | முன்னோர்களைத் தாங்குவோர் விஷயமாக அமைந்த பொருள் | எம்பெருமானைத் தாங்கும் கருடன் விஷயமாக அமைந்த பொருள் |
|---|---|---|
| புராணபும்ஸோ வஹநம் விதந்வந் | முன்னோர்களைத் தாங்குபவர்கள் | எம்பெருமானைத் தாங்கும் கருடன் |
| வயோதிகஸ்ஸந் விநதாத்மஜாத:<br><br>த்ருஷந்மயோ | அவர்களின் வயதான காலம் வரை அவர்களது பிள்ளைகள் பணிவுடன் இருப்பார்கள்<br><br>கல் போல ஒய்வெடுப்பார்கள் | சிரஞ்சீவியாக, பறவைகளின் தலைவனாக வினதையின் மகன் விளங்குகிறார்<br><br>கல்லாலான திருமேனியோடு திகழ்கிறார் |
| தண்டதரோஸ்த்ய ஹீநாம் | கையில் தண்டம் ஏந்தியிருப்பார்கள் | பாம்புகளைத் தண்டிக்கும் தண்டத்தை ஏந்தியுள்ளார் |
| ஸ்திதிம் கத: க்ஷீரதிபூ க்ருஹாந்த: | கடல் போன்ற வீட்டில் பால் பொங்க | பாற்கடலின் மகளாகிய பிராட்டியின் ஊரில் வாழ்கிறார் |

முன்னோர்களைத் தாங்குபவர்கள் வளமாக வாழ்வார்கள், அதற்குக் கருடனே சான்று என்ற கருத்தை இந்த ச்லோகத்திலுள்ள சிலேடையின் மூலம் ஸ்வாமி விளக்கியுள்ளார்.

**75. ஸஹோதராயாஸ்ஸதநே ஸுதாம்சோ:**
**ஸூர்யஸ்ய ஸூதஸ்ய ஸஹோதரோயம்|**
**ஸர்பேந்த்ரஸந்தாநஸமாப்திஸாச:**
**ஸ மே ஸமாம் ஸம்பதமாதநோது||**

***ஸஹோதராயாஸ்ஸதநே ஸுதாம்சோ:*** - அமுதைப் பொழியும் சந்திரனின் சகோதரியான மஹாலக்ஷ்மியின் இருப்பிடமான நாச்சியார்கோவிலில்,

மஹாலக்ஷ்மி, சந்திரன் இருவருமே பாற்கடலில் தோன்றியவர்கள். அதனால் சந்திரன் மஹாலக்ஷ்மியின் சகோதரனாகக் கருதப்படுகிறார். சந்திர சகோதரியான பிராட்டியின் முகம் சந்திரனைப் போலவே குளிர்ச்சி நிறைந்ததாக உள்ளது. முழுநிலவைக் கண்டால் கடல் பொங்குவது போல, பிராட்டியின் முழுமதி முகத்தைக் கண்டு எம்பெருமானின் கருணைக்கடல் பொங்குவதாக பூஸ்துதியில் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ளார். "ஸ்மேரேண வர்தித ரஸஸ்ய முகேந்துநா தே நிஸ்பந்ததாம் விஜஹதோ நிஜயா ப்ரக்ருத்யா."

***ஸூர்யஸ்ய ஸூதஸ்ய ஸஹோதரோயம்*** - சூரியனின் தேரோட்டியான அருணனின் சகோதரனாகிய கருடன் விளங்குகிறார்.

சூரியனின் தேரில் குதிரைச் சேணமாக இருக்கும் துர்யயோக்தா என்னும் பாம்புக்குக் கருடனால் ஆபத்து வருமோ என சூரியன் அஞ்சியதாகவும், பின் தன் தேரோட்டியான அருணனின் சகோதரன் தான் கருடன் என்பதை அறிந்தவாறே

பயம் தெளிந்தான் என்று கருட பஞ்சாசத்தில் "அர்யம்ணா துர்யயோக்த்ரக்ரஸநபயப்ருதா ஸாந்த்விதோநூருபந்தாத்" என்று ஸ்வாமி தேசிகன் குறிப்பிட்டுள்ளார்.

**ஸர்பேந்த்ரஸந்தாநஸமாப்திலாச:** - பாம்புகளின் தலைவனாகிய வாசுகியின் சந்ததியை முடிப்பதில் ஆசை கொண்டுள்ளவராகத் திகழும் கருடன்,

ஸ்வாமி தேசிகன் கருட தண்டகத்தில் அஹீநாந்தகன் - பாம்புகளின் காலன் என்றே கருடனை அழைக்கிறார்.

**ஸ மே ஸமாம் ஸம்பதமாதநோது** - அவர் அடியேனுக்கு அனைத்து சம்பத்துக்களையும் அருளட்டும்.

சூரியனின் சகோதரனின் சம்பந்தமும், சந்திரனின் சகோதரியின் சம்பந்தமும் உடையவராகவும், விஷப்பாம்புகள் போன்ற தீய சக்திகளை அழிப்பவராகவும் விளங்கும் கருடன் நமது அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டங்களை அருளுவார் என்பதை இந்த ச்லோகத்தால் அழகாகக் காட்டியுள்ளார் நம் ஸ்வாமி.

**அமுதைப் பொழியும் சந்திரனின் சகோதரியான மஹாலக்ஷ்மியின் இருப்பிடமான நாச்சியார்கோவிலில் திகழும் சூரியனின் தேரோட்டியான அருணனின் சகோதரனும், பாம்புகளின் தலைவனாகிய வாசுகியின் சந்ததியை முடிப்பதில் ஆசை கொண்டுள்ளவருமான கருடன் அடியேனுக்கு அனைத்து சம்பத்துக்களையும் அருளட்டும்.**

# சுலோகங்கள் 76 முதல் 78 வரை

*ஸ்ரீமதுபயவே ஸாங்க வேத வேதாந்த வித்வான் ஏடூர் இம்மிடி*
*லக்ஷ்மீகுமார கோடிகன்யகாதானம்*

## Dr.சடகோபதாதாசார்ய ஸ்வாமி

**76. *ருத்ரேண ஸத்யம் பகிநீ ஹி தத்தா***
***நிஜாங்கபூஷாகணரக்ஷணார்த்தம்|***
***ருத்ரா ஹி ஸேயம் தவ நாயிகா யத்***
***விஹங்கராஜேதி விதர்கயாமி||***

***பொருள்:*** *கருத்மானுக்கு ருத்ரா ஸுகீர்தீ என இரு மனைவிமார்கள் உள்ளனர். இவர்களில் ருத்ரா என்பவள் ருத்ரனின் தங்கை என்றும் அவளை ருத்ரன், கருத்மானுக்கு விவாஹம் செய்து கொடுத்ததின் காரணத்தையும் ப்ரக்ருத கவியானவர் ரஸமாக இங்கு உத்ப்ரேக்ஷாலங்காரத்தில் (தற்குறிப்பேற்ற அணியில்) குறிப்பிடுகிறார். அதாவது, ருத்ரன் தனது சரீரத்தில் அலங்காரமாக உள்ள ஸர்பங்களை ஸம்ரக்ஷிப்பதின் பொருட்டு தமது உடன் பிறந்தாளை விவாஹம் செய்து கொடுத்ததாக எண்ணுகிறேன். அதனால் தான் கருத்மானே! ருத்ரா உமக்கு மஹிஷியாக விளங்குகிறாள் என்கிறார்.*

***விரிவுரை:*** *ருத்ரேண ஸத்யம் பகிநீ ஹி தத்தா நிஜாங்கபூஷாகணரக்ஷணார்த்தம் -பரமசிவன் தன்னுடலில் பாம்புகளையே ஆபரணங்களாக அணிந்திருக்கிறார். அவற்றைக் கருடனிடமிருந்து ரக்ஷிப்பதற்காகத் தன் ஸஹோதரீயை கருடனுக்கு மணமுடித்துத் தந்தார். இத்தகவலுக்கு என்ன ஆதாரம்? கருடனின் மனைவியின் பெயரான ருத்ரா என்பது தான் என்று நயம்படக் கூறுகிறார் கவி.*

பாற்கடலைக் கடைந்த போது முதலில் விஷம் வெளிவரவே, அதைப் பரமசிவன் உண்டார். ஆனால் அந்த விஷம் அவரை மிகவும் வேதனைக்குள்ளாக்கியது. முள்ளை முள்ளால் எடுப்பது போல, விஷத்தை விஷத்தால் தான் முறிக்க முடியும் என்று சிலர் சொன்னார்களாம். அதனால் பரமசிவன் தன் உடலில் ஆபரணமாக உள்ள பாம்புகளை விட்டுத் தன்னைக் கடிக்கச் சொன்னார். ஆனால் விஷத்தின் வீர்யம் அதிகரித்துவிட்டது. அமுதத்தைப் பருகினால் தான் இனி இந்த விஷத்தை முறிக்க முடியும். அதுவும் சாதாரண அமுதத்தைப் பருகினாலும் போதாது என்றுணர்ந்து, கும்பேச்வரர் என்ற பெயருடன் திருக்குடந்தைக்கு வந்து, ஆராவமுதாழ்வானின் திருமேனியழகாகிய அமுதத்தைப் பருகி வேதனை தீர்ந்தவரானார் என்று நம் ஸ்வாமி அம்ருத சார்தூலத்தில் அருளிச் செய்துள்ளார்.

*பீத்வா ஹந்த விஷம் பயோதிகுஹராத் ஜாதம் புராரி: புரா*
*நாகைராபரணைச்ச ஸம்வ்ருதஸ்தநுஸ்தப்தோ நிதாந்தம் தத:|*
*பர்யாப்த்யாவிதுரம் பிபந்நிஹ த்ருசா கும்பஸ்யகோணேம்ருதம்*
*கும்பம் ஸ்வீயமிதீவ ஸம்ப்ரகதயந் கும்பேச்வரோ வர்ததே||*

என்பதே அந்த ச்லோகம்.

இப்படித்தான் அணிந்த பாம்புகள் தன்னை ஆபத்தில் காக்கா விட்டாலும், அந்தப் பாம்புகள் தமது நகைகள் என்ற அடிப்படையில், அவற்றுக்குக் கருடனால் ஏற்படக்கூடிய ஆபத்திலிருந்து அவற்றைக் காக்க வேண்டும் என்ற நோக்கோடு கருடனுக்குத் தன் ஸஹோதரீயான ருத்ராவைத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார் பரமசிவன் என்று கற்பனை செய்கிறார் கவி.

**ருத்ரா ஹி ஸேயம் தவ நாயிகா யத் விஹங்கராஜேதி விதர்கயாமி** - பக்ஷிராஜரே! அதனால் தான் உன்னுடைய இரண்டு மனைவிகளில் ஒருத்தியின் திருநாமம் ருத்ரா என்று

அமைந்துள்ளதாக எண்ணுகிறேன். ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில் ''ருத்ரா காடோபகூடோச்ச்வஸநநிபிடத ஸ்தநாயோகாத் இவ'' என்று கருடன் ருத்ராவை ஆலிங்கனம் செய்யும்போது அவர் விடும் மூச்சுக் காற்றால் அவர் திருமேனியில் அணிந்திருக்கும் பாம்புகள் எல்லாம் இறுகுவதாக அருளிச் செய்துள்ளார். அப்படிப்பட்ட காதல் மனைவியான ருத்ரா கருடனை மணந்ததற்கான காரணத்தைக் கவிகளுக்கே உரிய சமத்காரத்துடன் இந்த ச்லோகத்தில் ஸ்வாமி காட்டியருளியுள்ளார்.

**77. புஞ்ஜந் புஜங்காநுபவீத பூதம்**
**புக்தௌ து தேஷாமபவீதபூதம்|**
**தம் ப்ரஹ்மஸூத்ரம் து ஸமீக்ஷ்ய ஸர்பம்**
**மந்தாநசைலஸ்மரணம் விதத்ஸே||**

**பொருளுரை:** கருத்மானுக்கு வாஸுகி எனும் ஸர்பமானது ப்ரம்ஹஸூத்ரமாக உள்ளது என ஸ்வாமி தேசிகன் கருடபஞ்சாசத்தில் ''வாமே வைகுண்டசய்யா'' எனும் ச்லோகத்தில் ''வாஸுகி ப்ரஹ்மஸூத்ர:'' என ஸாதித்துள்ளார். இதை அனுஸரித்து இந்த ச்லோகம் அமைந்துள்ளது. பூணூலாக உள்ள வாஸுகி வயிற்றைச் சுற்றிய நிலையைப் பார்ப்பதால் திருப்பாற்கடலை கடையும் ஸமயத்தில் மத்தாக இருந்த மந்தரமலையின் நினைவு கருடனுக்கு ஏற்படுகிறது என்கிறார்.

**விரிவுரை: புஞ்ஜந் புஜங்காநுபவீத பூதம் புக்தௌ து தேஷாமபவீதபூதம்** - கருடன் பாம்புகளை வெறுப்பவனாக அவற்றைக் கொன்று உண்பவனக இருந்த போதும், அந்தப் பாம்புகளுள் ஒன்றான வாஸுகியைத் தன் ''உபவீத''மாக அணிந்து கொண்டிருக்கிறார். ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில்,

வைகக்ஷ்ய ஸ்ரக்விசேஷச்சுரணபரிணமச்சஸ்த்ர பந்தாநுபந்த:
வக்ஷ: பீடாதிரூடோ புஜகதமயிதுர்ப்ரஹ்மஸூத்ராயமாண:

என்ற ச்லோகத்தில், கருடனின் இடத்தோளிலிருந்து கீழே வலப்புறம் நோக்கி, போர் வீரர்கள் தங்கள் ஆயுதங்களைத் தாங்குவதற்காக அணியும் வடம் போலக் கருடனின் திருமார்பைத் தன் இருப்பிடமாகக் கொண்டு வாஸுகி என்னும் பாம்பு யஜ்ஞோபவீதமாக விளங்குகிறது என்று அருளிச் செய்துள்ளார்.

அந்த வாஸுகி கருடன் பாம்புகளை உண்ணத் தொடங்கிடுகையில் உபவீதமாக இருக்கிறான். பாம்புகளைப் புசித்து முடிக்கையில் வயிறு பெருத்த நிலையில் அவ்வயிற்றால் இழுக்கப்பட்டு வயிற்றைச் சுற்றி அரை நாண் போல விழுந்து விடுகிறான். இப்படி உபவீத நிலை போய் வேறு நிலை - அபவீத நிலை - அவனுக்கு வருகிறது.

**தம் ப்ரஹ்மஸூத்ரம் து ஸமீக்ஷ்ய ஸர்பம் மந்தாநசைலஸ்மரணம் விதத்ஸே** - பக்ஷிராஜரே! உம் திருத்தோள்களைச் சுற்றி யஜ்ஞோபவீதமாக விளங்கும் அந்த வாஸுகியை வயிற்றைச் சுற்றிய நிலையில் நோக்குகையில் இதே வாஸுகியைக் கயிறாக வைத்துப் பாற்கடல் கடையப் பயன்படுத்திய மந்தரமலையின் நிலை உமக்கு நினைவுக்கு வருகிறது.

கருடனின் திருமேனி மந்திரமலை போலத் திண்ணென இருப்பதை இங்கே ஸ்வாமி சமத்காரத்துடன் காட்டுகிறார். இந்த்ரஜித்தின் நாக பாசத்தால் வானர ஸேனையே மயங்கிக் கிடக்கையில், அதை விடுவிப்பதற்காகக் கருடன் அங்கே எழுந்தருளுகையில்,

''நன்பால் விளங்கு மணிகோடியோடு
நளிர்போது செம்பொன்முதலாத்
தன்பால் இயைந்த நிழல்கொண்டமைந்த
தழுவாது வந்து தழுவ
மின்பால் இயன்றதொரு குன்றம் வானின்

மிளிர்கின்றது என்ன; வெயிலோன்
தென்பால் எழுந்து வடபால் நிமிர்ந்து
வருகின்ற செய்கை தெரிய;''

என மின்னலாலான ஒரு பெரிய மலை, ஆபரணங்களும் மாலைகளும் அணிந்து கொண்டு வானில் வருவது போல வந்ததாகக் கம்பர் கூறுகிறார்.

அப்படிப்பட்ட மலைபோன்ற கருடனின் திருமேனியை வாஸுகி சுற்றியிருப்பதை நோக்குகையில் மந்தர மலையைச் சுற்றி வாஸுகி வைக்கப்பட்டுப் பாற்கடல் கடையப்பட்ட நிகழ்ச்சி கருடன் மனதில் நிழலாடுவதாக ஸ்வாமியின் திருவுள்ளத்தில் ஸ்புரிக்கிறது.

**நம: பன்னகநத்தாய வைகுண்டவசவர்த்தினே|**
**ச்ருதிஸிந்துஸுதோத்பாதமந்தராய கருத்மதே||**

என்பது ஸ்வாமி தேசிகனின் திவ்யஸூக்தி

இதன் பொருள் : அழகிய சிறகுகளை உடைய தன்மையாலும் (முற்காலத்தில் மலைகளுக்கும் சிறகுகள் இருந்தனவாம் !), அரவம் - பாம்பு சூழ்ந்திருக்கும் தன்மையாலும், வைகுண்டனாகிற எம்பெருமானுக்கு ஆட்பட்டிருக்கும் தன்மையாலும், வேதங்களாகிய திருப்பாற்கடலிலிருந்து ப்ரஹ்மவித்யையாகிற அமுதத்தைப் பெற உதவிடும் தன்மையாலும் மந்தரமலையைப் போன்று திகழும் கருடனுக்கு வணக்கம்.

இத்தகைய ஸ்வாமி தேசிகனின் திவ்ய ஸூக்தி இடையறாது உலா வரும் இந்த ஸ்வாமியின் இதயத்திலே இந்தக் கற்பனை இடம் பெற்றதிலே அதிசயம் ஏதும் இல்லை.

அந்தப் பாற்கடல் பிராட்டி அவதரித்த இடம். இந்த திருநறையூரோ அந்தப் பிராட்டி ஆட்சி புரியும் இடம்.

நீணாகம் சுற்றி நெடுவரை நட்டு ஆழ்கடலைப் பேணான் கடைந்தமுதம் கொண்டுகந்த எம்பெருமான், இங்கே வயிறாற உண்ட கருடன் என்னும் மலையைச் சுற்றி வாஸுகியை வைத்து, மணிமுக்தா தீர்த்தத்தைக் கடைந்து வஞ்ஜுளவல்லியென்னும் பெண்ணமுதைப் பெற்றான் போலும் !

**78. கார்கோடஹார: கபலீக்ருதாநாம்**
**குக்ஷிஸ்திதாநாம் புஜகோத்தமாநாம்|**
**ஆச்வாஸநார்த்தம் தவ நாபிரந்த்ரம்**
**விசந்நிவாபாதி ததந்திகாஸ்ய:||**

***பொருளுரை :*** இந்த ச்லோகமும் ஸ்வாமி தேசிகன் அனுக்ரஹித்த "வாமே வைகுண்டசய்யா" எனும் ச்லோகத்தில் "சாரு கார்கோடஹார:" என ஸாதித்ததை அனுஸரித்து ஸாதித்த ச்லோகமாகும். கார்கோடகன் எனும் ஸர்ப்பம் கருத்மானுக்கு ஹாரமாக உள்ளதால், அதினுடைய தலை கருடனுடைய நாபி தேசத்தில் வரும், இதை வேறு விதத்தில் கவி இங்கு ரஸமாக ஸாதிக்கிறார்... அதாவது கருத்மான் விழுங்கிய ஸர்ப்பங்கள் கருத்மானின் வயிற்றில் உள்ளன. அவைகளுக்கு ஆஸ்வாஸம் கூறுவதின் பொருட்டுக் கருடனின் தொப்புள் வழியாக உள்ளே புகுவது போல் கார்கோடகனின் தலையானது நாபியின் ஸமீபத்தில் அமைந்தது என.

***விரிவுரை: கார்கோடஹார:*** - கருடனின் திருக்கழுத்தில் ஆரமாக விளங்கும் கார்கோடகன் என்னும் பாம்பு. ஸ்வாமி தேசிகன் கருட பஞ்சாசத்தில் "முக்தாசுப்ரோதராபோ ஹரிமணிசகலச்ரேணி த்ருச்யேதராம்ச:" என்று கார்கோடகனைக் குறிப்பிட்டுள்ளார்.

**கபலீக்ருதாநாம் குக்ஷிஸ்திதாநாம் புஜகோத்தமாநாம்** - வ்யாலாஹாரனான கருடன் விழுங்கிய பாம்புகள் அனைத்தும் அவருடைய வயிற்றில் உள்ளன அல்லவா ?

**ஆச்வாஸநார்த்தம் தவ நாபிரந்த்ரம் விசந்நிவாபாதி ததந்திகாஸ்ய:** - கருடனின் தொப்புளுக்கு உள்ளே நுழைந்து உள்ளிருக்கும் அந்தப் பாம்புகளை எல்லாம் ஆச்வாசப்படுத்துவதற்காகக் கருடனின் கழுத்தில் மாலையாக, அந்த மாலையிலிருந்து தொங்கும் நடுநாயக மணிபோன்ற தன் தலையைக் கருடனின் தொப்புளுக்கு அருகாமையில் வைத்துக் கொண்டு கார்கோடகன் கருடனின் திருமேனியில் விளங்குகிறார்.

''யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே பவத ஓதந: ம்ருத்யுர்யஸ்ய உபஸேசநம்'' என்று கடோபநிஷத் கூறுவது போல, மூவுலகையும் உண்பவனான எம்பெருமான் அவற்றைத் தன் வயிற்றினுள் வைத்துக் காக்கிறான். பின் உலகத்தை எல்லாம் படைக்கும்போது, தான் உண்டு வயிற்றில் அடக்கியவற்றை எல்லாம் அயனைப் படைத்ததோரெழில் உந்தியிலிருந்து உதிக்கும் தாமரையின் வாயிலாக வெளிக் கொணருகின்றான்.

அதுபோலவே, அந்த எம்பெருமானின் நண்பனும் தொண்டனுமான கருடனும், பாம்புகளை எல்லாம் விழுங்கித் தன் வயிற்றுக்குள் அடக்கிக் கொண்டபின், மீண்டும் தொப்புளின் வழியாக வெளிக் கொணருவார், அஞ்சாதீர்கள் ! என உள்ளிருக்கும் பாம்புகளுக்குக் கார்கோடகன் தொப்புள் வழியாகவே உள்ளே எட்டிப் பார்த்து ஆறுதல் சொல்கிறது போலும் !

## ஸுலோகங்கள் 79 முதல் 81 வரை

### ஸ்ரீமதுபயவே வித்வான் ஸௌந்தர்யபுரம் விஜயராகவாசார்ய ஸ்வாமி

**79. சரதி ககநே த்வய்யம்ஸஸ்தம் விதாய ரமாதவம்**
**தபதி தபநே தச்சத்ரத்வம் கதஸ்தவ பாணித:|**
**தவ கடகதாம் யாதச்சேக்ஷ: பணாகணவிஸ்துத:**
**தவ ச ஹ்ருதயம் நஸ்ஸர்வேஷாம் திநோதி பணீச்வர:||**

**சரதி ககநே த்வய்யம்ஸஸ்தம் விதாய ரமாதவம்** - திருவின் மணாளனான எம்பெருமானைத் தோள்களிலே சுமந்தபடி வானில் நீ சஞ்சரிக்கிறாய்.

**தபதி தபநே தச்சத்ரத்வம் கதஸ்தவ பாணித: தவ கடகதாம் யாதச்சேஷ: பணாகணவிஸ்த்ருத:** - அச்சமயம், சூரியனின் வெப்பம் மிக்க கிரணங்கள் எம்பெருமான் மேல் பட்டுவிடக் கூடாதே என்ற பொங்கும் பரிவினாலே, உன் வலது கையில் வளையாக இருக்கும் ஆதிசேஷன் தன்னுடைய பணங்களை எல்லாம் நன்கு விரித்து எம்பெருமானுக்குக் குடைபிடிக்கிறான்.

> சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
> நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
> புணையாம் அணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
> அணையாம் திருமாற்கு அரவு

என்ற பாசுரத்தில் பொய்கையாழ்வார், எம்பெருமான் உலாவும் போது ஆதிசேஷன் அவன் மேல் மழை வெயில் படாதபடி குடையாகவும், வீற்றிருக்கையில் திவ்ய சிங்காசனமாகவும், நிற்கும் போது பாதுகையாகவும், திருப்பள்ளி கொள்ளுகையில் மெத்தையாகவும், ஏதேனும் ஒன்றைக் காண விரும்பினால்

விளக்காகவும், சாத்திக் கொள்ள விழைந்தால் திருப்பரியட்டமாகவும், தழுவுதற்குரிய அணையாகவும் விளங்குகிறார் என்று அருளிச் செய்துள்ளார்.

அதைத் தழுவி ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில், "நிவாஸசய்யாஸநபாதுகாம்சுகோபதாந வர்ஷாதபவாரணாதிபி:" என்றும், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் திருவரங்கத்து மாலையில்,

சென்றால் குடையாம் கடற்புணையாம் திருத்தீவிகையாம்
நின்றாலிரு திருப்பாதுகையாம் நித்திரைக் கணையாம்
குன்றா மணியொளி ஆசனமாம் புனைகோசிகையாம்
அன்றாலிலையில் துயில் அரங்கேசர்க்கு அரவரசே

என்றும் பாடியுள்ளார்கள். நம் ஸ்வாமியும் அந்த பூர்வாசார்யர்களின் வழியில் ஆதிசேஷன் எம்பெருமானுக்குக் குடையாக விளங்குவதை மிகவும் ரசமாக இந்த ச்லோகத்தில் காட்டுகிறார்.

**தவ ச ஹ்ருதயம் நஸ்ஸர்வேஷாம் திநோதி பணீச்வர:-** அங்ஙனம் எம்பெருமானைக் காக்கும் அந்த ஆதிசேஷன், எம்பெருமான் குறைவின்றி நன்றாக இருக்க வேண்டுமே என்று அஞ்சி அஞ்சிப் பல்லாண்டு பாடும் அஞ்சுகுடியைச் சேர்ந்த உன்னுடைய உள்ளத்துக்கும் அடியோங்களுடைய உள்ளங்களுக்கும் ஆனந்தம் தருகிறார்.

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி
குதோ஽யமக்நி:|
தமேவ பாந்தம் அநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி||

என்கிறது கடோபநிஷத். உலகுக்கெல்லாம் ஒளி கொடுக்கும் சூரியனுக்கே ஒளியைத் தருபவன் எம்பெருமான் தான் என்றாலும், பக்தியின் மிகுதியால் வரும் அஜ்ஞானத்தின் அடியாக அந்த வெயில் எம்பெருமான் மேல் படாதபடி அவனைக் காத்து,

அஞ்சுகுடியைச் சேர்ந்த அடியார்களுக்கு ஆனந்தம் தருகிறார் ஆதிசேஷன்.

நான்முகன் திருவந்தாதியில் ஓர் அழகிய பாசுரம்.

> ஆங்காரவாரம் அதுகேட்டு அழலுமிழும்
> பூங்கார் அரவணையான் பொன்மேனி - யாம்காண
> வல்லமே அல்லமே மாமலரான் வார்சடையான்
> வல்லரே அல்லரே வாழ்த்து.

வைகுந்தத்திலுள்ள நித்யஸூரிகளும் முக்தாத்மாக்களும் ஸாமகானம் செய்வதைக் கேட்ட ஆதிசேஷன், அசுரர்கள் எம்பெருமானை எதிர்த்து யுத்தம் செய்ய வந்துவிட்டார்களோ என்று அஞ்சித் தன் ஆயிரம் அதரங்களாலும் விஷத்தைக் கக்கத் தொடங்கியதாக இப்பாசுரத்தில் திருமழிசைப் பிரான் அருளிச் செய்துள்ளார். அவ்வாறே சூரியனின் ஒளி எம்பெருமான் மேல் படாதபடி ஆதிசேஷன் பொங்கும் பரிவுடன் குடைபிடிப்பதாக இந்த ச்லோகத்தில் ஸ்வாமி காட்டுகிறார்.

**பக்ஷிராஜனே ! எம்பெருமானைத் தோளில் தாங்கியபடி நீ வானில் சஞ்சரிக்கும்போது, வெப்பம் மிகுந்த சூரியனின் கிரணங்கள் எம்பெருமான் மேல் படாதபடி, உன் கையில் வளையாக இருக்கும் ஆதிசேஷன் தன் பணங்களை விரித்து அவனுக்குக் குடைபிடிக்கிறார். அவர் உன் உள்ளத்துக்கும், அடியோங்களின் உள்ளங்களுக்கும் ஆனந்தம் தருகிறார்.**

**80. ஸ்வாமிந் ! வஞ்ஜுளவல்லி ! கேந பவதா நாவிஷ்க்ருதா பாஹவ:**
**சத்வாரோத்ர புஜத்வயம் புநரிதம் சக்ராய சங்காய ச ?|**
**காந்தே பக்ததமோ மம ப்ரியஸுஹ்ருத் மத்வாஹநேந்த்ரோ வர:**
**பாஹுத்வந்த்வயுதோ மமாபி ததலம் ஸ்வாமிந் நமஸ்தே நம:||**

இந்த ச்லோகம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. திருப்பாவையிலுள்ள "எல்லே இளங்கிளியே" பாசுரத்தைப் போல, இது நம்பிக்கை நாச்சியாருக்கும், நறையூர் நம்பிக்கும் நடைபெறும் உரையாடல் வடிவில் அமைந்துள்ளது.

***வஞ்ஜுளவல்லி: ஸ்வாமிந் !*** - பகவானே !

***ஸ்ரீநிவாஸன்: வஞ்ஜுளவல்லி !*** - வஞ்ஜுளவல்லி ! சொல் !

***வஞ்ஜுளவல்லி: கேந பவதா நாவிஷ்க்ருதா பாஹவ: சத்வாரோத்ர புஜத்வயம் புநரிதம் சக்ராய சங்காய ச ?*** - நான்கு திருக்கரங்களையும் வெளிக்காட்டாமல் சங்கு சக்கரங்களோடு, இரண்டு திருக்கரங்களோடு மட்டும் நீர் இவ்வூரில் எழுந்தருளியிருப்பது ஏன் ?

***ஸ்ரீநிவாஸன்: காந்தே பக்ததமோ மம ப்ரியஸுஹ்ருத் மத்வாஹநேந்த்ரோ வர: பாஹுத்வந்த்வயுதோ மமாபி ததலம்*** - என் மிகச்சிறந்த பக்தனும் நண்பனுமான கருடன் இரண்டு திருக்கைகளோடு தானே இருக்கிறான். எனவே நானும் அவனைப் போலவே இரண்டு கைகளோடு விளங்குகிறேன்.

***வஞ்ஜுளவல்லி: ஸ்வாமிந் நமஸ்தே நம:*** - எம்பெருமானே ! அடியார்களுக்கு ஏற்றபடி தன்னை அமைத்துக் கொள்ளும் தன்மை உடைய உனக்கு வணக்கம் !

நிறம் வெளிது செய்து பசிது கரிது என்ற பேயாழ்வாரின் பாசுரத்துக்கேற்ப, எம்பெருமான் க்ருத யுகத்தில் வெள்ளை மனத்துடன் இருக்கும் மக்களை ஈர்ப்பதற்காக வெள்ளை நிறத்துடனும், த்ரேதா யுகத்தில் ரஜோகுணம் நிறைந்த மக்களை ஈர்ப்பதற்குச் சிவப்பு நிறத்துடனும், த்வாபர யுகத்தில் தமோகுணம் மிக்க மக்களைக் கவரக் கரும்பச்சை நிறத்துடனும், கலியுகத்திலுள்ள நாமோ எதற்கும் திருந்துவதாகத் தெரியாததாலே

தன் இயற்கையான கறுப்பு நிறத்துடனும் எம்பெருமான் எழுந்தருளியுள்ளான்.

இப்படி அடியார்களைக் கவர்வதற்காக அவர்கள் விரும்பக் கூடிய திருமேனியை எம்பெருமான் ஏற்கிறான் என்னும் கருத்தை இந்த ச்லோகத்தில் ஸ்வாமி மிக அழகாகக் காட்டியுள்ளார்.

**81. புஜகாபரணோ ந தூர்ஜடி:**
**கமலாவாஸகதோ ந விச்வத்ருக்|**
**நவமேகநிபோ ந மாதவ:**
**க இதிஹாஸ்மி ந வக்துமீச்வர:||**

***புஜகாபரணோ ந தூர்ஜடி:*** - கருடன் பரமசிவனைப் போலவே பாம்புகளை ஆபரணமாக அணிந்திருக்கிறார். ஆனால் அவரைப் போன்ற ஜடாமுடி கருடனுக்கு இல்லை. எனவே அவரைப் பரமசிவன் என்று கூற முடியாது.

***கமலாவாஸகதோ ந விச்வத்ருக்*** - கருடன் கமலாலயத்தில் விளங்குகிறார். நாச்சியார்கோவிலை இங்கே கமலாலயம் (கமலா + ஆலயம்) என்று ஸ்வாமி குறிப்பிடுகிறார். பிரம்மாவும் தாமரைப் பூவில் (கமலாலயத்தில்) வீற்றிருப்பவர்தான். ஆனால் பிரம்மாவைப் போல் கருடன் உலகைப் படைப்பதில்லையே. எனவே, இவரைப் பிரம்மா என்றும் கூறமுடியாது.

***நவமேகநிபோ ந மாதவ:*** - நீலமேக ச்யாமளனான திருமாலைப் போன்ற நிறத்துடன் இவர் விளங்குகிறார். ஆனால் மாதவனாக - மஹாலக்ஷ்மியின் கேள்வனாகத் - திருமால் மட்டுமே விளங்குகிறார். எனவே இவர் திருமாலும் அல்லர்.

***க இதிஹாஸ்மி ந வக்துமீச்வர:*** - இப்படி மும்மூர்த்திகளும் அல்லாதவராக, அவர்களை விடவும் மேம்பட்டவராக விளங்கும் நம் கல் கருடனை இன்னாரென்று எப்படிக் கூறுவேன் ?

திரிபுரம் மூன்று எரித்தானும் மற்றை மலர்மிசை அயனும் வியப்ப
முரிதிரை மாகடல்போல் முழங்கி மூவுலகும் முறையால் வணங்க
எரியன கேசர வாளெயிற்றோடு இரணியன் ஆகம் இரண்டு கூறா
அரியுருவாம் இவரார்கொல் என்ன அட்டபுயகரத்தேன் என்றாரே

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரத்தை அடியொற்றி அவரது மறு அவதாரமான நம் ஸ்வாமி இந்த ச்லோகத்தை அமைத்துள்ளார்.

கம்ப ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில், களங்காண் படலத்தில் ஒரு பாடல்.

முளரிமேல் வைகுவான் முருகன் தந்த அத்
தளிரியல் பாகத்தான் தடக்கை ஆழியான்
அளவியொன் றாவரே அன்றி ஐயமில்
கிளவியாய் தனித்தனிக் கிடைப்பரோ துணை.

மும்மூர்த்திகளில் யாருமே ராமபிரானுக்கு ஒப்பாக மாட்டார்கள். மூவரும் இணைந்தாலும்கூட அவனுக்கு ஈடாகிவிட முடியுமா என்பது ஐயமே என்கிறார்.

பரம்பொருளான திருமாலுக்கு என்றுமே அவனிடமிருந்து தோன்றிய பிரமனும் சிவனும் ஈடாக மாட்டார்கள். ஆனால் ''ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:'' என்று வடமொழி வேதத்திலும், ''பல பிறப்பாய் ஒளிவரும் முழுநலம்'' என்று தமிழ் வேதமாகிய திருவாய்மொழியிலும் காட்டப்பட்டுள்ளபடி வைகுந்தத்திலுள்ள எம்பெருமானை விட பூமியில் அவதரிக்கின்றபோது அந்த அவதார தசையிலுள்ள எம்பெருமான் ஏற்றம் பெறுகிறான் என்பதால், வைகுந்தத்திலுள்ள எம்பெருமான் மட்டுமின்றி, அவனுடன் பிரம்மா, சிவன் உள்ளிட்டோரின் மேன்மையை இணைத்தாலும் கூட ராமபிரானுடைய மேன்மைக்கு நிகராகாது என்பதை இந்தப் பாடலில் கம்பநாட்டாழ்வார் காட்டியுள்ளார்.

அந்த வழியில் நம் ஸ்வாமியும், கருடன் எம்பெருமானை விட ஏற்றம் பெற்றவராக நறையூரில் விளங்குவதால், ஒத்தார் மிக்கார் இல்லாத எம்பெருமானின் ஏற்றத்தோடு, பிரம்மா, சிவன் போன்றோரின் பெருமைகளை இணைத்தாலும்கூட அது நம் கல்கருடனின் பெருமைக்கு ஈடாகாது என்கிறார்.

**திருநறையூரில் எழுந்தருளியிருக்கும் பக்ஷிராஜர், பாம்புகளை ஆபரணங்களாக அணிந்திருக்கிறார். ஆனால் அவர் ஜடாமுடி தரித்த பரமசிவனும் அல்லர். கமலாலயத்தில் வீற்றிருக்கிறார். ஆனால் உலகைப் படைக்கும் பிரம்மாவும் அல்லர். நீலமேகம் போன்ற நிறத்துடன் விளங்குகிறார். ஆனால் திருமகள் கேள்வனான திருமாலும் அல்லர். அவரை இன்னார் என்று எப்படி உரைப்பேன் ? மும்மூர்த்திகளை விட மேற்பட்டவராக அல்லவோ அவர் விளங்குகிறார் !**

# ஸுலோகங்கள் 82 முதல் 84 வரை

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் வாத்ஸ்ய ஸ்ரீக்ருஷ்ணமார்ய
மஹாதேசிகன் அந்தேவாஸீ முகுந்தகிரி ப்ரவணவாகஸ்பதி

## Dr.அனந்தபத்மநாபாசார்ய ஸ்வாமி,

ஸம்பாதகர், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா.

**82. கமலாலயமாதநநோத்யத:**
**வஹதே தம் கமலாலயம் நத:|**
**புஜகாபரண: ப்ரமோதேத**
**புஜகாந் ஹந்தி ச கோந்வயம் புமாந்||**

**பதவுரை –** க்ஷேமகாரியான பகவான் ஸ்ரீகருடன் கமலாலயம் - ஸ்ரீநிவாஸனை (அதாவது கமலையான பிராட்டியின் நித்யவாஸஸ்தானமானவனை), அத: ஆநோதி - கீழாக்குகிறான் (கருடன் தான் த்வஜமாக மேலே இருப்பதால் எம்பெருமான் கீழுள்ளான் என்பது கருத்து), அதே சமயம் தம் கமலாலயம் - அந்த கமலாலயனை, அலர்மேல்மங்கையுறை மார்பனை, நத: (ஸந்) - விநயத்துடன் வணங்கியவனாக, வஹதே - எழுந்தருளப் பண்ணுகிறான். அவனே புஜகாபரண - நாகங்களை ஆபரணமாகக் கொண்டு, ப்ரமோததே - ஆனந்தமடைகிறான். புஜகாந் ஹந்தி ச - ஆனால் அவனே பாம்புகளைக் கொல்கிறான். அயம் புமாந் - இத்தகைய புருஷன் க: - எவன் ? (கருடனே என்பது கருத்து)

**விரிவுரை :** அவனே கருடன் என்பதினை சமத்காரமாக அருளுகிறார். கமலாயா: ஆலய: ய: தம் கமலாலயம் - ஸ்ரீநிவாஸனை என்பது பொருள். த்வஜ: - என்று புள்ளூரும் கொடியனாக ஸ்ரீநிவாஸன் திகழ்கிறான். அதாவது எம்பெருமானின் த்வஜமாக மேற்புறத்தில் விளங்கும்போது, அல்லது விதானம் - மேற்கட்டு விதானமான போதும், அல்லது வினதைச் சிறுவன் சிறகென்னும்

மேலாப்பின் கீழ் என்னும் படியும் ஸ்ரீநிவாஸன் கருடனின் கீழே உள்ளான்.

யோயம் தத்தே ஸ்வநிஷ்டம் (கருடபஞ்சாசத் - 4) என்னும்படி பெருமாளும் கருடனும் செய்து கொண்ட ஸங்கேதமிது.

**கருடம் ச ததர்சோச்சைரந்தர்தாநகதம் த்விஜ:|**
**க்ருதச்சாயம் ஹரேர்மூர்த்நி பக்ஷாப்யாம் பக்ஷிபுங்கவம்||**

என்னும் விஷ்ணுபுராண (5-12-4) ச்லோகத்தையும் இங்கு அநுஸந்திப்பது, நாச்சியார் கோவிலில் உயர்ந்த கல்கருடனுக்கு முன்புறம் அவரின் கைகளின் கீழே பெருமாள் ஸேவை நடைபெறும் திருநாளையும் ஸ்மரிப்பது.

இனி அவனே - அதாவது கமலாலயனின் மேலுள்ளவனே, வணங்கி கமலாலயனைச் சுமப்பது வர்ணிக்கப்படுகிறது. அதாவது இப்போது கருடன் கீழிருப்பது ரஸிக்கத்தக்கது. வினதைச் சிறுவன், வினயத்துடன் கமலாலயம் - அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கை உறைமார்பனைத் தாங்குகிறான். வாஹனமாகிறான் என்பது கருத்து.

இத்தகையதொரு உயர்ந்த கைங்கர்யத்தினால் புஜகாபரணனுக்கு மகிழ்ச்சியுண்டாகிறது. இங்கு நாகாபரணம் என்பது ஒரு பொருள். ஆனால் புஜம் கச்சதீதி புஜக: - விஷ்ணு: - கருடனின் திருத்தோள்களில் ஆரோஹணித்தவர். அவரையே தனக்கு ஆபரணமாகக் கொண்டவர். உலகில் விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்தவர்கள் அதனை மற்றவர்கள் நன்கு காணுமாறு கைகளிலேந்திக் காண்பிப்பதைப் போன்று தன் தோள்களில் ஆபரணமாய் எழுந்தருளியுள்ள பெருமாளைக் காண்பித்து ஆனந்திக்கிறார்.

இதில் கருடனுக்கு உண்டாகும் ஸந்தோஷோத்கர்ஷத்தை ஈடு விவரிக்கிறது.

அருளாத நீரருளி அவராவி துவராமுன்
அருளாழிப் புட்கடவீர் அவர்வீதி ஒருநாளென்று (1-4-6)

ஸுகஸ்பர்சத்தாலுமாகப் போகாதே பிசுகிச்சுழியா நிற்குமிறே என்றுள்ளதைக் காண்க. பெருமாளின் இரண்டு திருப்பாதங்கள் கருடனுக்குக் கண்டாபரணமாக விளங்குகின்றனவாம். அந்த சுகஸ்பர்சத்தை அனுபவிப்பதனாலுண்டான ப்ரமோதம்.

த்வதங்க்ரிஸம்மர்தகிணாங்கசோபிநா (41) ஸர்வேச்வரா ! தேவரீரின் திருவடி நெருக்குதல்களினாலுண்டான தழும்புகளையே தனது கழுத்தில் அடையாளமாக - ஆபரணமாகக் கொண்ட கருடன் என்று ஸ்தோத்ர ரத்னத்தில் ஆளவந்தார் அருளினார்.

இத்தகைய புஜகாபரணன் வாமே வைகுண்டசய்யா பணிபதி சயந: (கருடபஞ்சாசத்) என்னும்படி திருமேனி முழுவதிலும் பாம்புகளையே ஆபரமாகக் கொண்டவன், பாம்புகளைக் கொல்கிறானே, இவனொரு அதிவிலக்ஷணமான புருஷன்.

முன் ச்லோகத்தின்படியே இந்த ச்லோகத்திலும் மேலுள்ள ச்லோகத்திலும் த்ரிமூர்த்தி விஷயமான ச்லேஷமும் (சிலேடையும்) காண்பிக்கப்படுகிறது. ஆலயம் என்பதினால் ஸ்தானம், ஆஸனம் என்னும் பொருளின்படி கமலாலயம் ஆதநோதி - தாமரையின் மீது அமர்ந்துள்ள ப்ரஹ்மதேவன் குறிக்கப்படுகிறான். தாமரையோனாகிய பிரமனா இவன் என்றால், அன்று என்பதே அர்த்தமாகிறது. ஏனெனில் அடுத்த பாதத்தில் தம் கமலாலயம் மந: ஆதநோதி என்பதினால் அந்த தாமரையைத் தாங்குகிறான் என்பது பொருந்தாததாகிறது.

இனி பாம்புகளை ஆபரணமாக அணிந்து மகிழ்கிறான் என்றால் பரமசிவனாக இருக்கலாமோ என்றால், அதுவுமில்லை. காரணம் புஜகாந் ஹந்தி - பரமசிவன் பாம்புகளைக் கொல்வதில்லை. எனவே பரமசிவனாகவும் முடியாது.

அல்லது விஷ்ணுபரமாக நிர்வஹிக்கப் பார்க்கில் கமலா லயம் ஆதநோதி - எவனிடம் கமலையானவன் இரண்டறச் சேர்கிறாளோ என்னுமர்த்தம் கிடைக்கிறது. அத - என்பதற்கு கீழ்ப்புறம் அதாவது திருமார்பில் என்று அர்த்தம் கொள்ளலாமெனில் நத: தம் லயம் வஹதே என்பது பொருந்தாது. தாம் வஹதே - கமலையை வஹிக்கிறான் என்றிராமல், தம் வஹதே - அதாவது லயம் வஹதே என்றுள்ளதைக் காண்க. அவ்வாறெனில் கமலா லயம் வஹதே - அவளின் சேர்க்கையை வணங்கி வஹிக்கிறான் என்பது எவ்விதம் பொருந்தும்.

தத்தே நதேந சிரஸா (வணங்கிய சிரஸினால் கோதையின் மாலையை ஏற்கிறான்) எனும் கோதா ஸ்துதி விஷயத்தை இங்கு ஆரோபிக்கவியலாது. ஏனெனில் அங்கே மாலையைச் சூடும்போது வணக்கம். அது ஆக்ருதி மற்றும் அபிமானம். இங்கும் அவையிருந்தாலும் நத: லயம் வஹதே என்பது ஏற்புடையதல்ல. ஆகையால் இவன் விஷ்ணுவுமல்லன்.

உத்தரார்தத்திலும் புஜகாபரண: என்பதை விஷ்ணுபரமாக நிர்வஹிக்கலாம். புஜகஸ்ய ஆபரண: - அதாவது தகட்டின் ஆழத்தில் மாணிக்கம் போன்று புஜகத்தில் சயனித்திருப்பவன். இதனால் புஜகத்திற்கு இவன் ஆபரணமாகத் திகழ்கை அனுஸந்திக்கப்பட்டதாகிறது. அல்லது புஜக ஏவ ஆபரண: என்பதினால் நாகாபரணன் (தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும் சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் - மூன்றாம் திருவந்தாதி) என்பதினால் நாகாபரணன்

எம்பெருமானே. ஆனால் அவன் நாகங்களைக் கொல்வதில்லையே. ஸுமுகன், காளியன் முதலிய ஸர்பங்களைக் காத்தவனன்றோ. ஆகையால் இவர்களை விட விலக்ஷணமான இவன் யாரோ என்கிறார்.

**83. புஜகாபரண: கமலாலயக:**
**நவமேகநிபோ யதயம் நதயம்|**
**த்ரிபிரபி தேவை: ஸ்வயமுதிதோபூத்**
**த்ரிபிரபி வேதை: கோபி புமாந்ந:||**

முன் ச்லோகத்தின்படியே த்ரிமூர்த்தி ஸாம்ய சிலேடையே இங்கும் ரஸவத்தாயமைந்துள்ளது.

**பதவுரை:** புஜகாபரண: - பாம்புகளையாபரணமாக அணிந்தவன், கமலாலயக: - கமலாலயத்தை (நாச்சியார்கோவில்) தாமரையை அடைந்தவன், நவமேகநிப: - நீருண்டமேகம் போன்ற காந்தி உடையவன், யதயம் ததயம் - எக்காரணங்களினாலவன் இவ்விதமுள்ளானோ அக்காரணங்களினாலேயே, த்ரிபிரபி தேவை: - மும்மூர்த்திகளாலும், த்ரிபிரபி வேதை: - மூன்று வேதங்களாலும், ந: கோபி புமாந் - எங்களுடைய ஒப்புயர்வற்ற ஒரு புருஷன், ஸ்வயமுதிதோபூத் - தானே போற்றுதலுக்கு உரித்தாகுகிறான்.

**விரிவுரை :** நாகங்களை ஆபரணமாக உடையவன், கமலாலயம் எனும் திவ்யக்ஷேத்ரத்தை உடையவன், நீருண்ட மேகத்தைப் போன்ற திருமேனி காந்தி உடையவன். (கருடன் மேருமலை போன்று பொன்மயமான காந்தியுடையவனாக வேதங்களில் புகழப்பட்டிருந்தாலும் இத்தலத்தில் சாளக்ராம திருமேனியாக கருத்த திருவுருவத்துடன் ஸேவை சாதிப்பதால் இந்த வர்ணனை என்றறிக). வேதாத்மா விஹகேச்வர: என்னும்படி ஸௌபர்ணச்ருதி முதலியவற்றில் கருடன் வேதஸ்வரூபன் என்பது

ப்ரதிபாதிக்கப்பட்டுள்ளது. ஸ்வாமி தேசிகனும் கருடமகில வேத நீடாதிரூடம் என்று கருட தண்டகத்திலும் நேத்ரம் காயத்ரமூசே த்ரிவ்ருதிதி ச சிர: (3) என்ற கருடபஞ்சாசத் ச்லோகத்தில் அருளியுள்ளதையும் காண்க.

தனித்தனியாக த்ரிமூர்த்திகளிடம் உள்ள குணங்கள் இவன் ஒருவனிடமே முழுதும் சேர்ந்திருப்பதால் மும்மூர்த்திகளாலும் கொண்டாடப்படுகிறான். புஜகாபரணத்வம் - பரமேச்வரனிடத்தில், கமலாலயகத்வம் - ப்ரஹ்மானிடத்தில், நவமேக நிபத்வம் - ஸ்ரீநிவாஸனிடத்தில், இவையனைத்தும் கருடனிடம் ஒருங்கே குடிகொண்டுள்ளதால் அவர்கள் இவனைப் போற்றுகின்றனர். அர்யம்ணா துர்யயோக்த்ர க்ரஹண பயப்ருதா எனும் கருட பஞ்சாசத் ச்லோகத்தில் பயத்தினாலும் தேவர்கள் கருடனை வேண்டியதை ஸ்வாமி தேசிகன் வர்ணித்துள்ளதை நினைவுறுத்துகிறார். தேவ - வேத எனும் சமத்கார ப்ரயோகமும் ஸ்வாரஸ்யம், ப்ராஸத்தின் அழகு.

ருக்வேத தேவதை பரமசிவன், ஸாமவேதத்திற்கு ப்ரஹ்மா, க்ருஷ்ணயஜுர் வேதத்தின் அதிதேவதை பரமாத்மா என்பதினால் மூன்று தேவ - வேத ஸ்வரூபன் என்பதும் யுக்தமாயிருப்பின் ரஸித்திடுக.

**84. கேதுவாஹநதயைவமித்ரதா**
**ஸாऽவயோததிஹ ஸாஸ்யஹீநமா|**
**தேந சேஷ பணிராஜ மித்ரதா**
**வைநதேய தவ பாது ஸந்ததம்||**

பதார்த்தம் - கேதுவாஹநதயைவ - நீ எனக்கு கேது - த்வஜமாகவும் (மேலானவனாகவும்), வாஹனமாகவும் (கீழ்ப்பட்டவனாகவும்) உள்ள ஆவயோ: - விஷ்ணுவான எனக்கும் வாஹனமாகிய உனக்குமுள்ள மித்ரதா - இத்தகைய நட்பு ஸாபி

ததிஹ அஹீநதா - இங்கு அதுவும் மேலானது. தேந - இத்தகைய நட்பின் (ஸங்கேதத்தின்) காரணத்தினாலேயே (காரணேந இத்யத்யாஹார்ய:) ஹே வைநதேய - வினதையின் குமரனே ! சேஷ பணிராஜ மித்ரதா - ஆதிசேஷனாகிற அனந்தனிடம் உனது ஸ்நேஹம் ஸந்ததம் பாது - எப்போதும் விளங்கட்டும்.

***விரிவுரை :*** இதற்கடுத்த 85-ம் ச்லோகத்தின்படியே எம்பெருமான் கருடனிடம் கூறுவதாயமைந்துள்ளது இந்த ச்லோகம். யோயம் தத்தே என்று முன் கூறிய படியே எம்பெருமானும் கருடனும் சேர்ந்து செய்து கொண்ட ஸ்நேஹ உடன்படிக்கை வாஹனம், ஸகா, த்வஜம் என்றபடி. உலகிலும் நண்பர்கள் தங்கள் நட்பின் மீது ஆணையிட்டுக் கூறுவது போன்று இங்கு எம்பெருமான் சொல்வதாகக் கொள்ளலாம்.

கருடனும் ஸர்பங்களும் ஸஹஜசத்ருக்கள். ஆனால் எம்பெருமான் ஸந்நிதியில் இவையிரண்டும் ஸகீபாவமாகக் கைங்கர்ய ரஸத்தை அனுபவிக்குமதை "அரவும் கருடனும் அன்புடன் ஏந்தும் அடியிரண்டும் (அம்ருதாஸ்வாதினீ-**32**) என்று ஸ்வாமி தேசிகன் அருளினார். மேலும் "ச்லிஷ்யத்போகீந்த்ரபோகே:" என்னும் கருட பஞ்சாசத் ச்லோகத்திலும் இவ்விருவரின் சேர்க்கையை விவரிக்கிறார். ஆகையால் என் மித்ரனாகிய நீ ஆதிசேஷனிடத்தில் பகையற்றவனாக விளங்குவாய் என்கிறார். அஹீநமித்ரா என்பதினால். அஹீநதா - அஹீநம் எனும் புண்ய யாகம் போன்றது, அல்லது யாகமயமானது நமது நட்பு என்பதை இங்கு ரசிக்கவும்.

பரமார்த்த ஸ்துதியில் ஸ்வாமி தேசிகனும் அவநம் ச்ரயநாம் அஹீநமாகம் என்று சாதித்ததை உணர்க.

குறிப்பு : ஹே கருட, நீ கேதுவாகவும், த்வஜமாகவும் உள்ளாய். ஆகையால் கேதுவாஹனன். அதுவே போன்று கேதுவான

உன்னை வாஹனமாகவுடைய நான் கேதுவாஹனன். இவ்விதம் நம்மிருவருக்குமிடையேயான ஸக்யமுள்ளது. அது மேலானது. ந ஹீநதா. ஆகையால் ஹே சேஷ - இங்கு தாஸஸ்ஸகா என்னும் படி சேஷ - என்பதால் ஸம்போதனமாம். இதை வலியுற்றுத்துமதாக அடுத்த ச்லோகம் அமைந்துள்ளதைக் காண்க. ஆகையால் பணிராஜ மித்ரதா - என்னுடன் நட்பு கொண்டது போன்று ஆதிசேஷனிடம் ஸக்யம் விளங்கட்டும் என்பதாகக் கொள்வது யுக்தமாயின் ரசித்திடுக.

இங்கு அஹீநதா மித்ரதா - நட்பு; மற்றும் ஈனத்தன்மையற்றது என்ற தொடரில் அஹி  இனதா என்றும் பிரியும். அப்பொழுது பாம்பின் தலைவனான தன்மை என்றும் பொருள் கிட்டும். நமக்கு அஹீனதை - ××××××× தன்மை உள்ளது. பாம்புகளின் தலைவனாக இருக்கும் தன்மையும் உள்ளது. அதனால் பாம்புகளின் தலைவனான சேஷன் தன்மையுடன் இருக்கிறாய். எனவே அவனுடன் நட்பு பூண்டு நீ திகழ்வாய் என்ற பொருளும் சுவைக்க உரியது.

# சுலோகங்கள் 85 முதல் 87 வரை

சிலுக்கூர் மாடபூஷி **லக்ஷ்மீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமி**

ஸ்ரீ உ.வே. மகாவித்வான் வில்லூர் கருணாகராச்சாரியார் ஸ்வாமி அடியேனுக்கு மாதுலர் அதாவது அடியேன் மாதா ஸ்ரீமதி வசுமதி இவருக்கு தமக்கையார் ஆவார். இவர் அடியேனுக்கு வேதாத்யானம் மற்றும் க்ரந்த சதுஷ்டய காலக்ஷேப ஆசார்யர் ஆவார். இவர் அடியேனுக்கு சிறுப்ராயத்தில் கணிதம் முதலான பள்ளிக்கூட பாடங்களும் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அது மட்டும் இல்லாமல் பல்வேறு சிஷ்யர்களைப் போல் அடியேனுக்கு மார்கதர்சியாகவும் பின்பற்ற முயலுவதற்கு ஓர் ஆதர்சமாகவும் திகழ்கிறார். ஸ்வாமி டில்லியில் வாஸம் செய்த ஸமயம் அடியேன் டெல்லிக்கு 25 கி.மீ. உள்ள பரீதாபாத்தில் வாசம் செய்தேன். அவைகள் மிகவும் நன்நாட்கள். அப்பொழுது ஸ்வாமி திருவடியில் ப்ராரம்பித்த அத்யயனம், க்ரந்த காலக்ஷேபங்கள், ஸாஹித்யம் இதுவரை தொடர்ந்துக்கொண்டு இருக்கிறது. அடியேனை ஓர் வஸ்துவாக செய்துக்கொண்டு வருகிறது. ஸம்ஸ்க்ருதபாஷையின் அடிப்படை நுட்பங்களை அடியேனுக்கு போதித்து திருத்தி கொண்டிருக்கிற மகான். இந்த ஸ்வாமியின் ஸப்ததி மஹோத்ஸவத்தில் கலந்துக்கொண்டு அதனை ஒட்டி வெளிவரும் மலரில் அடியேனுக்கு இந்தக் கட்டுரை எழுதும்படி பணிக்கப்பட்டதை ஆசார்ய அநுக்ரஹமாகவும் பரமபாக்யமாகவும் கொண்டுள்ளேன். அடியேனுக்கு பணிக்கப்பட்ட விஷயம் அடியேன் மாதாமகரும் ஸ்வாமியின் பிதாவுமான வில்லூர் ஆசுகவிஸார்வபௌம ஸ்ரீநிதி ஸ்வாமி கருடபகவான் விஷயமாக அருளிச்செய்த க்ஷேமகாரி சதகத்தில் 85-87 ச்லோகங்களின் விரிவுரை. இந்த க்ரந்தம் ஐந்து விஹாரங்களுடன் கூடிய காவ்யாலங்கார ரூபமான கருடஸ்தோத்ரம். ஸ்வாமி வேதாந்த

தேசிகன் 51 ச்லோகங்கள் கொண்ட கருடபஞ்சாசத் அருளினார். அதன் பிறகு கருடபகவானுக்கு சதகம் (100 ச்லோகங்கள்) செய்து கொடுக்கணும் என்று பகவான் ஸங்கல்பம் செய்ததுனாலோ என்னவோ ஸ்ரீ ஸ்ரீநிதிஸ்வாமி கருட பகவானுக்கு சதகம் மிக அற்புதமாக ஸாதித்தருளியிருக்கிறார். இதில் 85-87 ச்லோகங்கள் சமத்காரவிஹாரத்தில் அமைந்துள்ளது. ஸாதாரணமாக சமத்காரமாக உரையாடுவது மிக மேதாவிகளுக்குதான் ஸாத்யம். அதை வைத்து ச்லோகம் செய்யவேண்டும் என்றால் அது அடியேன் மாதாமகரைப் போன்ற மஹான்களுக்குதான் ஸாத்யம். 54-88 ச்லோகங்கள் சமத்காரவிஹாரத்தில் உள்ளன. இது மிக ரஸிக்கத்தக்க சமத்காரங்கள் கொண்ட பெரும் விஹாரம். அடியேன் மாதாமஹர் திருவடியில் மாகம் எனப்படும் சிசுபாலவதம் பயின்றதினாலும் அவருடைய சமத்கார உக்திகளை நேரில் அனுபவித்ததினால் இதிலுள்ள சமத்கார விஷயங்களை ஸமர்பிக்க யத்னிக்கிறேன்.

முதலில் 85வது ச்லோகத்தை ரஸிப்போம். இந்த ச்லோகம் கீழ்க்கண்டவாறு:

**85.** **इत्यवेत्य भगवन्मतं स्थितं शेषतां वहति शेषवद्भवान्।**
**शेष एव तव सोहमित्यत: मामशेषपतगेश्वरोवतात्।।**

இதன் ஆரம்பம் इत्यवेत्य भगवन्मतं स्थितं என்று அமைந்துள்ளது. இதன் பொருள், **இவ்வாறு பகவானுடைய அபிப்ராயம் இருக்கையில்** என்று ஆகும். இதிலிருந்து இதற்கு முன் ச்லோக தொடர்பு உள்ளது என்று தெளிவாகிறது. இதை நன்கு மனதில் கொள்வதற்கு முன் ச்லோகத்தை ஸேவிக்க வேண்டியது அநிவார்யம். 84வது ச்லோகம் கீழ்க்கண்டவாறு.

**84.** **केतुवाहनतयैव मित्रता सावयोस्तदिह साप्यहीनता।**
**तेन शेषफणिराजमित्रता वैनतेय तव भातु संततम्।।**

இந்தச்லோகம் ஸ்ரீமந்நாராயணனான எம்பெருமான் கருட பகவானின் விருப்பப்படி நட்புடன் அவரை தனக்கு கொடியாகவும், வாகனமாகவும் ஆக்கிக்கொண்டு இருக்கிற தருணத்தில் எம்பெருமான் அருளிச்செய்த வசனங்களாக அமைந்துள்ளது.

இதற்கு பின்னணி புராண வரலாறு. ஒரு ஸமயம் கத்ரூவினடத்திலிருந்து கருடபகவான் தன் தாயான விநதையின் தாஸ்யம் தீர்ப்பதற்கு இந்திராதி தேவர்களுடன் போர் புரிந்து தேவலோகத்திலிருந்து அம்ருதத்தை கொண்டுவரும்பொழுது உபேந்திரரான பகவானும் அவருடன் போர் புரிந்தார். அப்பொழுது கருடன் மிக பலத்துடனும் ஸாகஸத்துடனும் போரிட்டார். அதனால் திரு உள்ளம் உகந்த பகவான் கருடருடன் நட்புக்கோரி வரம் கேட்கச் சொன்னார். அதன்படி பகவானையே தாங்குவதற்கும், பகவானுக்கு மேலே ஸ்தானம் பெறவேண்டும் என்று கோரினார். அதை மேற்கொண்டு நட்பின் அடிப்படையில் தமக்கு வாகனமாகவும் கொடியாகவும் பதவிகள் அளித்தார். அந்த நட்பின் அடிப்படையில் பகவான் பேசியது கருடனை வென்றது. ஆகையால் இம்மஹாகுணம் படைத்த சிறிதும் அஹங்காரமில்லாத எம்பெருமானான பகவானுக்கு தன்னிச்சையாகவே சேஷியானார் அதாவது சேவை செய்பவராக ஆனார் கருடபகவான்.

இந்த ச்லோகத்தின் பதச்சேதம் இம்மலரில் ஸ்ரீ அனந்த பத்மநாபாச்சாரியார் ஸ்வாமியின் விரிவுரையில் காண்க. இங்கு முக்ய யோஜனை ஸமர்ப்பித்துக் கொள்கிறேன்.

वैनतेय – ஓ வைநதேயரே, आवयो – நம், सा – அந்த, मित्रता – நட்பு, केतुवाहनतयैव – த்வஜத்தன்மையும், வாகன தன்மையின் அடிப்படையிலேயே ஆனது. साप्यहीनता, (सा–अपि–अहीनता) – அது மேன்மையானது, साप्यहीनता–सा–अपि–अहि–इनता – அதுவும் பாம்புகளின் தலைமைத் தன்மையுடன் கூடியது, உம்மை

பாம்புகளின் தலைவனாக ஆக்கியது. तेन – ஆதலால், शेषफणिराजमित्रता – பாம்பின் அரசரான ஆதிசேஷனுடன் நட்போடு கூடியதாக, संततम् – எப்பொழுதும், तव – உனக்கு, भातु – ப்ரகாசிக்கட்டும்.

இந்த ச்லோகத்தின் திரண்டபொருள் அடியேன் மாதுலரான ஸ்ரீகருணாகராச்சார்யார் ஸ்வாமி திருவடியில் க்ரஹித்ததை இங்கு விக்ஞாபிக்கிறேன். ஓ கருடா, நம் நட்பின் காரணமாக நீ எனக்கு கொடியாகவும், வாகனமாகவும் ஏற்பட்டாய். இது நட்பின் பேரில் ஏற்பட்ட मित्रता–உடன்படிக்கை, साप्यहीनता, (सा–अपि–अहीनता) சேவகன் - தலைவன் அடிப்படையில் இல்லை. இந்த நட்பு உனக்கு साप्यहीनता (साप्यहीनता–सा–अपि–अहि–इनता)–ஸர்பங்களுக்கு எல்லாம் அரசனாகும் தன்மையையும் கொடுத்திருக்கிறது. இத்தன்மை ஆதிசேஷருக்கும் உண்டு. அவர் ஸர்பராஜராகையால் அதே நட்பு உனக்கும் எனக்கு பணிபுரியும் சேஷனாகிய ஸர்பராஜருக்கும் அதாவது ஆதிசேஷனுக்கும் நடுவில் வளர்ந்து இருவரும் நண்பர்களாக விளங்குங்கள் என்று ஸாதித்தார். கருட பகவானோ இப்படி ஸர்வேச்வரன் மித்ரபாவம் காட்டி தம்மை வென்றதால் உள்ளம் உகர்ந்து ஆதிசேஷரைப் போல் தம்மையும் பகவானுக்கு சேஷனாக ஆக்கிக்கொண்டு சேஷபாவத்தோடு ஸேவை செய்துக் கொண்டு வருகிறார். இதை வைத்துக்கொண்டு சமத்காரமாக **85**-ம் ச்லோகத்தை அமைத்துள்ளார் ஸ்ரீ ஆசுகவி ஸ்வாமி.

### 85-ம் ச்லோகத்தின் பொருள்

इत्यवेत्य – இவ்வாறு இடப்பட்டு, भगवन्मतं – எம்பெருமான் நாராயணனின் அபிப்ராயம் கருடருடன் நட்பு உடன்படிக்கை, स्थितं – நிற்க, भवान् – கருடபகவானே நீங்கள், शेषवत् – ஆதிசேஷரைப் போல், शेषतां – பகவத் சேஷத்வத்தை - கைங்கர்யத்தை, वहति – எடுத்துக் கொண்டு தாங்கிக் கொண்டு இருக்கிறீர், अत: –

ஆகையால், இம்மஹாகுணத்தால், तव – உங்களுக்கு, अहं – அடியேன், शेष: – சேஷனாக ஸேவகனாக இருக்கிறேன், इति – இதை ஏற்றுக்கொண்டு, स: – அந்த, अशेषपतगेश्वर: – எல்லா பக்ஷிகளுக்கும் ராஜாவான, भवान् – கருட பகவானாகிய தாங்கள், मां – அடியேனை, अवतात् – காப்பாற்றுங்கள்.

இங்கு ஸ்ரீமதாசுகவிஸார்பௌமர் சமத்காரமாக கருட பகவானை தன்னை காக்கும்படி ப்ரார்திக்கிறார். ஓ கருடபகவானே, பகவானிடம் ஸம்பந்தம் மைத்ரியினால் ஏற்பட்டாலும் பகவத் குணாநுபவம் பொருட்டு ஆதிசேஷரைப்போல் நீரும் பகவானுக்கு சேஷத்வம் கொண்டுள்ளீர். சேஷத்வம் என்றால் எம்பெருமானார் அருளிய லக்ஷணம்படி परगत – अतिशय–आदानेच्छया–आधेयत्वमेव यस्य स्वभाव: स: शेष:, पर: शेषी தன்னுடைய பரனுக்கு அதிசயம் அதாவது மேன்மைக்காக அவருக்கு உட்பட்டு எதுவும் செய்யக்கூடிய ஸ்வபாவம். இதை உடையவர் சேஷன் எனப்படுவார்.

ஓ அசேஷபக்ஷிஸமூஹத்திற்கு அரசே, அடியேனும் உமக்கு சேஷன். உம்மிடம் சேஷத்வமும் அசேஷத்வமும் ஒன்றாக நன்றாக பொருந்தியிருக்கிறது. அப்படிப்பட்ட கருடபகவானே நீர் உம் சேஷனான அடியேனை காத்தருள வேண்டும். இங்கு கருடபகவானுக்கு சேஷத்வமும், அசேஷத்வமும் பொருந்தியிருப்பதை காட்டியது கவிதாஸாமர்த்யம் சமத்காரோக்தி.

**86**-வது ச்லோகத்தில் ஸ்வாமி நம்மாழ்வார் அனுபவத்தில் கருட வாகனத்தில் திருமார்பில் லக்ஷ்மி தேவியை ஸேவித்ததை நினைவுப்படுத்துகிறார்.

भुजान्तरविभूषणं भगवती पयोधेस्सुता
भवानपि च वाहनं भगवतोस्य विष्णोरिति।
वदन् किल पदे पदे वकुळभूषणस्सादरं
भजन्नमितभक्तिदै: निजवचस्सुधाराशिभि:।।

अस्य – भगवत: – பகவானான, विष्णो – மஹாவிஷ்ணுவின் भुजान्तरविभूषणं – திருமார்பில் திருவாபரணமாக, भगवती पयोधेस्सुता – ஸமுத்ரகுமாரி லக்ஷ்மியையும், च – மேலும், भवानपि – நீரும், वाहनं – வாகனமாகவும், पदे पदे – அடிக்கடி, वदन् – சொல்லிக்கொண்டே, क्लि – அன்றோ, वकुळभूषण: – நம்மாழ்வார், सादरं – அன்புடன், भजन् – ஸ்தோத்ரம் செய்து, अमितभक्तिदै: – அளவில்லாத பக்தி உண்டாக்கும், निजवचस्सुधाराशिभि: – திருவாய்மொழியினால் திரண்ட பொருள் - ஓ கருடபகவானே ! உம்மை பகவானுக்கு வாகனமாகவும் மஹாலக்ஷ்மியை திருமார்பில் திருவாபரணமாகவும் அடிக்கடி வர்ணித்து நம்மாழ்வார் திருவாய்மொழியினால் பஜித்து பக்தி வளரச் செய்தார் அன்றோ. ஆசுகவி ஹ்ருதயத்தில் தோன்றியிருக்கக்கூடிய ஆழ்வார் பாசுரங்களில் ஒன்றை இங்கு ஸேவிப்போம்.

*திகழ்கின்ற திருமார்பில் திருமங்கைத் தன்னோடும்*
*திகழ்கின்ற திருமாலார் சேர்விடம் தண்வாட்டாறு*
*புகழ்நின்ற புள்ளூர்ந்து பேரரக்கர் குலம்கெடுத்தான்*
*இகழ்வின்றி என் நெஞ்சத்து எப்பொழுதும் பிரியானே.*

இப்படி தாயார் பகவானுக்கு திருமார்பில் விபூஷணமாக இருக்க கருடாழ்வார் பகவானுக்கு வாகனமாக திகழுகிறார் என்று அதிசயிக்கிறார் ஆசுகவி.

மேலே 87வது ச்லோகத்தில் கருடபகவானை சமத்காரமாக மும்மூர்த்திக்கு ஹ்ருத்யமுருக போற்றுகிறார்.

**87. विष्णुं वहन् विष्णुपदैक्लोल: रुद्रानुकूल: क्मलालयेपि।**
**भक्त्या महत्या सततं निविष्ट: त्रिमूर्तिहृद्य: श्रुतिमूर्तिरिन्धे।।**

श्रुतिमूर्ति: – வேதாத்மாவான கருடபகவான், विष्णुं वहन् – ஸ்ரீ மகாவிஷ்ணுவை வஹித்துக்கொண்டு, विष्णुपदैक्लोल: –

விஷ்ணுபதத்தை ஆசையுடன் அனுபவிக்கிறார். இங்கு விஷ்ணு பதம் என்றால் ஆகாயம், விஷ்ணுவின் பாதம், என்று இரண்டு பொருட்கள். பகவானின் பாதத்தை அநுபவித்துக்கொண்டு ஆகாயத்தில் ஸஞ்சரிக்கிறார் - விஷ்ணுவிடம் எப்பொழுதும் இருப்பதால் விஷ்ணுவின் பத்தை-தன்மையை வஹிக்கும் விஷ்ணுபகவானைப் போல் திகழுகிறார் என்றும் கொள்ளலாம். रुद्रानुकूल: – யுத்தத்தில் பகவான் எதிரிகள் மீது சினம் கொள்ளும் பொழுது அநுகூலராக விளங்குகிறார். कमलालयेपि – கமலாவான லக்ஷ்மிக்கு நிலையமான பகவானுக்கு, महत्या भक्त्या – பகவானிடத்தில் பெரும்பக்திக் கொண்டவராய் सततं निविष्ट: – எப்பொழுதும் இருக்கிறார், இங்கு கமலாலயே என்றால் கமலத்தில் அமர்ந்திருக்கும் நான்முகனையும் கொள்ளலாம். कमलालयेपि भक्त्या महत्या सततं निविष्ट: – நான்முகனை பக்தியுடன் அவர் மனதில் வைத்துக்கொண்டு இருப்பவராகவும் இருக்கிறார் கருடபகவான். रुद्रानुकूल: – ருத்ரனுக்கு அநுகூலராகவும் இருக்கிறார் கருடபகவான். ஆக, விஷ்ணுபதைகலோலராகவும், ருத்ராநுகூலராகவும், கமலாலயே நிவிஷ்டராகவும் இருப்பதால் त्रिमूर्तिहृद्य: – மும்மூர்த்திகளைப் போல் ஹ்ருத்யராகவும் அல்லது மும்மூர்த்திகளுக்கு ஹ்ருத்யராகவும், इन्धे – திகழ்கிறார் கருடபகவான்.

இச்லோகத்தின் திண்ட பொருள் பகவானுக்கு எப்பொழுதும் வாகனபாகிர, பகவத் பக்தியுடன் திகழ்கிற ருத்ராநுகூலரான காய்ச்சிநரான கருட பகவான் மும்மூர்த்திகளைப் போல் ஹ்ருத்யராகவும் மும்மூர்த்திகளுக்கு ஹ்ருத்யராகவும் விளங்குகிறார். இங்கு பதப்ரயோக சாதுர்யத்தால் கருட பகவானை மும்மூர்த்திகளை சமத்காரமாக ஒப்பிடுவது ஆசுகவிஸார்வபௌம சாதுர்யம்.

70வது திருநக்ஷத்திரம் கொண்டாடும் அடியேன் மாதுலரும் ஆசார்யருமான வில்லூர் கருணாகராச்சாரியாரின் அனுக்ரஹத்தினாலும் அவர் அனுக்ரஹித்த ஞானத்தினாலும் தான் அடியேன் இந்த கட்டுரையை ஸமர்ப்பிக்க முடிந்தது. இந்த அவகாசத்திற்கு தன்யோஸ்மி அனுக்ரஹீதோஸ்மி என்று சொல்லிக்கொண்டு அமைகிறேன்.

कविताजित–कमलानिधि–हृदयं कमलाया:
शतनामक–कविताकृति–कृत–शोध्यनिरुक्तं।
कमलापति–करुणारस–कलितं–गुरुवर्यम्
करुणाकर–करणाकरमनिशं कलयेऽहम्।।
वेदे–पुराणे–श्रुतिमौळिगूढे
श्रीभाष्यरत्नाकरदिव्यसूक्तै।
वचस्सुधां पायति यस्स्वशियान
ईडे गुरुं तं करुणाकराख्यम्।।

## ஸுலோகங்கள் 88 முதல் 90 வரை

ஸ்ரீமதுபயவே நாவல்பாக்கம் **K.ரங்கராஜன் ஸ்வாமி**

पक्षिराजविनतात्मजसेवा
विक्षिपत्यघततिं विनतानाम्।
सुक्षितिस्सुकृतभूरिफलानां
अक्षि मत्सुतमणेः सुखि कुर्यात्।। ८८

*பறவை அரசனானவனும் வினதாவின் மகனானவனுமான கருடனின் பணி புரிதலானது ஸேவிப்பவர்களின் பாவக் கூட்டத்தை ஒழித்து விடும். நிறைய புண்ணிய பலன்களின் ஒசந்த இருப்பிடமான அவர் என் பிள்ளைமணியின் கண்ணை குணப்படுத்த வேண்டும்.*

पक्षिराज! भुजगेश्वरालये
भक्षितामितभुजङ्गसंतते।
रक्षितानघवटस्थसन्मुने
स्वक्षिमद्वरममुं सुतं कुरु।। ८९

*பறவை அரசனே! பாம்பின் லோகமான பாதாளத்தில் அளவற்ற பாம்புக்குழுக்களை உண்டவரே! வட வ்ருக்ஷத்தில் அமர்ந்து இருக்கும் குற்றமற்ற (வாலகில்ய) முனிவர்களை காற்றவரே! இந்த என் பிள்ளையை நல்ல கண் பார்வை உடையவனாக செய்யும்.*

नेत्रं हि गायत्रमुशन्ति यस्य
नेत्रं खगानां परमं यमाहुः।
गात्रं यदीयं कनकप्रभस्यं
नेत्रं स पुत्रस्य सुखीकरोतु।। ९०

எவருடைய கண்ணை காயத்ரமென்னும் ஸாமம் என்று கூறுகிறார்களோ, எவரை பறவைகளின் உயர்ந்த தலைவன் என்று கூறுகிறார்களோ, எவரின் திருமேனி தங்கம் போல் காண்கிறதோ, அந்தக் கருடன் (என்) பிள்ளையின் கண்ணை குணப்படுத்தட்டும்.

★ **1986** வருஷத்தில் இந்த கவியின் குமாரரான கருணாகரன் என்பவர்க்கு இரு சக்கர வாகனத்தில் செல்லும்பொழுது ஏற்பட்ட விபத்தில் கண்ணில் காயம் உண்டானது. அப்பொழுது இந்த கருடனை ஸேவித்து வந்த கவி இந்த ஸ்தோத்ரத்தை இயற்றினார். ஆகவே இவ்வாறு பிரார்த்தனை.

# 91 முதல் 93 வரை

## மூன்று ச்லோகங்கள்

*ஸ்ரீமதுபயவே மீமாம்ஸ சிரோமணி வித்வான்*

## *பரத் ரகுபதி ஸ்வாமி*

*91.* *பெரிய திருவடி நாயனார் அம்ருதத்தைக் கொண்டு வருவதற்காக தேவலோகத்துக்கு எழுந்தருளுகையில், இடையே நம் பசியைப் போக்கிக் கொள்ளுவதற்காக பரஸ்பர சாபத்தால் யானையும் குதிரையுமாகிய விபாவஸு-ஸுப்ரிதீர் என்கிறவர்களை அமுது செய்தருளினார். பின்னர் தேவலோகத்தில் தம்மை எதிர்த்து வந்த தேவர்களின் படையை நிரஸித்தருளினார். திருப்பீதாம்பரத்தால் அலங்க்ருதமான திருமேனியையுடைய அவர் நம்முடைய இந்த்ரியங்களைப் பாபத்திலிருந்து காத்தருள வேணும். இந்த பத்யத்தில் அக்ஷௌஹிணீ, குக்ஷௌக்ருத, ஸக்ஷௌம, அக்ஷௌகம் என்று முறையே நான்கு பாதங்களிலும் வரும் ப்ராஸம் நோக்கத்தக்கது.*

*92.* *வாரீர் பெரிய திருவடி நாயனாரே! மிகுந்த பலம் பொருந்தியவரே! நாச்சியார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் தேவரீர் தயையுடன், அடியேனுடையதான பக்ஷத்தை வெற்றியுடன் கூடியதாயும், குறைவற்ற தர்மம் உடையதாயும் ஆக்கியருளவேணும். இந்த பத்யத்தில் நான்கு பாதங்களிலும் ககார-க்ஷகாரங்கள் ப்ராஸமாக வந்துள்ளமை நோக்கத்தக்கது.* धर्मादनिच्केवलात् *என்ற ஸூத்ரத்தினால் தாமபதம் உத்தரயதமாகவுள்ள அன்மொழித் தொகையில்* अक्षीणधर्माणम् *என்றே ரூபம் ஸித்திக்கும். ஆகையால் நான்காவது பாதம்* अक्षीणधर्माणमिमं विधेया: *என்று கொள்ளத்தகும்.* स्दितस्य गति: चिन्तनीया *என்கிறபடியே, உள்ளபடியே கொள்ள வேணுமென்பார்.* अक्षीणधर्म: *என்று பண்புத்தொகையாகக்*

கொண்டு அதன்மேல், அத்தகைய தர்மம் உடையது என்ற அர்த்தத்தில் अध् ப்ரத்யயம் வந்ததாய்ச் சொல்லுவர்.

**93.** இப்பத்யத்தில் கவி பெரிய திரவடி நாயனாரை கொக்கித் தன விமதனை (எதிரியை) சிக்ஷித்தருளும்படி வேண்டுகிறார். வைதிகரான கவிக்கு எதிரி வேதத்திற்குத் தவறான பொருளைக் கூறும் அத்வைதியே. அவன் மிகுந்த நேர்மையற்ற போக்கை உடையவனாய், தன்னை வைதிகம் எனும் போர்வையினால் மறைத்துக் கொள்ளுவதற்காக வேதத்தில் ஆபாதத: தனக்கு சாதகமாக தோன்றும் ஒரு சில வாக்கியங்களாகிற ரந்த்ரத்திற்குள் (பொந்திற்குள்) நுழைந்தும் தன் வாயினால் எம்பெருமானுக்கு குணமில்லை, விபூதியில்லை என்று கொடிய விஷம் போன்றதான மொழியைக் கக்குகின்றான் என்றும், வெளிப்படையாகச் செய்தால் தன கார்யங்களை உண்மையான வைதிகர்கள் கண்டித்து விடுவர்களாகையால் எப்பொழுதும் மறைந்தே கார்யங்களைச் செய்கின்றான் என்றும் முதல் மூன்று பாதங்களில் கூறுகின்றார் கவி.

குடிலமான போக்கு, தன்னை மறைத்துக் கொள்வதற்காகப் பொந்திற்குள் நுழைதல், வாயினால் கொடிய விஷத்தைக் கக்குதல், எப்பொழுதும் மறைந்துறைதல் ஆகியவை பாம்பிற்கும் உண்டாகையால் கவி மறைமுகமாக (ध्वनिमयदिया) தன் எதிரியைப் பாம்பு போன்றவன் என்கிறார். பாம்புகளை தண்டிப்பதில் வல்லவரான பெரிய திருவடி நாயனாரை குறித்து பாம்பு போன்ற தன் எதிரியை சிக்ஷிக்கும்படி கவி வேண்டுவது மிகப் பொருத்தமாக உள்ளது.

## சுலோகங்கள் 94 முதல் 96 வரை

ஸ்ரீமதுபயவே **விஷ்ணுசித்தன் ஸ்வாமி,** ஸ்ரீரங்கம்

**94. பத்மாநிதிம் வஹஸி பத்மபலாசநேத்ரம்**
**பத்மாநிதௌ விஹரஸே நகரேப்யமுஷ்மிந்|**
**பத்மாநிதௌ மயி விதாய ததா ப்ரஸாதம்**
**பத்மாப்தஸூதஸஹஜாவஹ ஸாதரத்வம்||**

***பொருள் :*** தாமரையை அலர்த்தும் ஸூர்யனுக்கு ஸாரதியான அருணனுடன் பிறந்தவரே! தாமரையிதழ் போன்ற திருக்கண்களை உடைய ச்ரியப்பதியைத் தாங்குகிறீர். நாச்சியார் திருமாளிகை என்ற இந்த திவ்யக்ஷேத்ரத்தில் மகிழ்ந்து விளையாடவும் செய்கிறீர். ஸ்ரீநிதியாகிற என்னிடம் அப்படியே அருளைச் செய்து ஆதரத்துடன் இருக்க வேண்டும்.

***விரிவுரை: பத்மாநிதிம் வஹஸி பத்மபலாசநேத்ரம்*** - தாமரையாள் கேள்வனும், தாமரை இதழ் போன்ற திருக்கண்களை உடையவனுமான எம்பெருமானை வாஹனமாக இருந்து தாங்குபவனே! அந்தப் பத்மாநிதியைத் (எம்பெருமானை) தாங்குவது போல இந்தப் பத்மாநிதியையும் (ஸ்ரீநிதியான அடியேனையும்; பத்மா, ஸ்ரீ இரண்டும் பிராட்டியைக் குறிக்கும் சொற்களே) தாங்கி நிற்பவனே (காப்பவனே)! என்று ஸ்வாமி சமத்காரத்துடன் சொல்கிறார் போலும்.

**பத்மாநிதௌ விஹரஸே நகரேப்யமுஷ்மிந்** - பத்மாநிதி - அதாவது, பிராட்டியின் இருப்பிடம் (நாச்சியார்கோவில்) என்றழைக்கப்படும் திருநறையூரில் ஆனந்தமாக எழுந்தருளியிருந்து பலப்பல லீலைகள் புரிபவனே! "வேதாத்மா விஹகேச்வர:" என்பதற்கேற்ப வேதஸ்வரூபியான கருடன் "வேதம் நான்கு ஐந்து வேள்வி அங்கம் ஆறு இசை ஏழ் நடையால் வல்ல

அந்தணர் வாழ்'' (பெரிய திருமொழி 6-10-7) நறையூரை விரும்பி அங்கே உறைவதில் வியப்பில்லையே!

**பத்மாநிதௌ மயி விதாய ததா ப்ரஸாதம்** - பத்மாநிதியான நாச்சியார் கோவிலில் நீ உறைவது போலப் பத்மாநிதியான அடியேனிடமும் வந்து நீ குடிகொள்ள வேண்டும்!

(வரகவிகளின் வாக்கு பொய்க்காது என்பர். அதற்கேற்றபடி வில்லூர் ஸ்வாமியின் திருக்குமாரரான சாஸ்த்ரஸாஹிதீவல்லப ஸ்ரீமதுபயவே. கருணாகரார்ய மஹாதேசிகன் ஐவர் பணி அறக்கட்டளையின் சார்பில் நிர்மாணித்த ஐவர் பணி மணிமாடம் என்ற யாத்ரிகர்கள் தங்கும் விடுதியின் வாயிற்கதவில் வஞ்ஜுளவல்லித் தாயார், வாஸுதேவனாகிய எம்பெருமான், விகநஸ மஹரிஷி, வாத்ஸ்ய வரதகுருவான நடாதூர் அம்மாள் இவர்களுடன் வைநதேயனாகிய கருடனும் வந்து குடி கொண்டுள்ளார். வைநதேயன் வருடம் இருமுறை கருடஸேவை கண்டருள்வது போல, நம்பிக்கை நாச்சியாரும் நறையூர் நம்பியும் வருடம் இருமுறை ஐவர் பணி மணிமாடத்துக்கு எழுந்தருளி அருள்புரிகிறார்கள். அன்று ஸ்வாமி செய்த ப்ரார்த்தனைக்காக அவரது திருக்குமாரருக்குக் கருடன் இவ்வருளைச் செய்திருக்கிறான் போலும்!)

**பத்மாப்தஸூதஸஹஜாவஹ ஸாதரத்வம்** - தாமரையை மலர்த்தும் ஸூர்யனின் தேரோட்டியான அருணனின் ஸஹோதரனே! அருணன் ஸூர்யனின் தேரை ஓட்டி வந்து தாமரையை மலர்த்துவது போல, அருணனின் ஸஹோதரனான நீ எம்பெருமானுடைய தாமரைக் கண்களை மலர்த்தி, அவன் கடாக்ஷத்தை அடியோங்களுக்குப் பெற்றுத் தரவேண்டும்!

இந்த ச்லோகத்தில் 'பத்மம்' என்னும் பதம் ஐந்து முறை இடம் பெற்றிருப்பது, கேட்பவர் செவிக்கு இன்பம் பயக்குகின்றது.

தாமரைக் கண்ணனும் தாமரையாள் கேள்வனுமான பத்மாநிதியைத் (எம்பெருமானை) தாங்குபவனே ! பத்மாநிதியான (ஸ்ரீநிதியான) அடியேனையும் தாங்கிக் காப்பவனே ! பத்மாநிதி எனப்படும் நாச்சியார் கோவிலில் ஆனந்தமாக வீற்றிருந்து பல லீலைகள் புரிவது போலப் பத்மாநிதியான (ஸ்ரீநிதியான) அடியேன் உள்ளத்திலும் நீ குடிகொள்ள வேண்டும் ! அருணன் சூரியனின் தேரை ஓட்டி வந்து பத்மத்தை (தாமரையை) மலர்த்துவது போல, அவன் ஸஹோதரனான நீ எம்பெருமானின் தாமரைக் கண்களை மலர்த்தி அவன் கடாக்ஷத்தை அடியோங்களுக்குப் பெற்றுத் தரவேண்டும் !

**95. பத்மாலயே புரவரே பதகேந்த்ர திஷ்டந்**
**பத்மாலயம் ச்ருதியுகம் ச்ருதிரூப தந்வந்|**
**பத்மாலயம் வஹஸி பத்மபலாசநேத்ரம்**
**பத்மாலயே மயி ச மந்தமதௌ ப்ரஸீத||**

**பொருள்:** வாரீர் பக்ஷிராஜரே ! நாச்சியார் திருமாளிகை என்ற உயர்ந்த திவ்யதேசத்தில் எழுந்தருளியிருந்து கொண்டு வேதாத்மாவான தேவரீர் எல்லாருடைய காதுகளையும் மங்களத்துக்கு இருப்பிடமாகச் செய்யும்படி மங்களமான ஒலியை உடையவராய் இருந்து கொண்டு, தாமரையிதழ் போன்ற திருக்கண்களை உடைய ச்ரியப்பதியைத் தாங்குகிறீர். இப்படிப்பட்ட தேவரீர் மந்தமதியாய் ஸ்ரீநிதியாகிற என்னிடமும் இரங்க வேண்டும்.

**விரிவுரை : பத்மாலயே புரவரே பதகேந்த்ர திஷ்டந் -** பத்மாலயம் (நாச்சியார் கோவில்) என்ற உயர்ந்த க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருந்து.

திருநறையூர் ஓர் ஒப்புயர்வற்ற க்ஷேத்ரம். இக்கோவிலைக் கட்டியவர் கோச்செங்கட் சோழன் என்னும் நாயன்மார். இவ்வெம்

பெருமான் திருமங்கையாழ்வாருக்கு ஆசார்யனாக இருந்து பஞ்ச ஸம்ஸ்காரம் செய்தருளினான். வேறெந்த எம்பெருமானுக்கும் இப்படியோர் ஏற்றமில்லை. கருடன் தனி சன்னிதியுடன் தானே வாஹனமாகவும், உத்ஸவராகவும், மூலவராகவும் விளங்குவதும் இங்கு மட்டுமே. பெரிய திருமடலில் திருமங்கையாழ்வார் இந்த க்ஷேத்ரத்துத் தாயாரின் திருமேனியை வர்ணித்துள்ளார். வேறு எந்த திவ்ய தேசத்துத் தாயாரையும் ஆழ்வார்கள் வர்ணித்ததில்லை. நான்கு திருக்கைகளுடன் விளங்கும் விஷ்வக்ஸேநர் இங்கு மட்டும் இரண்டு திருக்கைகளுடன் எழுந்தருளியுள்ளார். செண்பகப் பூவின் வாசனையை வெறுக்கும் வண்டு கூட அதிசயங்கள் நிறைந்த நறையூரில் செண்பகப் பூவில் அமர்ந்து அதன் நறுமணத்தைப் பருகுவதாகத் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார் "வம்பவிழும் செண்பகத்தின் வாசமுண்டு மணிவண்டு வகுளத்தின் மலர்மேல் வைகு" (பெரிய திருமொழி **6-6-1**). "கந்தத்வாராம்" என்று போற்றப்படும் பிராட்டியின் திருமேனி நறுமணம் இந்த க்ஷேத்ரம் முழுவதும் பரவியிருப்பதால் ஸுகந்த வனம் என்றும் நறையூர் என்றும் போற்றப்படும் இந்த திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருந்து,

**பத்மாலயம் ச்ருதியுகம் ச்ருதிரூப தந்வந்** - நம் காதுகளை எல்லாம் மங்களத்தின் இருப்பிடமாக ஆக்கவல்ல மங்கள ஒலிகளையுடைய வேதத்தின் ஸ்வரூபமாகவே விளங்குபவனே !

**பத்மாலயம் வஹஸி பத்மபலாசநேத்ரம்** - பத்மாவாகிய மஹாலக்ஷ்மிக்கு ஆலயமாக விளங்கும் தாமரைக் கண்ணனான நறையூர் நம்பியைத் தாங்குபவனே !

**பத்மாலயே மயி ச மந்தமதௌ ப்ரஸீத** - அந்தப் பத்மாலயனைத் தாங்கும் நீ, மந்த மதியுடைய பத்மாலயனான (ஸ்ரீநிதியான) அடியேனிடத்தில் இரங்கி அருள்புரிய வேண்டும் !

வித்யா ததாதி விநயம் என்பதற்கேற்பச் சிறந்த வித்வானாகவும், ஆசுகவி ஸார்வபௌமராகவும், பண்டிதர்களுள் ரத்னமாகவும் ஸ்வாமி திகழ்ந்த போதும், தன்னை மந்தமதி உடையவன் என்று நைச்யாநுஸந்தானம் செய்துள்ளார். இது பெரியோர்களின் இயல்பு. பலம், புத்தி, தேஜஸ், உறுதி இவற்றில் நிகரற்றவரான ஹநுமான் ஸீதையிடம், ''மத்த: ப்ரத்யவர: கச்சித் நாஸ்தி ஸுக்ரீவஸந்நிதௌ'' (ஸுக்ரீவனின் ஸேனையில் என்னைவிட வலிமை குறைந்த குரங்கு யாருமில்லை) என்று நைச்யாநுஸந்தானம் செய்தாரல்லவா ?

இந்த ச்லோகத்தில் 'ப' என்ற எழுத்து பத்து முறை இடம் பெற்றிருப்பதும், 'பத்மம்' என்ற சொல் ஐந்து முறை இடம் பெற்றிருப்பதும் ரசிக்கத்தக்கது.

**பத்மாலயம் (நாச்சியார்கோவில்) என்ற உயர்ந்த க்ஷேத்ரத்தில் எழுந்தருளியிருப்பவனே ! நம் காதுகளை எல்லாம் மங்களத்தின் இருப்பிடமாக ஆக்கவல்ல மங்கள ஒலிகளையுடைய வேதத்தின் ஸ்வரூபமாக விளங்குபவனே ! பத்மாவாகிய மஹாலக்ஷ்மிக்கு ஆலயமாக விளங்கும் தாமரைக்கண்ணனான நறையூர் நம்பியைத் தாங்குபவனே ! அந்தப் பத்மாலயனைத் தாங்கும் நீ, மந்த மதியுடைய பத்மாலயனான (ஸ்ரீநிதியான) அடியேனிடத்தில் இரங்கி அருள்புரிய வேண்டும் !**

**96. பதந்யாஸக்ராந்தத்ரிபுவநமிமம் வேங்கடபதிம்**
**பதந்யாஸம் குர்யா மம கரயுகே சேஷகிரிராட்|**
**பதாந்யேவம் மந்த்ரே பரிவிரசயந் பத்ரரதராட்**
**பதம் சேஷாத்ரேர்மே வ்ரணவிரஹிதம் தத் ஸுகயது||**

**பொருள்:** தன் திருவடி வைப்புகளால் மூவுலகையும் கடந்த இந்த திருவேங்கடமுடையானைக் குறித்து ''திருமலைக்கரசே ! என்

இரு கைகளில் திருவடிகளை வைத்தருள வேணும்'' என்ற இந்த சொற்களை ப்ரார்த்தனையில் வைப்பவரான பக்ஷிராஜர் என்னுடைய புதல்வனான சேஷாத்ரியின் காலைப் புண்ணற்றதாக்கி அதை ஸ்வஸ்தமாக்கட்டும்.

**விரிவுரை :** இது ஒதுரு சிறப்பான ச்லோகம். திருநறையூரை நூறு பாசுரங்களால் மங்களாசாசனம் செய்த திருமங்கையாழ்வார், ஆறாம் பத்து எட்டாம் திருமொழியின் முதல் பாசுரத்தில்

''மான்கொண்ட தோல்மார்வின் மாணியாய் மாவலிமண்
தான்கொண்டு தாளால் அளந்த பெருமானைத்
தேன்கொண்ட சாரல் திருவேங்கடத்தானை
நான்சென்று நாடி நறையூரில் கண்டேனே''

என்று நறையூர் நம்பியையே உலகளந்த த்ரிவிக்ரமனாகவும், திருவேங்கடமுடையானாகவும் அநுபவித்துள்ளார். அதே திருமொழியின் மூன்றாம் பாசுரத்தில்

''தூவாய புள்ளூர்ந்து வந்து துறைவேழம்
மூவாமை நல்கி முதலைத் துணித்தானைத்
தேவாதி தேவனைச் செங்கமலக் கண்ணானை
நாவாயுளானை நறையூரில் கண்டேனே''

என்று கருட வாஹனனாக எம்பெருமான் வந்து கஜேந்த்ரனை முதலையிடமிருந்து காத்து, அதன் காலில் முதலை கவ்வியதால் ஏற்பட்ட ரணத்தைப் போக்கிய சரிதத்தைப் பாடியுள்ளார்.

நாலுகவிப் பெருமாளான கலியனின் அபராவதாரமான நம் ஆசுகவிஸார்வபௌமர் இந்த ச்லோகத்தில் நறையூர் நம்பியைத் த்ரிவிக்ரமனாகவும், திருவேங்கடமுடையனாகவும் கண்டதோடு மட்டுமின்றி, எம்பெருமான் கஜேந்த்ரனின் காலில் ஏற்பட்ட புண்ணை ஆற்றியது போல, அவனது வாஹனமாகிய கருடன், தம்

திருக்குமாரரான ஶ்ரீமதுபயவே. சேஷாத்ரி ஸ்வாமியின் காலில் ஏற்பட்டுள்ள புண்ணையும் ஆற்ற வேண்டும் என்று ப்ரார்த்தித்துள்ளார். எனவே பரகாலனின் பனுவல்களை ஸம்ஸ்க்ருதத்தில் recap செய்வது போல இந்த ச்லோகம் அமைந்துள்ளது.

**பதந்யாஸக்ராந்தத்ரிபுவநமிமம் வேங்கடபதிம்** - தன்னுடைய ஈரடியால் மூவுலகை அளந்தவனான திருவேங்கடமுடையானை,

**பதந்யாஸம் குர்யா மம கரயுகே சேஷகிரிராட்** - "த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜத்வயம் மதீய மூர்தாநம் அலங்கரிஷ்யஸி" என்று உலகளந்த எம்பெருமானின் திருவடிகளைத் தம் தலையால் தரிக்க வேண்டுமென ஆளவந்தார் ப்ரார்த்தித்தது போல, உலகளந்த உன் திருவடிகளை என் கரங்களால் தாங்கும்படி நீ வைத்தருள வேண்டும் என்று,

**பதாந்யேவம் மந்த்ரே பரிவிரசயந் பத்ரரதராட்** - எம்பெருமானிடம் ப்ரார்த்திப்பவரான பக்ஷிராஜர்,

**பதம் சேஷாத்ரேர்மே வ்ரணவிரஹிதம் தத் ஸுகயது** - அடியேனுடைய மகனான சேஷாத்ரியின் காலில் ஏற்பட்ட புண்ணையும் ஸ்வஸ்தமாக்க வேண்டும்!

கஜேந்த்ரனின் காலை முதலை பீடித்த போது, அந்த யானை, "நாராயணா! ஓ மணிவண்ணா! நாகணையாய்! வாராய் என் ஆரிடரை நீக்காய்!" என்று எம்பெருமானை அழைக்க, வைகுந்தத்திலிருந்த கருடன் அக்குரலைக் கேட்டு, எம்பெருமானிடம், "உம் திருவடிகளை விரைவாக அடியேனுடைய திருக்கரங்கள் மேல் வையுங்கள்! உம்மைத் தாங்கிச் சென்று கஜேந்த்ரன் இருக்கும் குளக்கரையில் விரைவாகக் கொண்டு

சேர்க்கிறேன்!" என்று ப்ரார்த்தித்தாராம் கருடன். அவ்வாறே எம்பெருமானும் யானையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்று நின்று ஆழி தொட்டு, முதலையை முடித்து, யானையின் காலில் முதலை கவ்வியதால் ஏற்பட்ட புண்ணுக்குத் தானே மருந்திட்டு ஆற்றினான். அதுபோல, பக்ஷிராஜரே! அடியேனுடைய மகனின் காலில் ஏற்பட்டுள்ள புண்ணை ஆற்றுவதற்கு மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணனை நீ அழைத்து வந்து புண்ணை ஆற்றி அருள வேண்டும் என்று ஸ்வாமி ப்ரார்த்திக்கிறார்.

**தன்னுடைய ஈரடியால் மூவுலகை அளந்தவனான திருவேங்கடமுடையானிடம், "உலகளந்த உன் திருவடிகளை என் கரங்களால் தாங்கும்படி நீ வைத்தருள வேண்டும்!" என்று ப்ரார்த்திப்பவரான பக்ஷிராஜர், அடியேனுடைய மகனான சேஷாத்ரியின் காலில் ஏற்பட்ட புண்ணையும் ஸ்வஸ்தமாக்க வேண்டும்!**

## சுலோகங்கள் 97 முதல் 99 வரை

*ஸ்ரீமதுபயவே வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாசனம் சாஸ்த்ர ஸாஹிதீவல்லப கருணாகராசார்ய ஸ்வாமி திருவடி*

*ப்ரவசனதிலகம்* Dr.***உப்பிலி வேங்கடேஷ்,*** MBBS, CCEBDM, MBA, *திருக்குடந்தை*

***97. ஸ்ரீமன் பன்னகஸார்வபௌமநகரே***
***ஸ்ரீதேவநாதாந்திகே***
***நாஸாக்ரேண நதீம் ஹி தாத்ருசதரஸாம் யத்வத்பவான் நிர்மமே|***
***தத்வன்மத்ஸுஹ்ருதோ ஹ்ருதோ ஹிதரஸாம் வாசம் கரோதூன்னதாம்***
***யேனோபைதி முதம் மதீயக்ருஹிணீ தத்தாதபாதா அபி||***

*ஸ்ரீமன் - ஸ்ரீமானான கருடனே! 'ஸ்ரீமன்' என்று ஸ்வாமி கருடனை இந்த ச்லோகத்தில் விளிக்கிறார். விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் 22, 180 மற்றும் 222-ஆம் திருநாமங்களாக ஸ்ரீமான் என்னும் திருநாமம் இடம்பெற்றுள்ளது. 22-ஆம் திருநாமத்துக்கு ஸ்ரீபராசர பட்டர், "விருத்தாகாரத்த்வேபி ஸ்ரீமான் ஸர்வமனோஹர:" என்று வ்யாக்யானமிட்டருளினார். ந்ருஸிம்ஹப் பெருமான் கழுத்துக்கு மேலும் கீழும் முரண்பாடான வடிவோடு இருந்தாலும் அழகாக விளங்குவதால் ஸ்ரீமானாக உள்ளான் என்று பொருள். அவ்வாறே நம் கல்கருடனும் அழகிய தோற்றத்தோடு ஸ்ரீமானாக விளங்குகிறார். கருடாழ்வார் தைலக்காப்பில் எழுந்தருளியிருக்கும் போது அவரது ஸந்நிதிக்கு எதிரில் உள்ள கண்ணாடியில் ஸ்ரீமானான அவரின் திருமேனி ஸௌந்தர்யத்தை நன்கு ஸேவிக்கலாம். அந்தத் திருமேனியழகை முன்னிட்டு ஸ்ரீமன் என்று கருடனை ஸ்வாமி அழைக்கிறார் போலும்.*

***180***-ஆம் திருநாமத்துக்கு வ்யாக்யானமிட்டருளுகையில், "திவ்யபூஷணஸம்பத்பிர்யுக்த: ஸ்ரீமான் ஸதா ஸ்ம்ருத:" என எம்பெருமான் எத்தகைய ஆபரணங்களை அணிந்தாலும் அவை அனைத்துமே நம் உள்ளத்தைக் கவரும் வகையில் உள்ளன என்றருளிச் செய்துள்ளார். அவ்வாறே கருடனும் தம்முடைய திருமேனியில் எட்டுப் பாம்புகளை ஆபரணங்களாக அணிந்து ஸ்ரீமானாக அழகுடன் விளங்குகிறார்.

***222***-ஆம் திருநாமத்துக்கு மத்ஸ்யரூபாவதாரேபி "ஸ்ரீமான் கமலநேத்ரத:" என மத்ஸ்யாவதாரத்திலும் தாமரை போன்ற அழகான கண்களோடு விளங்கியமையால் ஸ்ரீமான் என்று பட்டர் காட்டியுள்ளார். அவ்வழியில் "நேத்ரம் காயத்ரமூசே" என கருடபஞ்சாசத்தில் ஸ்வாமி தேசிகன் காட்டியபடி காயத்ரி மந்த்ரத்தையே தன் கண்களாகக் கொண்ட நம் கல்கருடனையும் ஸ்ரீமான் என்பது பொருத்தமாக உள்ளதல்லவா ?

பன்னகஸார்வபௌமநகரே - பாம்புகளின் தலைவனான ஆதிசேஷனுடைய நகரம் திருவஹீந்த்ரபுரம். 'அஹீந்த்ரன்' என்று ஆதிசேஷனுக்குப் பெயர். அவ்வூரில்,

ஸ்ரீதேவநாதாந்திகே - தேவநாதன் என்றும் அடியார்க்கு மெய்யன் என்றும் போற்றப்படும் எம்பெருமானுக்கு அருகில்,

நாஸாக்ரேண நதீம் ஹி தாத்ருசதரஸாம் யத்வத்பவான் நிர்மமே - உன்னுடைய அலகால் நீ ஒரு நதியை விரைந்து உருவாக்கினாய். ஒருமுறை திருவஹீந்த்ரபுரத்தில் எம்பெருமான் கருடனுடைய கேள்விகளுக்கெல்லாம் பதிலளித்து வந்தபோது, மிகவும் தாகமாக இருப்பதாகக் கூறினான். உடனே கருடன் அருகே இருந்த மையனூர் மலைக்குன்றின் மேல் நின்று, சுற்றி எங்கேனும் நதியோ, குளமோ உள்ளதா என்று பார்த்தார். ஏதும் கிட்டாததால், தரையில் இறங்கி ஒரு பாறையைத் தன் அலகால்

கொத்தி உடைத்தார். அதிலிருந்து நீர் ப்ரவாஹமாகப் பாய்ந்தது. அதிலிருந்து பெருகி வந்த நதிதான் கருடநதி. அந்தத் தீர்த்தத்தை எம்பெருமானிடம் ஸமர்ப்பித்து அவன் தாகத்தைத் தீர்த்தார் புள்ளரசன்.

தத்வத் - அந்தக் கல்லில் இருந்தும் தண்ணீரைப் பெருகிவரச் செய்தது போலவே,

மத்ஸுஹ்ருதோ ஹ்ருதோ ஹிதரஸாம் வாசம் கரோதூன்னதாம் - கல்நெஞ்சம் கொண்ட என் நண்பனின் வாயிலிருந்து நல்ல உன்னதமான வார்த்தைகளாகிய நதியைப் பெருகிவரச் செய்தாயாகில்,

யேநோபைதி முதம் மதீயக்ருஹிணீ தத்தாதபாதா அபி - அதனால் என்னுடைய மனைவியும் அவளுடைய தந்தையும் ஆனந்தப்படுவார்கள்.

அழகான திருமேனியோடும் நாகாபரணங்களோடும் ஸ்ரீமானாக விளங்கும் கருடனே ! திருவஹீந்த்ரபுரத்தில் தேவநாதப் பெருமாளின் தாகத்தைத் தீர்க்க உன் அலகால் பாறையை உடைத்துக் கருடநதியைப் பெருகச் செய்தாய். அதுபோல என் நண்பனின் உள்ளத்தினின்றும் உன்னதமான வார்த்தைகளை வரச்செய்தாயாகில், என் மனைவியும் அவள் தந்தையும் ஆனந்தப்படுவார்கள்.

**98. ஸ்வாமின் பக்ஷீச்வராஸ்மின் குரு மயி**
**கருணாமீஷதேதன்மமாலம்**
**யேன ஸ்யுதே புஜங்கப்ரமுகவிஷதரா: கோசரா**
**நாக்ஷிமார்கே|**
**க்ஷேமோ பூய: குடும்பே ஸ்வயமதிமஹிதோ**
**வர்தமானோ மம ஸ்யாத்**
**ஸ்ரீமந்நாராயணோபி ஸ்வயமதிகுதுகீ ஸ்வைர்மமாத்கே**
**ஸதா ஸ்யாத்||**

ஸ்வாமின் - ஸ்வாமியே ! 'ஸ்வம்' என்றால் உடைமை என்று பொருள். 'ஸ்வாமி' என்றால் உடையவர் அல்லது உரிமையாளர் என்று பொருள். வில்லூர் ஸ்வாமி தம்மையே கருடனிடம் இந்த ச்லோகத்தில் அர்ப்பணிக்கும் விதமாகக் கல்கருடனை ஸ்வாமி என்று விளிக்கிறார். (மேலே 101-ஆம் ச்லோகத்தில் கருடனிடம் சரணாகதி செய்யப்போகிறார்.)

பக்ஷீச்வர - பறவைகளின் தலைவரே ! (நீர் பறவைகளுக்கு மட்டும் தலைவரல்ல, நாராயணனின் பக்தர்களான எங்களுக்கும் தலைவராயிற்றே !)

அஸ்மின் குரு மயி கருணாமீக்ஷத் - (தம்மைக் கருடனிடம் ஸமர்ப்பித்து விட்டு, இப்போது தம் ப்ரார்த்தனையை முன்வைக்கிறார்) நீ கருணை கூர்ந்து அடியேனுக்கு அநுக்ரஹம் செய்ய வேண்டும் !

ஏதன்மமாலம் யேன ஸ்யுஸ்தே புஜங்கப்ரமுகவிஷதரா: கோசரா நாக்ஷிமார்கே - பாம்புகள் போன்ற விஷ ஜந்துக்களும் தீயவர்களும் அடியேனுடைய பார்வையில் படாமல் நீ காத்தருள வேண்டும் ! நாம் எப்போதும் எம்பெருமானுடைய அடியார்களோடு கூடியிருக்க வேண்டும். "தீதில் நன்னெறி நிற்க அல்லாது செய் நீதியாரொடும் கூடுவதில்லை யான்" என்று குலசேகரப் பெருமாள் ஸாதித்தபடி தீயவர்களோடு நாம் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்பதால் நெஞ்சில் நஞ்சை உடைய மக்கள் தம் கண்களிலேயே படாமல் காக்க வேண்டுமென்று விஷ ஜந்துக்களை வதைக்கும் கருடனிடம் ஸ்வாமி ப்ரார்த்திக்கிறார்.

க்ஷேமோ பூய: குடும்பே ஸ்வயமதிமஹிதோ வர்தமானோ மம ஸ்யாத் - அடியேனுடைய குடும்பத்தில் நன்மையும் ஏற்றமும் செழிப்பும் உண்டாகும்படியும்.

ஸ்ரீமந்நாராயணோபி ஸ்வயமதிகுதுகீ ஸ்வைர்மமாத்கே ஸதா ஸ்யாத் - "அரவத்து அமளியினோடும் அழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து" என்ற பெரியாழ்வாரின் பாசுரத்திற்கேற்ப ஸ்ரீமந்நாராயணன் அவனுடைய ஸமஸ்த பரிவாரங்களோடு வந்து எப்போதும் அடியேனுக்குத் துணையாக இருக்கும்படி அநுக்ரஹம் புரிய வேண்டும்.

இப்படி வரப்ரஸாதியான கல்கருடனிடம் ஸ்வாமி தம்முடைய ப்ரார்த்தனைகளை முன் வைத்து இந்த ச்லோகத்தை அமைத்துள்ளார். இன்றும் கல்கருடனுக்கு ஏழு வார அர்ச்சனை செய்யும் பல அன்பர்களின் ப்ரார்த்தனைகளை அவர் நிறைவேற்றித் தருகிறார். ஒருமுறை அடியேன் ஸ்ரீமதுபயவே. கருணாகரார்ய மஹாதேசிகனிடம் கேட்டேன், "இந்தக் கருடனைக் கல்கருடன் என ஏன் அழைக்கிறோம் ?" என்று. ஸ்வாமி தமக்கே உரிய பாணியில் பதிலருளினார், "ஊறுகாய் என்றால் எப்படி ஊறிய காய், ஊறுகின்ற காய், ஊறும் காய் என்று பொருளோ, அதுபோலக் கல்கருடன் என்றால் கற்ற கருடன், கற்கின்ற கருடன், கற்கப் போகின்ற கருடன் என முக்காலத்திலும் கற்பவர் என்று பொருள். தாம் மட்டும் கற்பவராக விளங்காமல் நமக்கும் கல்வி வரத்தை அருள்பவராக விளங்குகிறார் !" என்று. இவ்வாறு அனைத்து வரங்களையும் அருளும் புள்ளரசனிடம் பணிந்து தம் ப்ரார்த்தனைகளை இந்த ச்லோகத்தில் ஸ்வாமி முன்வைக்கிறார்.

ஸ்வாமியே ! பறவைகளின் தலைவனே ! பாம்புகள் போன்ற விஷ ஜந்துக்களும் தீயவர்களும் அடியேனுடைய பார்வையில் படாமலிருக்கும் படி நீ கருணைக் கூர்ந்து அருள்புரிய வேண்டும். அடியேனுடைய குடும்பத்தில் நன்மையும் செல்வச்சிறப்பும் செழிப்பும் ஏற்பட வேண்டும். ஸ்ரீமந்நாராயணன் அவனுடைய ஸமஸ்த பரிவாரங்களோடு வந்து எப்போதும் அடியேனுக்குத் துணையாக இருக்கும்படி நீ அநுக்ரஹிக்க வேண்டும்.

**99. புஜங்கபாசம் கில மோசயித்வா**
**புஜாயுகீபஞ்ஜரக: கராரே:|**
**புஜா ஸ்வதுண்டேன புஜங்கமானாம்**
**புஜாதிகம் ரக்ஷது மாமகீனம்||**

புஜங்கபாசம் கில மோசயித்வா - ராமராவண யுத்தத்தில் இந்த்ரஜித்தின் நாகபாசத்தால் கட்டுண்டு ராம லக்ஷ்மணர்களும் மற்ற வானர வீரர்களும் விழுந்து கிடந்தபோது, கருடன் அங்கே தோன்றியவாறே அடுத்த நொடி நாகபாசங்களால் ஏற்பட்ட கட்டும் புண்களும் பறந்து போயின. இதை மஞ்சு ராமாயணத்தில் வில்லூர் ஸ்வாமி அருமையாக அனுபவித்துள்ளார்:

सपदि तत्र पतगाधिप: प्रपदात् प्रहितो नु जटायुषा।
अपगतव्रणमाहितकान्ति तत् दशरथात्मजयोर्विदधे वपु:।।

கருடனுக்கு விரைந்து வந்து ராமனுக்குத் தந்தையைப் போல் உதவும் எண்ணம் எங்கிருந்து வந்தது என்றால், வைகுந்தம் சென்ற ஜடாயு அங்கிருந்தபடி ராமனையே கண்காணித்திருந்து இருக்கிறார். நாகபாசத்தால் பெருமாளும் இளையபெருமாளும் கட்டுண்டதும் உடனே போய் தன் பிள்ளைகளைக் காக்கும்படித் தன் சிறிய தகப்பனாரான கருடனிடம் அவர்தான் கூறி அனுப்பி வைத்தார் என்ற நயமான பின்னணியை நம் ஸ்வாமி காட்டியுள்ளார். அப்படி நாக பாசத்திலிருந்து ராம லக்ஷ்மணர்களைக் காத்து,

புஜாயுகீபஞ்ஜரக: கராரே: - கரனின் விரோதியான ராமபிரானின் இரு தோள்களையும் ஆரத் தழுவிக் கொண்டார் கருடன்.

புஜா ஸ்வதுண்டேன புஜங்கமானாம் - தன்னுடைய அலகால் பாம்புகளை உண்ணும் கருடன்,

இங்கே பல புராணங்களில் கூறப்படுகிற திரிபுர ஸம்ஹார நிகழ்ச்சியை குறிப்பிடுகிறார் கவி. க: என்று நான்முக கடவுளான பிரம்மாவிற்கு பெயர். திரிபுர ஸம்ஹாரத்தின் போது அசுரர்களின் மூன்று பறக்கும் நகரங்களை அழிக்க தேவர்கள் தரப்பில் போரிட்ட சிவபெருமான், போரில் தனக்குத் தேரோட்டியாக பிரம்மா இருக்க வேண்டும் என்று விரும்பிட, அதற்கு இணங்கி பிரம்மா சிவபெருமானின் தேரோட்டி ஆனார். ஸாக்ஷாத் நாராயணன் சிவபெருமானின் அம்பின் முனையாக வடிவு எடுத்து கொண்டு திரிபுரத்தை அழித்தார்.

திரிபுர ஸம்ஹாரத்தின் போது செவ்வனே தேரோட்டிய க: என்னும் பிரம்மாவின் புதல்வர் தான் கச்யப ப்ரஜாபதி. கச்யப ப்ரஜாபதியின் மகன் தான் கருடாழ்வான். ஆக, கருடாழ்வான் க: என்கிற தேரோட்டியின் மகனின் மகன்.

இப்படி பல விதத்தில் பல புகழ்பெற்றத் தேரோட்டிகளின் ஸம்பந்தம் பெற்ற, தானே பகவானின் தேராகவும், தேரோட்டியாகவும் திகழும் கருடாழ்வான் தன் (நம்) மனதில் எழும் சிந்தனைகளையும் ஆசைகளையும் செவ்வனே நடத்தி சென்று அந்த நல்லாசைகளை நிறைவேற்றுமாறு ப்ரார்த்திக்கிறார் கவி.

அடுத்து தம்முடைய பிணிகளை போக்குமாறு கருட பகவானை ப்ரார்த்திக்கிறார்.

**सरोजवासासदने वसन्तं सरोषमाच्छिन्नसरीपौघम्।**
**सरोगमेतं सुखिनं विधातुं सरोमहर्ष: शरणं प्रपद्ये।। १०१**

सरोजवासासदने – நாச்சியார் கோவிலில், वसन्तं - வாசம் செய்யும், सरोषमाच्छिन्नसरीपौघम् – கோபத்துடன் பாம்புகளை கிள்ளி எறியும் அவனை, सरोगम् एतं – பிணியுடன் இருக்கும் நான், सुखिनं विधातुं – சுகம் உடைய பெற, सरोमहर्ष: – மயிர்ச் சிலிர்ப்புடன், शरणं प्रपद्ये – சரணம் அடைகிறேன்.

புஜாதிகம் ரக்ஷது மாமகீனம் - அடியேனுடைய கைகள் உள்ளிட்ட அனைத்து அவயவங்களையும் ரக்ஷிக்கட்டும்.

இந்த ச்லோகத்தில் 'புஜ' என்னும் சொல் ஐந்து முறை இடம் பெற்றிருப்பது நோக்கத்தக்கது.

ராம - லக்ஷ்மணர்களை நாகபாசத்திலிருந்து விடுவித்து, ராமனின் இருதோள்களையும் ஆரத் தழுவியவரும், தம் அலகால் பாம்புகளை உண்பவருமான கருடன் அடியேனுடைய கைகள் உள்ளிட்ட அனைத்து உறுப்புகளையும் காத்தருளட்டும்.

வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் சாஸ்த்ரஸாஹிதீவல்லப வித்வன்மணி ஸ்ரீமதுபயவே. கருணாகரார்ய மஹாதேசிகன் அடியேனுக்கு ஆசார்யன் மட்டுமல்ல, ஒரு வழிகாட்டி, முன்மாதிரி, நலம்விரும்பி.

அடியேன் மருத்துவக் கல்லூரியில் படிக்கும் காலங்களில் அவரது உபந்யாஸங்களைத் தொலைக்காட்சியில் கண்டு அதனால் மிகவும் ஈர்க்கப்பட்டு (நிஜமாகவே charisma என்றுதான் சொல்ல வேண்டும்!) அவரை நேரில் சேவிக்க வேண்டுமென்று விழைந்தேன். ஆனால் 2013 வரை ஈரோட்டில் மருத்துவப்படிப்பு படித்து வந்தமையால், அடியேனின் எண்ணம் ஈடேறத் தாமதமானது.

